

# வில்லி பாரதம் ௨

# வில்லி பாரதம்

## (இரண்டாம் பாகம்)

பதிப்பாசிரியக் குழுவினரால்
பல பிரதிகளை ஒப்பு நோக்கிப் பரிசோதித்து
வெளியிடப்பெற்றது

வெளியிடுவோர்
**எஸ். ராஜம்**
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

முதற் பதிப்பு—1959
உரிமை பதிவு செய்யப்பெற்றது

கிடைக்கும் இடம்
**மர்ரே அண்டு கம்பெனி**
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

எஸ். விசுவநாதன் அவர்களால், சென்னையில்,
சென்ட்ரல் ஆர்ட் அச்சுக்கூடத்தில், பதிப்பிக்கப்பெற்றது

## உள்ளுறை


11. சூதுபோர்ச் சருக்கம் ... 151-186

12. அருச்சுனன் தவநிலைச் சருக்கம் ... 187-213

13. நிவாத கவசர் காலகேயர் வதைச் சருக்கம் ... 214-234

14. முண்டகச் சருக்கம் ... 234-254

15. சடாசுரன் வதைச் சருக்கம் ... 255-260

16. நச்சுப் பொய்கைச் சருக்கம் ... 261-269

17. துருவாச முனிச் சருக்கம் ... 270-272

18. பழம் பொருந்து சருக்கம் ... 272-276

19. நாடு கரந்துறை சருக்கம் ... 277-284

20. மற்போர்ச் சருக்கம் ... 285-286

21. கீசகன் வதைச் சருக்கம் ... 287-303

22. நிரை மீட்சிச் சருக்கம் ... 303-322

23. வெளிப்பாட்டுச் சருக்கம் ... 322-326

24. உலூகன் தூதுச் சருக்கம் ... 326-329

25. வாசுதேவனைப் படைத்துணை அழைத்த சருக்கம் ... 329-332

26. சஞ்சயன் தூதுச் சருக்கம் ... 332-334

# 11. சூதுபோர்ச் சருக்கம்

யாகம் முற்றியபின் துரியோதனன் தன் துணைவர் முதலியவருடன் அத்தினபுரியை அடைதல்

தாமரை அனைய செங் கண் தரணிபன் இராயசூய
மா மகம் முற்றி, தங்கள் மா நகர் புகுந்த பின்னர்,
நா மரு பனுவல் மாலை நாக ஏறு உயர்த்த செல்வக்
கோமகன், இளைஞரோடும், குறித்தது கூறலுற்றான்: 1

கணை வரும் வரி வில் வாழ்க்கைக் கடுங் கனல் அனைய தோற்றத்
துணைவரும் தானும், கங்கா சுதனும், மற்று எவரும், சூழ,—
இணை வரும் அரசர் இல்லா இகல் அரிஏறு போல்வான்—
கிணை வரும் ஓதை மூதூர்க் கிளர் நெடும் புரிசை புக்கான். 2

அரசவையில் துரியோதனன் மன்னர் சூழ வீற்றிருத்தல்

சென்றுழி, எவரும் தம்தம் செழு மனை எய்தி, வாசம்
துன்றிய அமளி, கங்குல் துயில் புரிந்து, எழுந்த பின்னை,
நின்ற வெம் பரிதித் தோற்றம் தொழுது, தம் நியமம் முற்றி,
வன் திறல் அரசன் கோயில் மன்அவை வந்து சேர்ந்தார். 3

இறைஞ்சிய வேந்தர்க்கு எல்லாம் இருப்பு அளித்து, எதிர்ந்த வேந்தர்
நிறம் செறி குருதி வேலான் நினைவினோடு இருந்தபோதில்,
அறம் செறி தானம், வண்மை, அளவிலாது அளித்து, நாளும்
புறம் சுவர் கோலம் செய்வான் பூபதிக்கு உரைக்கலுற்றான்: 4

கன்னன், சகுனி, துச்சாதனன், மூவரும் முறையே எழுந்து பேசுதல்

'தாது அவிழ் குவளை மாலைத் தருமன் மா மதலை பெற்ற
மேதகு வேள்விச் செல்வம் வேந்தரில் யாவர் பெற்றார்?
ஏது அளவு, அவன்தன் வாழ்க்கை? யார் இனி எதிர் உண்டு?' என்று
பாதக நினைவைத் தானும் பகர்ந்தனன், பரிவு கூர. 5

விதரண வினோதன் சொன்ன வார்த்தையும், வேந்தர் வேந்தன்
இதயமும் ஒன்றாய் நின்ற இயற்கையைச் சகுனி கண்டு,
'புதை நக மடங்கல், நாளும் புறம் செலாது, ஒடுங்குமாயினும்,
மத கரி விடுமோ?' என்றான்—வசை இசையாகக் கொள்வான். 6

சொல்லிடை நஞ்சு கக்கும் துன் மதி உடைய தம்பி,
வில் இடை நின்று, தம்முன் வெம் மனம் களிக்கச் சொன்னான்—
'அல் இடை நிறைந்ததேனும், அமுத வெண் கிரணத் திங்கள்
எல்லிடை இரவி முன்னர் எவ்வுழி நிகர்க்கும்?' என்றே. 7

யாவரும் கேட்பத் துரியோதனன் தன் உளக் கருத்தை அவையில் வெளியிடுதல்

தமையனும் தம்பி சொன்ன தன்மையை உணர்ந்து, நீதி
அமைதரு தந்தை கேட்ப, அவன் பெருந்தாதை கேட்ப,
கமை பெறு விதுரன் கேட்ப, கார்முகக் கன்னன் கேட்ப,
இமையவன் துரோணன் கேட்ப, யாவரும் கேட்ப, சொல்வான்: 8

'இந்திரன் முதலா உள்ள இமையவர் சிறப்புச் செய்ய,
சுந்தரப் பொன்-தோள் வேந்தர் தொழில் புரிந்து ஏவல் செய்ய,
மந்திர முனிவர் வேள்வி மறை நெறி முறையின் செய்ய,
தந்திர வெள்ளச் சேனைத் தருமனே தலைவன் ஆனான்; 9

'இனி, அவன், சில் நாள் செல்லின், எம்மனோர் வாழ்வும் கொள்ளும்;
துனை வரும் புரவித் திண் தேர்த் துணைவரும் சூரர் ஆனார்;
முனை வரு கூர் முள் வேலை முளையிலே களையின் அல்லால்,
நனி வர வயிர்த்தபோது நவியமும் மடியும் அன்றே? 10

போது உற விரைந்து, மற்று அப் புரவலன் செல்வம் யாவும்
பேதுறக் கவர்ந்திலேனேல், பின்னை யார் முடிக்க வல்லார்?
மோதுறப் பொருதே ஆதல், மொழி ஒணா வஞ்சம் ஒன்று
தீது உறப் புரிந்தே ஆதல், கொள்வதே சிந்தை' என்றான். 11

தமையனது கருத்தைத் துச்சாதனன் வலியுறுத்திப் பேசுதல்

என்னலும், உரிய தம்பி, 'எழுவதே கருமம், இன்றே;
செந்நெலின் வாளை பாயும் செல்வ நாடு உடைய கோமான்
நென்னல் அங்கு எய்த, வீமன் நகைத்ததும், நேயமான
கன்னல் இன் மொழியாள் மூரல் விளைத்ததும், கண்டிலீரோ? 12

'எத்தனை தரணி வேந்தர், யாக நல் விழாவில் வந்தார்?
அத்தனை பேரில் யாமும் ஒருவராய் அடங்கி நின்றேம்;
கொத்து அனை உகளும் நல் நீர்க் குரு நிலக் கோமான், அந்த
முத்தனை அன்றி, பின்னை, யாரையே முதன்மை செய்தான்? 13

'நந்த கோ மகனுக்கு எல்லாம் நல்கிய முதன்மை கண்டு,
வந்த கோ வெள்ளம் சேர வாய் திறவாமல் நிற்ப,
''எந்தகோ, இவனுக்கு இந்த முதன்மை!'' என்று எதிர்ந்து, மாற்றம்
தந்த கோ மடியுமாறு சமரமும் விளைப்பித்திட்டான். 14

'தன் புய வலியும், நான்கு தம்பியர் வலியும், மாயன்
வன் புய வலியும், கொண்டே, மண் எலாம் கவர எண்ணி,
இன் புயச் சிகரி மன்னர் யாரையும் தன் கீழ் ஆக்கி,
மின் புயல் அனையான் மேன்மை விளக்கவே, வேள்வி செய்தான். 15

'எல் இயல் பரிதி அன்ன யதுகுல மன்னன்தானும்
சல்லியம் மிகு போர் செய்யச் சல்லியன்தன்மேல் சென்றான்;
சொல்லிய கருமம் வாய்ப்ப, சூழ் வலைப் படுத்திக் கொண்ட
வல்லியம் என்ன, சூழ்ந்து, மலைவதே கருமம்' என்றான். 16

துரியோதனன் ஐவரை அடக்குவதற்கு உரைத்த உபாயம்

வேந்தனும் ஒருப்பட்டு, 'அந்த வெண்ணெய் வாய்க் கள்வன் மீளப்
போந்து, இவர்தமக்கும் இன்று பொரு துணை ஆக மாட்டான்;
சாந்து அணி குவவுத் தோளான் சல்லியன் வலியன்; இப்போது
ஆம் தகவு எண்ணில், வல்லே ஐவரை அடர்க்கலாமே. 17

'வஞ்சனை கொண்டே ஆதல், வாரணம், மணித் தேர், வாசி,
நஞ்சு அனையவரால் ஆதல், நாளையே அழித்தல் வேண்டும்;
கஞ்சனை மலைய எண்ணி, கரிய பேய் முலைப்பால் உண்ட
நெஞ்சினன் எய்தாமுன்னம், நீர் விரைந்து எழுமின்!' என்றான். 18

'போர் வழியே யன்றி வஞ்சனை வழி ஆகாது' எனக் கன்னன் மறுத்தல்

'வெஞ் சிலை குனித்து ஓர் அம்பு யான் விடின், வெகுண்ட வேந்தர்
எஞ்சி, விண் புகுவர் அல்லால், யாவரே எதிர்க்க வல்லார்?
வஞ்சனை கொண்டு வெல்ல மதிப்பது, வாளால் வெல்ல
அஞ்சினம்ஆயின் அன்றோ?' என்றனன்—அங்கர் கோமான். 19

'மாயச் சூதினாலே ஐவரை அடக்குதல் வேண்டும்' எனச் சகுனி உரைத்தல்

யாவரும் மொழிந்த வார்த்தை இன்புறக் கேட்டு, பின்னும்
தா வரு புரவித் திண் தேர்த் தானையான் சகுனி சொல்வான்:
'மே வரு கன்னன் அன்றி விண்ணுளோர் எதிர்ந்த போதும்,
கோ வரு முன்றிலானை, கொடுஞ் சமர், வெல்லலாமோ? 20

'இடிம்பனை, பகனை, வை வேல் இகல் சராசந்தன்தன்னை,
நெடும் பணைப் புயத்தால் வென்ற நிகர் இலா வீமன் நிற்க,
கடும் படைப் பெருமையால் வென் காணலாம் என்பர்ஆயின்,
தொடும் படைத் தடக் கை வீரர்க்கு உத்தரம் சொல்லலாமோ? 21

'துப்பு உறழ் அமுதச் செவ் வாய்த் திரௌபதி துணைத் தோள் வேட்டு,
கைப் படு சிலையினோடும் காவலர் கலங்கி வீழ,
மெய்ப் படு முனியாய் வந்து, விசயன் வில் வளைத்த போதும்,
இப்பொழுது இருந்த வீரர் யாவரும் இருந்திலேமோ? 22

'இப் பிறப்பு ஒழிய, இன்னும் ஏழ் எழு பிறப்பினாலும்,
மெய்ப்பு இறப்பு அற்ற நீதித் தருமனை வெல்ல மாட்டோம்;
ஒப்பு அறப் பணைத்த தோளாய்! உபாயம் எங்கேனும் ஒன்றால்,
தப்பு அறச் சூது கொண்டு சதிப்பதே கருமம்' என்றான். 23

துச்சாதனன் சகுனியின் சூது உபாயத்திற்கு உடன்படுதல்

தன் பெரு மாமன் சொல்ல, தரணிபன் தம்பிதானும்,
'வன் பெருஞ் சேனைகொண்டு மலைவதற்கு அவர்கள் அஞ்சார்;
இன் பெரு நேயம் மிக்க இவன் மொழிப்படியே, மாயப்
புன் பெருஞ் சூதுகொண்டு, பொருவதே புந்தி' என்றான். 24

துரியோதனன் சகுனியை அருகில் அமரச் செய்து சூதால் வெல்லும் வகையைக் கேட்க, சகுனி உரைத்த உபாயம்

கோமகன் நெஞ்சும் நாவும் குளிர்ந்து, பேர் உவகை கூர்ந்து,
மாமனை, 'தவிசின்கண்ணே வருதி!' என்று இருத்திக்கொண்டு,
'பா மரு பனுவல் மாலைப் பாண்டவர்தம்மை நின் கைக்
காமரு சூதால் வெல்லும் கருத்து எனக்கு உரைத்தி' என்றான். 25

'மன்ன! நின் செல்வக் கோயில், மண்டபம் ஒன்று, ''தேவர்
பொன்னுலகினுக்கும் இல்லை!'' என்பது ஓர் பொற்பிற்று ஆக,
பன்னு நூல் சிற்பம் குன்றாப் பல் தொழில் வினைஞர்தம்மால்,
நல் நில விரிவு உண்டாக, நாளையே இயற்றுவிப்பாய். 26

'''மண்டபம் காண, எம்முன் வருக!'' என்று அழைத்து வந்தால்,
கண்டு, கண் களித்து, மற்று அக் காவலர் இருந்த போதில்,
''புண்டர விசால நெற்றிப் புரவல! பொழுது போக,
அண்டரும் விரும்பும் வன் சூது ஆடுதும்; வருக!'' என்பேம். 27

'அதிர் முரசு உயர்த்த கோவும், ''ஐ!'' எனத் துணியும்; பின்னை,
மதி மருள் இயற்கைத்து ஆகும் மாய வெஞ் சூதுதன்னால்,
விதி எனப் பொருது, வாழ்வும், மேதகும் அரசும், தங்கள்
பதி முதல் பலவும், தோற்கும்படி செகுத்திடுவல்' என்றான். 28

துரியோதனன் முதலியோரின் மகிழ்ச்சி

'இன்னதே கருமம்!' என்று என்று, இளைஞரும் விழைந்து சொன்னார்;
அன்னதே கருமம் ஆக, அவர் வழி ஒழுகும் நீரான்,
''தன்னதே ஆகும், இந்தத் தலம்'' எனும் கருத்தால், மாமன்
சொன்னதே துணிந்து, மார்பும் தோள்களும் பூரித்திட்டான். 29

துரியோதனன் சகுனி உரைத்த உபாயத்தை விதுரனுக்குக் கூற, அவன் மறுத்து மொழிதல்

வில்லினால் உயர்ந்த வென்றி விதுரனை நோக்கி, கொற்ற
மல்லினால் உயர்ந்த பொன்-தோள் வலம்புரி மாலை வேந்தன்
வல்லினால் உபாயம் செய்ய மாதுலன் உரைத்தது எல்லாம்
சொல்லினான்; அவனும் கேட்டு, சொல் எதிர் சொல்லலுற்றான்: 30

'வையமும் அரசும் வாழ்வும் வாங்குகை கருத்தேஆயின்,
பொய் அடர் சூதுகொண்டு, புன்மையின் கவர வேண்டா;
ஐய! நின் தந்தை ஓலை ஐவருக்கு எழுதி விட்டால்,
மெய்யுற மறுத்துச் சொல்லார்; வேண்டின தருவர் அன்றே. 31

'தந்தைதன் ஏவலாலே தருமனும் தம்பிமாரும்
இந்த மண் ஆடல் கைவிட்டு, எரி கெழு கானம் சேர்வர்;
முந்துற நுமதே ஆகும், முழுதும் வாழ்வு; எழுதும் செம் பூண்
பைந் தொடை அரசர் கேட்டால், பாவமும் பழியும் ஆகா. 32

'தீதினால் வரித்து, நெஞ்சம் தீயவர் ஆடும் மாயச்
சூதினால் வென்று கொள்கை தோற்றமும் புகழும் அன்று;
போதில் நான்முகனும், மாலும், புரி சடையவனும், கேள்வி
ஆதி நான்மறையும், உள்ள அளவும், இவ் வசை அறாதே!' 33

துரியோதனன் விதுரன் கருத்தை மறுத்துச் சினத்துடன் மொழிய, அவனும் சினத்துடன் துரியோதனனுக்குப் பரிந்து அறவுரை கூறுதல்

என்று அவன் உரைப்பக் கேட்டே, எரி எழும் மனத்தன் ஆகி,
'ஒன்றிய கேண்மைத் தந்தைக்கு ஒரு புடை வாரம் உண்டோ?
வன் திறல் மைந்தர் வாழ்வு வாங்கி, இன்று எமக்குத் தந்தால்,
புன் தொழில் வசையே அன்றி, புகழ்கொலோ புகல்வது? அம்மா!

'நினக்கு இது தொழிலால்; என்றும் நேயமும் அவர்கள்மேலே;
''எனக்கு உயிர்த் தந்தை நீ'' என்று யான் உனை மகிழ்ந்து காண்பன்;
உனக்கும் உன் கிளைக்கும், நாளும், உண்டியும் வாழ்வும் இங்கே;
மனக் கருத்து அங்கே' என்றான்—மாசுணத் துவசன் மாதோ. 35

மைந்தன் அங்கு உரைத்த மாற்றம் மனத்தினை ஈர, பின்னும்
வெந் திறல் விதுரன் உற்று விளம்புவன் என்ப மாதோ:
'புந்தியில் மறு இலாதோய்! ''புதல்வரில் ஒரு சார் அன்பு
தந்தையர்க்கு இல்லை'' என்றாய்; யானும், அத் தந்தை அன்றோ? 36

'நீங்களும் அவரும், நேய நெறிமுறை தவறாது, என்றும்
வாங்கு நீர் உததி ஆடை மண்ணின்மேல் வாழ்தல் உற்றால்,
பாங்கு அலா அரசர் எல்லாம் பணிந்து, நும் வாயில் நிற்பர்;
ஓங்கிய புகழும் வாழ்வும் ஒருப்பட வளரும் அன்றே. 37

'உங்களின் அவரும் நீரும் உளம் பிரிந்து, எதிர்த்தீர் ஆனால்,
''தங்களின் எதிர்ந்தார் அம்மா, குருகுலத் தலைவர்!'' என்னா,
பொங்கு அளி நிகழும் கஞ்சப் புரவலன் ஒழிவு கண்ட
திங்களின் உயர்ச்சி போலத் தெவ்வரும் திகழ்வர் அன்றே. 38

'ஆதலால், உறுதி சொன்னேன்; ஆம் முறை தெரிந்து கோடி!
ஏதிலார்போல, யானும், இனி உனக்கு யாதும் சொல்லேன்;
தீது அலாது உணரா வஞ்சச் சிந்தையார் பரிந்து கூறும்
கோது அலாது உனக்கு இங்கு ஏலாது' என, சில கூறினானே. 39

விதுரன் மனம் வருந்தத் துரியோதனன் நகையாடுதலும், அது பொருது விதுரன் எழுந்து தன் இருப்பிடம் சேறலும்

'நிறுத்து அறம் வளர்ப்போன் நெஞ்சில் நீதியும், குரவர் ஏவல்
மறுத்து எதிர் உரைக்கும் என்பால் வடுவும், நீ வரைந்து கண்டாய்;
செறுத்தவர் ஆவி கொள்வாய்! அடியனேன் செய்தது எல்லாம்
பொறுத்தருள்!' என்ன, கையால் போற்றினன், முறுவல் செய்தான்.

செழுந் திரு விரும்பும் மார்பன் செப்பிய கொடுமை கேட்டு,
விழும் திரள் மாலைத் திண் தோள் விதுரனும் வெகுண்டு, முன்னித்
தொழும் தகை மௌலி வேந்தன் சூழ்ச்சியிற்கு இசைவுறாமல்,
எழுந்து, தன் கோயில் புக்கான்—இகல் அரிஏறு போல்வான். 41

துரியோதனன் ஆணைப்படி அழகியதோர் மண்டபம் சமைத்தல்

புரிவு இலா மொழி விதுரன் போகலும், புரிவில் ஒன்றும்
சரிவு இலா வஞ்ச மாயச் சகுனியும், தம்பிமாரும்,
விரிவு இலா மனத்தோடு எண்ணும் விசாரமே விசாரம் ஆக,
வரி விலான், 'விரைவின், ஈண்டு ஓர் மண்டபம் சமைக்க!' என்றான்.

பெருந்தகை ஏவல் மாற்றம் பிற்பட, முற்பட்டு ஓடி,
இருந்த தொல் வேந்தர் தம்தம் இருக்கையின் இயன்ற எல்லாம்
அருந் திறல் மள்ளராலும், அணி மணித் தேரினாலும்,
பொருந்தவே கொணர்வித்து, ஆங்கண் பொற் சுவர் இயற்றினாரே.

சங்கை இல் சிற்ப நுண் நூல் தபதியர் தகவு கூர,
செங் கையின் அமைத்த கோலச் சித்திரத் தூணம் நாட்டி,
அம் கையில் அருண ரத்நத்து அணிகொள் உத்தரமும் ஏற்றி,
கங்கையின் உயர்ந்த முத்தின் கற்றையால் முற்றும் வேய்ந்தார். 44

ஓவியம் சிறக்கத் தீட்டி, ஒண் கொடி நிரைத்து, செஞ் சொற்
காவிய மக்கட்கு எல்லாம் கருத்துறு கவினிற்று ஆகி,
வாவிய புரவித் திண் தேர் மன்னவன் நினைவுக்கு ஏற்ப,
ஏவிய வினைஞர் தம்மால் இயல்புறச் சமைந்தது அன்றே. 45

மண்டபம் அமைத்தமையைத் தந்தைக்குத் துரியோதனன் சொல்லி, பாண்டவரை வரவழைக்கத் தூது அனுப்ப வேண்டுதல்

'மன் அவைக்கு ஆன பைம் பொன் மண்டபம் சமைந்தது' என்று,
தன் அவைக்கு உரியோர் சொல்ல, சகுனியும் தானும் நோக்கி,
'சொல் நவைக்கு ஏற்றது' என்று, தொழுதகு தாதைதன்பால்,
மின்னை வைத்து ஒளிரும் வேலான் மேவினன், விளம்பலுற்றான்: 46

'அரும் பெறல் ஐய! கேட்டி! அடியனேன் கருத்து முற்ற,
கரும் புயல் தவழும் சென்னிக் கதிர் மணிக் கூடம் ஒன்று
பெரும் புகழ் நகரின் ஈண்டுச் சமைத்தனன்; பெருமை காண
வரும்படி, தூது ஒன்று ஏவு, உன் மைந்தரை, விரைவின்' என்றான்.

திருதராட்டிரன் மகிழ்ந்து, விதுரனைத் தூது அனுப்புதல்

மகன் மொழி நயந்து கேட்டு, வாழ்வு உறு தந்தைதானும்
மிக நயந்து உருகி, 'நல்ல விரகினால் வெல்லல் உற்றீர்!
அகம் நெடும் போர் செய்தாலும், ஐவரை அடர்க்க ஒண்ணாது!
சகுனியை அன்றி, வேறு ஆர் தரவல்லார், தரணி?' என்றான். 48

விழி இலா வென்றி வேந்தன் விதுரனை அழைத்து, 'நீ போய்
மொழியில், ஆர் உலகில் மற்று உன் மொழியினை மறுக்க வல்லார்?
பழி இலா இசை கொள் நீதிப் பாண்டவர் வந்து, உன் மைந்தர்
வழியில் ஆய் ஒழுகும்வண்ணம் மருட்டி, நீ கொணர்தி!' என்றான்.

'தம்பியர் விழைவால் கூடம் சமைத்த பேர் அழகு காண,
இம்பர் வந்து, எமையும் எய்தி, ஏகுக விரைவின்!' என்ன,
பைம் பொனின் ஓலைமீது பண்புற எழுதி, 'இன்னே
எம்பியும் ஏகுக!' என்றான்; ஏவலின், அவனும் போனான். 50

பரிவாரங்கள் சூழ, விதுரன் பாண்டவர் வாழ் நகரை அடைதல்

கார் எனக் களிறு சுற்ற, காற்று எனப் புரவி ஈண்ட,
தேரினுக்கு ஒருவன்தன்னைச் சிலம்பு எனத் தேர்கள் சூழ,
வீரரில் பலரும் போற்ற, விதுரனும், இரண்டு நாளால்,
பாரினுக்கு உயிரே போலும் பாண்டவர் நகரி சேர்ந்தான். 51

இந்திரப்பிரத்த நகரின் எழில்

புரியும் ஒண் கதிர் கவினுறு பொலிவினால் பொன்னுலகு ஆம் என்ன,
அரிய பைம்பொனின் மணிகளின் நிறைந்த சீர் அளகை மாநகர் என்ன,
தெரியும் அன்புடன் அறம் குடி இருப்பது ஓர் தெய்வ வான் பதி என்ன,
விரியும் வெண் கொடிப் புரிசை சூழ் வள நகர், விழி களித்திட, கண்டான்.

ஊடு எலாம் நறும் பொய்கை; நீள் வாவியின் உடம்பு எலாம் மலர்; பூவின்
தோடு எலாம் எழு சுரும்பினம்; மதுகரச் சொல் எலாம் செழுங் கீதம்;
பாடு எலாம் இளஞ் சோலை; மென் பொங்கரின் பணை எலாம் குயில் ஓசை;
நாடு எலாம் நெடும் புனல் வயல்; கழனியின் நடுவு எலாம் விளை செந்நெல்; 53

அருகுஎலாம் மணி மண்டபம்; அவிர் ஒளி அரங்கு எலாம் சிலம்பு ஓசை;
குருகு எலாம் வளர்பழனம்; அப் புள் எலாம் கூடல், இன்புற ஊடல்;
முருகு எலாம் கமழ் துறை எலாம் தரளம்; வெண் முத்து எலாம் நிலா வெள்ளம்;
பருகலாம் புனல் நதிஎலாம், நீர்எலாம், பங்கயப் பசுங் கானம்; 54

ஆனகம் பல முழங்க வந்து எதிர் பணிந்து, ஆதுலர்க்கு அமுது அன்ன
போனகம் பரிந்து இடு நெடுஞ் சாலையே, புகுந்த மா மறுகு எல்லாம்;
'வானகம்தனை அமையும்!' என்று, உம்பரும் மண்ணின்மேல் வர எண்ணும்
ஞான கஞ்சுகன் நகரியை எங்ஙனே நாம் வியப்பது மன்னோ? 55

பாண்டவர் விதுரனை எதிர்கொண்டு உபசரித்தல்

'வந்தனன், சிலை விதுரன்' என்று ஓடி, முன் வந்தவர் உரையாமுன்,
தந்தை தன் தனி வரவு அறிந்து, இளைஞரும் தருமனும் எதிர் கொண்டார்;
சிந்தை அன்புடன் தொழத்தொழ, மைந்தரைச் செங்கையால் தழீஇக் கொண்டே,
அம் தண் அம்புலி கண்ட பைங் கடல் என, அவனும் மெய் குளிர்ந்திட்டான். 56

கொண்டு தந்தையைத் தாமும், வண் கொடி மதில் கோபுர நெடு வீதி
அண்டர் ஆலயம் எனத் தகு கோயில் சென்று அடைந்தபின், அடல் வேந்தர்
வண்டு தாமரை மலர் எனச் சுழலும் மா மலர் அடி பணிந்து ஏத்த,
கண்டு, வாழ்வுடன் அவர்க்கு அருள் புரிந்து, தன் கருத்தினுல் விடை ஈந்தான். 57

விதுரன் தான் வந்த காரியத்தை உணர்த்துதல்

தானும், மைந்தர் ஓர் ஐவரும், ஒரு புடை தனித்து இருந்துழி வண்டு
தேன் நுகர்ந்து இசை முரல் பசுந் தொடையலான் திருத்தக மொழிகின்றான்:
'கோன் உவந்து, தன் திருமுகம் எழுதி, ''நீ கொணர்க மைந்தரை!'' என்ன
யானும் வந்தனன், ஏவலால்; அழைத்ததற்கு ஏதுவும் உளது அன்றே.

'நீ புரிந்த நல் வேள்வியின் கடன் கழித்து, யாவரும் நெடு மாடக்
கோபுரம் திகழ் மூதெயில் வளநகர்க் கோயில் புக்கனம் ஆக,
''நூபுரம் திகழ் இணை அடி அரம்பையர் நோக்க அருங் கவின் கொண்ட
மா புரந்தரன் இவன்'' என இருந்தனன், வலம்புரி மலர்த் தாரான்.

'தம்பிமாரொடும், தகை இலாத் துன்மதிச் சகுனிதன்னொடும் எண்ணி,
''கும்ப மா மணி நெடு முடி நிரைத்த வண் கூடம் ஒன்று அமைக்க'' என்ன,
''அம்பு ராசி சூழ் மண்தலத்து அரசு எலாம் அடங்கு பேர் அவைத்து ஆக,
உம்பர் ஆலயம் நிகர்'' எனச் சமைத்தனர், ஒட்ப நூல் உணர்வுற்றார்.

'பெற்ற தந்தையோடு உள் உறும் உணர்வுஎலாம் பேசி, மண்டபம்தன்னில்
கொற்றவன் குடி புகும்பொழுது, உன்னையும் கூட்டி மன் அவை முன்னர்,
மற்ற மாதுலன் நெஞ்சமோ, வஞ்சமோ, மாயமோ, வகுத்து, ஆங்கு,
கற்ற சூது நின்னுடன் பொரு நினைவினன்; கருத்து இனித் தெரியாதே? 61

விதுரன் கொடுத்த திருதராட்டிரன் திருமுகச் செய்தி உணர்ந்து, தருமன் பேசுதல்

'திருதராட்டிரன் திருமுகம் இது' என, சென்று இறைஞ்சினன் வாங்கி,
விரதம் ஆக்கம் என்று அறிந்து, அறம் பேணுவான் விளைஞர் கைக் கொடுத்திட்டான்;
இரத மாற்றம் அங்கு எழுதிய படியினுல் இயம்பலும், அது கேட்டு,
'வரதனுல் பணிப்புறு தொழில் யாவர், நாம் மறுக்க?' என்று உரைசெய்தான். 62

மூத்த தாதைதன் ஓலையும், இளையவன் மொழியும், ஒத்தமை நோக்கி,
வார்த்தை வேறு மற்று ஒன்றையும் உரைத்திலன், மனுநெறி வழுவாதோன்;
'சேர்த்த நாக வெங் கொடியவன் கொடிய வன் சிந்தையின் நிலை தோன்ற,
கோத்த கோவை நன்று ஆயினும் தகுவதோ, குருகுலம்தனக்கு?' என்றான்.

'அடியும், ஆண்மையும், வலிமையும், சேனையும், அழகும், வென்றியும், தம்தம்
குடியும், மானமும், செல்வமும், பெருமையும், குலமும், இன்பமும், தேசும்,
படியும், மா மறை ஒழுக்கமும், புகழும், முன் பயின்ற கல்வியும், சேர
மடியுமால்; மதி உணர்ந்தவர் சூதின்மேல் வைப்பரோ மனம்? வையார். 64

'குழகர் ஆய் இள மடந்தையர்க்கு உருகுவோர், குறிப்பு இலாமையின், நாளும்
பழகுவார், மிகச் சிந்தை நோய் தாங்களே படுக்குமாறு உணராமல்;
அழகு பேர் அறிவாகவே கொண்டவர், அறத் தொழில் புரியாமல்,
கழகம் ஆடவும் பெறுவரோ? இதனினும் கள் உணல் இனிது அன்றே!

'மேதகத் தெரி ஞானநூல் புலவரும், வேத்து நூல் அறிந்தோரும்,
பாதகத்தில் ஒன்று என்னவே, முன்னமே, பலபடப் பழித்திட்டார்;
தீது அகப்படு புன் தொழில் இளைஞரின் சிந்தனை சிறிது இன்றி,
தோதகத்துடன் என்னையோ, சகுனிதன் சூதினுக்கு எதிர்?' என்றான்.

தன் கருத்தினில் நிகழ்ந்தவாறு இம் முறை தருமன் மைந்தனும் கூறி,
'என் கருத்தினால் பெறுவது என்? விதியினை யாவரே எதிர் வெல்வார்?
மன் கருத்தையும், அவன் திருவுளம் நிகர் மகன் கருத்தையும், நோக்கி,
நின் கருத்தை நீ உரை' என, விதுரனும் நிகழ்ந்தன உரைக்கின்றான்: 67

'நின் கருத்து உரை' என வேண்டிய தருமனுக்கு விதுரன் கூறிய மாற்றம்

'இங்கு நீ எனக்கு இயம்பிய யாவையும், யானும் அன்னவர் கேட்ப,
அங்கு நீர்மையின் மொழிந்தனன்; என் மொழி யார்கொலோ மதிக்கிற்பார்?
பொங்கு நீருடைப் பூதலத் தலைவ! கேள்; புனைந்த நின் இதயத்துத்
தங்கு நீர்மையின் புரிக!' எனப் புதல்வனைத் தந்தையும் தகச் சொன்னான்.

வீமன் தன் கருத்தை உரைத்தல்

'அன்று தாழ் புனல் துறையினில் கழு நிரைத்து, அரிய வஞ்சனை செய்தான்;
குன்றுபோல் உயர் வாழ் மனைக் கொடுந் தழல் கொளுத்தி, வன் கொலை சூழ்ந்தான்;
வென்று சூதினில் யாவையும் கவரவே, விரகினால் அழைத்திட்டான்;
என்றுதான் நமக்கு அன்புடைத் துணைவனாய் இருந்தது, அவ் இகலோனே?

'முளையிலே உயிர் கொல்வது ஓர் கடுவிடம் முற்றி, வன் காழ் ஏறி,
விளையில் ஏது செய்யாது? மற்று அவருடன் விழையும் நண்பு இனி வேண்டா;
வளையில், ஏதமே புரிந்து, மேல் மலைந்திடும்; வன் படை கொடு மோதிக்
களையிலே நமக்கு இருப்பு உளது' என்றனன்—காற்று அருள் கூற்று அன்னான். 70

விசயன் முதலிய தம்பியரும் அத்தினபுரிக்குச் செல்லுதலை மறுத்துரைக்க,
தருமன்; 'தந்தை சொல் மறுப்பது தகாது' எனல்

' ''தேறலார்தமைத் தேறலும், தேறினர்த் தேறலாமையும், என்றும்
மாறலாருடன் மலைதலும், மாறுடன் மருவி வாழ்தலும், முன்னே
ஆறு அலாதன அரசருக்கு'' என்று கொண்டு, அரச நீதியில் சொன்னார்;
கூறலாதன சொல்வது என்? செல்வது என், கொடியவன் அருகு?' என்றான்.

விசையன் இவ் வகை மொழிந்ததும், முந்துறு வீமன் மாற்றமும் கேட்டே,
இசை பெறும் பெயர் நகுலனும் தம்பியும், 'ஏகுதல் தகாது' என்றார்;
'வசை அறும் புகழ்த் துணைவர் இன்று உரைத்ததே வார்த்தை ஆயினும், பெற்ற
அசைவு இல் அன்புடைத் தந்தை சொல் மறுப்பதோ?' என்றனன், அறம் செய்வான்.

'ஆவி யார் நிலைபெறுபவர், நீதி கூர் அரிய வான் புகழ் அன்றி?
பாவியானது அங்கு அணுகுறாது ஒழியினும் பலித்திடும், நினைவு இன்றி;
மேவி ஆளுடை ஐயன் வந்திருக்கவும், வேரி வண்டு எழும் மன்றல்
காவி ஆர் தொடைக் காவலன் ஏவல் நாம் மறுப்பது கடன் அன்றே!

தருமன் ஆணைப்படி அத்தினபுரி செல்ல, படைத்தலைவர் முதலியோர் திரளுதல்

'நாளை ஏகுதும், எந்தை வாழ் அத்தின நகர்க்கு' எனத் தருமன்தன்
காளை ஏவலின், முரசு அறைந்து, எங்கணும் காவலர் குழூஉக் கொண்டார்;
வேளை ஏறிய அரும் படைத் தலைவரும், மேல் வரும் புனலூடு
வாளை ஏறு தண் பழன நாட்டு எறி படை மன்னரும், வந்துற்றார்.

மா துரங்கமம், மணி நெடுந் தேர், மத வாரணம், வய வீரர்,
சாதுரங்கமும், தந்திரத் தலைவரும், தரணி மன்னரும், சூழ,
மீது உரம் கவின் கெழு பெருஞ் சேனை சூழ் வேந்தன் மா நகர் உற்ற
போது, உரங்கமும் நெளிந்தன, பல் தலை பொறுமையின் இரு-நான்கும். 75

ஐவரும் தேர்மீது ஏற, நாற்படைகளும் சூழ்தல்

ஐந்து பூதமே நிகர் என, புலன்கள் ஓர் ஐந்துமே எதிர் என்ன,
ஐந்து காவுமே பொரு என, பணி முடி ஐந்துமே நேர் என்ன,
ஐந்து வாளியே உறழ்வு என, வேள்வி ஓர் ஐந்துமே ஒப்பு என்ன,
ஐந்து வாசமே தரம் என, ஐவரும், ஐந்து தேர்மேற் கொண்டார்,

விழியின், நெஞ்சின், வால் நெருப்பின், நீடு உததியின், விதி படைப்பினின், தோன்றி,
பொழியும் வெண்கதிர் ஐவகை மதியும் அப்பொழுது உதித்தன என்ன,
மொழியும் ஐந்து பொன் தனிக் குடை நிழற்றின; முழு மதி வடிவின்கண்
இழியும் வெண் சுடர்க் கற்றையின் சாமரம் இரட்டின, இருபாலும்.

மைத் திறத்தின் நின்று அதிர்வன; முதிர்வன வரைத் திறத்தினும் ஓங்கும்
மெய்த் திறத்தன; எழு திறத்தினும் மிக விடுவன, மத தாரை;
எத் திறத்தினும் பொரு தொழில் புரிவன; ஏழ் உறுப்பு உறத் தாழ்ந்த
முத் திறத்தன; எண் நலப் பிறப்பின—மூரி வெங் களி யானை. 78

வன் தபோதனரினும் மிகு பொறையன, வலன் உயர்வன, எண் கோ
என்ற போதகத் தானையின் பெருமையை எங்ஙனம் புகல்கிற்பாம்!
நின்ற போது உடல் முகிலிடை மறைந்தது; நிரை நிரை நெறிப்பட்டுச்
சென்றபோது, வெம் படைக் கடல் செய்தது ஓர் சேதுபந்தனம் போலும்!

சுற்றும் நீளமும் உயரமும் நிகர்ப்பன; சுழியின் மிக்கன; தீமை
அற்று மேதகு நிறத்தன; கவினுடை அவயவத்தன ஆகி,
எற்று மா மணி, முரசமும், சங்கமும், எனும் குரல் மிகுத்து, இப் பார்
முற்றும், மாதிரத்து அளவும், ஐங் கதியினுல் முடிப்பன, இமைப்போதில்;

ஆளின் நெஞ்சமும், வார்த்தையும், செங் கையும், ஆசனத்தொடு தாளும்,
கோளில் இன்புறக் குறிப்பன; எவற்றினும் குறைகள் அற்றன ஆகி,
யாளி, குஞ்சரம், வானரம், முதலிய இயக்கினுல், விசும்பு எங்கும்
தூளி கொண்டிட மிடைந்து வந்தன—நெடுந் துரகதம், பல கோடி.

வடிவுடைச் சில குரகதம் மரகத வண்ணம் மிக்கன ஆகி,
படியினில் சிறிது அமைவுற மிதித்தில, பவன வெங் கதிபோல;
முடிவில் இப்படிமிசை வரக் கருதியே முனிவரன் உயிர்க்கு எல்லாம்
அடி படைத்தது; படைத்தது, இங்கு இவற்றினுக்கு அவயவம் குறையாமல்.

'நீடு மால் வரை அடங்கலும் நிலைபெற நிற்கும் மால் வரை; மண் மேல்
ஓடும் மால் வரை இவை!' என, தனித்தனி ஊர்ந்த தேர் பல கோடி.
'நாடு, மால் வரை, கடல், வனம், எனும் நிலன் நாலுமே ஒன்ருகக்
கூடுமால்; வரை இல்' எனப் பரந்தனர், கொடிய வெம் படை வீரர்.

அதிர் முழக்கின கரு முகில் ஏழுடை அண்டர் கோன் அகல் வானுக்கு
எதிர் முழக்கு என முழங்கின, தனித் தனி, இன் இயம், இடம்தோறும்;
முதிர் முழக்கு இபம் அவற்றினும் மும் மடி முழங்கின; அவைதாமும்
பிதிர் முழக்கு என, முழங்கின, வலம்புரி; உரகரில் பிழைத்தோர் யார்?

எடுத்த நீள் கொடி ஆடை வான் அகல் வெளி எங்கணும் நெருங்கி, கீழ்ப்
படுத்த வானமே வானமா மறைந்தது, மீதுறப் பகிர் அண்டம்;
அடுத்த பூ நதி, வான் நதிக்கு இலது என, அன்புடன் உபகாரம்
கொடுத்த மீன் என, கால் பொரப் பரந்து போய்க் குளித்தன குளிர் தோயம்.

அழுந்த மேல் இடு சேனையால் மிகவும் நொந்து, அமரருக்கு உரை செய்ய,
செழுந் தராதல மடந்தை பொன்னுலகிடைச் செல்லுகின்றதுபோல், மேல்
எழுந்த தூளிகள், இடை விடாது, எங்கணும் எழுந்து எழுந்து, எதிர் ஓடி,
விழுந்த தூளியும் தடுத்தன, நிலன் உற, விசும்பு உறும்படி நின்றே.

தம்பியர் சூழத் தருமன் புறப்படுதல்

முன்னர் மாருத மதலையும் சேனையும் முடுகி வன்பொடு போத,
பின்னர் வாசவன் மதலையும் தானையும் பெருந் தகவுடன் போத;
'அந் நராதிபர் இருவரும் இருபுறத்து அரும் படையுடன் செல்ல,
மன்னர் ஆதிபன் தாரகா கணத்திடை மதி எனப் புறப்பட்டான்.

அரச மகளிர்கள் பிடியின் மேலும், திரௌபதி சிவிகையிலும் செல்லுதல்

அம் கண் மாநிலத்து அரசர்தம் மகளிர் பேர் அரும் பிடிமிசை போத,
செங் கண் மா மயில் யாகபத்தினியும் வண் சிவிகையின் மிசை போத,
வெங் கண் மா மணி முரசு உயர்த்தருளிய மெய் தவா மொழி வேந்தன்
தங்கள் மா நகர் கடந்து, வண் சாயையும் தபனனும் எனச் சென்றான்.

ஏவின, பல்லியும்; இடத்திலே வரத்
தாவின, குக்கிலும்; தருமன்தன் எதிர்
வாவின, நெடுங் கலை; வரத நூல் வலோர்
ஓவினர், உரைக்கவும் உணர்கலாமையால். 89

வழியிலுள்ள ஒரு சோலையில் இளைப்பாறி, மேலே செல்லுதல்.

மடந்தையர் அளகமும், மாந்தர் மாலையும்,
உடைந்து உகு கட கரி மதமும், உன்னியே,
தடம்தொறும் முரல் அளி, தமரின் நண்புஉறத்
தொடர்ந்து, உடன் வர வர, சோலை எய்தினர். 90

சம்பகம், பாடலம், தமால நாள்மலர்,
வம்பு எழ மிலைச்சுவார்; வாவி ஆடுவார்;
செம் பலவு, ஆமிரம், கதலித் தீம் கனி,
உம்பரின் அமிழ்துஎன, உடன் அருந்துவார். 91

நால் வகை நிலக் காட்சிகள்

பச்சிளங் கமுகின் மென் பாளை சூடுவார்;
அச் செழுங் காய் கனி கவர்ந்து அருந்துவார்;
கொச்சை அம் கடைசியர் குழுமி வாழ்த்தவே,
வச்சிரம் போல்பவர் மருதம் நீங்கினர். 92

தடா நிறை வெண்ணெயும், தயிரும் கொண்டு, எதிர்
அடா, முடை நாறுதோள் ஆயர் கைதொழ,
படா முதல் முல்லையின் பரிமளம் கொளா,
கடா மலை வயவர் தண் கானம் எய்தினர். 93

தேன்இனம் செறிதரு தெரியல் வேலினன்-
தான் இரங்கு அருள் மிகு தருமன் ஆதலால்,
கானில் அங்கு உறைதரு கலைகளோடு இள
மான்இனம் பேர்கலா, மருங்கு வைகுமால். 94

செரு இளங் காளையர் சேனையின் திறம்
வெருவு இளம் பொதுவியர் விழைந்து காண்பபோல்,
மரு விளங்கு இதழி நீள் வனமும், மா மலர்க்
கருவிளங் கண்கொடு, கலந்து கண்டவே. 95

புழை நெடுந் தடக் கை வெம் போதகங்களை
மழை முகில் என, களி மயில்கள் ஆடின—
தழல் எழு கானகம் தண்ணெனும்படி
செழு மத அருவியின் திவலை வீசவே. 96

வன நெறி கடந்து போய், மன்னவர்க்கு எலாம்
தினகரன் எனத் தகு செய்ய கோலினன்,
இனமுகில் தவழ்தலின், இரங்கு பேர் இசைத்
தனித வண் கிரி நெடுஞ் சாரல் எய்தினன். 97

குன்று உறை கட கரிக் குழாங்கள், சேனையின்
ஒன்றிய களிறு கண்டு, உட்கி, ஓடின;
துன்றிய புற இபச் சுவடு கண்டு, உடன்
சென்றில, வெகுண்டு, இவன் சேனை யானையே. 98

வாளியின் வரும் பரிமாவின் வண் குரத்
தூளிகள் விசும்புறத் துன்றி ஓங்கலால்,
ஆளிகள் சிகரம் என்று அதிர்ந்து பாய்வன,
மீளியர் வேலின்வாய் வீழ்ந்து மாய்ந்தவே. 99

கார் தவழ் கொடு முடிக் கான மால் வரை
வார் தவழ் முலை அரமாதரார் செவி,
தார் தவழ் தடம் புயத் தரணி மன்னவர்
தேர் தவழ் ஓதையின், செவிடு பட்டவால். 100

வரை நிலம் கழிந்து, எறி மகர வாரிதித்
திரை நிலம் புகுந்தனன், சேனை சூழ்வர—
புரை நிலம் கடந்து அறம் புரியும் நீர்மையான்,
உரை நிலம் கடந்த சீர் உரைகொள் பேரினன். 101

ஒளி நலம் திகழ் வளை உறங்கு நல் நிழல்,
களி நறுஞ் சுரும்பு இமிர், கண்டல் வேலி சூழ்
புளினமும், கானலும், பொற்ப நோக்கினன்—
நளினமும் புறந்தரு நயன வேந்தனே. 102

'பெருங் கட மலைக்குலம் பெயர்த்தும் வந்தன,
மருங்கு அடர் பேர் அணை வகுக்கவே' என,
இருங் கட களிறு, தேர், எண் இல் சேனை, கண்டு,
அருங் கடல் வாய் திறந்து, அலறி ஆர்த்ததே. 103

நல் நெடுந் துறை எலாம் நாளிகேரமோடு
இன் நெடும் பனங் கனி எடுத்து அருந்தினார்;
புன்னையின் புது மலர் புனைந்து, கைதையின்
மென் நிழல் வைகினார்;—விலாச வீரரே. 104

### அத்தினபுரியின் புறத்தே சேனைகளுடன் பாண்டவர் தங்கியிருத்தல்

நா நலம் புனல் கெழு நாடும், கானமும்,
ஏனல் அம் புனக்கிரி இடமும், நெய்தல் அம்
கானலும், இவ் வகை கடந்து, காவலன்
தூ நலம் திகழ் பதி தோன்ற, எய்தினார். 105

அத்தினபுரிதனக்கு அருகு வால் வளை
முத்துஇனம் நிலவு எழ, முகைக்கும் தாமரைத்
தொத்தின பொய்கையும், சுரும்பு அரு மலர்க்
கொத்தின சோலையும், குறுகி, வைகினார். 106

மொட்டின பரு மணி முடிகொள் தேர்ப் பரி,
வெட்டின பரிகளும், வெம்மை ஆறின;
மட்டின பரிமள மரங்கள் யாவையும்
கட்டின, கழை பொரு கவள யானையே. 107

தரித்தனர், வீரரும், தம்தம் மாதரும்;
சரித்தன, சும்மைகள் தங்கு பண்டியும்;
பரித்தன நல் நிறப் படங்கு வீடுகள்
விரித்தனர், இடம்தொறும் வேந்தர் எய்தினார். 108

கை வரு தண்டுடைக் காளை, வெஞ் சிலை
தைவரு செங் கையான், தாரை வெம் பரி
மெய் வரு குமரன், வேல் விடலை, வேந்தனோடு,
ஐவரும் அமர்ந்தனர், ஆண்மை ஏறு அனார். 109

'மறத்து இருந் தானையான் வஞ்சம் எண்ணினான்,
அறத்து இருந்திலன்' எனா அஞ்சி, அந்த ஊர்
புறத்து இருந்தது என, புனிதன் பாசறை
நிறத்து இருந்தது; பிற நிகர்ப்ப இல்லையே. 110

### பாண்டவர் வரவு அறிந்து, துரியோதனாதியர் மகிழ்தல்

மீண்டவர், வரி சிலை விதுரன் ஏவலால்,
பாண்டவர் வரவு, முன் பணிந்து, கூறவே,
மாண்டவர் குறிப்புறு மாய வஞ்சகம்
பூண்டவர் களித்து, மெய் புளகம் ஏறினார். 111

தேசு அறை இடங்களும், தேம் கொள் கானமும்,
மூசு அறை மதுகரம் மொய்த்த சோலையும்,
வீசு அறல் வன நதி விதமும், மேல்கொளப்
பாசறை இருந்தவா பகரல் ஆகுமோ? 112

சூரியன் மறைவும் சந்திரன் தோற்றமும்

விருந்துறு சேனை வெவ் வீரர் இன் அமுது
அருந்தினர் மெய் குளிர்ந்து, அசைவு தீர்தலும்;
'வருந்தினர் இவர் துயில் வதிய வேண்டும்' என்று,
இருந் தபனனும் இவர்க்கு இரவு நல்கினான். 113

மண் வளர் பெரும் புகழ் மன்னர் ஐவரும்,
பண் வளர் நல் இசைப் பல மகீபரும்,
கண் வளர் பாளையம் காண எண்ணியே,
விண் வளர் குபேரனும் விழைந்து தோன்றினான். 114

மருள் மிகு சுரும்புஇனம் மணந்த சோலையின்
இருள்களின் இடை இடை எறித்த வெண் நிலா,
அருளுடை மைந்தர் தோள் அணைந்த மங்கையர்
புரி குழல் நெகிழ்ந்த வெண் போது போலுமே. 115

கானிடை, சில சில கடி கொள் தேன் உமிழ்
தூ நிற முல்லைகள் மலர்ந்து தோன்றுமால்—
வானிடை முறை முறை வளரும் மா மதி
மேனியின் அமிழ்து உமிழ் விந்து என்னவே. 116

பொரு இல் வெண் துகில்கொடு பொதிந்தது என்னவே,
பரி நெடுந் தேர்மிசைப் பால் நிலா எழ,
கிரண வெண் படைக்கு எதிர் கெடாமல் நின்ற பேர்
இருள் என விளங்கின, யானை வெள்ளமே. 117

சேனையில் நிகழ்ந்த சில செயல்கள்

பரியன கந்துகம் பரிந்து, மா மதக்
கரி சில பாகையும் கை கடந்தன;
அரிவையர் பலர் துயில் அனந்தலோடு, தம்
சுரி குழல் மேகலை சோர, ஓடினார். 118

நீடுறு தருக்களின் நிரைத்த மா அதன்
கோடுஇற எறிந்து கைக்கொள்ளும் ஓதையால்,
மாடு உறு பொங்கர்வாய் வதிந்த புள் வெரீஇ,
பேடொடு சேவல் மெய் பிரிந்து, தேடுமால். 119

ஊதையின் மரன் அசைவுற, பொரு வடம்
மோதுறு முளையுடன், முடுகு வேட்டமாய்,
தீது அறு பரி சில செல்வன் பாசறை
மாதிரம் உற, பல வாளி போதுமால். 120

ஆடுவர் சிலர் சிலர்; ஐவர் வான் புகழ்
பாடுவர், சிலர் சிலர்; பாயல் இன்புறக்
கூடுவர், சிலர் சிலர்; கோதை மாதரோடு
ஊடுவர், சிலர் சிலர்;—ஒகை வீரரே. 121

சூரியன் தோன்ற, படைகளைப் பாசறையில் நிறுத்தி, பாண்டவர்
அத்திநபுரிக்குச் செல்லுதல்

பஞ்சவர் வாழ்வுறு பதம் பொருமையின்,
வஞ்சகம் இயற்றுவான் மனம்கொல் என்னவே,
மிஞ்சிய குளிர் மதிமேல் பொருது, இகல்
செஞ் சுடரவன் குணதிசையில் தோன்றினன். 122

துயில் உணர்ந்து, பைந் தொடையல் மார்பினன்
வெயில் எழுந்து தன் விரதம் உற்றபின்,
பயில் பெருஞ் சனம் பாசறைப் படுத்து,
எயில் வளைந்த மா நகரி எய்தினன். 123

திருதராட்டிரனைப் பாண்டவர் வணங்குதலும், அவன் மைந்தரைத் தழுவி,
நயவுரை கூறுதலும்

இரு மருங்கினும் இளைஞர் நால்வரும்,
தரும வல்லியும் தானும் ஆகவே,
அரு மடங்கல்ஏறு அனைய ஆண்மையான்
குரவன் இன்புறும் கோயில் நண்ணினன். 124

சிந்தை அன்புற, செல்வ வாயிலோர்,
வந்த மைந்தர்தம் வரவு கூறவே,
முந்தை ஏவலால் மொழிய, உள் புகுந்து,
அந்த மீளி சேவடி வணங்கினர். 125

தம்பி மைந்தரைத் தழுவி, 'நும்மை இன்று
எம்பி காண நல்வினை இயன்றிலான்;
உம்பிமாரொடும் ஒத்து வாழ்க, நீர்,
நம்பி!' என்று, நல் நயம் விளம்பினன். 126

வணங்கிய திரௌபதியைக் காந்தாரியிடம் செல்லப் பணித்து,
மைந்தருடன் அளவளாவுதல்

பாவை தன் செழும் பணிவு கூறலும்,
'மேவி வாழ்க!' என, மெய் களிக்கவே,
'தேவி தன்னுழைச் செல்க!' என்றுகொண்டு
ஏவி, மைந்தரோடு இவை விளம்பினன்: 127

'கருமம், நீதி, சீர், கல்வி, மந்திரம்,
பெருமை, ஆண்மை, தாள், பீடு, நீடு பேர்,
தருமம், யாவும், நும் தன்மைஆதலால்,
அருமை இன்றியே அரசு செல்லுமே. 128

'இகல் எறிந்து, நீள் இராயசூய மா
மகம் உழந்ததும், வண்மை செய்ததும்,
திசை அடங்கலும் திறை கொணர்ந்ததும்,
தொகுதி கொண்ட நும் துணைவர் கூறினர். 129

'எண் திசாமுகத்து எல்லை எங்கணும்
கொண்டது ஆகும், முன் குருகுலத்து உளோர்;
துண்டியாமல், நும் துணைவர் தம்மொடும்,
பண்டு போல, மண் பரவ, வைகுவீர். 130

'சேண் இருந்து, நும் சீர் செவிப்படுத்து,
யாணர் அன்பு கூர் இனிமை அன்றியே,
பூண் நலம் பெறும் பொற்பொடு உங்களைக்
காணுமாறு செங் கண் படைத்திலேன்!' 131

நேயம் உண்டுபோல் நெஞ்சொடு இன்ன சொல்
தூய மைந்தரைச் சொல்லி, 'நீவிர் போய்,
யாயையும் பணிந்து, எந்தை தாள் மலர்ச்
சேய பங்கயம் சேர்மின்' என்னவே, 132

காந்தாரியை வணங்கி, அவளுடைய வாழ்த்தை மைந்தர் பெறுதல்

இருந்த மைந்தரும் ஏவலோடு சென்று,
அருந்ததிக்கு நேர் அன்னை தன்னையும்
பரிந்து இறைஞ்சினர்; பயில வாழ்த்தினள்,
திருந்து பூணினள், சிறுவர் தம்மையே. 133

முந்த வந்து, தாள் முளரி கைதொழும்
அம் தண் வல்லியும், ஐவர் மைந்தரும்,
வந்து நிற்றலும், மகிழ்வொடு உன்னினள்,
'குந்தி செய் தவம் கூரும்!' என்னவே. 134

திரௌபதியைக் காந்தாரியிடத்து இருத்தி, பாண்டவர் சென்று
வீடுமன் முதலியோரை வணங்குதல்

வேயை வென்ற தோள் மின்னை அங்கு வைத்து,
யாயையும் பணிந்து, எழில் கொள் தோளினர்
போய், அகண்டமும், போற்று கங்கையாள்
சேயை, அன்புடன் சென்று, இறைஞ்சினர்; 135

வேந்து அழைத்ததும், விதுரன் ஏவலின்
போந்து அழைத்ததும், புகல வந்ததும்,
தாம் தழைக்கவே, தந்தை தந்தை முன்,—
தேம் தழைத்த தார்ச் செல்வர்—கூறினர். 136

புள் அலங்கலார் புரிவு உரைத்திட,
கொள்ளை வன் திறல் குருகுலேசனும்,
'கள்ள வஞ்சர் வெங் கருவி செய்யினும்,
உள்ளது உண்டு' என, உண்மை கூறினன். 137

தாதை தாதையைத் தாம் அகன்று, பின்
கோதை வெஞ் சிலைக் குருவை, மைந்தனை,
கீத நான்மறைக் கிருபனை, செழும்
பாதநம் செய்தார், பரிவொடு ஏகியே. 138

பாண்டவர் விதுரன் மாளிகையில் புகுந்து தங்க, சூரியன் மறைதல்

சதுர மா மறைத் தலைவர்தங்களால்
எதிர் மொழிந்த பேர் ஆசி எய்தியே,
மதுர மன்றல் நாள்மாலை மன்னரும்
விதுரன் மந்திரம் மீள மன்னினர். 139

தமது இல் மெய்யுறத் தம்மது ஆகவே
அமிழ்து அருந்தி, அங்கு அவர் இருந்த பின்—
திமிர நாசனன், செய்ய மேனியன்,
கமல நாயகன், கடலில் மூழ்கினன். 140

மாலைப் பொழுதில் விதுரன் மாளிகையின் தோற்றம்

தினகரன் கரம் திகழ் கமண்டலம்,
பனிகொள் செக்கர் தம் படமது ஆகவே,
இனிய வந்தனைக்கு எறியும் வேலை சேர்
புனிதர் ஒத்தது—அப் புன்கண் மாலையே. 141

காய்ந்த மெய்ச் செழுங் கதிரவன் கரம்
ஏய்ந்த அப் பதத்து எழில் எறித்தலால்,
ஆய்ந்து, பத்தி கொண்டு, அடர் பசும் பொனால்
வேய்ந்தது ஒக்குமால், வேந்தன் மாடமே. 142

சந்திரனது தோற்றக் காட்சி

'மன் குலத்துஉளோர் வஞ்சகம் செயார்;
என் குலத்துஉளோர் என்கொல், ஈது?' என,
தன் குலத்துஉளோர்தமை விலக்கவோ,
நன் குலத்து உளோன் உதயம் நண்ணினன்? 143

'குருகுலாதிபன் கொடிய நெஞ்சமே
இருள் நிறைந்தது' என்று யாம் வெறுக்கவோ?
மரபில் ஆதியாம் மதியும், எண்ணின், உள்
கரியன் என்னுமா காணல் ஆனதே. 144

உள் நிலாவு பேர் ஒளி மழுங்கு நீள்
வெண் நிலாவினுல், வெளுத்த, எங்கணும்;—
கண் இலான் மகன் கடுமை அஞ்சி, இம்
மண்ணில் ஆர், வெளா வடிவம் எய்தினர்? 145

திரௌபதியும் விதுரன் மாளிகை வந்து சேர்தல்

விந்தை வாழ்வு கூர் விறல் மிகுத்த தோள்
முந்தை ஓதை மா முரசு உயர்த்தவன்
சிந்தை காமுற, தெரிவை வந்து, இளந்
தந்தை கோயிலில் தானும் நண்ணினுள். 146

விதுரன் மாளிகையில் இரவைக் கழித்தபின், காலைக்கடன் கழித்து, தம்பியருடன் தருமன் இனிது இருந்து, முனிவரர் முதலியோர்க்குத் தானம் முதலியன வழங்குதல்

மங்குல் சுற்றும் மா மண்டபத்திடைக்
கங்குலில் தடங் கண் துயின்றபின்,
பொங்கு உலைப்படும் பொன்-தசும்பென,
செங் குலக் கதிர்த் திகிரி தோன்றவே, 147

பாயல் மன்னு கண்படை உணர்ந்து, உளம்
தூயவன் பொலஞ் சுடர் பணிந்தபின்,
சாயை அன்ன தன் தம்பிமாரொடும்,
சீயம் என்னவே, திகழ வைகினுன். 148

முனிவரர்க்கு எலாம் முதன்மை ஆகவே,
தனதனின் பெருந் தானம் உய்த்திடும்;
பனுவல் வித்தகப் பாவலர்க்கு எலாம்
கனம் எனத் தரும், கனக மாரியே. 149

கண்டு கண்டு, தன் கழல் வணங்கும் மா
மண்டலேசரும், மாலை மன்னரும்,
கொண்டு வாழ்வுற, குரகதம், குடை,
தண்டு, சாமரம், தந்தி, நல்குமே. 150

பூந் தண் மா மலர்ப் பூவை கொங்கை தோய்,
ஏந்து தோளினுன் இவண் இருந்துழி,
பாந்தள்அம் கொடிப் பார் மகீபனைச்
சேர்ந்த மன்னர்தம் செயல் விளம்புவாம்; 151

புதிய மண்டபத்தில் யாவரும் ஈண்டி இருக்கும்போது, பாண்டவரை அழைத்து வருமாறு பிராதிகாமி என்பவனைத் துரியோதனன் அனுப்புதல்

தானும், மாமனும், குறித்த தம்பிமாரும், அங்கர் தம்
கோனும், மாசு இல் தந்தை தந்தை, கொடுமரக் கை விதுரனும்,
வான் உலாவு புகழ் படைத்த மைந்தனும், துரோணனும்,
ஏனையோரும் வந்து கூடி, இனிது இருந்த எல்லையே, 152

பிராதிகாமி பாண்டவர்க்குச் செய்தி தெரிவித்தல்

'மண்டபத்தின் அழகு காண, மன்னர் ஐவர் தம்மை நீ
கொண்டு, இமைப்பின் வருக' என்று கொற்றவன் பணிக்கவே,
வண்டு சுற்று மாலை மார்பன் வண் பிராதிகாமி, வான்
அண்டர் கற்பம் என இருந்த அரசர் தம்மை அணுகினான். 153

சென்று யாகபதி கழல்-திருப் பதம் பணிந்து, கீழ்
நின்று, வாய் புதைத்து, 'அறங்கள் நிலைபெறும் சொல் நீதியாய்!
வென்றி வீரன், ''மண்டபத்தின் விரிவு காண வேண்டும், நீ''
என்று கூறி, ஏவினான், இங்கு என்னை' என்று இயம்பினான். 154

திரௌபதியைத் தந்தை இல்லிற்கு அனுப்பி, துணைவருடன் தருமன் சபையை அடைதல்

ராயசூய பன்னிதன்னை, 'எந்தை இல்லில் யாயொடும்
போய் இருந்து வருக' என்று, புரை இலா மனத்தினான்
சீயம் அன்ன துணைவரோடு சென்று புக்கு, நன்றி இல்
பேய் இருந்தது என இருந்த பீடு-இலானை எய்தினான். 155

தருமன் வீடுமன் முதலியோரை முறைப்படி வணங்கி, ஆசனத்து அமர்ந்து, அம் மண்டபத்தின் அழகை வியந்து கூறுதல்

மன் இருந்த பேர் அவைக்கண் வந்து, முந்தை வரிசையால்,
முன் இருந்த தாதை, வம்ச முதல்வன், ஞான விதுரன், என்று,
இன்(ன) இருந்த தலைவர் தாள் இறைஞ்சி, முன்னர் இட்டது ஓர்
மின் இருந்த ஆசனத்தின்மீது இருந்து, வினவினான். 156

'இந்த மண்டபம் சமைந்த இனிமைதன்னை என் சொல்வேன்!
முந்தை மண்டபங்களுக்கும் முதன்மையான தேவர் ஊர்
அந்த மண்டபத்தும் இல்லை, அதனை அன்றி மண்ணின்மேல்
எந்த மண்டபத்தும் இல்லை, இதனின் உள்ள எழில்அரோ!' 157

என வியந்து, தருமராசன் இனிது இயம்ப, யாளி, வெஞ்
சின விலங்கல், என்னுமாறு சேரவந்த இளைஞரும்,
மனு விளங்கு முறைமையான் வணங்கி, மன்னர் மன்னன்முன்
தனதன் அங்கு இருப்பது அன்ன தவிசின்மீது வைகினார். 158

துரியோதனன் தருமனைச் சூதாடத் தூண்டுதல்

'புரை கொள் பாவமே நிறைந்து, புண்ணியம் குறைந்து, நீள்
நரகின் ஊழிகாலம் வாழ்தி! நாகர் வாழ்வின் உள்ளதும்
தரணிமீது பெறுக!' என்று, தந்தது ஒக்கும், வான் உளோர்—
அரவஏறு உயர்த்த வீரன் அன்று இருந்த பெருமையே. 159

'மாயம் ஒன்றும் எண்ணலா மனத்தின் மிக்க மாமனும்
நீயும், இன்று, சூதுகொண்டு நிகழ் விலாசம் அயர்விரோ—
ஆய வென்றி ஐயன் இல்லில் அமுதம் அன்ன போனகம்
போய் அருந்தும் அளவும், இங்கு இருந்து போது போகவே?' 160

தருமன் சூதாடுதலை வெறுத்து உரைத்தல்

' ''மீது எடுத்த வஞ்சர்ஆகி வெகுளி செய்தல், பிறர் பெருங்
கோது எடுத்து உரைத்தல், நண்புகொண்டு அயிர்த்தல், கொடிய வெஞ்
சூது எடுத்து விழைதல், உற்ற சூள் பிழைத்தல், இன்னவே
தீது எடுத்த நூலில் முன்பு தீய'' என்று செப்பினர். 161

'வாது கொண்டு காதல் கூரும் மாமனோடு வஞ்சனைச்
சூதுகொண்டு பொருது அழிந்து, தோல்வி எய்த வேண்டுமோ?
தாதுகொண்டு தேன் இரங்கு தாம மார்ப! நெஞ்சில் நீர்
ஏது கொண்டது? அது நுமக்கு அளிப்பன், இம்பர்' என்னவே, 162

சகுனி நயவுரைகளால் தருமனைச் சூதாட அழைத்தல்

ஒப்பு இலாத வேள்வி மன்னன் உரை உணர்ந்து, சகுனியும்,
'தப்பு இலாத கவறு உருண்ட தாயம் எங்கும் ஒக்குமால்;
வைப்பில் ஆண்மை அன்றி, வேறு வஞ்சம் இல்லை; உண்டு எனச்
செப்பில், ஆர்கொல் இவனை ஆட வருக என்று செப்புவார்? 163

'வேணும் ஆகில், வேணும்; அன்றி, விரகு எனக் கழன்று தான்
நாணும் ஆகில், ''விடுதியே நடக்க'' என்று நவிலுவீர்;
பூணும் ஆகில், இனிமையோடு பொருது, மற்று இருந்த நீர்
காணுமாறு நானும் இன்று கற்றவாறு இயற்றலாம். 164

'நீடுகின்ற தரும நீதி நிருப! கேள்: விழைந்து, நாம்
ஆடுகின்ற சூதில் வெற்றி, அழிவு, நம்மில் ஒக்குமால்;
வாடுகின்ற மிடியர் போல வஞ்சம் என்று உரைத்து, நீ
ஓடுகின்றது, ஒட்டுகின்ற ஒண் பொருட்கு உலோபியோ? 165

'யான் எறிந்த கவறு வெல்லின், இசைவு எனக்கு அளித்தி; நீ-
தான் எறிந்த கவறு வெல்லின், அதின் இரட்டி தருகுவேன்;
தேன் எறிந்து, தேன் நுகர்ந்து, தேன் எடுக்கும், மாலையாய்!
ஆன் எறிந்த கொலைஞர் போல அஞ்சல்! வருதி, ஆடவே!' 166

சகுனியின் உரைக்கு மாறு உரையாது உதிட்டிரன் இருக்க, விசயனும் வருந்துமாறு கன்னன் தருமனை நோக்கி உரை பகர்தல்

என்று மாமன் உற்று உரைப்ப, இவைதமக்கு அவ் அவையில் வேறு
ஒன்றும் மாறு உரைத்திடாது, உதிட்டிரன் இருக்கவும்,
வென்று மாறு அடக்கும் வாகை விசயனும் வெகுண்டு, உளம்
கன்றுமாறு உரைத்தனன் சொல், கன்னன் என்னும் மன்னனே:

' ''போது போகுமாறு இருந்து பொருதும்; வருதி!'' என்னவும்,
சூது போரும் அஞ்சியே, தொலைந்து, உளம் துளங்குவாய்!
மோது போரில் எங்ஙன் உய்தி? இளைஞரோடும் முடுகு தேர்-
மீது போய், உன் நகரிதன்னில் விரைவின் எய்துக!' என்னவே, 168

வெகுண்டு எழுந்த விசயனை அடக்கி, தருமன் சூதாடுதற்கு ஒருப்படுதல்

'இல் எடுத்து, விரகினோடும் எமை அழைத்து, மாயை கூர்
வல் எடுத்து வருதலால், மறுத்தனன், மகீபனும்;
சொல் எடுத்து வைத வாய் துணிப்பன்' என்று கன்னன்மேல்
வில் எடுத்தனன், பொறாமல்,—வீர வாளி விசயனே. 169

'ஏதிலாரின், எம்பி! நீ இருக்க' என்று இருத்தி, 'முன்
காதில் ஆர் என்னுடன் முனைந்து, கண் விழிக்க வல்ல பேர்?
ஓதில், ஆண்மை குன்றும்' என்று, உருத்து எழுந்து, 'மாய நின்
சூதில் ஆடல் புரிதும்' என்று, தருமனும் தொடங்கினான். 170

துரியோதனன் சகுனிக்காக ஒட்டம் வைப்பதாகக் கூறி, தருமனையும் ஈடுபடுத்துதல்

'நின்னை வெல்லின், ஒட்டம் யாவும் நீ கொடுக்க; நீ இவன்-
தன்னை வெல்லின், யான் விரைந்து தருவன்' என்று, 'தருமனைப்
பின்னை வெல்ல ஒணாது' எனப் பிணிப்புடன் மருட்டினான்—
மின்னை வெல்லும் வெய்ய சோதி வேல் இராசராசனே. 171

தருமனும் சகுனியும் சூதாடுதல்

அவிர் பசும்பொன் மிளி யாளி ஆசனத்து இழிந்து, பூந்
தவிசில் ஒன்றிடப் புகுந்து, தருமன் வைக, மாமனும்
நவிர் அறும் திசைப் புறத்து நல் நிலம் குறித்து, நீள்
புவி பெறும் கருத்தினோடு இருந்தனன், பொருந்தவே. 172

கவள யானை பணையின் யாளி கால் வகுத்த பலகையில்,
பவளமான, நீலமான, கருவி முன் பரப்பினார்;
தவளமான கவறு கை தரித்து, மெய் தரித்த தார்
துவள, மான நிருபர்தம்மில் ஆடவே தொடங்கினார். 173

ஈரம் வைத்த சிந்தை மன்னன், இசைவு எனக் கழுத்தின் முத்து
ஆரம் வைத்து, 'நீயும் மாறு அழைக்க' என்ன, மாமன்மேல்
வாரம் வைத்த நெஞ்சினானும், 'வருக!' என்று, 'மா மணிச்
சாரம் வைத்த வலயம் ஒன்று' தானும் முன்னர் வைக்கவே, 174

இருவரும் கவற்றினால் எறிந்தபோது, எறிந்தவாறு
ஒருவரும் குறிக்கலா உபாயமாய் இருத்தலான்,
மரு வரும் புயத்து அலங்கல் மாமன் வெல்ல, மன்னர் உள்
வெரு வரும் களிற்றினானும் மேல் விருப்பம் மிஞ்சினான். 175

வைத்த ஆரம் அவன் எடுக்க, மாயவன் கொடுத்த நல்
மெய்த் தவாத தேர் குறித்து, மீளவும் பரப்பினான்;
மொய்த்த வாச மாலை மார்பின் முடி மகீபன் மகிழ்தர,
பொய்த்த ஆடல் வல்ல மீளி, பொருது, வென்றி புனையவே, 176

தேர் கொடுத்த பின்னும், மாறு செப்பி, உள்ள தேர் மதக்
கார் கொடுத்தும், எண்இலாத கவன மாக் கொடுத்தும், அப்
பார் கொடுத்தும், அரசு கூர் பதம் கொடுத்தும், உரிய தம்
ஊர் கொடுத்தும், அதனின் உள்ளம் ஒழிவுறாமல் ஓடவே, 177

வெங் கிராத வனம் எரித்த விசயனுக்கு விஞ்சையன்
அங்கு இரா மகிழ்ந்து அளித்த ஆடல் மாவும், அளக நீள்
பொங்கு இரா மணம் சிறந்த போக மாதர் பலரும், அன்று
இங்கு இரா, நரேசன், உற்ற இசைவினால் அளிக்கவே, 178

யாவற்றையும் தருமன் சூதில் இழந்துவிட, மன்னன் குறிப்பின் வண்ணம்
பாண்டவர்களையே பணயமாக வைக்கச் சகுனி தூண்டுதல்

யாவையும் கொடுத்து இருப்ப, 'இளைஞரோடு மெய்த் தவக்
கோவையும் குறிக்க' என்று, குருகுலேசன் மொழியவே,
ஈவையும் குறித்து, வெற்றி எய்த எய்த இவர்கள்தம்
வீவையும் குறித்து, வென்ற மேன்மையான் விளம்புவான்: 179

'உன்னையும் குறித்து வன்பு உரைத்த தம்பிமார்இனம்
தன்னையும் குறித்து, இசைந்து தருக; வந்து பொருக!' என,
பின்னையும் குறிப்பு உறாது, பொருது, கை பிழைக்க, மேல்
'என்னை உம் குறிப்பு?' எனா, முன், விரகினால் இயம்பினான்: 180

தருமன் தங்கள் ஐவரையும் சூதில் ஒட்டித் தோல்வியுற, சகுனி
திரௌபதியைப் பணயமாக வைக்கத் தூண்டுதல்

'மெய் வரும் திறத்தில் உம்மை வெல்லுமாறு வேறலால்,
ஐவரும் திருந்த எங்கள் அடிமையின்னர் ஆயினீர்;
மை வருந் தடங் கண் வேள்வி மாதுதன்னை ஒட்டி, நீ
கைவரும் கவற்றின், இன்னம் எறிக!' என்று கழறினான். 181

விதுரன் மனம் வருந்தித் திருதராட்டிரனை நோக்கிச் சில கூறுதல்

அன்ன போதில், அருள் விதூரன், அந்தணைப் புகன்று எழா,
'நின் அபோதம் அன்றி, வேறு நிருபர்தாம் நினைப்பரோ?
''இன்ன போதுமோ, நமக்கு? இயற்கை அன்று இது'' என்று, நீ
சொன்ன போது, நேய மைந்தர் சொன்ன சொல் மறுப்பரோ? 182

'திருகு நெஞ்சின் வஞ்சர் ஆகி, இளைஞர் தீமை செய்தகால்
உருகுகின்ற தாதை நீ உடன்படுத்து இருப்பதோ?
மிருகம் அன்று; பறவை அன்று; இரக்கம் இன்றி மேவு நின்
அருகு வந்து அணைந்தது, எங்கள் அறிவிலாமை ஆகுமே! 183

'பின் பிறந்த தம்பி மைந்தர் பீடு அழிந்து இரங்கவே,
முன் பிறந்த தமையன் மைந்தர் மொய்ம்பினால் அடர்ப்பரோ?
அன்பு இறந்ததேனும், நீதி அழிய நீ நடத்தினால்,
என் பிறந்து முடியும் மண்ணில், எண் இல் காலம், இன்னுமே? 184

'வருமம் மிஞ்ச இவனை வென்ற வஞ்சம் அன்றி, மற்று, ''இவன்
தரும வஞ்சிதனை இசைந்து பொருதும்'' என்கை தருமமோ?
கருமம் அன்று; உனக்கு நாச காலம் வந்தது ஆகலின்,
பெரும! தஞ்சம் இன்றி, நெஞ்சு பேரும்' என்று பேசினான். 185

விதுரன் நொந்து, நீதி கூற, விழி இலாமை அன்றியே,
வெதிரனும்கொல் என்னுமாறு விழியிலானும் வைகினான்;
சதுர் புரிந்த சகுனி சொல்லை எதிர் புரிந்து, தருமனும்,
அதிர வஞ்சம் முதிர வந்த அருள் இலானொடு ஆடினான். 186

தருமன் திரௌபதியையும் சூதில் இழந்து, சிறிதும் கலங்காதிருத்தல்

காயம் முற்றும் வஞ்சமே கலந்தது அன்ன கள்வன்மேல்
நேயம் உற்று நின்று, தானும் நிகர் பிடித்தது என்னவே,
மாயம் உற்ற கவறும், அந்த மாமன் வல்லபத்திலே
தாயம் உற்று, இடம் கொடாது, தருமனைச் சதித்ததே. 187

'இன்ன தாயம் வேண்டும்' என்று எறிந்தபோது, மற்று அவன்
சொன்ன தாயமே புரண்டு சோர்வு இலாமல் வருதலின்,
தன்னது ஆய அரசு, வாழ்வு, தரணி மன்னன் நல்கினான்;
அன்னது ஆயபோதும், நெஞ்சு அசைந்திலான், அசஞ்சலன். 188

தருமனது தோல்வி கண்டு, அவையோர் வருந்தி மொழிதல்

முரசினை உயர்த்த கோமான் மொழிந்தன முழுதும் தோற்று,
பரசுவது ஒன்றும் இல்லாப் பான்மையோடு இருந்த காலை,
விரை செறி அலங்கல் சோர, மெய் குலைந்து, உள்ளம் வெம்பி,
அரசவை இருந்தோர் தம்மில் அருளினால் அழிந்து நொந்தார். 189

'குரு மரபு உடைய வேந்தன் கொடியன்! ஓ கொடியன்!' என்பார்;
'மருமகன் உயிருக்கு இந்த மாமனே மறலி!' என்பார்;
'தருமன் இத்தனை நாள் செய்த தருமமும் பொய்யோ?' என்பார்;
'உருமினும் கொடிய வீமன் உருத்து இனி எழுமோ?' என்பார்; 190

'பாந்தள் ஏறு உயர்த்த வேந்தன் பார்த்திலன், உறவும்' என்பார்;
'மாய்ந்தவே, அறமும், தேசும், மனுநெறி வழக்கும்!' என்பார்;
'பூந் தழல் பிறந்த பாவை புண்ணியம் பொய்யாது!' என்பார்;
'சேந்தனன் இருகண், பாரீர், தேவர்கோன் மதலே!' என்பார். 191

'பழியுடைத் தந்தை ஒன்றும் பகர்கலாது இருக்கும்' என்பார்;
'விழியுடையவரை அன்றே மேன்மையோர் வெறுப்பது?' என்பார்;
'அழியுமே இவனால், மைந்தர் அரும் பெருஞ் செல்வம்' என்பார்;
'வழிவழியாக நிற்கும் வசை, இவன் புரிந்தது!' என்பார். 192

துரியோதனன் வீடுமனை நோக்கிக் கூறிய தகாத உரை

இன்னன, தரணி வேந்தர் இருந்துழி இருந்து, கூற,
மன்னனும், தம்பிதானும், மாமனும், மாறு வண்மைக்
கன்னனும், தம்மின் எண்ணி, கங்கை மா மகனை நோக்கி,
பன்னக துவசன், கேட்டோர் பலரும் மெய் பனிக்க, சொல்வான்: 193

'தண்ணிய தருமன் செய்த பாவமோ? சகுனி செய்த
புண்ணிய நெறியோ? அந்தப் பொதுமகள் யாக சாலை
நண்ணிய தவமோ? மற்றை நால்வரும் தகைமை கூர
எண்ணிய மதியோ? எண்ணின், இங்ஙனம் விளைந்தது' என்றான்.194

வீடுமன் அறிவுரையைத் துரியோதனன் செவிக் கொள்ளாது, வெகுளி மிக, விதுரனை நோக்கிக் கூறிய மொழிகள்

தகா மொழி தலைவன் கூற, தவத்தினால் உயர்ந்த கோவும்,
நகா, 'மரபு இயற்கை அன்று, நம்மில் நாம் புன்மை கூறல்;
மிகாது, இனி நிகழ்ந்த செற்றம் விடுக!' என, செவியில் சற்றும்
புகாது, உளம் வெகுளி கூர, புரிந்தனன், போதம் இல்லான். 195

இரங்கி நின்று உருகும் நெஞ்சின் இளைய தன் பிதாவை நோக்கி,
அரம் கடி சமர வேலான் அழல் பொழி உருமின் சொல்வான்:
'உரம் குடி இருந்த தோளான் உரிமையின் எமக்குத் தோற்ற
துரங்கமும், களிறும், தேரும், துறை துறை கவரச் சொற்றி; 196

'தொல்லை மா நகரும், நாடும், தோரணம் நாட்டச் சொற்றி;
எல்லை இல் நிதிகள் எல்லாம் இம்பரே எடுக்கச் சொற்றி;
நல் எழில் மடவார் தம்மை நம் பதி எய்தச் சொற்றி;
சொல்லிய இளைஞர் தாமும் தொண்டினராகச் சொற்றி; 197

'இவர் தமக்கு உரியள் ஆகி, யாக பத்தினியும் ஆன,
துவர் இதழ்த் தவள மூரல் சுரிகுழல் தன்னை, இன்னே,
உவர் அலைப் புணரி ஆடை உலகுடை வேந்தர் காண,
கவர்தரப் புகறி' என்றான்—கண் அருள் சிறிதும் இல்லான். 198

விதுரன் துரியோதனனது செய்கையை இடித்து மொழிதல்

'அறம் தரும் மைந்தன்தன்னை அறன் அலாது இயற்றி, நம்பி!
திறம் தரு செல்வம் யாவும் தீமையின் கவர்தல் உற்றாய்;
மறம் தரு வலியும் அன்று; மணம் தரு வாழ்வும் அன்று;
நிறம் தரு புகழும் அன்று; நெறி தரு மதியும் அன்றே. 199

'திருத் தக மொழிந்த எல்லாம் செய்தனை எனினும், செவ்வி
மருத் தகு தெரியல் மாலை மாசு இலா மன்னர் முன்னர்,
உருத் தகு கற்பினாளை உரை அலாது உரைக்கும் மாற்றம்
கருத்தினில் நினையல், கண்டாய்; கடவுளர் கற்பம் வாழ்வாய். 200

'விண்ணில் அங்கு அருகித் தோன்றும் மேதகு வடமீன் அன்றி,
மண்ணில் அங்கு உவமை சொல்ல மடந்தையர் யாரும் இல்லா,
பண் நலம் கடந்த மென் சொல், பாவையைப் பழிக்க, நீ இன்று
எண்ணின், முன் கேட்ட வார்த்தைக்கு ஏற்றது உன் எண்ணம்' என்றான். 201

'நீ கேட்ட சொல் என்?' என்ற துரியோதனனுக்கு விதுரன் விரித்து உரைத்தல்

கேட்ட சொல் வினவும் நாககேதனன் கேட்ப, மீண்டும்,
வாட்டம் இல் அன்பினோடு மனம் கனிந்து உருகி வீழ,
நாட்டமும் நல் நீர் மல்க, நா அமிழ்து ஊற, பின்னும்
கோட்டம் இல் சிந்தையானும் குரிசிலுக்கு உரைக்கலுற்றான்: 202

' ''தானவர் ஆகி, உம்மை, தனித்தனி இறந்தோர் யாரும்,
மானவர் ஆகி, இம்மை வந்தனர், இம்பர்'' என்றே,
தான் அவர் பொறை பொறாமல், தராதலம் என்னும் செங் கண்
மான் நவ ராக வேத மலர் முனிதனக்குச் சொன்னாள்: 203

'நான்முகன்தானும், ஏனை நாகரும், நாகர் கோனும்,
பால் முகந்து எறியும் வேலைப் பாம்பு-அணைப் பள்ளி கொள்ளும்
தேன் முகம் களிக்கும் பச்சைச் செவ்வி வண் துளப மாலை
மால் முகம் கண்டு, கூற, வந்தவா மாலும் கேட்டான். 204

'மின் இடை விளங்கும் மேக மேனியான், அவனி மானை,
''நின்னிடை வந்து தோன்றும் நிருபர் ஆனவரை எல்லாம்,
முன், இடை, கடை, ஒன்று இன்றி, முற்றும், வெம் முரண் கொள் காலன்-
தன்னிடை விடுதும்'' என்று சாற்றியே, தளர்வு தீர்த்தான். 205

' ''அந்த வன் திகிரியானும் நம்மில் ஓர் அரசன் ஆகி,
வந்து அவதரித்தான்'' என்று, மண் எலாம் வார்த்தை ஆனது;
''எந்த வல் வினையால் எவ்வாறு எய்தும்?'' என்று, இதற்கே சால
நொந்து, கண் துயில் பெறாதே, நோதகப் புரிந்தேன் மன்னோ. 206

'ஒரு திறத்து அவனி முற்றும் ஒருமையால் புரக்கும் நீவிர்
இரு திறத்தவரும், நும்மில் இகலுறும் மனத்திர் ஆனல்,
வரு திறத் தானை வேந்தர் வகைபடக் குழூஉக்கொண்டு ஓடி,
பொருது, இறப்பதற்கே, சற்றும் புரிவிலீர்! புரிகின்றீரே.' 207

விதுரனைத் துரியோதனன் நகையாடி அவமதித்து, அருகில் நின்ற பிராதிகாமியிடம் திரௌபதியை அழைத்துவரப் பணித்தல்

என்று அவன் உரைப்ப, தானும் எறிந்து கை, நகை கொண்டாடி,
அன்று அவன் இதயம் வெம்ப, அவமதி பலவும் கூறி,
நின்றவன் ஒருவன்தன்னை, 'நீ நனி விரைவின் ஓடிச்
சென்று, அவண் இருந்த கோலத் தெரிவையைக் கொணர்தி' என்றான்.

பிராதிகாமி திரௌபதி இருக்குமிடம் செல்லாமலே மீண்டு வந்து, அவள் கூற்றாகச் சிலவற்றைப் படைத்து மொழிதல்

பெருந்தகை ஏவலோடும் பிராதிகாமியும் அங்கு ஏகி,
வருந்திய மனத்தன் ஆகி, மாசு அறு மரபின் வல்லி
இருந்துழி எய்துறாமல், இடைவழிநின்றும் மீள
விரைந்தனன் ஓடி வந்து, வேந்தனுக்கு ஏற்பச் சொன்னான்: 209

' ''என்னைத் தோற்று, மனு நெறி கூர் இசையோன் தன்னைத் தோற்றனனோ?
தன்னைத் தோற்று, தனது மனத் தளர்வால், என்னைத் தோற்றனனோ?
முன்னைத் தோற்ற தோற்ற பொருள் முற்றும் கவரும் முறை அன்றி,
பின்னைத் தோற்ற பொருள் கவரப் பெறுமோ? நினைக்கப் பெறாது'' என்றாள். 210

துரியோதனன் மனம் பொறாமல், திரௌபதியை அழைத்துவரத் துச்சாதனனுக்குக் கட்டளையிடுதல்

'செல்வப் பாவை திருவுள்ளம் இது' என்று, அந்தத் தேர்ப்பாகன்
சொல்ல, பாவி தரியாமல், துச்சாதனனை முகம் நோக்கி,
'அல்லல் பான்மை பெற்று அழிந்த ஐவர்க்கு ஒருத்தி ஆகிய அம்
மல்லல் பானல் விழியாளை மன் பேர் அவையின் அழை' என்றான்.

திரௌபதி இருந்த இடத்தை அணுகி, துச்சாதனன் அவளை அழைத்து, 'என் பின்னே போதுக!' என அவளது கையைப் பற்றுதல்

நோன் தாள் வெங் கண் கட களிற்று நுழை வேல் அரசன் நுவறலுமே,
ஆன்றோர் கேட்கின் செவி புதைக்கும் அழல் கால் வெஞ் சொல், அறன் இல்லான்,
தோன்றா நயனத் துணைவனைப்போல் துணைக்கண் துகிலின் சூழ்ந்திருந்த
ஈன்றாள் இல்லத்து இருந்தாளை இகலோடு எய்தி, இவை சொல்வான்:

'தானே சூது பொருது அழிந்து, தலைவன்தனக்கு உன் பதியான
கோனே சொல்லி, யாவையும் முன் கொடுத்தான்; கொடுத்தபின், ''இசைவு'
யானே'' என்றும், ''வீமன் முதல் இளையோர்'' என்றும், ''என் வேள்வி
மானே'' என்றும், குறித்து, இழந்தான்; வழக்கால் வென்றோம்; வருவாயே.

'பொன்னைச் சிரிக்கும் பூங் கோயில், ''புனல் வாவி இல்'' என்று எங்கள் குல
மன்னைச் சிரித்த செங் கனி வாய் மாறாது இரங்கி, அழுது அரற்ற,
மின்னைச் சிரிக்கும் நுண் இடையாய்! வேந்தர்க்கு எதிர், உன் மெய்க் கணவன்-
தன்னைச் சிரிக்க இருக்கின்ற சளம் நீ காணில் தரியாயே. 214

'தலத்துக்கு இையயாது ஐவரையும் தழுவித் தழுவி, தனித்தனியே
நலத்துப் பொய்யே மெய் போல நடிக்கும் செவ்வி நலன் உடையாய்!
குலத்தில் பிறந்தாய் ஆம் ஆகில், கூசாது, என்பின் போதுக!' எனப்
பெலத்தில் செங் கை மலர் தீண்டிப் பிடித்தான், சூழ்ச்சி முடித்தானே. 215

திரௌபதி காந்தாரியின் அருகில் செல்ல, அவள்,
'துச்சாதனன் பின் அஞ்சாது போ' என்று கூறுதல்

சிலை வாய் அங்கை அவன் தீண்ட, செல்லாள் ஆகி, அல்லல் உழந்து,
உலைவாய் அழல்போல் நெடிது உயிரா, உள்ளம் தளரா, உடல் நடுங்கா,
கொலைவாய் எயினர் கொல்லும் நிலம் குறித்துச் செறித்த கொடிய நெடு
வலைவாய் ஒருதான் அகப்பட்ட மான்போல், மாமி மருங்கு உற்றாள்.

பூ வார் குழலி தளர்வொடு தன் புறம் சேர் பொழுதும் சிறிது இரங்காள்,
'நீ வா' என்றே அருகு இருத்தி, நெடுங் கண் பொழியும் நீர் துடையாள்,
'மேவார் அல்லர்; தமர் அழைத்தால், மேல் உன் கருத்து விளம்பிவர,
பாவாய்! அஞ்சாது ஏகு!' என்றாள்—பல பாதகரைப் பயந்தாளே.

திரௌபதி கூந்தலைச் செண்டால் பற்றி இழுத்து அவை நோக்கிச் செல்லுதல்

தண் தார் விடலை தாய் உரைப்ப, தாய் முன் அணுகி, தாமரைக் கைச்
செண்டால் அவள் பைங் குழல் பற்றி, தீண்டான் ஆகிச் செல்கின்றான்;
வண்டு ஆர் குழலும் உடன் குலைய, மானம் குலைய, மனம் குலைய,
'கொண்டார் இருப்பர்' என்று நெறிக் கொண்டாள், அந்தோ! கொடியாளே.

'சூழும் கனல்வாய் உரும் அன்றி, துளிவாய் முகிலும் மகிதலத்து
வீழும் கொல்லோ? உற்பாதம் விரவிற்று' என்றே வெரூஉக்கொள்ள,
தாழும் பெரிய கரிய குழல் தாரோடு அலைய, தழீஇக் கொண்டு,
வாழும் சுரும்பு சுழன்று அரற்ற, மண்மேல் இழுத்து வருகின்றான்.

திரௌபதியின் நிலை கண்டோர் பலரும் வருந்தி மொழிதல்

'தழலோ என்னும் கற்புடைய தனி நாயகிதன் தாம நறுங்
குழலோ, உரகக் கொடி வேந்தன் குலமோ, குலைந்தது, இவண்!' என்பார்;
'நிழலோ, புவிக்கு நெருப்பு அன்றோ, நெறி ஒன்று இல்லா நீடு பொலங்
கழலோன் மதி வெண் குடை?' என்பார்; கையால் கண்ட கண் புடைப்பார்;

'காட்டும் திறல் வெஞ் சிலை விசயன் கையால் வகிர்ந்து, கடி கொள் மலர்
சூட்டும் பனிச்சை, இவண் புழுதித் துகள் ஏறியது' என்று அழுது நைவார்;
'மீட்டும் தடாமல், ''ஏகு'' என்று விட்டாள்; மைந்தர் இட்ட வினை
கேட்டும், கொடியள் காந்தாரி; கிளையோடு இன்றே கெடும்' என்பார்;

'இரும்போ நெஞ்சம்? மாமன் இதற்கு இசைந்தான் ஒக்க இருந்து!' என்பார்;
'பெரும் போர் அரசர் பெண்ணுடனே பிறந்தும், சிறப் பெருர்!' என்பார்;
'பொரும் போர் வீமன் பொறுத்தாலும், பொன்-தேர் விசயன் பொருன்' என்பார்;
'அரும் போர் அரசர், ''தகாது'' என்ருல் வருமோ, இந்த அழிவு!' என்பார்,

'என்னே, குடியில் பிறந்தாருக்கு இருப்பு அன்று இவ் ஊர் இனி!' என்பார்;
'முன்னே ஓடி முறையிட்டால், முனியும்கொல்லோ, எமை?' என்பார்;
பின்னே இரங்கி, அழுது அழுது, பேதுற்று, இன்னல் பெரிது உழப்பார்;
'அன்னே! துன்பம் களைந்து, இன்பம் ஆவாய்!' என்றே அருள் புரிவார்;

'பறை வன் களிற்றுப் பல் புரவிப் பைம் பொன் தடந் தேர்ப் பாஞ்சாலர்க்கு
இறைவன் பாவை, யாம் காண இவையோ படுவது!' என்று உரைப்பார்;
'பொறை வண் சிந்தைத் தருமனுக்குப் பொய்ச் சூது அறிந்தும் பொர, என்ன
குறை வந்தது? தன் விதி வலியால் குறைந்தான், யாவும் கொடுத்து' என்பார்.

திரௌபதி அவையில் புக, திருதராட்டிரன் முதலியோர் வாளா இருத்தலும், ஏனைய மன்னர் துயருறுதலும்

நெடு மா நகரில் சனம் அனைத்தும், நேயம் பெறக் கண்டு, இவை கூற,
வடு மா மரபிற்கு உறத் தேடும் மன் பேர் அவையின் முன் புக்காள்—
கொடு மா மலர்க் கண் புனல் சோர, குலைந்தே கிடந்த குழல் சோர,
தடுமாறு உள்ளம் தனி சோர, தலை நாள் அளித்த தழல் போல்வாள். 225

'நாணே முதலாம் நாற்குணனும், நண்ணும் கற்பும், நயந்து அணிந்த
பூணே அனையாள் அழுது அரற்றி, புன் பேர் அவையில் புகும் சோகம்
காணேம்' என்று, நிலன் நோக்கி, கதிர் வேல் நிருபர் இருந்து இரங்க,
கோணே நேர்பாடாய் இருந்தான், குருடு என்று உரைக்கும் கொடியோனே.

மேகம் குருதி பொழிந்து, அகல் வான் மீனும் பகலே மிக விளங்கி,
பூகம்பமும் உற்று, உற்பாதம், போது, யாவும் புரிந்தனவால்;
நாகம் புனை பொன் துவசனுடன் நவிலாநின்ற நால்வருமே
சோகம் பிறவாது இருந்தார்; மற்று ஒழிந்தார் யாரும் சோகித்தார்.

தம்பியரின் கிளர்ந்தெழுந்த சினத்தைத் தருமன் தணிவித்தல்

வீமன் கதைமேல் கை வைக்க, விசயன் சிலைமேல் விழி வைக்க,
தாமம் புனை தோள் இளையோரும் தம்தம் கருத்தில் சினம் மூட்ட,
தூமம் படு செந் தழல் அவியச் சோனை மேகம் சொரிவதுபோல்,
நாமம் தருமன் எனத் தக்கோன் இளையோர் ஆற, நவிலுற்ருன்:

'தேம் போது அனைத்தும் மெய் சாயும், சில போது; அலரும், சிலபோது;
வேம் போது, அங்கு வாழ்வ எலாம் வெங் கானுடனே வேவாவோ?
ஆம்போது, ஆகும்; அது அன்றி, ஆய பொருள்கள், அம் முறையே,
போம்போது, அனைத்தும் போம்; முன்னம் பொறுத்தீர்; இன்னம் பொறும்' என்ருன்.

துயருடன் அலறும் திரௌபதியை நோக்கி, துச்சாதனன் சுடுமொழி சொல்லுதல்

வாரும் கண்ணீர் வளர் கொங்கை வரைமேல் அருவி என வீழ,
தாரும் குழலும் மின்னுடனே தலம் சேர் கொண்டல் என வீழ,
கூரும் துயரினுடன் வீழ்ந்து, 'கோ கோ!' என்று கோச் சபையில்,
சோரும் கொடியை முகம் நோக்கி, துச்சாதனன் மெய் சுடச் சொன்னான்:

'மன் வந்து இருந்த சங்கத்து, உன் மாமன் இருந்தான்; ஐவரும் உன்
முன் வந்திருந்தார், முன் கொண்ட முறையால் முயங்கும் முடி வேந்தர்;
மின் வந்தனைய நுண் இடையாய்! விழி நீர் சொரிந்து, மெலிய, உனக்கு
என் வந்ததுகொல்? பொதுமகளிர்க்கு அரிதோ, விழி நீர்? எளிது!' என்றான்.

திரௌபதியின் முறையீடும், வீடுமன் மறுமொழியும்

பொல்லா வசையே, புகழ் பூணாப் புல்லன் புகல, இதற்கு ஒன்றும்
சொல்லாது இருந்த பேர் அவையைத் தொழுதாள், அழுதாள், சோர்வுற்றாள்;
'மல் ஆர் திண் தோள் மாமாவோ! மந்தாகினியாள் மதலாயோ!
எல்லா நெறியும் உணர்ந்தவருக்கு, இதுவோ மண்ணில் இயல்பு?' என்றாள்.

இன்னல் படு சொல் பாஞ்சாலி இரக்கம்தனைக் கண்டு, இரக்கம் உறா,
'மன்னற்கு இளையோய்! தவறு உரைத்தல் வழக்கோ, வடமீன் அனையாளே?'
என்னக் கழறி, 'நீ உரைத்த எல்லாம் அரசற்கு இயம்பு' என்றான்—
முன்னர்ப் புகலும் குருகுலத்தோர் முதல் ஆம் வாய்மை மொழியோனே.

திரௌபதி அவையோரை நோக்கி, நீதி வேண்டி முறையிட,
அவையோர் ஓவியம் போல அசைவற்றிருத்தல்

'மன் தோற்றனன் வெஞ் சூது ஆகில், வழக்கால் கொண்மின்; மன் அவையில்
முன் தோற்றனனோ, என்னையும்? தான் முன்னே இசைந்து தனைத் தோற்ற
பின் தோற்றனனோ? கரியாகப் பெரியோர் உண்மை பேசுக!' என,
மின் தோற்றனைய நுண் இடையாள், விழி நீர் வெள்ளமிசை வீழ்ந்தாள்.

மையோடு அரிக் கண் மழை பொழிய, வாடும் கொடியின் மொழிக்கு ஆகார்;
வெய்யோன் எண்ணம் தனக்கு ஆகார்; விறல் வேல் வேந்தர் வெரூஉக்கொண்டு,
பொய்யோ அன்று, மெய்யாக, புனை ஓவியம்போல் இருந்தாரை,
ஐயோ! அந்தக் கொடுமையை யாம் உரைக்கும் பொழுதைக்கு அதி பாவம்!

விகருணன் சபையோரை நோக்கி உரைத்தல்

அல் ஆர் கூந்தல் விரித்த மயில் அனையாள் அரற்ற, அதற்கு ஒன்றும்
சொல்லாது, ஊமர் கணம் போலத் தொல் போர் வேந்தர் சூழ்ந்திருப்ப,
மல் ஆர் தடந் தோள் விகருணன் ஆம் வாய்மைக் கடவுள், 'வாள் வேந்தீர்!
பொல்லா நெறியில் அனைவீரும் போகாவண்ணம் புகல்வீரே! 236

' "முறையோ!" என்று என்று, அவனிதலம் முழுதும் உடையான் முடித் தேவி
நிறையோடு அழிந்து, வினவவும், நீர், நினைவுற்று இருந்தீர்; நினைவு அற்றோ?
இறையோன் முனியும் என நினைந்தோ? இருந்தால், உறுதி எடுத்து இயம்பல்
குறையோ? கண் கண்டது நாளும் குலத்துப் பிறந்தோர் கூறாரோ?

'தன் நேர் இல்லா நெறித் தருமன் தன என்று உரைக்கத்தக்க எலாம்
முன்னே தோற்று, தங்களையும் முறையே தோற்று, முடிவுற்றான்;
சொல் நேர் உரைக்கு, ''தான் பிறர்க்குத் தொண்டாய்விட்டு, சுரிகுழலைப்
பின்னே தோற்க உரிமையினால் பெறுமோ?'' என்று பேசீரோ?' 238

கன்னன் விகருணனைக் கடிந்து உரைத்து, அவையோரை நோக்கிக் கூறியவை

என்னா, மன்னர் முகம் நோக்கி, எல்லார் இதயங்களும் மகிழச்
சொன்னான்; எவரும், 'தக்கோன்' என்று அவனுக்கு ஒருபேர் சூட்டினர்; பின்,
நல் நா மனத்தோடு அழல் மூள, நயனம் சிவக்க, நஞ்சின் வடிவு
அன்னான் இளவல் முகம் நோக்கி, அருக்கன் குமரன் அறைகின்றான்:

'இருக்கின்ற தரணிபரில் நின் அறிவால் உயர்ந்தனையோ? இராச நீதி
குருக்கொண்டு முதிர்ந்தனையோ? நின் ஒழிந்தால், வழக்கு ஒருவர் குறிப்பார் அற்றோ?
''மருக் கொண்ட தொடை முடியாய்! மொழிக!'' என நின்னுடன் கேட்கவந்தார்
[உண்டோ?
உரைக்கும்போது எவருடனும் உணர்ந்தன்றோ உரைப்பது?' என உருத்தான் மன்னோ.

'தான் படைத்த பொருள் அனைத்தும் தம்பியர்களுடன் தோற்று, தனையும்
[தோற்றான்;
மீன் படைத்த மதி முகத்தாள் இவன் படைத்த தனம் அன்றி வேறேகொல்லோ?
வான் படைத்த நெடும் புரிசை மா நகரும் தனது இல்லும் வழங்கும் ஆயின்,
யான் படைத்த மொழி அன்றே? எங்கணும், ''இல்'' எனப்பட்டாள் இல்லாள் அன்றோ?

'''மைக் கோது இல் கலை உடையன்; மதி உடையன்; பொறை உடையன்; வரிசையாகத்
தக்கோன்!'' என்று அரசர் எலாம் உரைத்த பெயர் இவன்தனக்கே தக்கது அம்மா!
மிக்கோர் மற்று உங்களைப்போல் வேறு உண்டோ, மகிதலத்து வேந்தர் ஆகித்
தொக்கோர்?யான் நுவன்ற மொழிக்கு எதிர்மொழி உண்டாம் ஆகின்,சொல்லுவீரே.'

ஐவரையும் திரௌபதியையும் துகில் உரியுமாறு தம்பிக்குத் துரியோதனன் பணித்தல்

என்ன வெகுண்டிடுகின்ற எல்லைதனில் எழு உறழ் தோள் இராசராசன்,
தன்அனைய கொடுங் கோபத் தம்பியை, 'இன்று உம்பிதனைத் தக்கோன் என்ற
மன் அவையின் எதிரே, இம் மானம் இலா ஐவரையும், வழக்கு வார்த்தை
சொன்ன கிளிமொழியினையும், துகில் உரிதி' என உருமின் சொன்னான் மன்னோ.

சினம் கொண்ட தம்பியரைத் தருமன் அடக்குதல்

இத் தகவு இல் மொழி செவியின் எரி வாளி என மூழ்க, இருந்த வேந்தர்
தம்தம் மனம் மடிந்து உருக, தருமன் மதிமுகம் நோக்கி, தம்மின் நோக்கி,
வித்தக வெங் கதை நோக்க விறல் வீமன், விசயனும் தன் வில்லை நோக்க,
ஒத்தமனனுடை இளையோர் உருப்பம் அடக்கினன், உண்மைக்கு உறுதி போல்வான்.

ஐவரும் தமது உத்தரீயங்களைத் தாமே கழற்றிக் கொடுக்க, திரௌபதியின்
துகில் உரியத் துச்சாதனன் நெருங்குதல்

'தருக, துகில்!' என எழுந்து, தங்களை வன்பொடு துச்சாதனன் சொலாமுன்,
'வருக!' என, வரை மார்பின் வாங்காத உத்தரியம் வாங்கி ஈந்தார்;
அருகு அணுகி, மடவரலை அஞ்சாமல் துகில் உரிவான் அமைந்த போதில்,
இருகை நறு மலர் தகைய, எம்பெருமான் இணை அடிக்கே இதயம் சேர்த்தாள்,

### 'கோவிந்தா!' என்று உளம் உருகித் திரௌபதி கதற, கண்ணன் அருள் செய்தல்

ஆறாகி இரு தடங் கண் அஞ்சன வெம் புனல் சோர, அளகம் சோர,
வேறான துகில் தகைந்த கை சோர, மெய் சோர, வேறு ஓர் சொல்லும்
கூறாமல், 'கோவிந்தா! கோவிந்தா!' என்று அரற்றி, குளிர்ந்து நாவில்
ஊறாத அமிழ்து ஊற, உடல் புளகித்து, உள்ளம் எலாம் உருகினாளே.

அரு மறை சொல்லிய நாமம் ஆயிரமும் உரை தழைக்க அமரர் போற்றும்
திருமலர்ச் செஞ் சேவடியோன் திருச் செவியில் இவள் மொழி சென்று இசைத்த காலை,
மரு மலர் மென்குழல் மானின் மனம் நடுங்கா வகை, மனத்தே வந்து தோன்றி,
கரிய முகில் அனையானும், பிறர் எவர்க்கும் தெரியாமல், கருணை செய்தான்.

### துச்சாதனன் அவளது துகிலை உரிந்து கை ஓய்தல்

உடுத்த துகில் உணர்வுஇல்லான் உரிந்திடவும், மாளாமல், ஒன்றுக்கு ஒன்று, ஆங்கு
அடுத்த நிறம் பற்பல பெற்று, ஆயிரம் ஆயிரம் கோடி ஆடையாகக்
கொடுத்தருள, உரிந்தன பட்டு இருந்த பெருந் தனிக் கூடம் கொள்ளாது, ஓடி,
எடுத்தனர், பற்பல வீரர்; உரிந்தோனும் சலித்து, இரு கை இளைத்து நின்றான்!

### வீடுமன் முதலியோர் திரௌபதியைப் புகழ்தலும் வானோர் மலர்மழை பொழிதலும்

கங்கை மகன் முதலான காவலர் மெய் உளம் நடுங்கி, கண்ணீர் சோர,
செங் கை மலர் குவித்து, 'இவளே கற்பினுக்கும் மரபினுக்கும் தெய்வம்!' என்றார்.
அம் கண் அகல் வானோரும், ஆனகமும் வலம்புரியும் அதிர, தங்கள்
பைங் கனக தருவின் மலர் மழை பொழிந்து, கருணையினால் பரிவு கூர்ந்தார்.

### வீமன் சினம் மிக்கு, நூற்றுவரைப் போருக்கு அழைத்தல்

அழுது அழுது, கொடும் புலிவாய் அகப்பட்ட மான்பிணைபோல் அரற்றாநின்ற,
எழுத அரிய, மடப் பாவை தங்கள் முகங்களை நோக்கி, இரங்கி வீழ்ந்த
பொழுது, மனம் புகை மூள, பூந் தடங் கண் அனல் மூள, போரில் மூளப்
பழுது படா அடல் ஆண்மைப் பவன குமரன் தடக் கை படைமேல் வைத்தான்,

'அருள் ஆரும் தருமபதி, ''ஆகாது'' என்று எமைப் பலகால் அடக்க, யாமும்
இருளால் வெம் பரிதி வடிவு ஒளிப்பதுபோல், அமர் புரியாது இருக்கின்றேமால்;
மருளால் மெய்ம் மயங்கி ஒரு வலியுடையோர்தமைப் போல மதத்த நீங்கள்
பொருளாக இருந்தனமோ? நூற்றுவரும் வருக! எதிர் பொருக!' என்றான்.

### திரௌபதியைத் தன் மடிமீது இருத்துமாறு துச்சாதனனுக்குத் துரியோதனன் பணித்தல்

கொந்து அளக மலர் சரியக் கூப்பிடுவாள் கொடுங் கற்பும், கூறை மாளா
மந்திரமும், அடல் வீமன் மானம் இலாது உரைக்கின்ற வலியும், காண,
தந்தை விழி இருள்போலத் தகு மனத்தோனும் துச்சாதனனை நோக்கி,
'பைந்தொடியைக் கொணர்ந்து, இனி என் மடியின்மிசை இருத்துக!' எனப்
[பணித்திட்டானே, 252

திரௌபதி துரியோதனனுக்கு இட்ட சாபமும், மொழிந்த சபதமும்

என்ற பொழுது, அருந்ததிக்கும் எய்தாத கற்புடையாள்—இடி ஏறுண்ட
வன் தலை வெம் பணி போல நடுநடுங்கி, மாயனையும் மறவாள் ஆகி,
'புன் தொழிலோன் யான் இருக்கக் காட்டிய தன் தொடை வழியே புள் வாய் குத்தச்
சென்றிடுக, ஆர் உயிர்!' என்று, எவரும் வெருவுறச் சபித்தாள்—தெய்வம் அன்னாள்.

'அரசவையில் எனை ஏற்றி, அஞ்சாமல் துகில் தீண்டி, அளகம் தீண்டி,
விரை செய் அளி இனம் படி தார் வேந்தர் எதிர், தகாதனவே விளம்புவோரை,
பொரு சமரில் முடி துணித்து, புலால் நாறு வெங் குருதி பொழிய, வெற்றி
முரசு அறையும் பொழுதல்லால், விரித்த குழல் இனி எடுத்து முடியேன்!' என்றாள்.

வீமன் வஞ்சினம் மொழிதல்

'பாஞ்சாலிக்கு அரசவையில் பழுது உரைத்தோன் உடல் எனது படையாம் மேழி
போம் சாலின் நிணம் சொரிய, துணைவரொடு குலம் மாள, பொருவேன் யானே;
தீம் சாலி விளை பழனத் திருநாட்டீர்! கேண்மின்' என, செந் தீ மூள
வேம் சாலின் நறு நெய்போல், வெஞ்சினத்தான் வஞ்சினமும் விளம்புவானே:

'வண்டு ஆரும் குழல் பிடித்துத் துகில் உரிந்தோன் உடல் குருதி வாரி அள்ளி,
உண்டு ஆகம் குளிர்வதன்முன் இக் கரத்தால் புனல் உண்ணேன்; ஒருகால் என் கைத்
தண்டால் வெம் புனல் எற்றி, மீது எழுந்து விழும் திவலை தண்ணீர் ஆகக்
கொண்டு, ஆவி புரந்திடுவன்; இது விரதம் எனக்கு!' எனவும் கூறினானே.

அருச்சுனனும் நகுல சகதேவர்களும் உரைத்த சபதம்

'பகலவன்தன் மதலை உயிர் பகைப் புலத்துக் கவர்வன்' எனப் பார்த்தன் சொன்னான்;
நகுலனும், மற்று 'என் கரத்தால் சௌபல நாயகன் உயிர்க்கு நாசம்' என்றான்;
'சகுனிதனை இமைப்பொழுதில்,' சாதேவன், 'துணித்திடுவேன் சமரில்' என்றான்;
இகல் நிருபர் இவர் மொழி கேட்டு, 'எளிதோ, இக் கொடும் பழி?' என்று ஏங்கினாரே.

அங்கு நிகழ்ந்த உற்பாதங்கள்

மேகங்கள் வழங்காமல், விண் அதிர்ந்திட்டு, ஊர் கோளும் வெயிலைச் சூழ்ந்து,
பூகம்பம் பிறந்து, உடுவும் அரும் பகலே விழுந்து, உடனே பொய்கை வாடி,
யாகம் செய் நெடுஞ் சாலை இன் பாலும் செந்நீர் ஆய், இருந்த வேந்தர்
ஆகங்கள் ஒளி மழுங்கிற்று—'அவிதா!' என்று, அணங்குஅனையாள் அழுதபோதே.

திருதராட்டிரன் திரௌபதியைப் பணிந்து, நிகழ்ந்த பிழை பொறுக்க வேண்டுதல்

'உற்பாதம் பெரிது!' என நெஞ்சு உகுவாரும், 'என் ஆம், இவ் ஊர்?' என்று அஞ்சி,
நிற்பாரும், போம் வழிமேல் நினைவாரும், பலர் ஆகி நிகழ்ந்த காலை—
கற்பால் மிக்கு, உயர் வேள்விக் கனல் சுமந்த மடவரலை, கண் இலாதோன்
பொற் பாதம் பணிந்து ஏத்தி, 'அபராதம் புரிந்த எலாம் பொறுத்தி!' என்றான்.

'உத்தமம் ஆம் குல மயிலே! என் சிறுவர் அறியாமல், உனக்கு நேரே,
மைத்துனர் ஆம் முறையால், இவ் வழக்கு அலாதன செய்தார், மதி இலாமல்;
எத்தனை தாழ்வு இவர் புரிந்தார் என்றாலும், அவை ஒன்றும் எண்ணாது, இன்னே,
''பித்தர் மொழி'' எனக் கருதி, மறந்தருள்!' என்று, ஒரு கோடி பிதற்றினானே.

பாண்டவரின் கோபத்தை அகற்றி, சூதில் இழந்த பொருள்களை மீண்டும் கொடுத்து, ஊருக்குச் செல்ல விடை கொடுத்தல்

மை வரையும் தடங் கண்ணாள் மனச் சோகம் பல முகத்தால் மாற்றி, மைந்தர்
ஐவரையும் தனித்தனியே முகம் கொண்டு, கொடுங் கோபம் அகற்றி, 'நீங்கள்
மெய் வரையும் பொரு புயத்தீர்! வல்-போரில் இழந்த வியன் நிலமும், தேரும்,
கைவரையும், பரிமாவும், செல்வமும், யாவையும், மீண்டும் கைக்கொள்வீரே.

'கோமன்றில் அருந்ததியைக் கொண்டு, இனி நீர் நில்லாமல், குறுக ஊரே
போம்' என்று, வரவழைத்து, தழீஇக்கொண்டு, 'என் கண்மலரே போல்வான் எம்பி;
யாம் என்றும், அவன் என்றும், இரண்டு இல்லை; விளையாட்டு என்று இருந்தேன்; [இவ்வாறு
ஆம் என்பது எனக்கு ஒருவர் உரைத்திலரால்; யானும் முதல் அறிந்திலேனே.

'என் மைந்தர் இவர்; நீங்கள் அவன் மைந்தர் என நினையேன்; இவரே எம்பி-
தன் மைந்தர்; உங்களையே என் மைந்தர் என வளர்த்தேன்; சம்பு நாட்டு
மன் மைந்தர் உங்களைப்போல் வேறுபடாது, இத்தனை நாள், வளர்ந்தார் உண்டோ?
வில் மைந்தர் நடக்க!' என விடை கொடுத்தான்—விரகினுக்கு ஓர் வீடு போல்வான்.

பாண்டவர் வாழ்வு பெற்றது கண்டு, சகுனி மனம் பொறுது கூறுதல்

'படை கொடுத்தான்; இவன் இழந்த பார் கொடுத்தான்; அரசு ஆளப் பண்டுபோல் [வெண்-
குடை கொடுத்தான்; குருகுலத்தே குலம் கொடுத்தான்; ஐவருக்கும் குலத்தே [கொண்ட
தடை கொடுத்தான்; அகப்பட்டும் தலையழிக்க நினையாமல், தானே அம்ம!
விடை கொடுத்தான்; இனி விடுமோ? வயப் புலியை வால் உருவி விடுகின்றீரே! 264

' ''யாது ஒரு கருமமேனும் எண்ணியே துணிக'' என்றும்,
''காதலின் துணிந்து செய்தால், எண்ணுதல் கடன் அன்று'' என்றும்,
ஓது நூல் புலவர் சொன்னார்; உமக்கு உள உணர்வு அற்று அன்றே;
பேதுற அடர்த்தும், பின்னை உருகி, நீர் பிழை செய்தீரே. 265

'தீயினால் சுட்ட செம் புண் ஆறும்; அத் தீயின் தீய
வாயினால் சுட்ட மாற்றம் மாறுமோ? வடுவே அன்றோ?
பேயினால் புடையுண்டாரோ? மறப்பரோ, பெரியோர்?' என்றான்—
வீயினால் தொடுத்த தண் தார் வேந்தர்க்கு வேந்தன் மாமன். 266

துரியோதனன் ஆணைப்படி, துச்சாதனன் தருமனுடன் வழக்கு உரைத்தல்

சகுனி சொல் மருகன் கேட்டு, தம்பியும், அங்கர் கோவும்,
முகம் முகம் நோக்கி, எண்ணி, 'எம்பி நீ மொழிக!' என்றான்;
துகிலினை உரிந்த வன் கைச் சூரனும், தருமராசன்
மகனுடன், வெகுளி தோன்ற, வழக்குற மொழிதலுற்றான்: 267

'சரதம் என்று உண்மையாகச் சபையில் நீ இசைந்து தோற்ற
இரதமும், களிறும், மாவும், யாவையும், மீண்டும் தாரோம்;
சுரத மென் கொடியும் நீரும் தொண்டு ஒழிந்து, உரியீர் ஆமின்;
விரதம் உன் அறத்துக்கு என்றும் பொய்கொலோ? மெய்யே அன்றோ? 268

'தந்தைதன் அருளால் பெற்றீர் உரிமையும்; தம்பிமாரும்,
பைந்தொடிதானும், நீயும், பதி பெயர்ந்து, உயர்ந்த வேயின்
வெந் தழல் ஆர்ந்த கானின் வெளிப்படாது உறைமின்; இன்றே
இந்த மா தரணி கைவிட்டு ஏகுமின்; எழுமின்' என்றான். 269

துச்சாதனன் வார்த்தை கேட்டு, திருதராட்டிரன் வீடுமன், விதுரன் முதலியோருடன் உசாவுதல்

என்றலும், தந்தை, மைந்தன் இயம்பிய வாய்மை கேட்டு,
நின்றவா நில்லா வஞ்ச நெஞ்சினன் ஆகி, மீண்டும்,
வென்றி கொள் அரசனோடும், வெஞ் சிலை விதுரனோடும்,
ஒன்றிய அமைச்சரோடும், உறுவன உசாவலுற்றான். 270

துரோணன் உண்மை நிலையை எடுத்துரைத்தல்

'மேல் வரு கருமம் எண்ணு, வெகுளியால் மிக்க, வீரர்
நால்வரும் எம்மனோர்கள் நவின்றன சிறிதும் கேளார்;
சேல் வரும் பழன நாட! செயல் அறிந்து எண்ணி, வேத்து
நூல் வரு முறை சொல்' என்றான்—நோன் சிலை நூலின் மிக்கோன்.

துரோணன் கருத்தையே ஏனையோரும் கூற, திருதராட்டிரன் தருமனுக்கு இட்ட ஆணை

வில் மகன் உரைக்க, ஏனை அமைச்சரும், விதுரன்தானும்,
'மன் முறை தவறின், இன்றே வசையும் வந்து இசையும்' என்றார்;
கல் மன நெடுங் குன்று அன்னான் கருதி, அக் கணத்தே, மீள,
தன் மனை, யாவர் நெஞ்சும் சருகு என, தழைக்க, சொன்னான்: 272

'உன் உணர்வு உனக்கே உள்ளது; உன் பெருந் துணைவர் ஆன
கொல் நுனை வேலோர் வென்று கொண்டன கொடுத்தல் ஒல்லார்;
பின்னுற உரிமை யாவும் பெறுதி; நின் பெருமைக்கு ஏற்ப,
முன் உளோர் பலரும் செய்த முறைமையே முன்னுக' என்றான். 273

அரசன் மாற்றத்தைத் துரோணன் தருமனுக்கு விளங்க உரைத்தலும், வீடுமன் முதலியோர் அதற்கு உடன்பட்டு மொழிதலும்

அரசன் மற்று உரைத்த மாற்றம் அந்தணன் உணர்ந்து, செல்வ
முரசு அதிர் அயோத்தி மூதூர் முன்னவன் கதையும் கூறி,
'உரைசெய்தபடியே உங்கள் உலகினை இழந்து, சில் நாள்
வரை செறி கானில் வைகி, வருவதே வழக்கும்' என்றான். 274

'அரிவையோடு அகன்று, நீவிர் ஐவரும் அடவி எய்தி,
சுரர் தினம் ஈர்-ஆறு அங்கண் துன்னுதிர்; மன்னும் நாட்டில்
ஒருவரும் அறியாவண்ணம் ஒரு தினம் உறைதிர்; உங்கள்
பெரு விறல் அரசும் வாழ்வும் பின்னுறப் பெறுதிர்' என்றான். 275

'மறைந்து உறை நாளில் நும்மை மற்றுளோர், "ஈண்டு உளார்" என்று
அறிந்திடின், மீண்டும் இவ்வாறு அரணியம் அடைதிர்' என்றான்;
பிறந்த இம் மாற்றம் கேட்டு, பிதாமகன் முதலாய் உள்ளோர்,
'சிறந்தது ஒன்று இதனின் இல்லை; இசைத்ததே செய்மின்' என்றார்.

திரௌபதி, 'உரிமை பெற மீண்டும் சூதாட வேண்டும்' என, தருமன் மன்னவர் காண மறு சூது ஆடுதல்

சுரி குழல் குலைய நின்ற திரௌபதி, சுருதி முந்நூல்
வரபதி மொழிந்த மாற்றம் கேட்டலும், வணங்கி, 'ஐவர்
அரசரும், எனது மைந்தர் ஐவரும், யானும், மீண்டும்
உரிமை இன்று எய்த, வெஞ் சூது ஆடுதல் உறுதி' என்றாள். 277

தையல் அங்கு உரைத்த மாற்றம் தருமனும் கேட்டு, 'நாங்கள்
கையறு தொண்டர் ஆகிக் கான் புகல் வழக்கும் அன்றால்;
ஐயுறாது ஒருகால் இன்னம் ஆடுதும், அருஞ் சூது' என்றான்;
மெய்யுற இருந்த வேந்தர், மீளவும் காணலுற்றார். 278

தருமன் தன் புண்ணியத்தை ஒட்டமாக வைத்துக் கவறு ஆடி, தன் உரிமையை மீண்டும் பெறுதல்

சத்திய விரதன்தானும் தன் பெருந்தேவி சொல்ல,
பத்தியால் வணங்கி, மாயன் பன்னிரு நாமம் ஏத்தி,
ஒத்த வெண் கவறு வாங்க, சகுனி, 'யாது ஒட்டம்?' என்றான்;
புத்தியால் அவனும், 'யான் செய் புண்ணியம் அனைத்தும்' என்றான்:

உருட்டிய கவறு, நேமி உடையவன் அருளினாலே,
மருட்டிய சகுனி எண்ணின் வழிப்படாது உருண்ட காலை,
இருட்டிய விழியான் மைந்தன் இதயமும் இருண்டு சோர,
தெருட்டிய உணர்வின் மிக்கோன் செப்பிய யாவும் வென்றான். 280

தருமன் இளைஞர் முதலியோருடன் குரவரை வணங்கி, காட்டிற்குச் செல்லுதல்

வென்று, தன் இளைஞரோடும், மேதகு புதல்வரோடும்,
மன்றல் அம் தெரிவையோடும், மற்றுளோர் தங்களோடும்,
அன்று தன் குரவர் பொன்-தாள் அன்புடன் வணங்கி, கானம்
சென்றனன் என்ப மன்னோ—செழு நிலம் உடைய கோமான். 281

பாண்டவர் பிரிவினால் நகரமாந்தர் வருந்திப் புலம்புதல்

ஒழிவு செய் கருணை நால்வர் உள்ளமும் ஒழிய, ஏனை
வழுவு அறு மன்னர் உள்ளம் மம்மரோடு அயர்ந்து விம்ம,
குழைவினால் நுகர்தல் இன்றி, கொற்ற மா நகரி மாக்கள்
தழல் என உயிர்த்து, மாழ்கி, தனித் தனி புலம்பலுற்றார். 282

தருமன் கானகம் சென்ற போதும், கலக்கம் இன்றி உவகையுடன் இருத்தல்

நாட்டிடை எல்லை, பொன்-தாள் நறு மலர் சிவக்க ஏகி,
காட்டிடை புகுந்த போதும், கலக்கம் அற்று, உவகை கூர்ந்தான்—
கூட்டிடை இன்பத் துன்பக் கொழும் பயன் துய்த்து, மாறி,
வீட்டிடை புகுதும்போது, மெய்ம்மகிழ் விபுதர் போல்வான். 283

# 12. அருச்சுனன் தவநிலைச் சருக்கம்

தருமன் துணைவருடன் முனிவர் சூழ, காமிய வனம் புகுதல்

பெருமித வலியும் பாரும் பேணலார் கவர, இன் சொல்
தருமனும் தம்பிமாரும், தழல் எழு தையலாளும்,
அரு மக முனிவர் முந் நான்கு ஆயிரர் சூழ்ந்து போத,
கரு முகில் படியும் சாரல் காமிய வனம் புக்காரே. 1

பாண்டவர் வருகையால் காமிய வனம் கவினுறுதல்

ஆரமும் அகிலும் நாறும் அருவியும், சுனையும், மத்த
வாரணம் பிடிகளோடு வாரி தோய் கானியாறும்,
ஈரமும் நிழலும், காயும் கனிகளும், யாவும், ஈண்டி,
கார்இனம் பொழியும் அந்தக் கானகத்து அழகு கண்டார். 2

அங்கு இவர் புகுந்த பின்னர், அங்கியின் புகையும் மாறி,
பொங்கிய ஓமத் தீயின் புகையினுல் முகில் உண்டாக,
சிங்கமும் துதிக்கை மாவும் சேர்ந்து உடன் திரிய, சூழல்
எங்கணும் அழகு பெற்றது, இமகிரிச் சாரல் போன்றே. 3

துருபதன் முதலியோரும் கண்ணனும் பாண்டவரை வந்து காணுதல்

துருபனும், திட்டத்துய்மனும், சோமக
நிருபர்ஆனவர் யாவரும், நேர்ந்து உடன்
விரவு தானை விராடனும், சுற்றமும்,
மருவினர்—அவ் வனத்து இருந்தோரையே. 4

மற்றும் மற்றும், மகீபரில் அன்பினுல்
உற்ற உற்ற உறவுடையோர்களும்,
கற்ற கற்ற கலைவித மாக்களும்,
சுற்றும் மொய்த்தனர், தோம் அறு கேண்மையார். 5

மா தவத்தின் பயன் என, மாதவன்,
யாதவக் குலத்து ஏறு, இமையோர் பதி,
ஆதபத்துக்கு அரு நிழல்போல் அருள்
வேத வித்தக வீரனும், மேவினுன். 6

வந்தோர் அன்பினுல் பல பல உரை பகர்தல்

பார் இழந்த இப் பாதகச் சூது கேட்டு,
ஈரும் நெஞ்சினர், ஏமுறு நோக்கினர்,
பேர் அறன் தரு பிள்ளையைப் பார்த்து, அருள்
கூர, அன்பொடு இவை இவை கூறுவார்: 7

'மரபின் வல்லியை மன்அவை ஏற்றிய
குருகுலேசனை, கொற்ற வெஞ் சேனையோடு
இரிய, எற்றுதும் இப்பொழுதே!' என,
உரமும் சீற்றமும் தோற்ற, உரைசெய்வார். 8

'தம்பிமாரைத் தனித்தனியே உயிர்
வெம்பி வீழ, விரைந்து வில் வாங்கி, இன்று
உம்பர் காண உயிர் அழிப்போம்!' என,
தும்பை சூடக் கருதினர் சொல்லுவார். 9

'வஞ்சகச் சுபலன் தரு மைந்தனை
வெஞ் சமத்தினில் வீழ, கணத்திடைச்
செஞ் சரத்தின்வழி உயிர் செல்லவே,
எஞ்சுவிக்க எழும்!' என்று இயம்புவார். 10

'சீத வெண்குடை வேந்தர்தம் தேர் விடும்
சூதன் மைந்தன், சுயோதனன் தோழனை,
மாதிரங்களில் வானவர் காண, இப்
போது உடற்றுவம்!' என்னப் புகலுவார். 11

உந்த உந்த ஒருவர்க்கு ஒருவர் வாய்
முந்த முந்த, முடுகு சினத்தர் ஆய்,
அந்த அந்த அவனிபர் யாவரும்,
இந்த இந்த உரைகள் இயம்பவே, 12

கண்ணன் வேந்தர்களின் சினத்தைத் தணித்தல்

கேட்டு இருந்தருள் கேசவன், வாசவன்
காட்டு இருந்தனன் என்னக் கவின்பெறும்,
தோட்டு இருந்து அளி தேன் நுகர் சோலையின்-
மாட்டு இருந்த, மகீபர்க்கு உரைசெய்வான்: 13

'விடுக இந்த வெகுளியை; பின்புற
அடுக, நும் திறல் ஆண்மைகள் தோன்றவே;
''வடு மனம்கொடு வஞ்சகம் செய்பவர்
கெடுவர்'' என்பது கேட்டு அறியீர்கொலோ? 14

'இயைந்து உரைத்த இயைபின்படி, இனி
வியந்து இருக்கும் விபினம்தொறும் இருந்து,
உயர்ந்த பின் செய் வினையை இன்று உன்னுதல்,
அயர்ந்து உரைத்தல் அலாது, இலை, ஆவதே. 15

'அன்னை, புதல்வர், முதலியோரை உறவினர் இருப்பிடங்கட்கு அனுப்பிவிட்டு, நீவிர் மட்டும் கானின் உறைதல் நன்று' எனக் கண்ணன் தருமனுக்கு உரைத்தல்

'கேட்டி நீ, முரசகேது! கிளைஞர்தம் இருக்கைதோறும்
ஈட்டிய புதல்வர் உள்ளோர் யாரையும் இருத்தல் செய்து,
காட்டிடை நீவிர் வைகி, கடவ நாள் கழித்து, மீண்டு,
நாட்டிடை வந்தால் காண்டி, நலன் உளோர் நலன்கள் எல்லாம். 16

'அன்னையைச் சுபலன் பாவை அருகுற இருத்தி, உங்கள்
தன்னையர் தம்மை யாகசேனன் ஊர் தன்னில் வைத்து,
பின்னையும் வேண்டுவோரைப் பிரிவுற நெறியில் போக்கி,
நல் நயத்தொடு நீர் கானம் வைகுதல் நன்மை' என்றான். 17

கண்ணன் உரைப்படியே யாவரையும் அனுப்பி, தருமன் கானில் வாழ்தல்

அச்சுதன் உரைத்த மாற்றம், அறன் சுதன் மகிழ்ந்து, கேட்டு,
மெய்ச் சுதர் முதலா மற்றும் விளம்பிய கிளையை எல்லாம்
இச்சையின்படியே, ஆங்கு ஆங்கு எய்துவித்து, ஈர்-ஆறு ஆண்டும்
அச்சுறு கானில் வைகும் ஆர்வமே ஆர்வம் ஆனான். 18

கண்ணன் முதலிய வேந்தரும் தத்தம் இருப்பிடத்திற்கு மீளுதல்

சோனை மா முகிலின் மேனித் தோன்றலும் துவரை புக்கான்;
ஏனையோர் தாமும் தம்தம் எயிலுடை நகரி புக்கார்;
ஞான யோகிகளும் ஒவ்வா நரேசனும், தம்பிமாரும்,
கானமே தாங்கள் ஆளும் காசினி ஆகக் கொண்டார். 19

வியாத முனிவன் வருகையும், பாண்டவரது முறையீடும்

அவ் வனம்தன்னில் வந்த அரசு எலாம் அகன்ற பின்னர்,
வெவ் வனம் விடாது மேவித் தவம் புரி வியாதன் என்னும்
செவ்வன முனிவன் வந்து, அச் சேயவன் சேய்கள் ஆன
இவ் வன சரிதர் தம்மை இனைவுடன் எய்தினானே. 20

கண்டு எதிர் சென்று போற்றி, கண்ணினும் சென்னிமீதும்
கொண்டனர் அவன்தன் பாதம்; குளிர்ந்தனர், உயிரும் மெய்யும்;
புண்டர நுதலினானைப் பூசனை செய்த பின்னர்,
வண்டு அணி தாரான் செய்த வஞ்சனை அனைத்தும் சொன்னார். 21

வியாதன் பாண்டவரைத் தேற்றி, 'பகை முடிக்கப் பார்த்தன் பாசுபதம் பெறல் வேண்டும்' என்றல்

செறிந்தவர்க்கு ஊற்றங்கோல் ஆம் செய் தவ முனியும், 'முன்னே
குறிந்தன நிகழ்ந்த எல்லாம் கூறுதல் கொடிது; பாவம்;
''பிறிந்தன தாயம்தன்னில் பெரும் பகை இனிது'' என்று அன்றோ,
அறிந்தவர் உரைத்தார்? ஐய! அவாவினுக்கு அவதி உண்டோ? 22

'துன்றினர் இன்னல் எய்த, துன்னலர் ஆகி, தம்மில்
ஒன்றினர் செறினும், உள்ளது உண்டு' என உணரத் தேற்றி,
கன்றினர் கவலை தீர்த்தான், கண்ணுடைக் கருணை மூர்த்தி;—
குன்றினது உயர்ச்சி அந்தக் குன்றினுக்கு அறிய உண்டோ? 23

'நீவிரே அல்லிர்; முன்னாள் நிலம் முழுது ஆண்ட நேமி
நா விரி கீர்த்தியாளன், நளன் எனும் நாம வேந்தன்,
காவிரி என்னத் தப்பாக் கருணையான், சூதில் தோற்று,
தீ விரி கானம் சென்ற காதை நும் செவிப் படாதோ?' 24

தோத்திரம் ஆன தெய்வச் சுருதிகள் யாவும் நான்காக்
கோத்தவன் பின்னும் சொல்வான்: 'குன்ற வில்லவன்பால் இன்று
பார்த்தனே சென்று, பாசுபதக் கணை வாங்கின் அல்லால்,
ஆர்த்த பைங் கழலாய்! எய்தாது, அரும் பகை முடித்தல்' என்றான்.

முனிவன் மொழிப்படி பாசுபதம் பெறுமாறு தருமன் கூற, அருச்சுனன் விடை பெற்று ஏகுதல்

பரிவுடன் முனிவன் மாற்றம் பணிந்து, தன் தலைமேல் கொண்டு,
வரி சிலைக்கு உலகம் எண்ணும் மகபதி மகனை நோக்கி,
'கிரிசனை உன்னி, வெள்ளிக் கிரிப் புறம் எய்தி, யார்க்கும்
அரிய நல் தவம் செய்தேனும், அவன் அருள் பெறுதி, ஐயா!' 26

என விடை கொடுப்ப, மண்ணில் இணை இலா வியாதன் பாதம்
மனன் உற இறைஞ்சி, ஆங்கு, ஓர் மந்திரம் முறையின் பெற்று,
நனி மிகு திதியும் நாளும் நல்லது ஓர் முகூர்த்தம்தன்னில்,
தனி வதி இயக்கர் காட்ட, தனஞ்சயன் சேறலுற்றான். 27

'அஞ்சலிர்' என்று கூறி, முனியும் மீண்டு போதல்

'வெஞ் சல மனத்தர் ஆனோர் விரகினால் கூட்டம் கூட்டி,
நஞ்சு அலது உவமை இல்லா நவை புரிந்தனர்களேனும்,
சஞ்சலம், உம்மைப் போலும் தரணிபர், உறுதல் செய்யார்;
அஞ்சலிர்!' என்று, மீள ஆரண முனியும் போனான். 28

அருச்சுனன் தவ வேடம் கொண்டு, வடதிசை முடிவைக் காணுதல்

மரவுரி உடையன், சென்னி வகுத்த செஞ் சடையன், தூணிச்
சரமுடன் அங்கி ஈந்த தனுவினன், தவத்தின் மேலே
புரிதரு மனத்தன், எல்லாப் புண்ணியங்களுக்கும் தானே
உரைபெறு தசரதன்தன் மகன் அலாது உவமை இல்லான், 29

நெறி இரு புறத்தும், ஊசி நுழை ஒணா நெருக்கம் மிக்க
செறிதரு வனமும், சிங்கம், சிந்துரம், செருச் செய் சாரல்
பொறைகளும், வெம் பிசாச பூதமோடு இயக்கர் யாரும்
உறைதரு குவடும், நீங்கி, உத்தர முடிவு கண்டான். 30

### இமகிரியில் முனிவரரை வணங்கி, அருச்சுனன் மகிழ்தல்

அத் திசை இமயம் என்னும் அரச வெற்பு அடைந்து, மிக்க
பத்தியோடு, அம்மைதன்னைப் பயந்த குன்று என்று போற்றி,
சத்தியவிரதன் தம்பி, தபோவனம்தோறும் தங்கள்
முத் தழல் வளர்ப்போர் பாத முளரிகள் முடிமேல் கொண்டான். 31

சாரணர், இயக்கர், விச்சாதரர், முதல் பலரும் செஞ் சொல்
ஆரணப்படியே, சூழ்ந்த அடவிகள்தோறும் வைகி,
நாரணன், மலரோன், உம்பர்நாயகன், பதங்கள் நச்சி,
காரணத் தவம் செய்வோரைக் கண்டு, கண்டு, உவகை கூர்ந்தான்.

### கைலை மலையை எய்தி, அருச்சுனன் தவம் புரிதல்

அரியும் வெங் கரியும் தம்மில் அமர் புரி முழக்கம் கேட்டும்,
கிரியினின் முழக்கம் கேட்டும், கிராதர் போர் முழக்கம் கேட்டும்,
எரி கிளர் முழக்கம் கேட்டும், எம்பிரான், இமவான் தந்த
புரிகுழலோடும் வைகும் புண்ணியப் பொருப்பைச் சேர்ந்தான். 33

கைம்மலை உரிவையோடு கட்செவிக் கச்சும் சாத்தும்
செம்மலை, விழியின் காணான், சிந்தையால் கண்டு போற்றி,
அம் மலைச் சாரல்தோறும் அருந் தவம் புரிநர் கூற,
விம்மலை நீங்கி, ஆங்கண் மெய்த் தவ விரதன் ஆனான். 34

எயில் ஒரு மூன்றும் செற்றோன், ஏந்திழையுடனே வைகும்
கயிலையின் பெருமைதன்னைக் கட்டுரைசெய்வது எங்ஙன்?
வெயிலவன் முதலோர் நாளும் மேம்பட வலம் செய்வார்கள்;
அயிலும் நல் அமுதோர் சூழ்வந்து அன்புடன் போற்றுவாரே! 35

உருகிய வெள்ளி போல உயர் முழைதோறும் வீழும்
அருவி நீர், புனிதன் வேணி அமரும் மா நதியின் தோன்ற,
உருகிய பனி வான் குன்றில் ஒண் பனிக் கடவுள் வந்து
மருவியது என்ன, தோன்றும் வருண மால் வரையின் தென்பால்,

ஆசில் நான் மறைப்படியும், எண் இல் கோடி
    ஆகமத்தின் படியும், எழுத்து ஐந்தும் கூறி,
பூசினான் வடிவம் எலாம் விபூதியால்; அப்
    பூதியினைப் புரிந்த சடைப் புறத்தே சேர்த்தான்;
'தேசினால், அப் பொருப்பின் சிகரம் மேவும்
    சிவன் இவனே போலும்!' எனத் தேவர் எல்லாம்
பேசினார்; வரி சிலைக் கை விசயன் பூண்ட
    பெருந் தவத்தின் நிலை சிலர்க்குப் பேசலாமோ? 37

ஒரு தாளின்மிசை நின்று, நின்ற தாளின்
ஊருவின்மேல் ஒரு தாளை ஊன்றி, ஒன்றும்
கருதாமல், மனம் அடக்கி, விசும்பின் ஓடும்
கதிரவனைக் கவர்வான்போல் கரங்கள் நீட்டி,
இரு தாரை நெடுந் தடங் கண் இமையாது, ஓர்
ஆயிரம் கதிரும் தாமரைப் போது என்ன நோக்கி,
'நிருதாதியரில், மனுவாய்த் தவம் செய்வாரில்,
நிகர் இவனுக்கு ஆர்கொல்?' என, நிலைபெற்றானே. 38

'தோற்றியது எம் இடத்தே இத் தோன்றல் மாலை
சூட்டிய பொன்-தொடி' என்றோ, 'துரங்கம், பொன்-தேர்,
கூற்று இயல் வெஞ் சிலை, பாணம், தூணி, நாணி,
குரக்கு நெடுங் கொடி முன்னம் கொடுத்தேம்' என்றோ,
'காற்றினுடன் விரைவுறச் சென்று அருந்துமாறு,
காண்டவம் நம் பசிக்கு அளித்த காளை' என்றோ,
நால்-திசையும் வளர்த்த தழல் கடவுள், அந்த
நரன் உடலம் குளிர்விக்கும் நாரம் போன்றான். 39

வலப் பாகம் செழும் பவளச் சோதி என்ன,
வாள் நீலச் சோதி என்ன மற்றைப் பாகம்,
கலப்பான திருமேனி அணிந்த நீற்றால்
கதிர் முத்தின் சோதி என, மேனை ஈன்ற
குலப் பாவையுடன் கயிலைக் குன்றில் வாழ் விற்-
குன்றுடையோன் திருக்கோலம் குறிப்பால் உன்னி,
புலப்பாடு புறம் பொசிய, மார்பும் தோளும்
பூரித்தான்; உடல் புளகம் பாரித்தானே. 40

கருந் துறுகல் எனக் கருதி, பிடியும், கன்றும்,
களிற்றினமும், உடன் உரிஞ்ச, கறையான் ஏறிப்
பொருந்தும் முழைப் புற்று அது எனப் புயங்கம் ஊர,
பூங் கொடிகள் மரன் என்று பாங்கே சுற்ற,
பரிந்து, வெயில் நாள், மழை நாள், பனி நாள், என்று
பாராமல் நெடுங்காலம் பயின்றான்; மண்ணில்
அருந் தவம் முன் புரிந்தோரில் இவனைப்போல் மற்று
ஆர் புரிந்தார், சிவசிவ என்று? அரியவாறே! 41

பகிரதனே முதலான எண் இல் கோடி
பார்த்திவரும் தவம் புரிந்தார்; பைம் பொன் மேனி
இகல் அவுணர் முதலான ககனவாணர்
எத்தனைபேர் தவம் புரிந்தார்? இமையோர் ஏத்தும்
மகபதிதன் மதலை இவன் எழுத ஒணாத
வனப்பினுக்கு வரி சிலைக் கைம் மதவேள் ஒவ்வான்;
சகல கலைகளுக்கும் இவன்தானே; இங்ஙன்
தவம் புரிய நினைப்பதே? சார்ந்த பாவம்! 42

பண்ணுக்கு வாம் பரித் தேர் ஆதபனும், பணிந்து பசுபதியை நோக்கி
மண்ணுக்குத் தவம் புரியும் தனஞ்சயற்குக் கோடையினும், மதியம் போன்றான்;
எண்ணுக்கு வரும் புவனம் யாவினுக்கும் கண் ஆவான் இவனே அன்றோ?
'கண்ணுக்குப் புனை மணிப் பூண் கண்ணோட்டம்' என்பது எல்லாம் கருணை அன்றோ?

அங்கியால் அங்கியை வெதுப்பி, வெம்மையைப்
பொங்கிய வாயுவால் போக்கி, மெய்ச் சிரம்
தங்கிய அமுதினால் தண்ணெனும்படி
இங்கிதத்து ஒடுக்கினன், இதயம்தன்னையே. 44

ஈண்டு தன் கருத்தினோடு இயைந்த மா தவம்
பூண்டு, இள மதி முடிப் புண்ணியன்தனை
வேண்டியவாறு எலாம் விருப்பொடு உன்னினான்—
பாண்டியன் உயர் குலப் பாவை கேள்வனே. 45

அருச்சுனன் தவநிலை தெரிய, இந்திரன் குருவுடன் ஆலோசித்தல்

நிரந்தரம் அநேக நாள், நினைவு வேறு அற,
உரம் தரு புலன்களை ஒடுக்கி, ஆயுதம்
இரந்தனன் வரையிடை இயற்று நல் தவம்
புரந்தரன் அறிந்து, மெய் புளகம் ஏறவே, 46

குருவுடன் விரகுறக் கூறி, ஈசனை,
மருவுறு கொன்றை நாள் மாலை மௌலியை,
கருமயில் பாகனை, காண்டல் வேண்டிய
திருமகன் தவ நிலை தெரிய, உன்னினான். 47

'அரும் பகை வலிமையால், அவுணர் ஊர் சுடும்
பெரும் பிறை அணி சடைப் பிஞ்ஞகன்தனது
இரும் பகழிகள் பெற எண்ணியேகொலாம்,
விரும்பியது இத் தவம், வில்வலான்அரோ! 48

'நல்-தவத்து உறுதியும், நரன் கருத்தும், நாம்
முற்று அறிகுவம்' என முன்னும் சிந்தையான்,
கற்றைஅம் சடையவன் கயிலை அம் கிரி
உற்று, அறிவு உறுவதற்கு உபாயம் உன்னினான். 49

அருச்சுனன் தவவுறுதியை அறிய இந்திரன் அனுப்பிய தேவமாதரின் வருகை

'தூ நகை உருப்பசி, அரம்பை, தொண்டை வாய்
மேனகை, திலோத்தமை, என்று, வேலையில்
மான் என, மயில் என, வந்த மாதரீர்!
ஆனவாறு அறிதிர் போய், அவன்தன் எண்ணமே.' 50

என்று கொண்டு, இந்திரன் இயம்ப, மற்று அவன்
துன்றிய பேர் அவைத் தோற்றம் மிக்கவர்,
குன்று இரண்டு எடுப்பது ஓர் கொடி மருங்குலார்,—
சென்றனர், அவ்வழி,—செய்ய வாயினர். 51

மாதருக்கு உதவியாக மன்மதனும் உடன் வருதல்

காமனை நினைந்தனர்; காமராசனும்
மா மலர் வாளியும், மதுர சாபமும்,
தேமரு மலர்க் கையில் சேர்த்தி, சேனையோடு
ஆம்முறை புகுந்தனன், அரனும் அஞ்சவே. 52

செந்தமிழ் வரை தரு தேரன், செக்கர் வான்
அந்தி யானையன், மதி ஆதபத்திரன்,
சிந்து வெம் முரசினன், செவ்வி கூரவே
வந்தனன், காலமும் வசந்தம் ஆக்கியே. 53

கந்தனை அளித்த கன்னி ஓர் பாகம்
கலந்த மெய்க் கண்ணுதற்கு எதிராய்,
செந்தமிழ் உரைத்த குறுமுனி இருந்த
தெய்வ மால் வரையிடைத் தோன்றி,
இந்துவும் அரவும் உறவு செய் முடிமேல்
இருந்த மந்தாகினி அருவி
வந்து இழி புனலும், சந்தனம் கமழ,
வந்தது—மந்தமாருதமே. 54

வம்பு அறு மதுரப் பல்லவம் கோதி,
மா மகரந்த மா கந்தக்
கொம்பு எலாம் இருந்து, குயில்இனம் கூவ,
கொற்ற வெஞ் சிலையினால், முன்னம்,
சம்பராசுரனை வென்ற வீரனைப் பைந்
தாம மா மணி முடி சூட்டி,
'எம்பிரான் முனிவுக்கு அஞ்சல்!' என்பதுபோல்
இயைந்தது—வசந்த காலமுமே. 55

அழல் நடுவண் தவம் செய்யும் அருச்சுனனைத் தேவமாதர் காணுதல்

பூதம் ஐந்தினையும் புலத்துடன் ஒடுக்கி,
புரிசடையுடன் புருகூதன்
காதல் அம் புதல்வன் அருந் தவம் புரிதல்
கண்டு, பாவிப்பன போல,
மாதிரம்தொறும் செம் பல்லவச் செந் தீ
வளர்த்து, வான்மணியினை நோக்கி,
பாதம் ஒன்றினில் நின்று உயர்ந்தன, ஒளி கூர்
பணையுடைப் பாதபங்களுமே. 56

உள் உறக் கலக்கம் அறத் தெளிந்து, அசலத்து
உயர் தலை முழையில்நின்று, அருவி
வெள்ளம் ஒத்து அமுதம் கரை அறப் பொழிய,
வெம்மை அற்று, அளியுடன் குளிர்ந்து,
புள்ளுடைக் கொடியோர் இருவரும் காணாப்
புண்ணியன் பொருப்பிடைத் தவம் செய்
வள்ளல் ஒத்தன, அச் சாரலைச் சூழ்ந்து
வயங்கு நீள் வாவியும், சுனையும். 57

நீறு பட்டு இலங்கும் மெய்ந் நிலவு ஒளியால்
நெஞ்சினில் இருளினை அகற்றி,
மாறுபட்டிடும் ஐம் புலன்களும் ஒடுக்கும்
மா தவன் வளர்த்த செந் தழலால்,
கூறுபட்டு உமையோடு ஒரு வடிவானோன்
குன்று சூழ் அறை பொறை அனைத்தும்
ஆறுபட்டு உருகிப் பெருகி ஓடினவால்,
அம் மலை வெள்ளி ஆதலினால்! 58

அலைத் தடங் கடலில் அமுதொடு உற்பவித்து ஆங்கு
அமரர் வாழ் பதி குடி புகுந்தோர்,
'குலைத்தும்!' என்று எண்ணி, ஒருவருக்கு ஒருவர்
கொடி இடை நுடங்க வந்து, அந்த
மலைத் தடம் நெருங்கப் புகுந்தனர்; குயிலும்
மயூரமும் மானுமே அனையார்,
நிலைத் தவம் புரிவோன் ஐவகை நெருப்பின்
நடுவு உற நின்றவா, கண்டார். 59

தவத்தைக் கலைக்கத் தேவமாதர் புரிந்த பல இங்கிதச் செயல்கள்

அந்தரத்து அமரர் துந்துபி முழங்க,
அநங்க துந்துபி எதிர் முழங்க,
வந்து, பொற் சிலம்பும், மேகலை விதமும்,
மலர்க் கை வெள் வளைகளும், முழங்க,
பந்து அடித்திடுவார், அம்மனை எறிவார்,
பயில் கழங்கு ஆடுவார், நெற்றிச்
சிந்துரத் திலகம் தீட்டுவார், ஆகி,
தனித்தனி, திசைதொறும் சூழ்ந்தார். 60

குயிலொடு கூவி, கிஞ்சுகம் மலர்ந்து,
கொஞ்சு பைங் கிளிகளை அழைப்பார்;
மயில்இனம் நடிக்க, தாமும் வண் கலாப
மணி அணி ஒளி எழ நடிப்பார்,
வெயில் விடு பரிதி மதியுடன் வலம் செய்
விடர்அகம் முழுவதும் ஒலிப்ப;
'கயிலைஅம்கிரியின் சாரலோ? எம் ஊர்க்
கடவுள் ஆலயம்!' எனக் களிப்பார். 61

கூந்தல் மா முகிலைக் குலைத்து உடன் முடிப்பார்;
குங்குமம் கொங்கைமேல் அணிவார்;
ஏந்து பேர் அல்குல் கலை நெகிழ்த்து உடுப்பார்;
இட்ட உத்தரியம் மாற்றிடுவார்;
பூந் துகில் நனைய நறுஞ் சுனை படிவார்;
புழுகு, சந்தனம், நறும் பனி நீர்,
காந்திகொடு எறிவார்; காம வேதத்தைக்
கருங் கடைக் கண்களால் மொழிவார். 62

பண்ணுடை எழாலின் இன் இசை வழியே
பாடுவார்; பைங் குழல் குறிப்பார்;
பெண்ணுடை மடம் நாண் அகன்ற, பேர் அமளிப்
பேச்சு எலாம் பேசி வந்து அடுப்பார்;
விண்ணுடை அமிர்தம் பருகுவார்; உகிரால்,
மென் மலர் கொய்து, மேல் எறிவார்;
எண்ணுடை மடவார் புரிந்தன, இவ்வாறு
இங்கிதம் எத்தனை கோடி! 63

அருச்சுனன் மேல் ஐங்கணை எய்தும் அவன் சலியாமையால்,
மன்மதன் இளைத்து மீளுதல்

காவும், வண் புறவும், கயங்களும், அரும்ப,
கவர்ந்த வெங் கணைகளாம் ஐந்து
பூவும் வந்து, உள்ளம் உற உறப் பட்டுப்
புதையவும், புலன்வழி அன்றி,
மேவுதன் கருத்தின் வழியிலே நின்ற
விசயனை, அங்கிபால் வில்லும்
ஏவும் முன் பெற்ற இறைவனை, எய்து எய்து,
இளைத்தனன், இரதி கேள்வனுமே. 64

கூற்றினை உதைத்த பாதமும், உடுத்த
குஞ்சரத்து உரிவையும், அணிந்த
நீற்று ஒளி பரந்து நிலவு எழு வடிவும்,
நிலா, வெயில், அனல், உமிழ் விழியும்,
ஆற்று அறல் பரந்த கொன்றை வார் சடையும்,
அல்லதை யாவையும் கருதான்;
மாற்றம் ஒன்று இன்றி நின்றனன், வரைபோல்
வச்சிராயுதன் திருமகனும். 65

'அன்று அரன் இருந்த யோகினை அகற்றி,
அறிவு இலாது அநங்கனு வெந்த
குன்று இது; தடங் கண் ஆயிரம் உடையோன்
கூறிய கூற்றினைத் தேறி,
இன்று, அவன் மதலை புரி தவம் குலைத்தால்,
என் விளைந்திடும்?' என அஞ்சி,
நின்றிலன், மதனன்;—நிற்குமோ, நெற்றி
நெருப்பினுல் நீறுபட்டுள்ளோன்? 66

தெய்வ மகளிர் முதலியோர் பயன் இன்றித் திரும்பிச் செல்லுதல்

வானவர் பெருமான் ஏவலால் வந்த
வானவர் மகளிரும், தம்மால்
ஆன அக் கிரீடை யாவையும் புரிந்தும்
ஒரு பயன் பெற்றிலர், அகன்றார்;
கானகம் முழுதும் பரிமளம் பரப்பி,
கான வண்டு இமிர்தரப் புகுந்த
வேனிலும் அகன்றது; அருக்கனும் குடபால்
வெண் திரை வேலைவாய் வீழ்ந்தான். 67

இந்திரன் முனிவனாய் வந்து அருச்சுனன் மனநிலை அறிய உரையாடுதல்

'இந்திரன் சுதன்தன் எண்ணம் யாவது?' என்று இனிதின் எண்ணி,
இந்திரசாலமாக ஏவினர் எவரும் எய்தி,
இந்திரநீலந்தன்னில் இறைவனுக்கு உரைத்தார்; அந்த
இந்திரன்தானும் மைந்தன் தவம் புரி இருக்கை சேர்ந்தான். 68

விருத்த மா முனிவன் ஆகி, விசயனை நோக்கி, 'யாது
கருத்து? நீ தவம் செய்கின்ற காரணம் என்னை?' என்ன,
திருத்தகு சிந்தையோடும் செந் தழலிடை நின்றோனும்,
மருத்துவன் உருவம் மாறி வந்தவாறு உணர்கிலாதான், 69

'மாசு அறு மதியம் அன்ன வாள் முக மங்கை பாகத்து
ஈசன் வந்து எய்துகாறும், இத் தவம் புரிவேன்' என்ன,
'ஆசு அறு கடவுளோர்க்கும், அரு மறைதனக்கும், எட்டாத்
தேசவன் வருமோ?' என்று சிரித்தனன், தேவர் கோமான். 70

'சிரித்தது ஏன்?' என்ன, மீண்டும் திருமகன்தன்னை நோக்கி,
'வருத்தமே அன்றி, இந்த மா தவம் பயன் இன்று' என்றான்;
உருத்து இவன் அவனை நோக்கி, 'உயிர் இறும் அளவும், இந்தக்
கருத்து நான் விடேன்' என்றான், கடுங் கனல் ஊடு நின்றான். 71

அருச்சுனனது மனவுறுதி கண்டு மகிழ்ந்து, இந்திரன் தன்
உண்மை வடிவுடன் அருள் புரிதல்

மைந்தன் இம் மாற்றம் கூற, மனன் உற மகிழ்ந்து, தெய்வத்
தந்தையும், விருத்த வேடம்தனை ஒரு கணத்தில் மாற்றி,
இந்திரன் ஆகி, முன் நின்று, 'இப் பெருந் தவத்தால் வந்து,
பைந்தொடி பாகன் பாசுபதம் உனக்கு உதவும்' என்றான். 72

சேடியரால் அருச்சுனன் தவநிலை அறிந்த உமை, சிவபெருமானுக்கு அதனை அருளிச் செய்தல்

என்று உரைத்து, அமரர் கோமான் ஏகிய பின்னர், வெள்ளிக்
குன்றுடைப் புனிதன் பாதம் குறிப்புறு மனத்தன் ஆகி
நின்று, நல் தவம் செய்கின்ற நெடுந்தகை நீர்மை எல்லாம்
சென்று, உமைக்கு உரியர் ஆன சேடியர் செப்பினரே. 73

மேனை முன் பெற்ற கிள்ளை, வேலையும் சேலினோடு
மானையும் பொருத செங் கண் மரகதவல்லி, கேட்டு,
தானையும், கரிய பேர் உத்தரியமும், ஆகச் சாத்த
ஆனை அன்று உரித்த நக்கற்கு அடி பணிந்து, அருளிச்செய்தாள்.

அருச்சுனன் தவம் பற்றி, சிவபெருமான் தேவியுடன் உரையாடுதல்

ஆலம் உண்டு அமுதம் பொழிதரு நெடுங் கண்
அம்பிகை அருள் மொழி கேட்டு,
நீலம் உண்டு இருண்ட கண்டனும், இரங்கி,
'நிரை வளைச் செங் கையாய்! நெடிது
காலம் உண்டு; அருள் கூர் அறத்தின் மைந்தனுக்கும்
காற்றின் மைந்தனுக்கும் நேர் இளையான்;
ஞாலம் உண்டவனுக்கு உயிர் எனச் சிறந்தோன்;
''நரன்'' எனும் நாமமும் படைத்தோன்; 75

'ஆடியானனன்தன் மதலையர் விரகால்
ஆடிய சூதினுக்கு அழிந்து,
காடு தாம் உறையும் கடனினர்அவரில்
கடவுள் நாயகன் தரு காளை;
நீடு பேர் அமரில் பகைவரைச் செகுக்கும்
நினைவினால், நெருப்பிடை, நம்மை
நாடியே, அரிய தவம் புரிகின்றான்;
நாம் இது முன்னமே அறிவோம்; 76

'பருகு நீர் துறந்து, காற்றும் வெவ் வெயிலும்
பாதபங்களின் சினை உதிர்ந்த
சருகுமே ஒழிய, காய் கனி கிழங்கும்
தான் இனிது அருந்துதல் தவிர்ந்தான்;
உருகு மா மனத்தை நாம் உவந்து இருத்தற்கு
உறைபதி ஆக்கி, நம்மிடத்தே
செருகினான், உணர்வை; யாவரே, இவன்போல்
செய் தவம் சிறந்தவர்?' என்றான். 77

மூகாசுரனை வதைத்து, அருச்சுனனுக்கு அருள்புரிய, சிவனும் உமையும் வேடவடிவம் கொண்டு கணங்களுடன் வருதல்

போகமாய் விரிந்தும், போகியாய்ப் பரந்தும்,
புலன்களின்வழி மனம் செலுத்தா
யோகியாய் இருந்தும், யோகிகள் முதலா
உரைப்ப அரும் பல பொருளாயும்,
ஏகமாய் நின்றும், தத்துவ மறைக்கும்
எட்டுதற்கு அரிய தன் வடிவில்
பாகமாய் விளங்கும், பைந்தொடியுடனே
பரிவுடன் சில் மொழி பகர்வான்: 78

'கேட்டி நீ, செவ் வாய்க் கிளி நிகர் மொழியாய்!
கிரீடியைத் துணைவர்களுடனே
காட்டிலே ஒதுக்கி, இளைஞரும் தானும்
கடிய வஞ்சனையினுல் கவர்ந்த
நாட்டிலே வாழ்வோன் ஏவலால், மூக
நாம தானவன் இவன்தன்னைக்
கோட்டிலே கொலை செய் ஏனமாய் வந்து, இக்
குன்றிடை இன்று புக்கனனுல். 79

'மற்று அவன் விரைவினுடன் அமர் மலைந்து,
வாசவன் மதலையை வதைத்து,
நல் தவம் அகற்றும் முன்னமே விரைந்து,
நாம் உயிர் கவருதல் வேண்டும்;
கொற்றவன் மதலை கேட்டன வரங்கள்
கொடுத்தலும் வேண்டும்' என்று எழுந்தான்—
கல் தவர் வளைத்துத் திரிபுரம் எரித்தோன்,
கற்றவர் கருத்தினுல் காண்போன். 80

நனை மலர் சிதறித் தொழுது, முன் நின்ற
நந்திமேல் நயனம் வைத்தருளி,
'வினை படு கேழல் வேட்டை, நாம் இன்றே,
வேடராய் ஆடுதல் வேண்டும்;
நினைவு உற எமது கணத்தொடு, இக்கணத்தே,
நீயும் அவ் உருக் கொளுக' என்று,
மனைவியும் தானும் கிராதர்தம் குலத்து
மகிழ்நனும் வனிதையும் ஆனுர். 81

என்ற பொழுதினில், நந்தி முந்தி, முதல் கூற்று உதைத்த இரு தாள் போற்றி,
வென்றி புனை கண நாதர்க்கு உரைசெய்தான்; அவர்களும் அவ் வேடம் கொண்டார்;
கொன்றை கமழ் முடியோனும் வேணியினைப் பின்னல் படு குஞ்சி ஆக்கி,
துன்றும் மயில் பீலி நெடுங் கண்ணி திரு நெற்றி உறச் சுற்றினனே.

நீல மணித் திருக்கண்டம் நிலவு எழவே பலகறைப் பூண் நிறையக் கட்டி,
கோல மணிக் குழைகளினும் குழையாகப் பிணையல் மலர் கொண்டு சாத்தி,
சேலை எனப் புலி அதளும் திரு மருங்கில் உறச் சேர்த்தி, செய்ய பைம் பொன்
கால் இணையில் செருப்பு அணிந்து, செய்ய திருவடிவு மிகக் கரியன் ஆனன்.

இடக் கைம் மலர் வரி சிலையும், வலக் கைம் மலர்ப் பாணமும், வெந்நிடையே பாணம்
அடக்கிய வெங் கொடு வரித் தோல் ஆவ நாழிகையும், மிக அழகு கூர,
கடக் களிறு அன்று உரித்த பிரான், கண்டவர்கள் வெருவர முன் கொண்ட கோலம்
தொடக்கி, உரைசெய நினைக்கில், ஆயிரம் நா உடையோற்கும் சொல்லல்ஆமோ? 84

குறைந்த சந்திர கிரணமும், பீலியும், கொன்றை அம் திருத் தாரும்
புறம் தயங்கிட விழுந்த செந் தனிச் சடைப் பொலிவை யார் புகல்கிற்பார்?—
சிறந்த பைம் பொலங் கிரி முடி அடி உற, தேவர்கோன் திருச் செங் கை
நிறம் தரும் சிலை வளைவு அற, அழகு உற, நிமிர்ந்து நின்றது போலும்!

வரை அரசன் திரு மடந்தை வன முலைமேல் மணிக் குன்றி வடமும், செங் கை
நிரை வளையும், புலிப் பல்லால் நிறம் திகழ் மங்கலப் பூணும், நீல மேனி
விரை அகிலின் நறுஞ் சாந்தும், விரித்த தழைப் பூந் துகிலும், வேடமாதர்
நிரைநிரையே தனைச் சூழ நின்ற வடிவு அழகினுக்கு நிகர் வேறு உண்டோ? 86

கணங்களோடு இறைவன் வந்து, ஏனத்தின் சுவடு நோக்குதல்

ஓர் ஏனம் தனைத் தேட, ஒளித்தருளும் இரு பாதத்து ஒருவன், அந்தப்
போர் ஏனம்தனைத் தேடி, கணங்களுடன் புறப்பட்டான்; புனங்கள் எல்லாம்
சீர் ஏனல் விளை கிரிக்குத் தேவதை ஆம் குழவியையும் செங் கை ஏந்தி,
பார், ஏனை உலகு, அனைத்தும் பரிவுடனே ஈன்றாள் தன் பதி பின் வந்தாள்!

அனந்த வேதமும் இறைவன் ஏவலினால், ஞாளிகளாய் அருகு சூழ,
அனந்த கோடியின் கோடி கணநாதர் வேட்டுவராய் அருகு போத,
'அனந்தனால் இனித் தரிக்க அரிது அரிது, இப் பூதலம்!' என்று அமரர் கூற,
அனந்த மா முகம் ஆகி, அடிச் சுவடு நோக்கினன், அடவி எல்லாம்.

எதிர்ந்த பன்றிமேல் அருச்சுனனும் சிவபெருமானும் அம்பு எய்தல்

'மூக தானவன் இவன்மேல் முந்தி உயிர் கவரும்' எனும் சிந்தையான், அப்
பாகசாதனி தவம் செய் பாக்கிய பூமியை நோக்கி, பரிவினோடும்
ஏக சாபமும் வணக்கி, ஏகினன்; ஏகுதலும், இலங்கு வெண்ணீற்று
ஆகனால் நோக்கப்பட்டு, அணுகியதால், அருந் தவன்மேல் அந்த ஏனம். 89

அதிர்ந்து வரு கேழலைக் கண்டு, 'அருந் தவத்தை அழிக்கும்' என அஞ்சி, நாளும்
உதிர்ந்த சருகு உணவு ஒழிய உணவு இலான், விரைவினில் தன் ஒரு வில் வாங்கி,
முதிர்ந்த சினத்துடன் எய்தான், முகம் புதைய; அக் கணைக்கு முன்னே, அண்டம்
பிதிர்ந்திட, வில் நாண் எறிந்து, வேடன் அதன் அபராங்கம் பிளக்க எய்தான்.

வேடர்கள் அருச்சுனனோடு பூசலிட, அவன் சிவபெருமானோடு பேசுதல்

இருவரும் ஏவிய வாளி உடனே பட்டு, உடல் உருவி, ஏனம் வீழ,
வெருவருமாறு, அடவி எலாம் தடவி வரு வெஞ் சிலைக் கை வேடன் சேனை,
'ஒருவன் முதல் எய்திருக்க, அவ் இலக்கை நீ எய்தது உரனோ?' என்று'
பொரு அரு மா தவம் புரியும் புருகூதன் மதலையுடன் பூசலிட்டார்.

புராதனாகம, வேத, கீத, புராண ரூபம் ஒழித்து, வெங்
கிராதனாகிய வடிவுகொண்ட கிரீசனோடு உரைசெய்குவான்—
விராதன் ஆதி நிசாசரேசரை வென்று, முச்சிகரத்தின்மேல்
இராதவாறு, அடல் அமர் புரிந்த, இராமனே நிகர் ஏவினான்: 92

'முன்பு விட்ட என் வாளி கேழல் முகம் பிளந்து பின் உருவ, நீ
பின்பு விட்ட சரம் சிரத்திடை உருவுமாறு பிளந்ததால்;
வன்பொடு இப்படி புகலுகின்றது வன்மையோ? திறல் வின்மையோ?
என் பெயர்ப் பொறி ஏவு பார்; இதன் உடலில் நீ விடும் ஏவு பார்.

'எனக்கு அருந் தவம் முயறலால், உதிர் சருகு அலால் உணவு இல்லையால்;
உனக்கும், உன் படை வேடருக்கும், நல் உண்டி ஆம்; இது கொண்டு போ;
வனக் குறும் பொறை நாட! உன் படை வலிமை கொண்டு, வழக்கு அறச்
சினக்கில், வெங் கணை விடுவன் யான், உயர் திசைதொறும் தலை சிந்தவே.'

'தவம் புரியும் நீ பன்றியைக் கொன்றது தகுமோ?' என வேடன் உரைத்து,
அருச்சுனனது தவ நோக்கத்தை வினவுதல்

என்ற மொழி செவிப் படலும், எயினர்க்கு எல்லாம்
இறைவன் ஆகிய எயினன் இவனை நோக்கி,
'பன்றி பெரு மோகரத்தோடு இன்று உன் ஆவி
பருகியிடும் என மிகவும் பயப்பட்டாயோ?
நின்று பெருந் தவ முயல்வோர் தாங்கள் கொண்ட
நினைவு ஒழியப் புறத்து ஒன்று நினைவரோ, சொல்,
பொன்றிடினும், நீ அறிய? பசுத்தோல் போர்த்துப்
புலிப் பாய்ச்சல் பாய்வரோ?—புரிவிலாதாய்! 95

'மறையவனோ? ஒரு குடைக்கீழ் வையம் காக்கும்
மன்னவனோ? வைசியனோ? வடிவம் மாறிப்
பொறையுடனே தவம் புரியும் அவுணர் மாக்கள்,
புத்தேளிர், நிருதரில், ஓர் புறத்து உளானோ?
நிறையுடன் மெய்ப் பிறை போல வடிவம் தேய்ந்து,
நெருப்பிடை நீ நிற்கின்றாய், நெடு நாள் உண்டு;
குறை உனக்கு யாது? உரை!' என்றான். என்ற போது, அக்
குருகுல நாதனும், தன்னைக் கூறினானே. 96

அருச்சுனன் என்று அறிந்த வேடன், பழம் பகை கூறி, அவனைப் போருக்கு அழைத்தல்

கூறிய சொல் கொண்டு அறிந்து, வேடன், மீண்டும்,
'குருகுலத்தோர் ஐவருளும் குனி வில் கற்று,
சீறி வரு துருபதனைத் தேரில் கட்டி,
சென்று, குருதக்கிணை செய் சிறுவன் நீயோ?
வீறிய எம் குலத்தில் ஒரு வேடன்தன்னை
வின்மை பொறாது அவன் தடக் கை விரலும் கொண்டாய்!
பேறு அற, அன்று, ஒரு முனிவன் வார்த்தை கேட்டு,
பிளந்தனை பல் வேடுவரை, பிறை வாய் அம்பால். 97

'கன்றிவரு கனல்-கடவுள் கையில் தேரும்,
காண்டீவக் கார்முகமும், கணையும், வாங்கி,
ஒன்றுபடக் காண்டவக் கான் எரித்த நாளில்,
''ஓர் உயிர்போல் பல யோனி உயிரும் மாட்டி,
குன்றுதொறும் குன்றுதொறும் இருந்த வேடக்
குழாம் அனைத்தும் நீறுபடக் கொன்றாய்'' என்பர்;
இன்றும் எனை முகம் நோக்கி, வன்மை, வின்மை,
இரண்டுக்கும் மன்னவ! நீ இகழ்ந்திட்டாயே! 98

'மல்லுக்கும், புய வலிக்கும், கலக்குறாத
மன வலிக்கும் மறையுடன் போர் வாளி ஏவும்
வில்லுக்கும், உனின் மிகுத்தார் மண்மேல் உண்டோ?
விசயன் எனும் பெயர்க்கு உரிய விசயத்தாலே,
சொல்லுக்கு விடேன்; இன்று, நீயும் நானும்,
தோள் வலியும் சிலை வலியும் காண்டல் வேண்டும்;
கல்லுக்கு நிகர் மனத்தாய்!' என்றான்; அந்தக்
காளையும் வில் வளைத்து, ஒரு வெங் கணை மேல் விட்டான். 99

இருவரும் போரிடுதல்

விட்ட கொடுங் கணையை, ஒரு கணையால் வேடன்
விலக்கி, வரி சிலைக்கு உரிய விசயன்தன்மேல்
தொட்டனன், ஓர் இரண்டு கணை; அவை போய் மார்பும்,
தோளும், உடன் துளைத்தனவால்; துளைத்த போது,
கட்டு அழலின் இடை நின்ற காளை மீளக்
கடுங் கணைகள் ஒரு மூன்று கடிதின் வாங்கி,
வட்ட நெடும் பீலி அணி முடியும், மார்பும்,
வாகுவுமே, இலக்காக வலியொடு எய்தான். 100

எய்த கணை திருமேனி எய்தும் முன்னர்,
இறகு துணிந்து, ஒன்று இரண்டாய், இலக்கு உறுமல்,
வெய்தின் வலியுடன் எய்தான், மூன்று வாளி;
விண்ணவர்கோன் மகன், மேலும், வேறொன்று எய்தான்;
'ஐதின் இவன் விநோதம் உறத் தொடுத்தான்!' என்பது
அறியாமல் எயினன் முடி அணிந்த பீலி
கொய்து, நதி அறல் சிதற, பிறையும் மானும்
குலைய, ஒரு கணை, குரக்குக் கொடியோன் எய்தான். 101

அல் போலச் சூழ்கின்ற கிராதர் எல்லாம்
அவன் முடிமேல் இவன் எய்தது அறிந்து, தீயின்
நிற்போன்மேல் எழுதலும், அங்கு அவரை எல்லாம்,
'நில்லும்' எனக் கை அமைத்து, 'நீ இன்று எய்த,
விற்போர் கண்டனம்; அடடா! வில் பிடிக்கும்
விரகு அறியோம்! உன்னிடத்தே வேத விற்போர்
கற்போம்!' என்று, ஒரு கணை மற்று அவன்மேல் விட்டான்,
கனக மலைச் சிலை வளைத்த கையினனே. 102

பீலி முடியோன் விடு பிறைக் கணையை வேறு ஒரு பிறைக் கணையினால் விலகி, வில்
கோலி, வடி வாளி மழை சிந்தினன், மழைக் கரிய கொண்டல் என நின்ற குமரன்;
மூலி வடிவாம் எயினன்மேல் அவை படாமல், முனை மண்மிசை குளிக்க, முரண் ஆர்
வேலி இடுமாறு என, விழுந்தன; விழுந்ததனை விசயன், நனி கண்டு, வெகுளா,

வேணிமுடிவேடன்மிசை வேறும் ஒரு சாயகம் விடுத்தனன்; விடுத்த கணை, வில்
நாணி அற, முன்பினொடு பின்பு தொடுகின்ற கணை நடுவண் அற, வெட்டுதலுமே;
கோணிய இளம்பிறை முடித்தவன் வெகுண்டு, பல கோல்கள் விட, இந்திரகுமரன்
பாணியுடனே தொடை நடுங்கி, அயல் நின்றது ஒரு பாதவ மருங்கு அணுகினான்.

கொண்ட தவமே தனம் எனப் புரியும் வில்லி, மெய் குலைந்து, அயருகின்ற நிலையைக்
கண்டு, அருகு நின்ற இமவான் மகள் உரைக்க, மிகு கருணையொடு இரங்கி, அவனை,
பண்டு தவமே புரி இளைப்பு அற, மனத்தின் மிகு பரிவுடையன் ஆகி, வெகுளா,
எண் திசையும் வென்று,அனல் அளித்த சிலை நாணி அற,எயினர் பதி எய்தனன்அரோ!

விசயனது வில்லால் வேடன் அடியுண்ண, எல்லாப் பொருள்களும்
அந்த அடியை ஏற்றல்

உழுந்து உருளும் எல்லைதனில் வில்லின் நெடு நாண் அற, உரத்தொடு எதிர் ஓடி, வரி [வில்
கழுந்து கொடு மா முடியின் மோதுமுன், இழந்தது உயர் கண்ணி படு பீலி; மதியின்
கொழுந்து அமுது சோர, விட நாகர் சுடிகைத் தலை குலைந்து மணி சிந்த, நதியாள்
எழுந்து தடுமாறி அகல் வானில் உற, வேடனும் இளைத்து, அவசம் உற்றனன்அரோ.

விண்ணில் உறை வானவரில் யார் அடி படாதவர், விரிஞ்சன் முதலோர்? உததி சூழ்
மண்ணில் உறை மானவரில் யார் அடி படாதவர், மனுக்கள் முதலோர்கள்? அதலக்
கண்ணில் உறை நாகர்களில் யார் அடி படாதவர்கள், கட்செவி மகிபன் முதலோர்?
எண் இல் பல யோனியிலும் யா அடி படாதன, இருந்துழி இருந்துழி அரோ?

வேதம் அடியுண்டன, விரிந்த பல ஆகமவிதங்கள் அடியுண்டன; ஓர் ஐம்
பூதம் அடியுண்டன; விநாழிகை முதல் புகல் செய் பொழுதொடு, சலிப்பு இல் [பொருளின்
பேதம் அடியுண்டன;—பிறப்பு இலி, இறப்பு இலி, பிறங்கல் அரசன்தன் மகளார்
நாதன், அமலன், சமர வேட வடிவம் கொடு நரன் கை அடியுண்ட பொழுதே.

விசயனுக்கும் சிவ வேடனுக்கும் மற்போர் நிகழ்தல்

என்பொடு, கொழுந் தசை, நிணம், குருதி, என்னும் அவை ஈர்-இரண்டானும் [வயிரா,
வன்பொடு வளர்ந்த மிருகாதிபதி காரி எனும் வடிவழகு பெற்ற மறவோன்,
அன்பினொடு பேர் அறம் வளர்த்தருள் எயிற்றி மிக அஞ்ச, அபிராம எயினன்
பொன்புரையும் மேனியில் அடித்தமை பொருது, மற் போர் புரியுமாறு கருதா,

உள் அடி, விரல்-தலைகள், புற அடி, பரட்டினுடன், உயர் கணைக்கால், முழந்தாள்,
தள்ள அரிய ஊரு, உயர் தாள் வரைகள் ஒத்த கடிதடம், உதரம், மார்பு, திணி தோள்,
துள்ளி வரு செங் கையொடு, முன்கை, பிடர், நெற்றியொடு, சூடம், என எண்ணு [படையால்,
வள்ளல், எனை ஆளுடைய மாதவனும், மா தவனும் மல் அமர் தொடங்கியுறவே,

வேடன் விசயனை விண்ணில் வீச, அவன் மீண்டு வந்து போர் புரிய எண்ணுதல்

மல் அமர் தொடங்கி, இவர் இருவரும் வெகுண்டு பொர, மாதிரமும் மாநிலமும், மேல்
எல்லையும்,அதிர்ந்து, சுழல்கின்றபொழுதத்து,இமைய இன்ப மயில் கேள்வன்வெகுளா,
நல் இசை புனைந்த மணி நூபுர விசால ஒளி நண்ணு பத நாள்மலரினால்,
வில்லியரில் எண்ணு திறல் வில்லுடைய காளைதனை விண்ணில் உற வீசினன்அரோ.

விண்ணவர்தம் ஊர் புகுத, விண்ணவர் பிரான் மதலை விசையுடன் எழுந்து, முகில்
[போல்
மண்ணினிடை வீழ்தரும் முன், மார்பு அகலம் அல்லதை வயங்கு புறம் என்று
[தெரியான்,—
எண் அரிய ஞான ஒளி ஆகி, வெளி ஆகி, வரும் எயினர் பதி ஆன கருணைப்
புண்ணியன் மகிழ்ந்து உருக,—நின்று, ஒலியுடன் பழைய பூசல் பொர எண்ணி
[எதிர்வான். 112

அப்பொழுது கணநாதர் முதலியோர் சூழ, சிவபெருமான் காட்சி தருதல்

வெய்ய கண நாதர், கண தேவர், விபுதாதியர், விரிஞ்சி, சிவயோகியர், அருஞ்
செய்ய சுடரோன், அளகைஆதிபதி, கின்னரர்கள், சித்தர், பல சாரணர், மணிப்
பை அரவின் ஆடி, புருகூதன், இவர் சூழ்தர, ஓர் பச்சை மயில் பாதியுடனே
துய்ய விடைமீது ஒரு செழுஞ்சுடர் எழுந்தது; தொழும்தகையது ஆகும் அளவோ!

கை விலுடனே எயினர் கோடி பலர் சூழ வர, கன்னி மயில் பின்னர் வரவே,
தெய்வ மறை ஞாளிகள் தொடர்ந்து வர, வந்து பொரு செய்ய சிவவேடன் முடிமேல்,
சைவ முறையே இறைவர் தண் மலரினோடு அறுகு சாத்தி, ஒளிர் நாள்மலர் எலாம்
மெய் வடிவு கொண்டனைய கரிய தவ வேடன், இணை விழி மலர் பரப்பி, மகிழா,

தும்பை வகை மாலை, செறி வில்லமொடு, கொன்றை மலர், சூதம், அறுகே, கமழ்தரும்
செம் பவள வேணிமிசை திங்கள், நதி, சூடியருள், செம் பொன் வட மேரு அனையான்,
உம்பர் மணி யாழினொடு, தும்புருவும் நாரதனும், உருகி இசை பாட, அருள் கூர்
அம்பையுடனே விடையின்மீது ஒளிர நின்றதனை, அஞ்சலி செய்து, அன்பொடு தொழா,

அருச்சுனன் சிவனது திருக்கோலம் கண்டு, ஆடிப் பாடிப் பரவுதல்

ஆடினன், களித்தனன், அயர்ந்து நின்றனன்;
ஓடினன், குதித்தனன், உருகி மாழ்கினன்;
பாடினன், பதைத்தனன்; பவள மேனியை
நாடினன், நடுங்கினன்;—நயந்த சிந்தையான். 116

'விழுந்து, அரு வினையினின் மெலிந்து, நாயினும்
அழுந்திய பிறவியின், அயருவேன் முனம்,
செழுஞ் சுடர் மணிப் பணித் திங்கள் மௌலியாய்!
எழுந்தருளிய இஃது என்ன மாயமோ? 117

'ஆதியே! அண்டமும் அனைத்துமாய் ஒளிர்
சோதியே! கொன்றைஅம் தொங்கல் மௌலியாய்!
வாதியே! மரகத வல்லியாள் ஒரு
பாதியே! பவளமாம் பரம ரூபியே! 118

'பை அரா அணி மணிப் பவள மேனியாய்!
செய்ய வாய் மரகதச் செல்வி பாகனே!
ஐயனே! சேவடி அடைந்தவர்க்கு எலாம்
மெய்யனே! எங்குமாய் விளங்கும் சோதியே! 119

'முக்கணும், நிலவு எழ முகிழ்த்த மூரலும்,
சக்கர வதனமும், தயங்கு வேணியும்,
மைக் கயல் மரகத வல்லி வாழ்வுறு
செக்கர் மெய் வடிவமும், சிறந்து வாழியே! 120

'அன்பு உறு தருமனுக்கு அநுசன் ஆயினேன்!
நன் பரம்பொருளுக்கு நண்பும் ஆயினேன்!
பொன் புரை மேனியாய்! போற்றினேன் உனை;
என் பெருந் தவப் பயன் யார் பெற்றார்களே!' 121

சிவபெருமான் அருச்சுனனைத் தழுவி, அருள் மொழி கூறித் தேற்றுதல்

என்று கொண்டு, இம் முறை இவன் இயம்பவே,
மன்றல் அம் கொன்றை அம் மாலை மௌலியான்,
ஒன்றிய தவம் புரி உம்பர்தம்பிரான்-
தன் திரு மதலையைத் தழுவினான்அரோ. 122

தழுவினன் பெருந் துயர் அகற்றி, தண்ணளி
பொழிதரு கண்ணினன், புரக்கும் சிந்தையன்,
அழிவு அற, ஒழிவு அற, அமர்ந்த சோதியன்,
பழுது அறு மொழி சில பகர்ந்து, தேற்றினான்: 123

'சூதினில் யாவையும் தோற்று, கானிடை
ஏதிலர் போல நீர் இளைத்து, வாடினீர்!
வாது செய் புலன்களை அடக்கி, மண்ணின்மேல்
நீ தவம் புரிந்தமை நினையல் ஆகுமோ? 124

'மூகன் என்று உரைக்கும் அம் மூக தானவன்,
வேகமோடு, ஏனமாய், விரைவில் வந்தனன்—
நாக வெங் கொடியவன் நவின்ற வாய்மையால்,
யோகு செய் உனது உயிர் உண்ண எண்ணியே. 125

'வந்து, அவன் முந்தும் முன், மங்கைதன்னுடன்
இந்த வெற்பு உறைதரும் எயின வேடமாய்,
சுந்தர மரகதச் சோதி வீரனே!
அந்த வல் அசுரனை அம்பின் வீழ்த்தினேன். 126

'நின்னுடன் அமர் செய்து, நின் வில் நாண் அறுத்து,
அந் நெடு வில்லினால் அடியும் உண்டனன்;
உன் அரு மல்லினால் உதையும் உண்டனன்;
என், இனி உன் கருத்து?' என்று கூறினான். 127

அருச்சுனன் பாசுபதம் வேண்ட, சிவபெருமான் அளித்து, கயிலைக்கு மீளுதல்

அந்த வில் விசயனும், அவன் பதம் பணிந்து,
'எந்தை! பாரத அமர்க்கு இசைந்த வீரர் மெய்
சிந்த, நின் பேர் பெறு தெய்வ வாளியைத்
தந்தருள்' என்றனன்—தவத்தின்மேல் நின்றான். 128

ஐயனும், அம்மையோடு அருள் புரிந்து, பின்,
வெய்ய பொன் தூணியும், வில்லும், மந்த்ரமும்,
துய்ய பாசுபத மெய்த் தொடையும், முட்டியும்,
ஒய்யென நிலையுடன் உதவினான்அரோ. 129

பெற்றனன் விசயனும்; பேயும், பூதமும்,
சுற்றிய கணங்களும், சுருதி ஓசையும்,
வெற்றி கொள் பெற்றமும் விழைந்து சூழவே,
கற்றை அம் சடையவன் கயிலை ஏகினான். 130

பின்னர், இந்திரன் வந்து, விசயனைத் தழுவி வானுலகிற்கு அழைத்துச் செல்லுதல்

ஏகிய பின்னர், ஆயிரம் கண் நாதனும்,
மோகர துந்துபி முழங்க, தேரின்மேல்
நாகரும் முனிவரும் நண்ணி வாழ்த்தவே,
வாகை கொள் விசயனை, வந்து, புல்லியே, 131

'நீ புரி தவப் பயன் நீடு வாழியே!
சாபமும், தூணியும், சரமும், வாழியே!
தீப மெய் ஒளியுடன் சேர்ந்து, போர் செயும்
மா பெரு நீல மெய் வாழி, வாழியே!' 132

என்று கொண்டு, இணை அடி இறைஞ்சும் மைந்தனை,
தன் திருத் தேரின்மேல், தாழ்ந்த கைகளால்,
ஒன்றிய உவகையோடு ஏற்றி, உம்பர் கோன்
சென்றனன், தன் பெருந் தெய்வ வானமே. 133

ஒரு பெரு மாதலி ஊரும் தேரின்மேல்,
இரு மரகத கிரி இருந்த என்னவே,
மரு வரு கற்பக மாலை மௌலியும்,
விரி புகழ் மைந்தனும், விளங்கினார்அரோ. 134

ஆயிரம் பொலங் கிரி அழித்து, வானின்மேல்.
மா இரும் ஒரு புரம் வகுத்தது என்னவே,
பாயிர மறை புகழ் பரமன் தேசு என,
சேய் இரும் பொன் நகர் திகழ்ந்து தோன்றுமால். 135

விண்ணவர் முனிவர் உள் விளங்கி வாழ்தலால்,
நண்ணிய முடிப்பெயர் நாகம் பூணலால்,
எண்ண அரு மகபதி இருந்த மா நகர்,
புண்ணியன் வடிவு எனப் பொலிந்து இலங்குமால். 136

மாவலி சிறைப்பட வைத்த தாள்மலர்
தாவிய விண்ணிடைத் தயங்கு பொன் நகர்,
தேவரும் தொழு கழல் தேவன் உந்திஅம்
பூ இருந்தது என, பொலிந்து தோன்றுமால். 137

தேவ மண்டபத்தில் இந்திரன் விசயனோடு ஓர் ஆசனத்தில் இருத்தல்

பொலிவுறும் அந் நகர் புகுந்து, தாதையும்,
சிலை கணை பெறு திறல் தெய்வ மைந்தனும்,
மெலிவுறு மின் இடை நுடங்க, மீனினும்
பலர் அர மாதரார் பரிவு கூரவே, 138

பரு மணி வெயில் எழ, பணில மா நிரை
தரும் மணி நிலவு எழ, தமனியப் பெருங்
குரு மணிச் சிலம்பு ஒலி கூரும் மண்டபத்து,
ஒரு மணி ஆசனத்து ஓங்கி வைகினர். 139

இந்திராணி வர, அவளை விசயன் வணங்குதலும், அவள் அவனை வாழ்த்திச் செல்லுதலும்

முருகு அவிழ் பரிமளம் மொய்த்த தண் துழாய்
மரகத கிரி திரு மைத்துனன்தனை,
பெருமித அபிமனைப் பெற்ற காளையை,
அருள் பெறும் உவகையோடு, அன்னை எய்தினள். 140

அன்னையை, மின் இடை அரிய பாவையை,
கன்னலை அமுதொடு கலந்த சொல்லியை,
உன்ன அருந் தவப் பயன் உற்ற மைந்தனும்,
சென்னியை அவள் பதம் சேர்த்து நின்றனன். 141

நின்ற அக் குமரனைத் தழுவி, நேயமோடு
ஒன்றிய உவகையள், உரை வழுத்தினள்—
'வென்றி கொள் ஐய! நீ விபுதர்தம் பிரான்-
தன் திருச் செல்வமும் தாங்குவாய்' என, 142

ஆயிரம் பதின் மடங்கு ஆக, அன்னையும்,
மா இரும் புதல்வனை வாழ்த்தி, வாழ்த்தியே,
தூய செம் பரு மணி சுடரும் மாளிகை
ஏயினள், இந்திரன் இதயம் போன்று உளாள். 143

துந்துபி முதலியன முழங்க, இந்திரனுடன் விசயன் வீற்றிருந்த சிறப்பு

அந்தர துந்துபி அதிரும் பேர் ஒலி,
முந்திய மறை ஒலி, முழங்கும் சங்கு ஒலி,
சிந்துர மத கரி சீறும் நீடு ஒலி,
சுந்தர முகில் ஒலி தூங்க, தூங்குமால். 144

பத்தி கொள் நவ மணி பயின்று, செந் துகிர்க்
கொத்து ஒளிர் தளிருடன் குலவு கற்பகம்,
சித்திர விசய வில் விசயன் சென்னிமேல்
வைத்தது, முருகு அவிழ் வாச மாலையே. 145

கிளர் இசைத் தும்புரு, கிளரும் கற்பகத்
தளை அவிழ் நாள் மலர் சாத்தும் நாரதன்,—
அளி பயில் அமுதம் உண்டு, அகம் மகிழ்ந்து, உளக்
களியொடு,—கின்னரர், கானம் பாடவே. 146

செம்மணி வெயில் விரி சிலம்பு கொஞ்சவே,
கைம் மணி வரி வளை கலந்து பொங்கவே,
பெய்ம் மணி மேகலை பிறங்கி ஆர்க்கவே,
துய்ம் மணி ஒளி அரமாதர் சூழவே. 147

இவ்வாறு இவர் இருவோர்களும், இணை மாமுகில் எனவே,
செவ் வாள் அரி கிளர்கின்றது ஓர் செம் பொன் தவிசிடையே,
மைவ் வானகம் முழுதும் செழு மறை ஓசை விளைக்கும்
அவ் வானவர் புடை சூழ்தர, அழகு எய்தி இருந்தார். 148

ஊர்வசி நடனம் ஆட, விசயன் கண்டு களித்துப் புகழ்தல்

இருந்தார் இவர், குளிர் சாமரை இரு பாலும் இரட்ட,
பெருந் தாரகை மதி ஒத்து ஒளி பெறுகின்ற குடைக் கீழ்;
முருந்து ஆர் நகை அரமாதரின் முதன்மைப் பெயர் புனையும்
செருந்து ஆர் குழலுடையாள், அரி திரு ஊருவின் வந்தாள். 149

மானே தரு விழியாள், திரு மாதே நிகர் எழிலாள்,
தேனே திகழ் மொழியாள், பொரு சிலையே தரு நுதலாள்,
தானே தனை நிகர்வாள், பெயர்தரு நாடகம் எல்லாம்
கானே செறி தொடையார் இரு கண் கண்டு களித்தார். 150

'இந் நாடக விதம் யாவையும் யாரே தனி புரிவார்,
மின் ஆர் இடை, மின் நேர் இழை, மென் கொம்பை அலாதார்?'
என்னு, விழி களியா, மனம் உருகா, இசை எழுதும்
பொன்னுடு உடையவன் மைந்தன் வியப்போடு புகழ்ந்தான். 151

இந்திரன் வானோர் முதலிய யாவர்க்கும் விடை கொடுத்து அனுப்புதல்

திகழ்கின்றன உரை தந்தை செவிப் போது உற, மகிழா,
'இகல் கொண்டு உயர் தோளாய்! புதிது, இந் நாடகம்!' என்னு,
மகவான் பெருமித வாழ்வு உரை வானோர் முதல் யாரும்
மிகு குங்கும முலையாருடன் விடை கொண்டிட, விட்டான். 152

இந்திரனும் விசயனும் அமுது உண்டு, இனிது இருத்தல்

மகனும், புகழ் புனை தந்தையும், மந்தாகினி ஆடி,
சிகரம் பயில் வரைபோல் உயர் திரு மண்டபமிசையே,
அகில் துன்றிய குழலார் பலர் அர மாதர் அளிக்கும்
நிகரம் பயில் அமுது உண்டவர், நிறைவு எய்தி இருந்தார். 153

இந்திரன் ஆணைப்படி விசயன் தனி மாளிகையில சென்று தங்க,
சூரியன் மறைதலும சந்திரன் தோன்றுதலும்

தருக்கும் களி அமுது உண்டு, அவர் தனி வாழ்வுறும் எல்லை,
சுருக்கும் கண மணி நீள் வெயில் சுடர் மாளிகை வேறு ஒன்று
இருக்கும்படி, விசயன் பெற ஈந்தான் விடை; அது கண்டு,
அருக்கன் குட கடல் மாளிகை அணி தேரொடு அடைந்தான். 154

மேலைத் திசை காலைச் சுடர் வீழ்தந்திடும் முன்னம்,
மாலைச் சுடர் காலைத் திசை வாழ்வு உற்றிட வந்தான்—
சோலைத் தரு அருள் வாரிதி சூழ் வான் முகடு ஏறி,
பாலைப் பொழிவதுபோல், நிலவு ஒளி கொண்டு பரப்பா, 155

உருப்பசி அருச்சுனனிடத்திற்கு வர, அவன் பாதங்களை வணங்கி,
வந்த காரியத்தை வினவுதல்

அந்தச் சிலை மகவான் மகன் அம்மாளிகையிடையே,
முந்து உற்றது ஓர் தவிசில், கரு முகில் போல இருந்தான்;
கந்தர்ப்பன் வெகுண்டு ஏவிய கணை பட்டு, உளம் உருகா,
நொந்துற்று, முன் நடனம் புரி நுண் நேரிழை அங்கண், 156

அக் கங்குலினிடையே, மலர் அரிசந்தன வாசம்,
மைக் கங்குல் நிகர்க்கும் செறி மலர் நீலம், அணிந்தாள்,
உய்க்கும் பரு மணி நீலித உடை ஆடை உடுத்தாள்,
மெய்க்கும் தவ வய வாளி கொள் விசயன்னுழை வந்தாள். 157

ஓர் ஆயிரம் அகல் வான்மணி ஒக்கும் தவிசிடையே,
ஈர் ஆயிரம் தீபங்கள் எறிக்கும் சுடர் எழவே,
வார் ஆயிர முகமா நுகர் மஞ்சு ஊர்தரு நயனப்
பேர் ஆயிரம் உடையான் மகன் எதிர் கொண்டு, இவை பேசும்: 158

'எந்தைப் பெயர் புனை ஆயு எனும் பேர் முடி இறைவன்
தந்தைக்கு உயிர் நிகர் ஆகிய தளவத் திரு நகையாய்!
கொந்து உற்று எழு குழலாய்! குழல் நிகர் ஆகிய மொழியாய்!
வந்து உற்றது என்?' என, அன்னை மலர்த் தாள்களில் வீழ்ந்தான்.

உருப்பசி சினமொழி புகன்று, விசயனைப் பேடியாகச் சபித்துச் செல்லுதல்

இவ்வாறு இவன் அவள் தாள்கள் இறைஞ்சி, புறம் நின்றான்;
மெய் வாய்மையின் உயரும் தவ விபுதாதிபர் மகளும்,
செவ் வாய் இதழ் மடியா, விழி சிவவா, மதி கருகா,
வெவ் வாள் அரவு உமிழும் கடு விடம் நேர் மொழி பகர்வாள்: 160

'இந்தத் தனி இரவின்கண் நின் இரு தோள் தழுவுறவே,
வந்துற்ற எனைத் தாயர்தம் வகையில் புகல் செய்யா,
நிந்தித்தனை; நீ செய் தவ நெறியின் பயன் எல்லாம்
வெந்துற்று, அரு நீறாய் எழ, விடுவேன்' என வெகுளா, 161

'நின் போல் மரபு உடையார் இரு நில மன்னரில் உண்டோ?
அன்போடு அழல் வரு பாவையை அடைவு உன்னி அளித்தாய்;
பொன்போல் இரவிடை ஆடவர் புகலா மொழி புகல்வாய்;
வன்போ? அருள் நலமோ? பெருமிதமோ? வளர் புகழோ?' 162

என, மன்னனை, 'நீ பேடியர் இயல்பு ஆக!' என விதியா,
நனை மென் குழல் மலர் மங்கையும் நாணும் நலம் உடையாள்,
தனி கங்குலினிடை சென்று உயர் தன் கோயில் புகுந்தாள்;
அனலன் தரு சிலை வீரனும், அஃது எய்தினன், அந்தோ! 163

சாபத்தால் பேடியான விசயன், உளம் நொந்து, ஆடையால் மூடித் துயிலுதல்

ஆடித் திருமுக மன்னவன் அநுசன் தரு விசயன்,—
'பேடிப் பெயர் நாமோ பெறுவோம்!' என்று எழில் வடிவம்
வாடி, பெரிது உளம் நொந்து, அணி மாசு அற்றது ஓர் தூசால்,
மூடித் துயில் கொண்டான்—மணி முடி மன்னவர் திலகன். 164

காலையில் இந்திரன் முப்பத்து மூவர் சூழச் சபா மண்டபத்தை அடைதல்

அக் காலையில், விசயன்தனது இடர் ஆர் இருள் அகல,
செக் காவியும் அரவிந்தமும் வரி வண்டொடு திகழ,
மைக் கார் இருள் வெள்ளம் பில வள்ளத்திடை வடிய,
தொக்கான், உயர் குண திக்கினில்—அகிலம் தொழு சூரன். 165

கதிர் உதித்த அக் காலையில், மா மறை
முதல்வர் முப்பத்து மூவரும் சூழ்வர,
புதல்வன் உற்றது உணரான், புரந்தரன்,
வித மணிப் பணி மண்டபம் மேவினான். 166

விசயனை அழைத்துவர இந்திரன் ஒரு கந்தருவனை ஏவ, அவன் விசயன்பால் உற்று, நிகழ்ந்தது தெரிந்து வந்து கூறுதல்

கண் பரப்பி, ஓர் கந்தருவன்தனை,
விண் புரக்கும் அவ் வேந்தன் இருந்தபின்,
'மண் புரக்கும் வரி சிலை வீரனை
எண் பெறக் கொணர்வாய்!' என ஏவினான். 167

மற்று அவன் திருத் தாள் மலர் போற்றி, அக்
கொற்றவன் திரு முன்னர்க் குறுகி, ஆங்கு
உற்ற யாவும் உணர்ந்தனன்; மீண்டு போய்ச்
சொற்றனன், சுரர் கோ முன் தொழுதுஅரோ. 168

தேவர் சூழ இந்திரன் விசயனை அணுகி, 'சாபம் தணியும்' என்று தேற்றுதல்

சொன்ன வாசகம் கேட்ட சுரபதி
கன்னம் வெந்து, கண் ஆயிரமும் புனல்
துன்ன, வானவர் சூழ்வர, தானும் போய்,
அந் நராதிபன்தன்னை அணுகினன். 169

அணுகி மைந்தனை அன்பொடு உறத் தழீஇ,
'கணிகை இட்ட கடுங் கொடுஞ் சாபம் நீ
தணிதி! அஞ்சல்!' என்றான்—ஒரு தையலால்
பிணி உழந்து, முன் பேர் பெறும் பெற்றியான். 170

இந்திரன் தேவருடன் உருப்பசியின் இடத்திற்குச் செல்ல,
அவள் அஞ்சி வணங்குதல்

அன்ன மென் நடை ஆயிழைதன்னுழைத்
துன்னினன், சுரரோடும் சுரேசன் போய்;
மின்னின் நுண் இடையாளும் வெருவுறா,
மன்னவன் பதம் வந்து, வணங்கினாள். 171

தேவர்கள் விசயனுக்குச் சாபவிடை அருளுமாறு அவளைத் துதித்து வேண்டுதல்

வணங்கும் முன்னம், மட நடை ஓதிமக்
கணம்கொல் என்னக் கவின் பெறு கோதையை,
சுணங்கு அறா முலைத் தோகையை, வார் குழல்
அணங்கை, அண்டர் அனைவரும் போற்றியே, 172

'அன்னை நீ அவற்கு ஆயினும், ஆசையின்
இன்னல் தீர்ப்பது எவர்க்கும் இயல்புஅரோ;
மன்னன் ஆயினும், வான் பிழை செய்தனன்'
என்ன, நாகர் அவட்கு இதம் கூறியே, 173

'காமம் மிக்க உன் கட்டுரைச் சாப நோய்
பூமி பொய்ப்பினும், பொய்ப்பது அன்றால்அரோ!
வேய் மலர்த் தொடையான் நெஞ்சில் வேண்டும் நாள்
ஆம், அவற்கு இவ் உரு; அருள் செய்தி நீ.' 174

தேவர் உரைப்படி விசயன் வேண்டும் காலத்துப் பேடி உரு எய்துமாறு அவள்
சாப நீக்கம் அருளுதலும், விசயன் முன்னை வடிவு பெறுதலும்

என்று வானவர் யாவரும் ஏத்தவே,
அன்று அவற்கு அவ் வரம் கொடுத்தாள், அவள்;
வென்றி வார் சிலை மீளியும், தன் பெருந்
துன்று கோலம் சிறந்திடத் தோன்றினன். 175

# 13. நிவாத கவசர் காலகேயர் வதைச் சருக்கம்

சுதன்மையில் சிங்காதனத்தில் விசயனுடன் இந்திரன் வீற்றிருந்த போது, தேவர்களுக்கு அவனது சிறப்பைத் தெரிவித்தல்

அவ் வரம் தனக்கு நல்கும் அன்னை தாள் வணங்கும் வென்றிக்
கை வரு சிலையினானைக் கடவுளர்க்கு இறைவன் கொண்டு,
மொய் வரு சுரர்கள் சூழ, முதன்மை சேர் சுதன்மை எய்தி,
வெவ் அரி முகத்த பீடம் விளங்க, வீற்றிருந்த காலை, 1

'தூண் தகு தோளின் மொய்ம்பால் நம் வலி தொலைத்து, மேல்மேல்
மூண்டு எழும் அவுணர் தம்மை இவன் அன்றி முடிப்பார் யார்?' என்று
ஆண் தகை அமரர்க்கு எல்லாம் அவன் செயல் அடைவே சொல்லி,
'காண்டவம் எரித்த வீரன் இவன்!' எனக் காட்டினானே. 2

தேவர்களும் இந்திரனும் விசயனுக்குச் சிறப்புச் செய்தல்

அவ் உரை கேட்ட தேவர் அகம் மகிழ்ந்து, அவனுக்கு அன்பால்
திவ்விய மறையின் மிக்க தெக்கிணை பலவும் செய்தார்;
செவ்விய தாதைதானும் சேண் நதித் தூ நீர் ஆட்டி,
விவ் விரவாத வாசத் தாமமும் விழைந்து சூட்டி, 3

ஆயிரம் கதிரும், திங்கள் அனந்தமும், அடங்க, மேல்மேல்
காய் கதிர் விரிவது, யார்க்கும் கருத்து உறக் காண ஒண்ணாச்
சேயொளி தவழ்வது ஆகி, திசைமுகன் தனக்கு நல்கும்
மா இருங் கிரண ரத்ந மவுலியும் கவித்தான், அன்றே. 4

ஆடையும், கலனும், தெவ்வை அடும் திறல் படையும் நல்கி,
ஏடு அவிழ் அலங்கலான் ஓர் ஆசனத்து இருத்தி, என்றும்
தேடுதற்கு அரிய தூய அமுது, செம் பொற் கலத்தில்,
கூட உண்டு, அமரர்க்கு எல்லாம் குரிசில் ஆம் சிறப்பும் செய்தான்.

இந்திராணி விசயனை மானுடன் என்று இகழ, இந்திரன் தகாது என்பதை ஏதுக் காட்டி உணர்த்துதல்

அன்னது நிகழ்ந்த காலை, அவன் திருத் தேவி கண்டு,
துன்னிய கோபச் செந் தீ விழி உக, சில சொல் சொன்னாள்—
'மன்னிய புவியில் வைகும் மானுட மன்னன் வந்து, உன்-
தன்னுடன் ஒக்க உண்ணத் தக்கதோ? உரைத்தி!' என்றே. 6

என்றலும், கடவுள் வேந்தன், இரு புயம் துளங்க நக்கு,
'மன்றல் அம் துளப மாயோன் மைத்துனன்; எனக்கு மைந்தன்;
கொன்றை அம் சடையானோடும் அமர் புரி குரிசில்தன்னை,
''நன்றி இல் மனிதன்'' என்று இங்கு இகழ்வதோ நங்கை?' என்றான்.

'இவன் வந்தது தக்க செயல் புரிதற்கே' என்று தேவர்கள் கூறுதல்

ஆங்கு அது கேட்ட தேவர் அடி பணிந்து, 'அரிய வேந்தே!
பூங்கொடி தருவோடு அன்று புவியினில் கவர்ந்த வீரற்கு
ஓங்கு மைத்துனனே ஆகில், இதனின் மற்று உறுதி உண்டோ?
ஈங்கு இவன் புகுந்த சூழ்ச்சிக்கு ஏது உண்டாகும்' என்றார். 8

'விசயன் தனக்குச் செய்த சிறப்புத் தகாது' என்ன, இந்திரன் அவனது பெருமை கூறி, ஒரு வரம் வேண்டுதல்

தேவர்தம் உரையும், தேவி செப்பிய உரையும், கேட்டு,
தா வரும் புரவித் திண் தேர்த் தனஞ்சயன் தொழுது சொன்னான்—
'யாவரும் பரவும் உன்தன்னுடன் ஓர் ஆசனத்து இருந்து,
மேவரு முடியும் சூடப் பொறுக்குமோ, விமல?' என்றே. 9

அவன் உரை மகிழ்ந்து கேட்டு, ஆங்கு, அமரருக்கு அதிபன் சொல்வான்:
'புவனம் மூன்றினுக்கும் உன்னைப்போல் ஒரு வீரன் உண்டோ?
சிவன் அருள் படையும் பெற்றாய்! செந் தழல் அளித்த தெய்வக்
கவன வாம் பரியும், தேரும், கணையும், கார்முகமும், பெற்றாய்! 10

'பிரமனே முதலா எண்ணும் பேர் பெறும் தேவர் ஈந்த
வரம் மிகும் மறையும், கொற்ற வான் பெரும் படையும், பெற்றாய்!
அரு மறை முறையே பார்க்கின், அமரர் மற்று உன்னின் உண்டோ?
திரு வரும் வின்மை வீர! செப்புவது ஒன்று கேளாய்: 11

' ''கற்றவர், கலைகள் யாவும் கசடு அறக் கற்பித்தோர்கள்
பெற்றிடக் கொடுக்கும் செல்வம் உண்டு'' என்று பெரியோர் சொல்வர்;
கொற்றவ! உனக்கு நானும் கூறும் நல் குருவே ஆகும்;
உற்றவாறு எனக்கு நீயும் ஒரு வரம் தருக!' என்றான். 12

'யான் செய்ய வேண்டுவது யாது?' என்ற விசயனுக்கு, இந்திரன், நிவாதகவசரை வென்று அழிக்குமாறு கூறுதல்

தந்தை சொல் மகிழ்ந்து கேட்டு, தனுவினுக்கு ஒருவன் ஆன
மைந்தனும், 'தேவர்க்கு, ஐய! மானுடர் செய்வது உண்டோ?
சிந்தையில் நிகழ்ந்தது ஒன்று செப்புக!' என்று அவனும் செப்ப,
இந்திரன்தானும், மீண்டும் இன்னன பகரலுற்றான்: 13

'ஆழி நீர் அழுவத்து என்றும் உறைபவர்; ஆழியானும்,
ஊழியின் நாதன்தானும், உருப்பினும், உலப்பு இலாதோர்;
ஏழ்-இரு புவனத்து உள்ளோர் யாரையும் முதுகு காண்போர்;
கோழியான்தனக்கும் தோலா அவுணர்;—முக் கோடி உண்டால். 14

'தவாத போர் வலியின் மிக்க தவத்தினர்; சாபம் வல்லோர்;
சுவாதமே வீசி, எல்லா உலகையும் துளக்குகிற்போர்;
விவாதமே விளைக்கும் சொல்லர்; வெகுளியே விளையும் நெஞ்சர்;—
நிவாத கவசத்தர் என்னும் பெயருடைக் கொடிய நீசர். 15

'மற்று அவர் எனக்கு நாளும் வழிப்பகை ஆகி நிற்போர்;
கல் தவர் வணக்கிஞற்கும் கடக்க அரும் வலியின் மிக்கோர்;
செற்றிட, நின்னை அன்றி, செகத்தினில் சிலர் வேறு உண்டோ?
வெற்றி வெஞ் சிலை கொள் வீர! இவ் வரம் வேண்டிற்று' என்றான்.

விசயன் ஒருப்பட, இந்திரன் தேர் முதலியன அளித்து,
அவனுக்கு விடை கொடுத்தல்

'செரு' என்ற மாற்றம் கேட்டு, சிந்தையில் உவகை பொங்க,
மரு ஒன்றும் அலங்கல் மார்பும், வாகு பூதரமும், பூரித்து,
உரு ஒன்றும் மதனை ஒப்பான், ஒருப்பட்டான்; உரைப்பது என்னோ?
திரு ஒன்றும் வண்மை வீரன் மறுக்குமோ, தேவர் கேட்டால்? 17

காற்று எனக் கடிய, வேகக் கனல் எனக் கொடிய, என்றும்
மேல் திசை எல்லை எல்லாம் வீதிபோய் ஒல்லை மீள்வ,
கூற்றமும் முகிலும் உட்கக் குமுறும் வெங் குரலும், மேன்மேல்
சீற்றமும் திறலும் மிக்க, தீக் கதி செலாத, தூய, 18

ஆயிரம் பத்து வெம் போர் அடல் பரி பூண்ட தேரும்,
மா இருங் கலையின் மிக்க மாதலிதனையும் நல்கி,
காய் இருங் கிரணச் செம் பொற் கவசமும் கொடுத்து, பின்னர்,
வேய் இருந் தெரியலாற்குச் சுரபதி விடையும் ஈந்தான். 19

விசயன் போர்க்கோலம் பூண்டு, மாதலி தேரில் செல்லும்போது,
அவ் அசுரர் இயல்பைச் சாரதியிடம் கேட்டு அறிதல்

'விடை' என, தொழுது போந்து, வெஞ் சிலை விஞேத வீரன்,
சுடு சரத் தூணி கொற்றப் புயத்தினில் துதையத் தூக்கி,
இடு மணிக் கவசம் மெய்யில் எழில் உறப் புனைந்து, தன்னை,
திடமுடைச் சிங்கம் அன்ஞன், செருத் தொழில் கோலம் செய்தான்.

மோது போர் தனக்கு வேண்டும் முரண் படை பலவும் கொள்ளா,
கோதை வில் தடக் கை வீரன் கொடி மணித் தேர்மேல் கொண்டு,
'மாதலிப் பெயராய்! அந்த வஞ்சர் எத் திசையர்?' என்றான்;
சூதனும், அவனுக்கு, அன்னோர் இயல்பு எலாம் தோன்றச் சொல்வான்:

'தோயமாபுரம் என்று உண்டு, தொடு கடல் அழுவத்து ஒன்று;
மாய மா புரமே ஒக்கும்; அப் புரம்அதனில் வாழ்வோர்
தீயவர்' என்று செப்பி, சித்திரசேனன்தன்னை,
'தூய நல் நெறி காட்டு' என்று, சூதன் தேர் தூண்டும் எல்லை, 22

தேவ மகளிரின் நகைப்பும், வானவரின் வாழ்த்தும்

'மொய் திறல் கடவுளோர் முப்பத்து முக்கோடியாலும்
செய்து அமர் தொலைக்க ஒண்ணுத் தெயித்தியர் சேனைதன்னை,
எய்து ஒரு மனிதன் வெல்வது ஏழைமைத்து!' என்று நக்கார்—
மை தவழ் கருங் கண், செவ் வாய், வானவர் மகளிர் எல்லாம். 23

மங்கையர் வாய்மை கேட்டு, மணிக் குறு முறுவல் செய்து,
கங்கைஅம் பழன நாடன் கடி மதில் வாயில் செல்ல,
அங்கு அவன்தன்னைக் கண்ட அணி கழல் அமரர் எல்லாம்,
'மங்குல் வாகனன்!' என்று எண்ணி, கதுமென வந்து, தொக்கார்.

கார்க் கோல மேனியானைக் கண்ட பின், ஐயம் நீங்கி,
'போர்க்கோலம் இவனுக்கு எவ்வாறு இசைந்தது? புகறி' என்று,
தேர்க்கோலம் செய்வான்தன்னைச் செப்பினர்; அவனும், போற்றி,
'வார்க் கோல புரத்து வைகும் அவுணரை வதைத்தற்கு' என்றான்.

என்று, அவன் உரைத்த மாற்றம் இன்புறக் கேட்டு, நெஞ்சில்
துன்றிய உவகை தூண்ட, சுருதியால் ஆசி சொல்லி,
'வென்று மீள்க!' என்று வாழ்த்தி, விரைவினில் வீரன்தன்னை,
'சென்றிடுக!' என்று, தேவர் தத்தமில் சிறப்பும் ஈந்தார். 26

'சம்புவன், சம்புமாலி, எனும் பெயர்த் தனுசர்தம்மை
உம்பர்கோன் வதைத்த அந்நாள் ஊர்ந்தது, எவ் உலகும் ஏத்தும்
தும்பைஅம் சடையான் வெற்பைத் துளக்கிய சூரன் மாள,
விம்ப வார் சிலை இராமன் வென்ற நாள் ஊர்ந்தது, இத் தேர். 27

'ஆதலால் இத் தேர்மேல் கொண்டு, அடல் புனை அவுணருக்குப்
பேதியாக் கவசம் பெற்று, பிறங்கு பொன் முடியும் பெற்றாய்;
கோதிலாய்! எங்கள் நெஞ்சில் குறை எலாம் தீர்த்தி!' என்றார்—
போதில் வாழ் அயனும் ஒவ்வா வாய்மொழிப் புலவர் எல்லாம். 28

விசயன் உவகையுடன் சென்று கடலை அடுத்தபோது, அந்த அவுணரின்
இயல்பை வினவ, மாதலி விளங்க உரைத்தல்

வீரனும் உவகை தூண்ட, விண்ணவர் மலர்த்தாள் போற்றி,
சாரதி தடந் தேர் தூண்ட, தபனனில் விசும்பில் சென்றான்—
கார் நிறக் குன்றம் ஒன்றைக் கனக வான் குன்று ஒன்று ஏந்தி,
சீர் உறப் பறந்து, வானில் திசை உறச் செல்வது ஒத்தே. 29

திரை கொழித்திடும் சிந்துவின் சூழலில்,
குரகதத் தடந் தேர் போய்க் குறுகலும்,
மரகதக் கொண்டல், மாதலிக்கு அன்பினால்,
விரகுறச் சில மாற்றம் விளம்பினான்: 30

'இப் புரத்தில் அவுணர் இயல்பு எலாம்
செப்பு, எனக்குத் தெரிதர' என்றலும்,
அப் புரத்தவர் ஆண்மையும், தோற்றமும்,
செப்பலுற்றனன், திண் திறல் தேர்வலான்: 31

'தெழித்த சொல்லினர்; சீற்ற வெந் தீ உக
விழித்த கண்ணினர்; விண் முகிலைக் கவின்
அழித்த மேனியர்; ஆழ் வெம் பிலத்தையும்
பழித்து அகன்ற பெரும் பகு வாயினர்; 32

'மண்ணும், நீரும், அனலும், மருத்துடன்,
விண்ணும், வேண்டின், விரைவின் முருக்குவார்;
எண்ணெய் ஊட்டி, இருள்-குழம்பால் எழில்
பண்ணி, யாக்கை வகுத்தன்ன பான்மையார்; 33

'மல் புயாசலத்தின் வலியால், இகல்
சற்ப ராசன் தலைச்சுமை மாற்றுவார்;
அற்ப வாழ்வுடை அம்போருகத்தர்தம்
கற்ப கோடி கடையுறக் காண்குவார்; 34

'பாழி ஆடக வெற்பில், படர் சிரம்
கீழது ஆக, கிளர் மூச்சு அடக்கி, நின்று,
ஊழி நாளும் தவம் முயன்று, ஓங்குவார்;
ஆழி நீரும் அளவிடும் தாளினர்; 35

'ஏதி, சூலம், எழு, மழு, ஈட்டியின்
சாதி, சக்கரம், தாங்கும் தடக் கையார்;
மோது போர் எனின், மொய்ம்புடன் முந்துவோர்;
ஓதம் ஏழும் உடன் உண்டு, உமிழுவோர்; 36

'கூறும் நல் உரை கூறினும், கூற்றுடன்
கார்தொறும் இடி சேர்ந்தன்ன காட்சியார்;
தேர்தொறும் செருச் செய்யும் அத் தேவரைப்
போர்தொறும் புறங்கண்டு அன்றிப் போகலார்; 37

'மூன்று கோடி அசுரர்; முகில் எனத்
தோன்றும் மேனியர்; தோம் அறும் ஆற்றலர்;
ஏன்று போர் பொரின், எவ் எவ் உலகையும்
கீன்று, சேரக் கிழிக்கும் எயிற்றினர்; 38

'செப்பு உரத்தினில், செஞ் சடை வானவன்
முப்புரத்தை முனிந்த அந் நாளினும்,
தப்பு உரத்தர்; சதமகன்தன்னை வென்று,
இப் புரத்தை இவர் கவர்ந்தார்' என, 39

சித்திரசேனனை நிவாதகவசரிடம் தூது போக்கி, மண்ணின்மீது தேரை நடத்துதல்

தீது இலாத் திறல் சித்திரசேனனைக்
'கோது இலாத குனி சிலை வீரற்கு
மோது போர் தர, மொய்ம்புடை வஞ்சர்பால்
தூது போக!' எனப் போக்கி, தொலைவு இலான், 40

விண்ணின்மீது விரைவுறும் தேரினை
மண்ணின்மீது நடத்தினன், மாதலி;
அண்ணலும், தன் அருஞ் சிலை நாணியின்
துண்ணென் ஓதை தொடரத் துரத்தினான். 41

அருச்சுனன் நாண் ஒலி முதலியன கேட்டு, 'இந்திரன் பொர வந்தான்!' என அவுணர் சினத்தல்

தேரின் ஆர்ப்பு ஒலியும், சிறு நாண் எனும்
காரின் ஆர்ப்பு ஒலியும், கலந்து, எங்கணும்,
பாரும், மேல் திசையும், பகிர் அண்டமும்,
சேரும் நால்-திசையும், செவிடு ஆக்கவே, 42

அந்த ஓசை அவுணர் செவிப் புக,
முந்த ஓடி முடுகி, முறுவலித்து,
'இந்திரன் பொர வந்தனன்' என்று, தம்
சிந்தை கன்றி, விழியும் சிவந்திட்டார். 43

தூதன் உரைத்த செய்தி கேட்டு, அவுணர் இகழ்ந்து கூறி, சினங்கொள்ளுதல்

போய தூதனும், செம் பொன் புரிசை சூழ்
தோயமாபுரம்தன்னில் துதைந்த அம்
மாய வஞ்சர் மறுக, வெம் புண்ணின்மேல்
தீயை ஒப்பன சில் உரை சொல்லுவான்: 44

'ஒரு குலத்தினில் வேந்தும் ஒவ்வாது உயர்
குருகுலத்தில் குனி சிலை வீரற்குத்
தருக யுத்தம்; திறலுடைத் தானவர்
வருக, மற்றும் வருதினிதன்னொடும்.' 45

என்று தூதன் இசைத்தது கேட்டலும்,
'நன்று!' எனக் கை புடைத்து, நகைத்திடா,
கன்று நெஞ்சினர், கண்கள் செந் தீ உக,
துன்று கோபத்துடன், அவர் சொல்லுவார்: 46

'பூசை ஒன்று புலியின் குழாத்துடன்
ஆசை கொண்டு, பொர வந்து, அழைப்பதே!
வாசவன் பெரு வாழ்வுக்கு எலாம் ஒரு
நாசம் வந்து புகுந்தது!' எனா, நகா, 47

'வரை உளானும், மலரின் உளானும், வெண்
திரை உளானும், செருப்ப அரு நம்முடன்
தரை உளான் வந்து போர் பொரத் தக்கதோ!
''உரை உளார்'' என்று உரையீர், உணரவே. 48

'தனுசர் தானைதனை மதியாது, ஒரு
மனுசன் வந்து, மலைய மதிப்பதோ!
அனுசரும், கொலை ஆடல் அவுணரும்,
குனி செயும், சிலை!' என்று கொதித்திட்டார். 49

'செங் கண் நாகக் கொடியவன், செல்வமும்
தங்கள் நாடும் கவர, தரிப்பு அற,
பொங்கு கானில் புகும் சிலை வீரனே,
எங்களோடும் எதிர்க்க வந்து, எய்தினன்!' 50

அசுரர் ஆயுதங்களுடன் திரண்டு வந்து, அருச்சுனன் தேரை வளைத்தல்

என்று கூறி, இகல் அசுராதிபர்,
துன்று சேனைக் குழாம் புடை சூழ்வர,
சென்று, உகாந்தத் திரைக் கடல் ஆர்ப்பபோல்,
ஒன்ற, யாரும் ஒருங்கு சென்று உற்றனர். 51

ஆனை, தேர், பரி, ஆள், எனும் நால்வகைத்
தானையோடும் எழுந்தனர், தானவர்;
வானும், மண்ணும், திசையும், மற்று எண் பெறும்
ஏனை லோகமும், எங்கும் நடுங்கவே, 52

சங்கும், பேரியும், தாரையும், சின்னமும்,
துங்க மா முழவும், துடி ஈட்டமும்,
அம் கண் மா முரசும், உக அந்தத்தில்
பொங்கும் வேலை ஒலியின் புலம்பவே, 53

சூலம், நேமி, எழு, மழு, தோமரம்,
கோலும் வார் சிலை, குந்தம், கொடுங் கணை,
நாலு தானை நடுவும் சுடர் அயில்,
வேலும், வாளின் விதமும், மிடையவே, 54

முந்து கோப அசுரர் முடுகு தேர்,
உந்து வீரன் ஒரு தனித் தேரினை
வந்து சூழ, வளைத்தார்—மது மலர்க்
கொந்து சூழ் வரி வண்டின் குழாத்தினே. 55

அவுணர் சுடுசரம் தூவ, அருச்சுனன் தானும் கணைகள் எய்து, வஞ்சினம் கூறுதல்

நீல மால் வரை ஒன்றின் நெருக்கி, வீழ்
கால மா முகில் என்ன, கடியவர்,
கோலும் வார் சிலைக் கொண்டல் அன்னான்மிசைச்
சூலம், நேமி, சுடு சரம், தூவினார். 56

அக் கார்முக வீரனும், அங்கு அவர்தம்
மைக் கார் முகில் என்ன வழங்கிய திண்
மெய்க் காய் கணை சாபம் விசித்து, விடா,
நக்கான், இவை, நின்று, நவின்றனனே: 57

'திக்கு ஓடிய நும் திறலும், புகழும்,
தொக்கு ஓடி உடற்று படைத் தொகையும்,
கைக் கோடிய வெஞ் சிலையின் கணையால்,
முக் கோடியும், இன்று, முருக்குவனால்! 58

'முன் போர்தொறும் வந்து, முனைந்து, வெரீஇ,
வென் போகிய விண் உறை வீரர் அலேன்;
பொன் போலும் நும் மேனி பொடிச் செய்திடா,
பின் போகுவன்!' என்று இவை பேசலுமே, 59

அசுரர், அருச்சுனனை இகழ, அவன் கணை பல தூவி வெகுள, அவர்கள் அஞ்சுதல்

'தழல் வந்தருள் பாவை தடந் துகிலும்,
குழலும், கவர்தந்து, அடல் கூரும் உமக்கு
அழல் துன்றிய கானம் அளித்தவரை,
கழல் வெஞ் சிலை வீர! கடிந்திலையே!' 60

என்று, அசுரேசர் இசைத்தலுமே,
மன் ஆகவ வீரனும், வார் சிலை நாண்
தன் ஆகம் உறத் தழுவ, தழல் வாய்
மின் ஆர் கணை தூவி, வெகுண்டனனே. 61

பொய்த் தானவர், போர் அரி அன்னவன்மேல்
மொய்த்தார், முகில் செங் கதிர் மூடுவபோல்;
வைத் தாரை வடிக் கணை, வாள், மழு, வேல்,
உய்த்தார், வரைமேல் உரும்ஏறு எனவே. 62

'என்முன்; அவன் என்முன்' என, எவரும்
முன்முன் வர, முந்த முருக்கினனால்—
தன்முன் ஒரு வீரர் தராதலமேல்
வில் முன்னின் நிலா விறல் வில் விசயன். 63

ஒரு தேர்கொடு வீரன், உடன்றவர்தம்
கரி, தேர், பரி, ஆள், அணி கையற, முன்
நிருதேசரை வென்றவன் நேர் என, மேல்
வரு தேர் அணிதோறும் மலைந்திடவே, 64

வீரன் சரம் வஞ்சகர் மெய்ம் முழுதும்
கூரும்படி சென்று, குளித்திடலால்,
ஆரும் பொர, அஞ்சினர்; அப்பொழுதில்
தேர் உந்தினர், எண்ணில் தெயித்தியரே. 65

அஞ்சிய அசுரரை நோக்கி, அஞ்சாதவர் கூறிய வீர உரை

'என்னே, ஒரு மானுடனுக்கு எவரும்
கொன்னே அடல் ஆண்மை கொடுக்கும்அதோ!
இன்னே, இவன் ஆவி அழித்து, இமையோர்
முன்னே வய வாகையும் முற்றுவமால்!' 66

அசுரருடன் கடும்போர் செய்து, விசயன் பிரமாத்திரம் தொடுத்தல்

காளப் புயல் என்ன நிறம் கரியார்,
மீளப் படைகொண்டு, விரைந்து, வெகுண்டு,
ஆளித் திறல் மொய்ம்பனை, அங்கு அடலால்,
வாளக் கிரி என்ன, வளைந்து, எவரும், 67

ஆர்த்தார்; அகல் வானமும் ஆழ்கடலும்
தூர்த்தார், சுடர் வெம் படைகொண்டு, எவரும்
தேர்த் தானவர்; வான் உறை தேவரும் மெய்
வேர்த்தார், 'இனிமேல் விளைவு ஏது!' எனவே. 68

கூற்று ஒப்பன பல் படை கொண்டு, அவன்மேல்
சீற்றத்தொடு எறிந்தனர், தீயவரும்;
ஆற்றல் சிலை வீரனும், அவ் அவ் எலாம்
மாற்றி, சர மாரி வழங்கினனால். 69

அவன் விட்ட சரங்கள் அறுத்து, அணி தேர்
கவனப் பரி பாகு கலக்கம் உற,
பவனத்துடன் அங்கி பரந்ததுபோல்,
துவனித்து, அவர் வெம் படை தூவுதலும், 70

கட்டு ஆர் முது கார்முக வீரனும், முன்
கிட்டா, உலகோர் புகழ் கேழ் கிளர் சீர்
முள் தாமரைமேல் முனிவன் படையைத்
தொட்டான், அசுரேசர் தொலைந்து உகவே. 71

பிரமாத்திரத்தினுல் அசுரர் பட்ட பாடு

காற்ருய், மிக மண்டு கடுங் கனலாய்,
கூற்ருய், அவர் ஆவி குடித்து, உகு செஞ்
சேற்ருல், ஒரு பாதி சிவந்தது, பார்,
ஏற்ருன் ஒரு பங்கு என, எங்கணுமே. 72

நூருயிர தேர் அணி நூறியும், மேல்
ஆருத சினத்துடன், அக் கணை போய்,
மாருய், அவர் மார்பமும், வாள் முகமும்
சீரு, எதிர் சென்று, செறிந்ததுவே. 73

ஒரு கோடி அசுரர் பட, இரு கோடி அசுரர் திரண்டு பொருதலும்,
பல படை ஏவி அருச்சுனன் அவர்களைத் தேய்த்தலும்

குருகோடு இயையும் குருதிக் கடல்வாய்,
ஒரு கோடி தயித்தியர் ஆர் உயிர் உண்டு,
அருகு ஓடிய வாளி அடர்ப்பது கண்டு,
இரு கோடியும் உற்றன, மற்று—இவன்மேல். 74

இருண்டது, மண்ணும் விண்ணும்; எல்லை எண் திசையும், எங்கும்,
புரண்டது, குருதி வெள்ளம், ஊழி வெங் கடலின் பொங்கி;
முரண் தகு தேரோன்தன்னை மொய்த்த வெம் பனிபோல் மூடித்
திரண்டது, திருகி மீண்டும், திறலுடைத் தகுவர் சேனை. 75

'எங்கு, எங்கே, எங்கே, வல் வில் மனிதன்?' என்று, எதிர்ந்தோர் யார்க்கும்,
அங்கு, அங்கே அங்கே ஆகி, அவரொடும் அடு போர் செய்தான்—
சங்கு அங்கு ஏய் செங் கை நல்லார் விடுத்தன சுரும்பின் சாலம்,
'கொங்கு எங்கே, எங்கே?' என்று தனித்தனி குடையும் தாரான்.

கார்முகக் கொண்டல் அன்னுன்மிசைக் கடுங் கணைகள் ஏவி,
தேர்முகத்து இயக்கம் மாற்றி, திதி மைந்தர் வெம் போர் செய்ய,
போர்முகத்து ஒருவர் ஒவ்வாப் புரி சிலை வீரன்தானும்,
கூர் முகப் பகு வாய், மாயோன், கொடுங் கடும் பகழி கோத்தான்.

விண்ணிடத்து அசனி நாகர்மேல் வெகுண்டிடுவது என்ன,
எண்ணுடைச் சேனை வெள்ளம் எங்கணும் தானே ஆகி,
வண்ண வில் படை இராமன் வாரிதி வெள்ளம் வீத்த
பண் எனப் படுத்தது—அந்தப் பைந் துழாய்ப் பரமன் வாளி. 78

தசையும் வெம் பிணமும் துன்ற, தனித்தனி பெருகி, எல்லாத்
திசைதொறும் குருதி நீத்தம் திரைக் கடல் சென்று மண்ட,
அசைவு இலா அவுணர் மீண்டும் அந்தரத்து ஒளித்து நின்று,
விசைய வில் விசயன்தன்மேல் வெகுண்டு, வெம் படைகள் விட்டார்.

விட்ட வெம் படைகள் எல்லாம் விண்ணிடைச் சுண்ணம் ஆக,
கட்டழகு உடைய வீரன், மகேந்திரக் கணையால் வீக்க,
எள்-துணைப் பொழுதில் வஞ்சர் எழிலியின் படை மேல் வீச,
வட்ட வார் சிலையினானும், மண்டு அழற் படையால் மாற்ற, 80

மண்டி மேல் எழுந்து, இங்கு எல்லா உலகையும் மடிக்கும் மாயச்
சண்ட வாயுவின் பேர் வாளி, தானவர் அவன்மேல் ஏவ,
அண்டமும் துளங்க, ஓங்கும் அரு வரைப் பகழி விட்டான்—
எண் திசை முழுதும் தன் பேர் எழுது போர் விசயன் என்பான். 81

காற்றும் வெங் கனலும், காரும் இடியும், கல்மழையும், எங்கும்
தோற்றிய இருளும் மின்னும், திசைதொறும் சூழ்ந்து பொங்க,
கூற்றும் வாய் குழறி அஞ்ச, கொடிய மா மாய வாளி
ஆற்றல் சால் அரி அன்னான்மேல் எறிந்து, அடல் அவுணர் ஆர்த்தார்.

கல்மழை சொரிந்து, வேகக் கனல்மழை வீசி, எங்கும்
மின் மழை சிந்தி, மிக்க அசனியின் மழைகள் வீழ்த்தி,
செல் மழை சிதறி, எல்லாத் திசைதொறும் பரந்து, கொற்ற
வில் மழை பொழிவான்தன்னை வளைந்தது, வெய்ய மாயை. 83

கோது இலா இரதம் பூண்ட குரகதக் குழாமும் உட்கி,
சூதனும் தடந் தேர் ஊரும் தொழில் மறந்து, உயங்கி வீழ,
தாது அவிழ் அலங்கலானும் மற்று அவன்தன்னைத் தேற்றி,
தீது இலா அமோக பாணம், சிந்தையால் தொழுது, விட்டான். 84

மாய வல் இருளை எல்லாம், வான் கதிர்ச் செல்வன் என்ன,
சேய அப் பகுவாய் வாளி திசைதொறும் கடிந்த எல்லை,
ஆய அம் முறைமை தப்பா அறம், பொருள், இன்பம், முற்றும்
தூயவர் இதயம் என்னத் தொலைந்தது, சூழ்ந்த மாயை. 85

வஞ்ச வாள் அவுணர் வெம் போர் மறந்து, மெய்ம் மயங்கி, மீண்டும்
நெஞ்சினில் அறிவு தூண்ட, நிரை நிரை தடந் தேர் தூண்டி,
செஞ் சரம், சூலம், விட்டேறு, எழு, மழு, திகிரி, வாளம்,
அஞ்சனக் குன்று அன்னான்மேல் எறிந்து, உடன் ஆர்த்த காலை, 86

கடுஞ் சிலை விரைவும், வீரன் கைத்தொழில் விரைவும், மேன்மேல்
விடும் கணை விரைவும், எண்ணில், விபுதர்க்கும் காண ஒணாதால்;
கொடுந் தொழில் அசுரர் மெய்யில் குளித்த செஞ் சரமும், அன்னோர்
படும் படும் துயரும், எங்கும் காணலாம், பார் உளோர்க்கும். 87

ஆய்ந்த நூல் அறிஞர்க்கு ஈந்த அரும் பொருள் என்ன, மேன்மேல்
வேந்தர் கோன் பகழி ஒன்று கோடியாய் விளைந்தது, எங்கும்.
மாந்தர் கைக் கொடாத புல்லர் வனப்பு இலாச் செல்வம் போல,
தேய்ந்தது, வஞ்ச நெஞ்சத் திறலுடைத் தனுசர் சேனை. 88

படாது ஒழி அவுணர், 'மீண்டும் பரிபவப் படுத்தாய், எம்மை;
அடா! இனி உன்னை இன்னே ஆர் உயிர் குடித்தும்' என்று,
கடாமலை வயவன்மீது கடும் படை பலவும் விட்டார்;
தொடா, நெடும் பகழிதன்னால் சூரனும் துணித்து வீழ்த்தி, 89

உரங்களும், தோளும், கண்ணும், உதரமும், அதரத்தோடு
சிரங்களும், தாளும், நாளும், செய் தவம் முயன்று பெற்ற
வரங்களும், மறையும், மேன்மேல் வான் படைக் கலங்கள் வீசும்
கரங்களும், சரங்கள் கொண்டு, கணத்திடைக் கண்டம் கண்டான்.

விசயன் கை சலித்து நின்ற போது, அசரீரி அந்த அசுரர்களை வெல்லும்
உபாயத்தைக் கூறுதல்

அற்றன குறைகள் எல்லாம், அவயவம் பொருந்தி, மீண்டும்
உற்றன; மூன்று கோடி சேனையும், உருத்து எழுந்த;
வெற்றி வேல் குமரன் அன்ன விசயனும் கை சலித்து,
'மற்று இதற்கு என் செய்வேன்?' என்று, இனைவுடன் மதிக்கும் ஏல்வை, 91

'வென்றி கொள் வீர வாகை வேக வில் விசய! கேளாய்:
தென் திசை மறலிபால் இத் தீய வஞ்சகர் முன் பெற்ற
வன் திறல் படையும், மிக்க வரமும், மெய் வலியும், உண்டால்'
என்று, அசரீரி பின்னும் இன்னவை உரைத்தது அம்மா: 92

'வெய்ய வெம் படைகட்கு எல்லாம் விளிகிலர்; மெய்ந் நூறு ஆகக்
கொய்யினும், உருவம் மீண்டும் கூடுவர்; குறிப்பின் நின்று
கையில் நாவுடன் வாய் சென்று கலந்திடும் கணத்தின், அம்பால்
எய்திடுக!' என்று, வீரற்கு உறுதியும் இசைத்தது அன்றே. 93

விசயன் தன் தேரைத் திருப்பி, கணப்பொழுதில் பாசுபதக் கணை விட,
அசுரர் பொடியாதல்

வானிடத்து அரூபி சொன்ன வாசகம் மனத்தில் கொள்ளா,
தேனுடைத் தெரியல் வீரன் தேரினைத் திரிய ஓட்டி,
கானிடைக் கடவுள் வேடன் தரும் கணை கரத்தில் கொண்டு,
தானுடைத் தனுவில் பூட்டி, அநுப்படச் சமைந்தது ஓரார், 94

'தானவர் சமுகத்தோடு சமர் புரிந்து, ஆற்றாது, அஞ்சி,
மானவன் முதுகு தந்தான்!' என்று, வாள் அசுரர் எல்லாம்
வேனில் வேள் அனையான்தன்மேல் வெகுண்டு, வெங் கடலின் பொங்கி,
ஆன தம் கை வாய் சேர்த்தி, ஆவலம் கொட்டி, ஆர்த்தார். 95

உரம்பட்ட வஞ்சர் சேனை ஒருப்பட்ட உறுதி நோக்கி,
திரம் பட்ட சிலைக் கை வீரன் சிலீமுகம் தெறித்தபோது, அச்
சரம் பட்ட தனுசர் அங்கம், சங்கரன் செங் கை அம்பால்
புரம் பட்ட பரிசு பட்டு, பொடிந்தன, பொடியாய் மன்னே! 96

உருத்தது, மிகவும்; அண்டம் உடைந்திட, உடன்று பொங்கிச்
சிரித்தது; தனுசர் மெய்யும் சிந்தையும் சேரப் பற்றி,
எரித்தது: தூ நீர் ஆடி இவனிடம்தன்னில் வந்து,
தரித்தது, மீண்டும்;—அந்தச் சங்கரன் செங் கை வாளி. 97

அசுரர் வீர சுவர்க்கம் அடைய, அருச்சுனன் வெற்றிப் பெருமிதத்துடன் நிற்றல்

துவசத்தொடு தேர் களம் வீழ, சுடர் நிவாத
கவசத்தொடு மெய் கடல் வீழ, கடுகி, அற்றைத்
திவசத்து, இவரு, அர மங்கையர் வீழச் சென்றார்—
அவசத்துடன், அந்தகன் ஊரில், அசுரர் எல்லாம். 98

ஆர்த்தார்; அணி கூர் அலர் மா மழையால் விசும்பைத்
தூர்த்தார்; துதித்தார்; மதித்தார்;நனி துள்ளுகின்றார்;—
'போர்த் தானவர்தம் செருக்கால் படு புன்மை எல்லாம்
தீர்த்தான் இவன்' என்று, அகல் வான் உறை தேவர் எல்லாம். 99

கூரும் படையும், குடையும், கொடியும், கொழித்து,
தேரும், கரியும், பரியும், திரைதோறும் உந்தி,
ஊரும் குருதிக் கடல் பொங்கி, உவர்க் கடல்மேல்
போரும் பொரப் போய், அணியோடு புகுவ போலும். 100

தத்திக் குருதிக் கடல் பொங்க, தனித்தனி நின்று,
எத் திக்கினும் வெம் பிணக் குன்றம் எழிலொடு ஓங்க,
பத்திப்பட, மேல் பருந்தின் குலம் பந்தர் செய்ய,
கொத்துற்ற தண் தார்த் திறல் கோதண்ட வீரன் நின்றான். 101

அசுரமாதர் அரற்றும் ஓசையால், அருச்சுனன் சினம் தீர்ந்து, தேரை வானுலகிற்கு
மீண்டு செலுத்துமாறு மாதலிக்குக் கூறுதல்

மின்போல் நுடங்க இடை, வேல்விழி நீர் ததும்ப,
பொன்போல் உருவம் கருகும்படி பூழி போர்ப்ப,
அன்போடு, அவுணர் மட மாதர் அரற்றும் ஓதை,
''என் போலும்?'' என்னின், இடிபோல் வந்து இசைத்தது, எங்கும்.

இவ்வாறு அவுணர் மட மாதர் இரங்கி, ஏங்க,
மை வாள் விழியின்வழி அஞ்சன வாரி பாய,
தெவ் ஆறிய பின்னரும், தீர்ந்தில,—தீர்ந்த அன்றே,
கை வார் சிலையான் கடுங் கோபமும், கண் சிவப்பும். 103

அன்னூர் நகரத்து அழகும், தொல் அரணும், நோக்கி,
மின் ஆரும் வேலான் விறல் மாதலிதன்னை, 'மீண்டும்
நல் நாகர் ஊரில் தடந் தேரை நடாத்துக!' என்னச்
சொன்னான்; அவனும், துனை தேர் நனி தூண்டும் எல்லை, 104

தேரில் மீளும் விசயன், அந்தரத்தில் ஓர் ஊரைக் கண்டு, மாதலியை வினவ, அவன் அங்கு வாழும் காலகேயரைப் பற்றி உரைத்தல்

செம் பொற் புரிசை திகழ் கோபுரச் செம்பொன் மாடத்து
அம் பொற் கொடி சேர் நகர், அந்தரத்து, ஒன்று காணா,
வம்பின் பொலி தார்த் தடந் தேர் விடும் மாட்சியானை,
விம்பத் திறல் வார் சிலை வீரன் வினவ, அன்னான், 105

'மன்னும் தனுச குல மாதரில் வஞ்ச நெஞ்சக்
கன்னங் கரிய குழல் காலகை, காமர் சோதிப்
பொன் அம் கொடிபோல் எழில் கூர் நுண் இடைப் புலோமை,
என்னும் பெயரார் இருவோர் உளர்; என்றும் உள்ளார்; 106

'அம் மாதர் தந்தைதனை நோக்கி, அனந்த காலம்
செம் மால் வரையில் தவம் செய்தனர்; செய்த நாளில்,
மைம் மான் விழியார்தமக்கு அந்த வனச வாணன்
எம்மால் இசைத்தற்கு இசையாத வரங்கள் ஈந்தான்; 107

'தம் மக்கள் ஆய அசுரேசர், அதிதி தந்த
அம் மக்கள்தம்மால் அழியாமையும், ஆடகத்தால்
மும்மைப் புரம்போல் விசும்பு ஊர்தரும் மொய்ம்பின் இந்தச்
செம்மைப் புரமும், கொடுத்தான், அத் திசை முகத்தோன். 108

'பொன் காலும் மெய்யர், பொறி கால் பொலங் குண்டலத்தர்,
முன் காலனையும் சமர் மோதி முருக்கும் மொய்ம்பர்,
மின் கால் படையர், விடம் காலும் விழியர், வெம் போர்
வன் காலகேயர் எனும் பேர் திசை வைத்த வீரர், 109

'வரு முப்பொழுதும் மறை அந்தணர் அம் கை வாரி,
உருமுப் புயல்போல், கவர்வோர்; முன் உகாந்த நாதன்
பொரு முப்புரத்தில் உறை தானவர்போலும் வீரர்;
இரு-முப்பதினாயிரம் வஞ்சகர் இங்கும் உண்டால்.' 110

'இவரையும் முடித்த பின்பே அமராவதி செல்வேன்; தேரை அங்குச் செலுத்து' என விசயன் கூற, அவனும் அவ்வாறே செய்தல்

தன் தேர் வலவன் மொழி கேட்டு, தயங்கும் நீலக்
குன்றே அனையான், கொடும் போர் வஞ்சினங்கள் கூறி,
'இன்றே இவர் ஆவியும் தென்புலத்து ஏற்றி, பின்னர்
அன்றோ, இனி நான் அமராவதி செல்வது!' என்றான். 111

'இந்தப் புரத்தின்மிசைத் தேரினை ஏவுக!' என்னாக்
கந்தற்கு உவமை தகு திண் திறல் காளை கூற,
சிந்தைக்கும் முந்தும் தடந் தேரைத் தனுசர் வைகும்
அந்தப் புரத்தில் விடுத்தான், மற்று அவனும் மாதோ. 112

*தேர் ஒலியும் நாண் ஒலியும் கேட்டு, காலகேயர் திடுக்கிட்டு,*
*சினமுற்றுப் போருக்கு எழுதல்*

தேர் ஆரவாரத்துடனே, திண் சிலை வலான்தன்
போர் ஆரவாரச் சிலை நாண் ஒலி மீது போக,
ஆர் ஆரவாரத்து இடி கேட்ட அரவம் ஒத்தார்—
கார் ஆரவாரம் எனப் பொங்கும் அக் காலகேயர். 113

'இந்த ஓதை, எழிலி ஏழும் ஊழி நாள் இடித்து எழும்
அந்த ஓதையோ? அது அன்றி, ஆழி பொங்கும் ஓதையோ?
கந்தன் வானின்மீது தேர் கடாவுகின்ற ஓதையோ?
எந்த ஓதை?' என்று அயிர்த்து, உயிர்த்து, வஞ்சர் யாவரும், 114

தெழித்து, உரப்பி, எயிறு தின்று, வைது, செய்ய கண்கள் தீ
விழித்து, மீசை நுனி முறுக்கி, வெய்ய வீர வாள் உறை
கழித்து, எழுந்து பொங்குகின்ற காளகூடம் என்னவே,
கொழித்து, அழன்று, 'மண்ணும் விண்ணும் இன்று கோறும், நாம்' எனா,

ஓடுவாரும், அந்த ஓதை எதிர் உடன்று உறுக்கி மேல்
நாடுவாரும், 'நமர்கள் ஆண்மை நன்று, நன்று!' எனா நகைத்து,
ஆடுவாரும், அமரர் வாழ்வு பாழ்படுத்தும் ஆயுதம்
தேடுவாரும், எண் இறந்த தேர்கள் ஏறுவாருமே, 116

கூளி கோடி உய்ப்ப, குஞ்சரங்கள் கோடி உய்ப்ப, பேர்
ஆளி கோடி உய்ப்ப, வாயு கதிகொடு அந்தரத்தின்மேல்
வாளி போதும் வாசி கோடி கோடி உய்ப்ப, வாவு தேர்
ஒளியாக வானின் எல்லை மறைய உந்தி, முந்தினார். 117

*அருச்சுனனை, 'இவன் யார்?' என அசுரர் ஐயுறுதலும், அவன்*
*அவ் அசுரரின் அழகு கண்டு நொந்து கூறுதலும்*

'அந்தகன் பொரற்கு நம்மை வல்லன்அல்லன்; அபயம் முன்
தந்த இந்திரன்தனக்கும் ஒக்கும் அன்ன தன்மைதான்;
கந்தன் என்னில், ஆறு-இரண்டு கண்கள் கைகள் இல்லை; மேல்
எந்த வீரன், நம்மொடு, இன்று, எதிர்க்கும் இந்த வீரனே?' 118

எண் தயங்கும் எயிறு வெண் நிலா எறிப்ப, வெயில் மணிக்
குண்டலங்கள் அழகு எறிப்ப, மகுட கோடி குலவி மேல்
மண்டி எங்கும் வெயில் எறிப்ப, வஞ்சர்தம் வனப்பு எலாம்
கண்டு கண்டு, அருச்சுனன் கருத்து நொந்து கூறுவான்; 119

'கன்னல் வேளை வென்ற இக் கவின் படைத்த காட்சியும்,
மின்னு பூண் விளங்கு மார்பும், விபுதருக்கும் இல்லையால்;
என்ன பாவம், இவரை ஆவி ஈடு அழிப்பது!' என்று போர்
மன்னர் மன்னன் முன் உரைத்த வாய்மையும் குறிப்புறா, 120

காலகேயர் விசயன்மீது பகழி தூவி இகழ்ந்து பேச, அவன், 'உங்கள் உயிர்க்கு இறுதி வந்தது' என்று மொழிதல்

வில் வளைத்து நின்ற நீல வெற்பர் ஒன்றை விண்ணிடைச்
செல் வளைத்தது என்ன வந்து, தீய வஞ்சர் யாவரும்,
மல் வளைத்த சிகர வாகு கிரியின்மீதும், மார்பினும்,
கொல் வளைத்த பகழி தூவி, இன்ன நின்று கூறுவார்: 121

'உழுவை கண்ட உழைகள் போல, ஓடி ஓடி, மேருவின்
முழைதொறும் புகுந்த தேவர் ஏவல்கொண்டு, மொய்ம்புடன்,
இழிவு இல் சந்தனம் கடாவி, இங்கு வந்தது என் அடா?—
புழுவில் ஒன்றும் ஒன்று பூதலத்து உளான் ஒருத்தன் நீ!' 122

என்று, காலகேயர் நின்று, இசைத்த சொல் செவிக்கொளா,
'நன்று! காலகேயர் சொன்ன வாய்மை நன்று!' எனா நகைத்து,
'ஒன்று காலம் வந்தது, இங்கு உருத்து, நான் உடன்று, உமைக்
கொன்று, காலன் ஊரில் உங்கள் ஆவியும் கொடுக்கவே.' 123

அருச்சுனன் மொழியால் அழன்று காலகேயர் படைகள் விட, அவனும் பல அம்புகளால் அவற்றை விலக்குதல்

காலகேயர், விசயன் நின்று கட்டுரைத்த உறுதி கேட்டு,
ஆலகாலம் என உருத்து, அழன்று, பொங்கி, அயில் முனைச்
சூலம், நேமி, பாலம், வெய்ய சுடு சரம், துரத்தினார்—
நீல மேனி செம்புண் நீரினால் நிறம் சிவக்கவே. 124

விண் சுழன்று, திசை சுழன்று, வேலையும் சுழன்று, சூழ்
மண் சுழன்று, வரை சுழன்று, வானில் நின்ற வானுளோர்
கண் சுழன்று, யாதினும் கலங்குறாத கலைவலோர்
எண் சுழன்று, மற்றும் உள்ள யாவையும் சுழன்றவே! 125

அவர் விடுத்த படைகள் யாவும் அழிய, வானுடைக் கணைக்
கவர் தொடுத்து, விலகி, மீள அவர்கள் காயம் எங்கணும்
துவர் நிறத்த குருதி சோர்தர, சரம் துரத்தினான்—
'தவரினுக்கு இராகவன்கொல்!' என வரும் தனஞ்சயன். 126

அவுணர் மாயத்தால் மறைந்து பொர, அருச்சுனன் அம்பு மழை பொழிதல்

பார்த்தன் எய்த வாளி மெய் படப் படப் பதைத்து, மீது
ஆர்த்து எழுந்து, நகரினோடும் அந்தரத்தின் எல்லை போய்,
வார்த் தரங்க வேலையூடும் மண்ணினூடும் மறைய, அத்
தூர்த்தர் செய்த வஞ்ச மாயை சொல்லல் ஆகும் அளவதோ? 127

அண்ணல் தேரின் முன்னது ஆகும்; அளவு இறந்த தேரொடும்
விண்ணின்மீது திசை அளக்கும்; வெற்பின்மீது பொலியும்; எக்
கண்ணும் ஆகும்; அக் கணத்தில் மீளவும் கரந்திடும்;—
எண்ணல் ஆவது அன்று, அது அன்று இயற்றும் இந்த்ரசாலமே.

அந்த வஞ்சர் புரியும் மாயை வகை அறிந்து, அருச்சுனன்
சிந்தை கன்றி, விழி சிவந்து, தெய்வ வாகை வில்லையும்
மைந்துடன் குனித்து, வாளி வாயு வேகமுடன் விடுத்து,
எந்த எந்த உலகும் அப்பு மாரியால் இயற்றினன். 129

அருச்சுனன் வில் திறம் கண்டு வியந்து, அவுணர் மேலும் கடுகிப் பொருதல்

'தனித மேகம் அன்ன தேரும் ஒன்று; தா இல் குன்றுபோல்
குனிதரும் கடுப்பின் மிக்க கொடிய வில்லும் ஒன்று: மேல்
கனிவுறும் சரக் குழாம் விசும்பின் எல்லை காட்டும்; ஓர்
மனிதன் வின்மை நன்று, நன்று!' என மதித்து, வஞ்சரே, 130

புருவ வில் வளைவுற, விழி கனல் பொதுள,
கரு முகில் அனையவர் கடுகினர் முடுகி,
சர மழை, இடி மழை, தழல் மழை, சொரியா,
பெரு மழை என நனி பிளிறினர் எவரும். 131

'இவர் உயிர் கவர்தர, இடம் இது' எனவே,
நவை அறு திறலுடை நகு சரம் உகையா,
அவரவர் அகலமும், அணி கிளர் கரமும்,
தவருடன் விழ விழ, ஒரு தனி பொருதான். 132

அவன் விடும் அடு கணை அடையவும், நொடியில்
பவனனது எதிர் சருகு என நனி பறிய,
கவனமொடு எழு பரி ரத கதி குலைய,
துவனியொடு எறி படை எதிர் எதிர் தொடவே, 133

வரி சிலை விறலுடை மகபதி மகனும்,
எரி விழி அவுணரும், முறை முறை இகலி,
பொருதனர்—ரகுபதி புதல்வனும் அடு போர்
நிருதரும் எதிர் பொரும் அமர் நிகர் எனவே. 134

அருச்சுனன் பாசுபதக்கணையால், காலகேயர்களை அழித்தல்

'இப் படைகளின் உயிர் அழிகிலர், இவர்' என்று,
அப் படைகளை ஒழிதர, அடல் அடையார்
மெய்ப் புகும் விறலது, விடையவன் அருளும்
கைப் பகழியை மனன் உற நனி கருதா, 135

முச் சிரம் உடையது, மூ-இரு திரள் தோள்
அச்சிரமுடன் எதிர் அழல் பொழி தறுகண்
நச்சு அரவு அனையது, நகம் இறும் முனைவாய்
வச்சிரம் அனையது, வருதலும் மகிழா, 136

பசுபதி அருளிய பகழி முன் வரலும்,
விசயனும் நறை விரி மலர்கொடு பரவி,
திசைதொறும் அமர் புரி திறலுடை வடி வேல்
அசுரர்தம் உடல் உக, அடலுடன் விடவே, 137

அக் கணை விசையுடன் அகல் வெளிமிசை போய்,
நக்கது, பிறை எயிறு இள நிலவு எழவே;
முக்கணும் அழல் உக, முரணொடு முடுகிப்
புக்கது, தனுசர்தம் உடல் பொடிபடவே. 138

மாருதம், விசையுடன் வடவனல் கொளுவி,
கார்தொறும் நிரை நிரை கடிகுவது அதுபோல்,
தேர்தொறும் அமர் புரி அவுணர்கள் தேகத்து,
ஓர் ஒரு கணை, ஒரு நொடியினில், உறவே, 139

அவுணர் பட்ட களத்தின் தோற்றம்

மகபதி அரி சிறை வரை நிகர் எனவே,
திகைதொறும் அவுணர்கள் சிரம் நனி சிதறி,
புகையொடு தெறு கனல் அகல் வெளி பொதுள,
கக படலமும் முறை கஞலின, களமே. 140

ஆடின அறுகுறை, அலகைகளுடன் நின்று;
ஓடின திசைதொறும், உகு குருதியின் நீர்;
நீடின பிணமலை, நிரை நிரை; நெறி போய்த்
தேடின, கதிர்களும், மிசை வழி செலவே. 141

மாதலி விசயனது அடி தொழுதலும், தேவர் முதலியோர்
பகை நீங்கியமை கண்டு மகிழ்தலும்

மா தவம் மிகு திறல் அசுரரை மறலிக்கு
ஓதனம் இடும் அவன் ஒரு சிலை வலி கண்டு,
ஆதபன் அருணனின் அணி கிளர் உயர் தேர்ச்
சூதனும், விசயனது இணை அடி தொழுதான். 142

தள்ளினர், தம துயர்; 'சலம் இனி இலது' என்று,
உள்ளினர், விசயனது உறுதியும் உரனும்;
அள்ளினர் அமுது என அகம் நனி மகிழா,
துள்ளினர், இமையவர், சுரபதி, முதலோர். 143

காலகேயரின் இரணியபுரமும் மறைதல்

தேன் அமர் கமலத்து ஓங்கும் திசைமுகன் வரத்தினுலோ,
மானவன் விசயன் உய்த்த வடி நெடுஞ் சரத்தினுலோ,
தானவர் தானை எல்லாம் மடிந்த அத் தளர்வினுலோ,—
போனது, கரந்து, வஞ்சர் இரணியபுரமும் மன்னே! 144

அருச்சுனன் இளைப்பாறி, தேர்மேல் வானுலகு செல்ல, சித்திரசேனன் முன்னே சென்று, இந்திரனுக்கு வெற்றிச் செய்தி தெரிவித்தல்

வாள் நகை தளவம் வாங்கும் அவுணர்தம் மகளிர் தெய்வப்
பூணொடு குழைகள் வாங்க, புனை வய வாகை வாங்கும்
நாண் உயர் தனுவின் வாங்கி, நயந்து இளைப்பாறி நின்முன்—
தூணொடு பறம்பு வாங்கும் சுடர் மணிக் கடகத் தோளான். 145

பார் கொண்டது, அசுரர் மெய்யில் பரந்த செங் குருதி வெள்ளம்;
கார் கொண்ட விசும்பு கொண்டது, அவர் பிணக் காயம்; வானோர்
ஊர் கொண்டது, உரிமையோடும் அவர் உயிர், மீண்டும்; என்றால்,
தார்கொண்ட அமரர்க்கு எவ்வாறு இவன் பகை தடிந்தது அம்மா!

இவ் வகை அசுர சேனை யாவையும் இரிய நூறி,
கொய் வரும் வரி வில் வீரன் குரகதத் தேர்மேல் கொண்டான்;
வை வரும் முனைவேல் சித்ரசேனன், வாசவனுக்கு ஓடி,
நைவரு துயரம் நீங்க, நவின்றனன், புரிந்த எல்லாம். 147

செய்தி அறிந்த இந்திரன் நகரை அலங்கரித்து, விசயனை எதிர்கொள்ளுதல்

சித்திரசேனன் மாற்றம் செவிக்கு அமுதாகக் கேட்டு,
பத்தி கொள் விமானச் சோதிப் பைம் பொன் மா நகரி கோடித்து,
எத் திசையவரும், ஏனை இமையவர் குழாமும், சூழ,
வித்தக விசயன்தன்னை விபுதர்கோன் எதிர்கொண்டானே. 148

கின்னரமிதுனம் இன் சொல் கீதங்கள் இனிது பாட,
துன்னி எங்கு எங்கும் சேரத் துந்துபிக் குழாம் நின்று ஆர்ப்ப,
பன்னஅரும் மறைகள் தெய்வ முனிவரர் பகர்ந்து வாழ்த்த,
மன்னவர் மன்னன்தன்னை வாசவன் தழுவிக் கொள்ளா, 149

யானைமேல் விசயனை நகர் வலம் செய்விக்க, அது தகாது என்ற விஞ்சையனுக்கு இந்திரன் அவனது உயர்வு எடுத்து உரைத்தல்

கையுடைக் கயிலை அன்ன கட கரிப் பிடரின் வைத்து,
மையுடைக் கொண்டல்வாகன், நகர் வலம் செய்த போதில்,
மெய்யுடைக் கலைகள் வல்லான் விஞ்சையன் ஒருவன் கண்டு,
'பொய்யுடைத் தலத்தோர்க்கு இன்ன பொறுக்குமோ? புனித!' என்றான்.

விஞ்சையன் உரைத்த மாற்றம் விபுதர்கோன் செவியில் சென்று,
நஞ்சு எனப் புகுதலோடும், நயனங்கள் செந் தீக் கால,
'நெஞ்சினில் அறிவு இலாதாய்! நீ இது கேட்டி!' என்னு,
மஞ்சு எனக் கரிய மெய்யான் மனம் கனன்று, இனைய சொல்வான்:

'ஆதி நாயகன், மா மாயன், அமரர்தம் துயரும் ஏனைப்
பூதல மடந்தைக்கு உற்ற புன்மையும் தீர்ப்பான் எண்ணி,
சீதைதன் கொழுநன் ஆன திண் திறல் இராமன் போல,
ஓத நீர் உலகில், மீண்டும் அருச்சுனன் உருவம் கொண்டான். 152

'ஆதலால், ''மனிதன்'' என்று, இவ் அருச்சுனன்தன்னை, இன்னே,
நீதியால், அமரர் யாரும் நெஞ்சினில் இகழல்' என்று,
மாதர்கள் வீதிதோறும் மலர் மழை சொரிந்து வாழ்த்த,
கோதிலா அமரர் கோமான், கொண்டு, தன் கோயில் சேர்ந்தான்.

இந்திரன் தனது சபையில் அருச்சுனனைப் பீடத்து அமர்த்தி, அவன்
போர் வன்மையைக் கூறுமாறு மாதலியிடம் வினவுதல்

அரிமுகக் கனக பீடத்து, அண்ணலை இருத்தி, அண்டர்
இரு புடை மருங்கும் நிற்ப, இந்திரன் இருந்த பின்னர்,
மருவு பொன் தடந் தேர் ஊரும் மாதலிதன்னை நோக்கி,
'புரி சிலை விசயற்கு உற்ற போர்த் தொழில் புகல், நீ!' என்றான்.

மாதலி விசயனது போர் வன்மையைப் புகழ்தல்

மற்று அவன் தொழுது போற்றி, 'வானவர் குழுவுக்கு எல்லாம்
கொற்றவ! என்னால் இன்று கூறலாம் தகைமைத்து அன்றால்;
உற்று எதிர் மூன்று கோடி அசுரரும், உடனே, சேர
இற்றது கண்டேன்; பின்னர், வில்லின் நாண் இடியும் கேட்டேன்!

'ஆயது நிகழ்ந்த பின்னர், அயன் அருள் வரத்தினாலே
ஏய வாள் வலியின் மிக்க இரணியபுரத்துளோரைத்
தீய வெம் பகழி ஒன்றால் செற்றனன், இமைப்பில், முற்றும்;
மாயமோ? மனிதன் வில்லின் வன்மையோ? தெரிந்தது இல்லை!'

தேவர்கள் விசயனுக்குப் பல படைகள் வழங்குதல்

என்றுகொண்டு, உயர் தேர்ப் பாகன் இசைத்தன யாவும் கேட்டு,
வன் திறல் அமரர் கோமான் மனம் மகிழ்ந்து இருந்தபோதில்,
துன்றிய அமரர் யாரும், தனித்தனி, சுருதியோடும்
வென்றிடு படையும், மற்றும் வேண்டுவ பலவும், ஈந்தார். 157

அருச்சுனன் தருமனிடம் செல்ல விடை கேட்க, இந்திரன் சில நாள்
தங்குமாறு கூறி, தனி மாளிகை முதலியன அளித்தல்

தேவர்பால் வரமும், எல்லாச் சிறப்பும், இன் அருளும், பெற்ற
காவலன், கடவுள் வேந்தன் கழல் இணை பணிந்து, போற்றி,
'தா வரும் புரவித் தானைத் தருமன் மா மதலை பொன்-தாள்
மேவர வேண்டும்; இன்னே விடை எனக்கு அருளுக!' என்றான். 158

மைந்தன் அங்கு உரைத்த மாற்றம் மனன் உற மகிழ்ந்து கேட்டு,
தந்தையும், 'இன்னம் சில் நாள் தங்குக, இங்கு' என்று ஏத்தி,
செந் திரு அனைய தோற்றத் தெய்வ மென் போக மாதர்
ஐந்தொடு ஆயிரரும், வேறோர் அம் பொன் மாளிகையும் ஈந்தான்.

விசயனது வெற்றியைத் தருமனுக்கு உரைக்குமாறு உரோமச முனிக்கு இந்திரன் சொல்ல, முனிவன் போதல்

வரோதயம் ஆன தெய்வ வான் படை மறைகள் பின்னும்
புரோசனப் பகைவற்கு ஈந்து, புரந்தரன் இருந்த பின்னர்,
சரோருகர் அண்டம் விண்டால், ஒரு மயிர் சலிக்கும் முன்கை
உரோமச முனியை நோக்கி, உரைத்தனன், உற்ற எல்லாம்: 160

'வரி சிலை விசயன் வந்து, வான் தவம் புரிந்தவாறும்,
அரிவை ஓர் பாகன் அன்பால் அவற்கு அருள் புரிந்தவாறும்,
இரிய என் பகையை எல்லாம் இவன் தனி தடிந்தவாறும்,
தருமனுக்கு உரைத்தி' என்ன, தபோதன முனியும் போனான். 161

# 14. முண்டகச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

மல் கொண்டு வகுத்தனைய சிகரத் திண் தோள்
வாள் அரக்கன் குலத்தோடும் மடிய, முன்னம்,
வில் கொண்டு, சரம் தொடுத்து, புரை இல் கேள்வி
விண்ணவர்தம் துயர் தீர்த்த வீர ராமன்,
கல் கொண்ட அகலியைதன் உருவம் மீளக்
கவின் கொள்ளக் கொடுத்த திருக் கமல பாதம்
சொல் கொண்டு, துதித்து, எழுந்து துள்ளி, நாளும்
தொழுமவரே, எழு பிறவித் துவக்கு அற்றாரே. 1

உரோமச முனி தருமனிடம் வந்து, இந்திரன் விருப்பின்படி விசயனைப் பற்றிய செய்தி தெரிவித்தல்

இப் பால், வெஞ் சிலை விசயன் துறக்கமீதில்
இந்திரன்தன் அருகு இருப்ப, இமையோர் ஊரில்,—
அப் பால், நல் தவம் புரியும் தழல் கூர் வேள்வி
அந்தணர்தம் குழாம் சூழ, அழகு ஆர் மண்ணில்
ஒப்பு ஆரும் இலாத மட மயிலினோடும்,
உயர் வனத்தினிடை, நாளும், ஒருநாள் போல,
தப்பாமல் அறம் வளர்க்கும் நீதி வேந்தும்,
தம்பியரும், புரிந்தது இனிச் சாற்றுகிற்பாம்; 2

விறல் விசயன்தனைப் பிரிந்த வருத்தம் மேன்மேல்
விஞ்ச, ஒரு தஞ்சம் அற வெம்பி, அம் பொன்
சிறகு இழந்த பறவை என, துணைவரோடும்
திறல் வேந்தன் சிந்தனை உற்று இருந்த காலை,
'பொறை, அறிவு, நிறை, தருமம், உடைய வாய்மைப்
போர் வேந்தே! அஞ்சல்!' எனப் புகழ்ந்து, வாழ்த்தி,
மறை ஒரு பொன் வடிவுகொடு வந்தது என்ன,
மா முனியும், இமைப்பினிடை வந்துற்றானே. 3

வந்த பெருங் கடவுள் முனி வரவு நோக்கி,
வாள் வேந்தும் தம்பியரும் மகிழ்ச்சி கூர்ந்து,
சிந்தை விழி மலரொடு பேர் உவகை பொங்க,
சென்று, எதிர் போய், வணங்குதலும், சிதைவு இலாத
அந்த முனிவரனும், அவர்க்கு அன்பால், துன்பம்
அணுகாத அந்தம் இலா ஆசி கூறி,
புந்தியுடன் அளித்த செழும் புனித கோலப்
புலித் தவிசின் இருந்து, அடைவே புகன்றான் எல்லாம்: 4

' ''வாள் விசயன் புரவிசயன்தன்னை நோக்கி
மன்னு தவம் புரிந்ததுவும்; மகிழ்ச்சி கூர்ந்து, அவ்
வேள் விசயம் தவிர்த்த பிரான் அருளால், வேண்டும்
விறல் படைகள் அளித்ததுவும்; விபுதர்கோமான்
நாள் விசயம் பெறக் கொடுபோய், உம்பர் ஊரில்,
நளி மகுடம் புனைந்ததுவும்; நாளும் தன் பொன்
தோள் விசயம் தொலைத்த திறல் அவுணர் சேனை
சுடு சரத்தால் தொலைத்ததுவும்; சூழ்ந்த யாவும்; 5

' ''தன் அருகே அமரர் எலாம் இனிது போற்ற,
தனஞ்சயன் அங்கு இருந்ததற்பின், தயங்கும் சோதி
மன்னும் எழில் காந்தர்ப்பம் என்னும் நாம
வரை வழியே வருவதுவும்; மருவு காதல்
உன்னுடைய பெருந் துயரம் தணியுமாறும்
உரைத்தருள்க'' என உம்பர் கோமான் உன்பால்
என்னை விடுத்தனன்; வந்தேன்' என்றான்—எல்லா
உலகும் முடிந்திடு நாளும் ஈறு இலாதான். 6

பாண்டவர் உரோமசன் காட்டிய வழியே உடன் சென்று,
காந்தர்ப்ப மலையில் தங்கியிருத்தல்

மா முனிதன் மொழி கேட்டு, புரை இல் கேள்வி
மன்னவனும் தம்பியரும் வருத்தம் மாறி,
காமியம் என்று உரைபெறு சீர் வனத்தை நீங்கி,
கடவுள் முனிதனொடும் அக் கணத்தின் ஏகி,
நாம மதுகர தீர்த்தம் முதலா உள்ள
நல் தீர்த்தம் எவற்றிலும் போய், நானம் ஆடி,
தாம மதி தவழ் சிகரத்து இந்த்ர நீல
சயிலத்தின் சுனைகெழு தண் சாரல் சார்ந்தார். 7

அக் கிரியின் புதுமை எலாம் அடைவே நோக்கி,
அங்கு உள்ள அருவி நறும் புனலும் ஆடி,
'தக்க புகழ் விசயன் அருந் தவம் புரிந்த
சாரல் இது' என்று, தவ முனிவன் சாற்ற,
மிக்க களி உவகை நிகழ் நெஞ்சர் ஆகி,
விசயனைக் கண்டனர் போல விரும்பிக் கண்டு,
தொக்க முனி கணத்தொடும் போய், தசாங்கன் என்னும்
தொல்லை முனி தபோவனத்தின் சூழல் சார்ந்தார். 8

அங்கு உள்ள தபோதனர்தம் பாதம் போற்றி,
அவர் உரைத்த ஆசியும் பெற்று, அப் பால் ஏகி,
எங்கு உள்ள கடவுள் நெடும் புனலும், யாறும்,
எப் புனலும், தப்பாமல் இனிதின் ஆடி;
வங்கம் எறி கடல் கடைந்து, வானோர்க்கு எல்லாம்
மருந்து விருந்து அருளிய மந்தரமும் காட்டி;
கங்கை நதி குதி பாயும் சிகரச் சாரல்
காந்தர்ப்பம் எனும் வரையும் காட்டினனே. 9

அந்த உயர் கிரியின் நெடுஞ் சாரல்தோறும்
அருந் தவம் செய் முனிவரரை அடைவே காட்டி,
'இந்த வனம்தனக்கு எமை ஆள் உடையான் குன்றம்
ஈர்-ஐம்பது யோசனை' என்று எடுத்துக் காட்டி,
கந்தன் என எக் கலையும் வல்ல ஞானக்
கடவுள் முனி விசாலயன் ஆலயமும் காட்டி,
'உந்து நெறிச் செங்கோலாய்! இதனில் ஓர் ஆண்டு
இருத்தி' என, உரோமசனும் உரைத்திட்டானே. 10

அங்கே இருக்கும் காலத்தில், பொற்றாமரை மலர் ஒன்று திரௌபதியின் முன் வீழ, அதனை நோக்கி அவள் சிந்தித்தல்

அம் முனிவன் மொழிப்படியே, வரம்பு இல் கேள்வி
அறன் மகனும், தம்பியரும், அரிவையோடும்,
எம் முகமும் தம் முகமா, இலையும் காயும்
இனிய கனியுடன் அருந்தி, இருக்கும் நாளில்,
மைம் முகில் வாகனன் கனக முடிமேல் அம் பொன்
வனச மலர் ஒன்று தழல்-மயில் முன் வீழ,
செம்மலரைச் செங் கண் மலர்தன்னால் நோக்கி,
செய்ய மலர்க் கரத்து ஏந்தி, சிந்தித்தாளே: 11

'இந்த மலர் உலகு அனைத்தும் ஈன்ற கோல
எழில் மலரோ? இரவி திருக் கரத்தில் வைகும்
அந்த மலரோ? அமுதில் பிறந்த பாவை
அமர்ந்து உறையும் அணி மலரோ? அவனிதன்னில்
எந்த மலரும் கருக, கமழாநின்றது,
எங்கு எங்கும் இதன் மணமே!' என்று போற்றி,
கந்தவகன் மைந்தனுக்கு, கனலோன் நல்கும்
கனங்குழை சென்று, உவகையுடன் காட்டி, சொல்வாள்: 12

திரௌபதி அம் மலரை வீமனுக்குக் காட்டி, 'இதை ஒத்த மலர் கொணரவேண்டும்' என்ன, அவன் உரோமசமுனிவனிடம் மலரைப் பற்றிக் கேட்டு அறிதல்

'இம் மலருக்கு ஒரு மலரும் அவனிதன்னில்
எதிர் இல்லை!' என்று, இதழ் ஆயிரத்தின் மிக்க
அம் மலரைக் கைம்மலரில் கொடுத்து, 'ஈது ஒக்கும்
அணிமலர் நீ எனக்கு அருள வேண்டும்' என்ன,
செம் மலையின் திகழ் சிகரத் திண் தோள் வீமன்
தெய்வ முனி புங்கவன்தன் திருத் தாள் போற்றி,
மென் மலரைத் திருமுன்பு வைத்து நின்று,
வினவினான்; அவனும் எதிர் விளம்புவானே: 13

'என், பலவும் யாம் உரைப்பது, இந்தப் பூவின்
இயல்பினையும், பெருமையையும்? இயக்கர்தங்கள்
மன் பதியில் உளது; அன்றி, வரம்பு இலாத
வான் உலகில் உளது; என்னின், மற்றும் உண்டோ?
உன் பிறருக்கு இது கோடற்கு எளிதோ? மாயன்
உம்பர் பதி புகுந்து, ஒரு பைந்தோகைக்கு ஈந்த
பின்பு, இதனைக் கண்டு அறிவார் இல்லை' என்று
பேசினான்—யாவரொடும் பேச்சு இலாதான். 14

வீமன் மலர் கொணர அளகைக்குத் தனியே செல்லுதல்

'இயக்கர் பதிதனில் உளது' என்று இசைத்த மாற்றம்
இன்புறக் கேட்டு, ஒருகாலும் ஈறு இலாத
வயக் கொடு வெஞ் சராசனமும், வன் போர் வாகை
மறத் தண்டும், கரத்து ஏந்தி, 'மடந்தை! நெஞ்சில்
துயக்கம் அற, இக் கணத்தில் தெய்வ போக
சுரபி மலர் அளித்திடுவன்' என்று சொல்லி,
சயக் கரடம் உறு தறுகண் சயிலம் அன்ன
சதாகதி-மைந்தனும், இமைப்பில் தனிச் சென்றானே. 15

வீமன் வேகத்துடன் காஞ்சனவனம் கடந்து, கதலி வனத்தைக் காணுதல்

கைக் காற்றும், தொடைக் காற்றும், மூச்சுக் காற்றும்,
கனக மணி வரை போலக் கவின்கொள் சோதி
மெய்க் காற்றும், பரந்து எழுந்து, வனத்தில் உள்ள
வெற்பும் நெடுந் தரு அனைத்தும் ஒடிந்து வீழ,
எக் காற்றும் உடன்று எழுந்த உகாந்த காலம்
என, சென்றான்—இன வளைகள் எண் இல் கோடி
செய்க் காற்றும் செழுந் தரளம் நிலவு வீச,
சேதாம்பல் பகல் மலரும் செல்வ நாடன். 16

இலங்கை நகர்தன்னில் விறல் இராம தூதன்
இகல் அரக்கன் சோலை எலாம் இறுத்தவாபோல்,
நிலம் குலுங்க, வரை குலுங்க, வனத்தில் உள்ள
நெடுந் தருக்கள் யாவையும் வேருடன் நேராக்கி,
விலங்கினொடு புள் இனமும் உடையத் தாக்கி,
மெய்ந் நடுங்கி, தடுமாறி, வெம்பி உள்ளம்
கலங்கி விழ, கனம் அதிர்வ போல ஆர்த்து,
காஞ்சனப் பேர் எழில் வனமும் கடந்திட்டானே. 17

அவ் வனத்தை இகந்து, அனந்த காதம் ஏகி,
அங்கு இடைவிட்டு, உத்தரத்தின் அப்பால் ஏகி,
மெய் வனப்பும் அடல் வலியும் மிகுத்த வாகை
வீமன் எனும் பேர் திசையின் விளக்கும் வீரன்,
மை வனப்பினுடன் படியும் சினைக் கை வாச
மலர்ப் பொழிலின் ஒரு மருங்கே, மத்த மாவின்
கை வனப்பும், தழை செவியும், மருப்பும், சேரக்
கவின் அளிக்கும் குலைக் கதலிக் காடு கண்டான். 18

கதலி வனத்து எதிர்ந்த காவலரது ஆவி போக்கி, வீமன் சிங்கநாதம் செய்ய, யாவும் கலக்கமுறுதல்

அக் கதலி வனம்தனக்குக் காவல் ஆய
அடல் அரக்கர் அநேகருடன் அடு போர் செய்து,
மிக்க தலம் குருதியினுல் வெள்ளம் ஆக்கி,
வெகுண்டவர்தம் ஆவியையும் விண்ணில் ஏற்றி.
திக்கு அதலம் முதலாம் எவ் உலகும் ஏங்க,
சிங்கநாதமும் செய்தான்; செய்த காலே,
உக்க, தலைமணி உரக ராசற்கு; என்ருல்,
உம்பர் படும் துயரம் எம்மால் உரைக்கல் ஆமோ? 19

வரை கலங்க, வனம் கலங்க, கலங்குருத
மண் கலங்க, விண் கலங்க, மகர முந்நீர்த்
திரை கலங்க, திசை கலங்க, ஈறு இலாத
செகம் கலங்க, உகம் கலங்க, சிந்தை தூயோர்
உரை கலங்க, உளம் கலங்க, துளங்கி மெய்யில்
ஊன் கலங்க, விலங்கொடு புள்இனங்கள் யாவும்
நிரை கலங்க, உலகின் உயிர் படைத்ததம்மில்
நிலை கலங்காதன உண்டோ, நிகழ்த்தின் அம்மா! 20

சிங்கநாதம் கேட்ட அனுமன் வீமன் செல்லும் வழியில் முந்தச் சென்று இருத்தல்

அந்த ஓதை, அப் பொழிலிடைத் தவம் புரிந்தருளும்
மந்தராசலம் அனைய தோள் மாருதி கேட்டு,
விந்தம் அன்ன திண் புயாசல வீமனுக்கு எதிர் போய்,
முந்த மற்று அவன் வரு நெறி அதனிடை முன்னி, 21

வெற்பு இரண்டினில் வேலை முன் கடந்த தாள் நீட்டி,
பொற் புயாசலம் இரண்டையும் இரு வரை போக்கி,
அற்ப வாழ்வுடை அரக்கன் மா நகர் அழல் ஊட்டும்
சிற்ப வாலதி திசை எலாம் சென்று நின்று ஓங்க, 22

எம்பிரான்தனக்கு ஒழிய மற்று யாவர்க்கும் தெரியாச்
செம் பொன் மா மணிக் குண்டலம் இரு புறம் திகழ,
விம்ப மால் வரைமீது ஒரு மேருவே ஒக்கும்
அம் பொன் மால் வரை இருந்தென இருந்தனன், அனுமான். 23

அனுமனைக் கண்டு வீமன் திகைத்து நிற்க, அனுமன், 'நீ யார்?' என்ன, வீமனும் மாருக அங்ஙனமே வினவுதல்

குகைத் தடங் கிரி அனைய தோள் கொட்டி, ஆர்த்து, உரப்பி,
நகைத்து, நாகமும் நாகமும் நடுங்கிட நடந்து,
மிகைத்த வாள் அரிபோல் வரும் வீமன்,—முன் கண்டு,
திகைத்து நின்றனன்—மறமையும் திறமையும் உடையான். 24

'அண்டர், தானவர், அரக்கரும், அணுகுறு வனத்தில்
எண் திசாமுகம் எங்கணும் இரிந்திட, ஆர்த்து,
மண்டி மேல்வரும் மானுடன் ஆர் அடா?' என்றான்—
சண்ட வாயுவின் தனயனை, மற்று அவன் தமையன். 25

தம்முன் ஆகிய வானரம் சாற்றிய உரை கேட்டு,
'எம் முன் ஆகி வந்து இருந்த நீ யார்கொல்?' என்று இசைத்தான்—
தெம் முன் ஆயினும், செவ்வி மென் போக மா மகளிர்-
தம் முன் ஆயினும், நாத் தவறா அடல் வீமன். 26

'வல்லையேல் என் வாலைக் கடந்து போ' என அனுமன் கூற, 'அனுமன் வால் அன்றி, ஒரு குரங்கின் வாலைக் கடப்பது அரிதோ?' என வீமன் கூறுதல்

'துன்னும் வெஞ் சிலை வலிகொலோ? தோள் இணை வலியோ?
என்னை, ''நீ, புகல், ஆர் அடா!'' என்பது இங்கு எவனோ?
உன்னை நீ அறியா நெறி உணர்வு இலா மனிதா!
மன்னும் வால்தனைக் கடந்து போ, வல்லையேல்' என்றான். 27

உரம் கொள் வீமன் அம் மாருதி உரைத்த சொல் கேளா,
'வரம் கொள் வார் சிலை இராகவன் மாப் பெருந் தூதன்,
தரங்க வாரிதி தாவும் என் தம்முன், வால் அன்றி,
குரங்கின் வால் இது கடப்பது இங்கு அரியதோ? கூறாய்!' 28

அனுமன், 'மனிதனைச் சுமந்த அனுமனை என்னுடன் ஒப்புக் கூறலாமோ?' என்ன, வீமன் இராகவ அனுமர்களின் பெருமையைக் கூறுதல்

என்று தன் திருத் துணைவன் நின்று இசைத்தது கேட்டு,
'நன்று, நன்று! நீ நவின்றது நன்று!' என நகையா,
'துன்று வார் சிலை மனிதனைச் சுமந்து, தோள் வருந்தும்
புன் தொழில் சிறு குரங்கையோ, என்னொடும் புகல்வாய்?' 29

குரக்கு நாயகன் அவ் உரை கூறலும், கேட்டு,
தரைக்கு நாயகன் தடம் புயம் குலுங்கிட நகையா,
'அரக்கர் நாயகன் ஊர் அழல் ஊட்டி, இவ் அகிலம்
புரக்கும் நாயகன்தன்னையோ, இழித்து நீ புகல்வாய்!' 30

'யார்?' என அனுமன் மீண்டும் வினவ, வீமன் தன்னை இன்னான் என அறிவித்தல்

பின்னும், வார் சிலை இராகவன் பெருமையும், அனுமான்
மன்னு தோள் இணை வலிமையும், மாருதி சாற்ற,
அன்ன போழ்தினில், அகம் மகிழ்ந்து, அருளுடன் நோக்கி,
'என்ன காரியம் வந்தது, இங்கு? யார்கொல் நீ?' என்றான். 31

தாம மாருதி உரைத்த சொல் தம்பியும் கேட்டு,
'நேமி மா நிலம் புரக்கும் நல் நீதி வேல் தரும
நாம நாயகற்கு இளையவன், நரனுக்கு மூத்தோன்,
வீமன், வாயுவின் புதல்வன் யான்' என்றனன், விறலோன். 32

'இராகவன் சீர்த்தியை யார் சொல அறிந்தாய்?' என்ன, 'பரத்துவாசன் சொலக் கேட்டேன்' என்று வீமன் விடை பகர்தல்

அன்ன வாசகம் அவன் உரைத்தலும், இகல் அனுமான்,
கன்ன பாகமும் சிந்தையும் முந்துறக் களித்து,
'மின்னு வார் சிலை இராகவன் மெய்ப் பெருஞ் சீர்த்தி
சொன்னவாறு நன்று! உனக்கு இது ஆர் சொற்றவர்?' என்றான். 33

'வரத்தினால் அரு மறையினால் வார் சிலை பயிற்றும்
பரத்துவாசன் முன் பகர்தரக் கேட்டனன், பலகால்,
திரத்தினால் உயர் இராகவன் சிலை வலி' என்றான்—
உரத்தினால் ஒரு வீரரும் ஒப்பு இலா உரவோன். 34

அனுமன் தன்னைப் பற்றிய உண்மையை வெளியிட, வீமன் அவன் திருவடிகளில் வணங்குதல்

குந்தி கான்முளை கூறிய வாசகம் கேட்டு,
புந்தியால் உயர் அஞ்சனை புதல்வனும் புகல்வான்:
'சிந்து சீகரச் சிந்து முன் கடந்து, செந் தீயால்
உந்து வாள் வலி நிருதர் ஊர் ஒருங்கு சுட்டவனும், 35

'அந்த வார் சிலை இராமனுக்கு அடிமையாய், என்றும்
சிந்தையால் அவன் திருப் பதம் சிந்தைசெய்பவனும்,
உந்தை ஆகிய வாயுவுக்கு உற்பவித்தவனும்,
இந்த வாழ்வுடை அனுமனே' என்றனன்—இகலோன். 36

என்ற வாசகம் இரு செவிக்கு அமுது எனக் கேட்டு,
துன்று நெஞ்சினில் உவகையன், துதித்தனன், துள்ளி,
'என்றும் யாம் முயல் தவப் பயன் இருந்தவா!' என்னா,
சென்று, இறைஞ்சினன், திரைக் கடல் கடந்த சேவடிமேல். 37

தம்பியை அனுமன் தழுவி, அவன் தனியாக வனம் வந்தது பற்றி வினவ, வீமன் மலரின்பொருட்டு வந்தமை கூறுதல்

தம்பியைத் துணைத் தாழ் தடக் கைகளால் எடுத்து,
வம்பு சேர் மணி மால் வரை மார்பு உற அணைத்து,
'பம்பு செந் தழற் கானிடைப் பதமலர் சிவப்ப,
எம்பி! நீ தனி நடந்தவாறு என்கொல்?' என்று இசைத்தான். 38

'தாயத்தாரும் வல் வஞ்சனைச் சகுனியும் கூடி,
மாயத்தால், ஒரு கவறுகொண்டு, எங்கள் மண்கொண்டு,
நேயத்தால், நெடுங் கானகம் நேர்ந்தனர்' என்றான்—
சீயத்தால் அரசு இழந்திடும் சிம்புள் ஏறு அனையான். 39

'திகந்தம் எட்டினும் தன் மணம் ஒல்லெனச் செல்ல,
சுகந்த புட்பம் ஒன்று யாம் உறை வனத்தினில் தோன்ற,
தகைந்த அப் புது மலர்தனைத் தழல்-மகள் காணா,
''அகைந்த இத் துணை மலர் எனக்கு அருளுதி'' என்றாள். 40

'ஆதலால் இவண் யானும் இன்று அணுகினன்' என்று,
நீதியால் உயர் தம்முனை நெடுந்தகை போற்ற,
கோது இலாத அக் குரிசிலும் குமரனை நோக்கி,
'தீது இலாய்! இது கேட்க!' எனச் செப்புவன் மாதோ: 41

மலர் இருக்கும் இடத்தையும், பெறுதற்குரிய வீமனது தகுதியையும் அனுமன் உரைத்தல்

'அரு நிதிக் கிழவன்தனது அளகை மா நகரில்,
மரு மிகுத்த நீள் மஞ்சன வாவியின் கரையில்,
தரு மலர்ப் பெருஞ் சோலையில் தங்கும், அம் மலர்; சென்று,
உரிமை உற்று, அது கோடல், மற்று உம்பர்க்கும் அரிதால். 42

'ஈறு இலா இகல் அரக்கரோடு இயக்கர்தம் காவல்,—
கூறும் வாசகம் பொய்ப்பவர், கூர் தவம் முயலும்
பேறு இலாதவர், பேர் அருள் இலாதவர், பிறிதும்
ஆறு இலாதவர்தமக்கும்,—அங்கு அணுகுதல் அரிதால். 43

'அறிவும், வாய்மையும், தூய்மையும், அன்பும், இன் அருளும்,
பொறையும், ஞானமும், கல்வியும், புரி பெருந் தவமும்,
நெறியும், மானமும், வீரமும், நின்ன; ஆதலினுல்
பெற, உனக்கு அரிது ஆயது ஏது?' என்றனன், பெரியோன். 44

உற்ற துணைகள் 'எனக்கு வாய்த்துள்ளமையால், யாவர் காவல் புரியினும் மலரைக் கவர்வேன்' என வீமன் உரைத்தல்

முன்னவன் புகல் உறுதி கூர் மொழி எலாம் கேட்டு,
பின்னவன் தொழுது, இவை இவை பேசினன் பின்னும்:
'மன்னர் மன்னவன் அறம் உண்டு; மறம் உண்டு; வழக்கே
உன்னின், உன் அருள் உண்டு; திண் தோள் உரம் உண்டால்; 45

'தேவர் காக்கினும், தெயித்தியர் காக்கினும், சிறந்த
மூவர் காக்கினும், முறை முறை மொழிந்த மூஉலகில்
யாவர் காக்கினும், இக் கணத்து இயக்கர் ஊர் எய்தி,
காவின்மேல் பயில் கடி மலர் கவருவேன்' என்றான். 46

'வேண்டும் வரம் கேள்' என்ற அனுமனிடம், 'பாரதப்போரில் விசயனது தேர்க் கொடியில் நீர் உவந்து ஆடவேண்டும்' என வீமன் வேண்டுதல்

ஆண்டு, அவன் புகல் உறுதியும் ஆண்மையும் கேட்டு,
நீண்ட தோள் வய மாருதி நெடிது உவந்தருளி,
பாண்டவன்தனைப் பண்புறப் பரிவினுல் நோக்கி,
'வேண்டும் நல் வரம் வேண்டுக, ஈண்டை நீ!' என்றான். 47

'நெடிய கானகம் நீங்கி, யாம் நெறியின் நேரலரைக்
கடிய வெஞ் செருப் புரி பெருங் குருதி வெங் களத்தில்,
அடிகள் ஆங்கு எழுந்தருளி வந்து, அருச்சுனன் தடந் தேர்க்
கொடியின்மீது நின்று, உவந்து, கூத்து ஆடுதிர்' என்றான். 48

அனுமன் வரம் கொடுக்க, பின்னும், வீமன் அனுமனிடம், 'இலங்கையில் தீ இட்ட நாளில் கொண்ட பெரு வடிவைக் காட்டுக!' என வேண்டுதல்

நீட்டும் அவ் வரம் அவனுக்கு நேர்ந்தனன், அனுமான்;
மீட்டும் நல் வரம் ஒன்று முன் வேண்டினன், வீமன்;
'ஈட்டும் மா நிதி இலங்கை தீ இட்ட நாள், இசைந்த
மோட்டு உருத்தனைக் காட்டுக!' என்று இறைஞ்சினன், முதல்வன்.

அனுமன் தன் பெரு வடிவைக் காட்டுதலும், அதனைத் தன் கண்ணால் முற்றும் காண முடியாது, அவ் உருவைச் சுருக்கிக்கொள்ள வீமன் வேண்டுதலும்

என்று, அடல் வீமன் இசைத்திடும் முன்னம்,
ஒன்றி, இவ் ஏழ் உலகங்களும் ஒன்றாம்
மன்று உள தார் புனை வாமனனைப்போல்,
நின்று நிமிர்ந்தனன், நித்தமும் உள்ளான். 50

படியினது எல்லை, பதத்தினது எல்லை;
மடியினது எல்லை, அவ் வானினது எல்லை;
அடியினது எல்லை, அளப்பரிது; என்றால்,
முடியினது எல்லை மொழிந்திடல் ஆமோ? 51

அந்தரம் எங்கும் அடக்கிய மெய்யில்
சுந்தர வாலதி சுற்றிய தோற்றம்,
முந்திய நீள் உடல் வாசுகி, முன் நாள்,
மந்தர வெற்பை வளைத்தது மானும். 52

நீள் அகல் வானம் நெருங்க, மருங்கே
தோள் புறம் வாலதி சூழ்தர நிற்போன்,
நாளொடு, தாரகை, ஞாயிறு, முதலாம்
கோள் அணி சூழ்வரு குன்றமும் ஒத்தான். 53

இவ் வகை முன்னம் இலங்கை எரித்தான்
பை வரு நாகர் பணம் சுழிய, திண்
மெய்வகை கொண்டது கண்டு, வியந்தார்—
மை வகை சேர் அகல் வானவர் எல்லாம். 54

மேல் அளவாது, விளங்கிய சொல் மெய்ந்
நூல் அளவாகிய நுண் அறிவோர்போல்,
மால் அளவு அன்றி வணங்குதல் இல்லான்
கால் அளவு அல்லது, கண்டிலன்,—வீமன். 55

அருக்கனின் மும் மடி ஆர் ஒளி வீசும்
உருக் கிளர் மேனியை ஊடுற நோக்கா,
வெருக்கொடு, தாள்மிசை வீழ்ந்தனன், 'மீண்டும்
சுருக்குக!' என்று, துதித்தனன்,—வீமன், 56

அனுமன் பெரு வடிவைச் சுருக்கிக்கொள்ள, வீமன் அவனை வணங்கிப் பிழை பொறுக்க வேண்டுதல்

அந்தமும் ஆதியும் அற்றவருக்கு அம்
செந்தமிழ் செய்து திரட்டினரைப்போல்,
அந்தர வானும் அகண்டமும் ஒன்று
உந்திய மேனி ஒடுக்கினன் அம்மா! 57

இந்திரசாலம் இயற்றினரைப்போல்,
மைந்தொடு தொலேயில் வடிவு கொள் பொழுதத்து,
'அந்தம் இலாய்! அடியேன் பிழை எல்லாம்
புந்தி உறாது, பொறுத்தருள்!' என்றான். 58

வீமனுக்கு அனுமன் அருள் செய்தல்

திருவடிதன் இரு சேவடியில் போய்
மரு வடி தார் புனே மாருதி தொழவே,
அருள் வடிவாகி, அகண்டமும் எங்கும்
ஒரு வடிவு ஆனவன் உற்று, உரைசெய்வான்: 59

'உன் அருகே பயில் உம்பியரோடும்,
மின் அருகே பயில் வேந்தொடும், வாழ்வுற்று,
என் அருகே வருக!' என்றனன்—என்றும்
தன் அருகு ஏதம் உறாத தவத்தோன். 60

அளகைக்குச் செல்லும் வழியை வீமன் கேட்க, அனுமன் வழி கூறி, மலர் பெறுதற்குரிய உபாயத்தையும் தெரிவித்தல்

அங்கு அவன் அம் மொழி கூறலும், 'ஐயா!
எங்கணும் நின் உயர் இன் அருள் உண்டே;
பங்கய மா நிதி வாழ் பதி எய்த,
சங்கை இல் நல் நெறி சாற்றுக!' என்றான். 61

என்றலும், 'இந்த வனத்தினது எல்லே
ஒன்றிய யோசனே ஓர் இரு நூறு
சென்றபின், யோசனே சிற்சில சென்றால்,
மன்றல் மலர்ப் பொழில் வாவியில் மன்னும்; 62

'அப் பொழில் காவல் அரக்கர் அநேகர்;
எப் பொழிலும் திறை கொள்ளும் எயிற்றார்;
துப்புடனே அவர் ஆவி தொலேத்தால்,
செப்பிய மா மலர் சென்று, உறலாகும். 63

'அல்லது, நீடு அளகாபதிதானும்
மெல்லியலும் பொழில் மேவிய போது,
நல் உறவு ஆகி நயத்தொடு சென்றால்,
மல்லல் மலர் தருவோடு வழங்கும்.' 64

### அனுமன் விடை கொடுக்க, வீமன் செல்லுதல்

உறுதியும், ஒன்னலர் ஊக்கமும், ஏகும்
நெறியினது எல்லையின் நீர்மையும், நெறியில்
குறிகளும், யாவையும், அன்பொடு கூறி,
அறிவுடையான் விடை அன்பொடு அளித்தான். 65

மொய்ம்புடை மாருதி தாள் இணை முன்னு,
'வெம்பிய கானிடை மேவிய பயன், இங்கு,
எம்பெருமான்! உனை எய்தினன்' என்னு,
நம்பியும் நாழிகை ஒன்றில் நடந்தான். 66

### சக்கரமலை கடந்து, திவாகரமலையைச் சேர்ந்தபோது, புண்டரீகன் என்னும் அரக்கன் வீமனுடன் மாறு கொண்டு எழுதல்

அக்கணம் ஆசுவின் ஆசுகன் மைந்தன்
மிக்கு உயர் விஞ்சையர் நாட்டிடை விட்டு,
திக்கு உறை நாகர் திரண்டு துதிக்கும்
சக்கர நாகம்அதன் புடை சார்ந்தான். 67

தவா மறைவாணர் தவம் புரியும் தண்
கவானுடை நீள் குகரத்து உயர் கலை சேர்
உவா மதி சூழ்வரும் ஓங்கலொடு ஒக்கும்
திவாகர மால் வரை சேர்ந்திடும் எல்லை, 68

அஞ்சன மேகமொடு ஆலம் அளாவி,
வஞ்சனை கொண்டு, வகுத்தன மெய்யான்;
குஞ்சிகள் வானினிடைக் கொடி ஓடி,
செஞ் சுடர் கால்தருகின்ற சிரத்தான்; 69

குளிர் வரை ஒன்றிய நீள் குகரம்போல்
அளவு இல் பெரும் பகு வாய்அதில், மதியின்
பிளவு எனலா வளையும், பிறழும், தண்
இள நிலவு என்ன இலங்கும், எயிற்றான்; 70

ஆறு-இரு காதம் அகன்று உயர் தோளான்;
நூறு-இரு காதம் நொடிக்குள் நடப்பான்;
ஏறுஉடையான் முதல் யாவர்கள் எனினும்,
மாறொடு காதி மலைந்திட வல்லான்; 71

எண் திசையும் திறை கொண்டு, இகலோடும்
புண்டரிகப் பெயர் நாடு பொறித்தோன்;—
திண் திறல் மாருதி, சேய் வருவானைக்
கண்டனன், அங்கு அழல் கான்றிடு கண்ணன். 72

உருத்து, முகில் குலம் உருமுடன் மட்க,
சிரித்து, இதழ் கவ்வி, எயிற்று இணை தின்று, ஆங்கு
அரித் துவசன்தனை நோக்கி, அரக்கன்
கருத்துடன் நின்று, இவை கட்டுரை செய்வான்: 73

'யான் உறை கானகம் என்று, இமையோரும்,
தானவர்தாமும், இதற்கிடை சாரார்;
மானுடன் நீ! இவண் வந்தது, சுவையாம்
ஊன் இடவோ? இஃது உரைத்திடுக!' என்றான். 74

வென்றி அரக்கன் விளம்புதல் கேளா,
குன்றன தோள்கள் குலுங்க நகைத்து, ஆங்கு,
'உன்தனது ஆவியும் உண்டிட வந்தேன்'
என்றனன், முன்னம் இடிம்பனை வென்றோன். 75

வீமன் புண்டரீகனுடன் பொர, அசரீரி எழுதல்

மற்று அது கூற, மறத்தொடு அரக்கன்
உற்று, எதிர் ஓடி, உறுக்கிய போது, அக்
கொற்றவனும் கதை கொண்டு உடன் மண்டிப்
பற்றினன், வந்தவன் ஆவி பறிப்பான். 76

குன்றொடு குன்று அமர் கூடுவதேபோல்
நின்று, நெடும் பொழுதாக மலைந்தும்,
வன் திறலும், தம வாகுவின் வலியும்,
ஒன்றும் இளைத்திலர்,—ஒத்த உரத்தார். 77

எல்லை இலா அமர் இங்கு இவர் இவ்வாறு
ஒல்லையின் மோதி உடன்றிடு போழ்தில்,
தொல்லையில் ஓர் முனி சொல்லிய சாபம்
மல்லல் அருபி வழங்கியது அன்றே: 78

'ஒன்றினும் ஆவி உனக்கு இவன் ஒல்கான்;
துன்றிடு தோள்மிசை தோமரம் ஏவி,
கொன்றிடுவாய், இனி; வாயு குமாரா!'
என்றது, வானிடத்து அசரீரி. 79

அசரீரி வாக்குப்படி, வீமன் கதையை அவன் தோளில் எறிந்து வீழ்த்துதல்

அங்கு அசரீரி அரற்றிய மாற்றம்
சங்கை உறுது சமீரணி கேட்டு,
பங்கய நாம நிசாசர பதிதன்
துங்க வயப் புயமேல் கதை தொட்டான். 80

தொட்ட கொடுங் கதை தோள் உறும் முன்னர்ப்
பட்டு, உளம் நொந்து பதைத்து, அடல் வஞ்சன்
வட்ட நெடுங் கடலூடு மருத்து அன்று
இட்ட பெருங் கிரி என்ன, விழுந்தான். 81

ஏற்றத்தோடு இகலி, இவ்வாறு இடை வழிஅதனில் வந்து,
சீற்றத்தோடு எதிர்ந்த வெம் போர்த் திண் திறல் அரக்கன்தன்னை,
பாற்றுக்கும், பகு வாய்ப் பேய்க்கும், பருந்துக்கும், வருந்துகின்ற
கூற்றுக்கும், விருந்து செய்து, அக் கொற்ற வேல் குரிசில் போனான்.

வீமன் அளகாபுரியில், தான் நாடி வந்த மலர் இருக்கும் பொழிலைக் காணுதல்

எண் திசை அமரர் போற்றும் இந்து மால் வரை சென்று எய்தி,
புண்டரீகன்தன் நாடு பொருக்கென நோக்கி, அப்பால்
தெண் திரை அளித்த தெய்வச் செல்வ மா நிதிகள் ஓங்கும்,
அண்டர் மா நகரும் ஒவ்வா, அளகை மா நகரம் கண்டான். 83

அந்த மா நகரின் தென்பால் அகல் விசும்பு உற நின்று ஓங்கும்
விந்தமாம் என்ன நின்று, விளங்கு தோள் வீமசேனன்,
முந்தை மாருதி நண்போடும் மொழி வழி எய்தி, அந்தக்
கந்த வான் பொழிலும், நல் நீர்க் கடி மலர்த் தடமும், கண்டான்.

பொழில் காவலாளர் மானுட நாற்றம் அறிந்து திரண்டு எழுந்து,
வீமனைச் சூழ்ந்து, அதட்டி வினவுதல்

ஆயிடைக் குறுகும் எல்லை,—அப் பொழில் துப்பின் காப்போர்;
சேயிடைப் பரந்த மார்பர்; சேணிடைக் கடந்த தோளர்;
வாயிடைப் பிறைகள் என்ன வளைந்த வாள் எயிற்றர்; வஞ்சத்
தீயிடைச் சோரி தோய்ந்து திரண்டெனச் சுழல் செங் கண்ணர்; 85

சூழ் இருட் பிழம்பு நஞ்சு தோய்ந்தன்ன துவக்கர்; உன்னின்
நாழிகை ஒன்றின் எல்லா உலகையும் நலியும் ஈட்டார்;
வாழி மந்தரம் மத்தாக, வாசுகி கயிறு, மாயோன்
ஆழி நீர் கடைந்த நாளும் அமுது எழக் கடைந்த வீரர்; 86

மறத்தொடு வஞ்சம் மானம் நண்பு என வளர்த்து, நாளும்,
அறத்தொடு பகைக்கும் நெஞ்சர்; பிலத்தினும் அகன்ற வாயர்;
புறத்தினில் முகத்தர்; மார்பில் புழை முழை மூக்கர்; இன்ன
திறத்தினர்; குஞ்சிச் செந் தீச் சிரத்தினர்; வரத்தின் மிக்கோர்; 87

கரங்கள் ஆயிரத்தர்; நண்ணும் கால்கள் ஆயிரத்தர்; குஞ்சிச்
சிரங்கள் ஆயிரத்தர்; பூழைச் செவிகள் ஆயிரத்தர்; வென்றி
உரங்கள் ஆயிரத்தர்; ஊழி தவம் முயன்று உரிமை பெற்ற
வரங்கள் ஆயிரத்தர்; மிக்க மறைகள் ஆயிரத்தர் மன்னோ; 88

வைத் தாரை வாளம், வில், வேல், மழு, எழு, திகிரி, சூலம்,
கைத் தாரைபடக் கொண்டு, என்றும், கண் இமையாது காப்போர்;
மைத் தாரை மாரி ஒப்பார்;—மானுட நாற்றம் கேட்டு,
மொய்த்தார், அக் கடவுள் வாச மொய்ம் மலர்ச் சோலை எல்லாம்.

மண்டி எங்கு எங்கும் மேன்மேல் மறி கடல் முகக்கும் நீலக்
கொண்டலின் குமுறி ஆர்த்து, குறுகிய, கொடிய நீசர்,
சண்ட வேகத்தின் எய்தும் சதாகதி-தனயன்தன்னைக்
கண்டனர், சூல பாசக் காலனைக் கண்டது அன்னார். 90

'எற்ற!' என்பாரும், 'சூலத்து எறிய!' என்பாரும், 'எய்திப்
பற்ற!' என்பாரும், 'ஆவி பறிக்க!' என்பாரும், 'யாக்கை
சுற்ற!' என்பாரும், 'சென்னி துணிக்க!' என்பாரும், ஆகி,
உற்றனர், அரக்கர் நூறுயிரர், உருத்து, உரைக்கலுற்றார்: 91

'இந்திரன் முதலா உள்ள இமையவர்தாமும், இந்தக்
கந்த வான் சோலை கண்ணால் காணவும் கருதி நைவார்;
வந்தது என், மதி இலாத மானுடா? உன்தன் ஆவி
சிந்து முன் செப்புக!' என்னாத் தெழித்தனர், தீயோர் எல்லாம். 92

வீமன் அவர் உரை கேட்டுச் சிரித்து, 'உம்மை எல்லாம் கொன்று,
மலர் கொய்து போக வந்தேன்' எனல்

அருள் இலா அரக்கர், இவ்வாறு, அகங்கரித்து, அரற்றும் இந்தப்
பொருள் இலா உரைகட்கு எல்லாம் உத்தரம் புகலான் ஆகி,
இருள் இலா முத்தம் அன்ன எயிற்று அரும்பு இலங்க நக்கான்—
தெருள் இலா மதனை முன்னம் எரித்திடும் சிவனைப் போல்வான். 93

'தனித மேகம்போல் ஆர்க்கும் நுமது உயிர் சரத்தின் சாய்த்து, இப்
புனித வான் பொழிலில் வாசப் புது மலர் கொய்ய வந்தேன்;
குனி தவர் கொண்டு, முன் நும் குலம் கரிசு அறுத்த வீரன்
மனிதனோ, வான் உளானோ? மறத்திரோ? வஞ்சர்!' என்றான். 94

அரக்கர் வீமனைச் சூழ்ந்து பொர, அவன் அவர்களை எல்லாம்
தண்டினால் அழித்தல்

மா விந்தம் அனைய பொன்-தோள் மாருதி வாய்மை கேட்டு,
'பூ இந்த வனத்தில் நீயோ பறித்தி!' என்று அழன்று, பொங்கி,
'நா, இந்த உரை தந்து, இன்னும் இருப்பதோ, நரனுக்கு?' என்னா,
கோவிந்தன் எடுத்த குன்றில் கொண்டலின் குழாத்தின் சூழ்ந்தார்.

வான்கம் மறைய வீசி, வான் படைக் கலங்கள், வால-
சேனனே முதலா உள்ள சேனையின் தலைவர் ஆர்த்தார்;
கானுடைத் தொடையலானும் காலனுக்கு ஆவி அன்ன
தானுடைத் தண்டம் ஏந்திப் புகுந்தனன், சலிப்பு இலாதான். 96

தண்டினால், அவர்கள் விட்ட படை எலாம் தகர்த்து, மீள
மண்டினான், உழுவை கண்ட வாள் உகிர் மடங்கல் ஒப்பான்;
மிண்டினார் உடலம் யாவும் மெய் தலை தம்மின் ஒன்றக்
கிண்டினான்; மூளைச் சேற்றில் கிடத்தினான், படுத்து மன்னோ. 97

தாக்கினான், சிலரைத் தண்டால்; தடக் கையால் சிலரை வானில்
தூக்கினான்; கறங்கின் நின்று சுழற்றினான், சிலரை; எற்றி
நூக்கினான், சிலரை; தாளால் நொறுக்கினான், சிலரை; வாளால்
வீக்கினான், சிலரை; ஆவி வேறு இட்டான், சிலரை;—வீமன். 98

பிடித்தனன், சிலரை; அள்ளிப் பிசைந்தனன், சிலரை; மண்ணில்
அடித்தனன், சிலரை; அங்கம் அசைத்தனன், சிலரை; எண்ணம்
முடித்தனன், சிலரை; போக முகிழ்த்தனன், சிலரை; கண்டம்
ஒடித்தனன், சிலரை; அஞ்ச உறுக்கினன், சிலரை மன்னோ. 99

கரக் கழுந்து அதனினானும், கன வரைத் தோளினானும்,
வரக் கொடுங் கதையினானும், மராமரப் பணையினானும்,
உரக் கடுங் காலினானும், ஒருக்கினான்; உரைப்பது என்னோ?—
அரக்கரை என்றால், பின்னை விடுங்கொலோ, அனுமன் பின்னோன்?

பின்னர் எதிர்ந்த நூறாயிர அரக்க வீரரை வீமன் வில்லினால் பொருது அழித்தல்

இப்படி எதிர்ந்த சேனை யாவையும், இமைக்கும் முன்னம்,
துப்புடன் தொலைத்து, வாயு சுதன் நின்ற உறுதி நோக்கி,
மைப் படி வரைகள் போல்வார், வாள் எயிற்று அரக்கர், பின்னும்,
கைப் படை கொண்டு, நூறாயிரர் ஒரு கணத்தில் சூழ்ந்தார். 101

அவர் வெகுண்டு, அழன்று, மேன்மேல் அலை கடல் போல ஆர்த்து,
பவர் கொண்ட பனகம் என்ன, சூழ்வரும் பரிசு பாரா,
கவர் கொண்ட தொடையலானும் கதை ஒழிந்து, இலங்கு செங்கைத்
தவர் கொண்டு, நெடு நாண் அண்டம் தகர்தரத் தழங்க ஆர்த்தான்.

அன்ன நாண் ஓதை, எங்கும், அண்டமும், பொதுளத் தாக்க,
மன்னு நாகங்கள் எட்டும் மதம் புலர்ந்து உயங்கி வீழ,
துன்னும் வாய் நஞ்சு கக்கி, சுழன்று, மண் சுமக்கும், கொற்றப்,
பன்னகாதிபனும், உள்ளம் பதைத்து, வெம் படங்கள் சோர்ந்தான்,

உரம் படச் சரங்கள் மேன்மேல் உறுக்கி, வெல் வீமன் உந்த,
சிரங்களில், தோளில், மார்பில், கண்களில், செருகச் சென்று,—
கரன் படைக் குழாத்து, முன்னம் காகுத்தன் கதிர் கொள் கூர் வாய்ச்
சரம் பட, தளர்ந்தது என்ன,—தளர்ந்தது, அத் தளர்வு இல் சேனை.

சக்கரம், சூலம், பாசம், தண்டம், வேல், கப்பணம், வாள்,
முற்கரம், கணையம், விட்டேறு, எழு, கொழு, முசுண்டி, குந்தம்,
எக் கரங்களினும் ஏந்தி, யாவரும் இவன்மேல் ஏவி,
அக் கணம்தன்னில், மீண்டும் அகங்கரித்து, ஆர்த்த காலை, 105

அப் படைத் தொகைகள் எல்லாம் அறுத்து அறுத்து, அவர்கள் தம்தம்
மெய்ப் படச் சரங்கள் சிந்தி, சிரங்கள் வெவ்வேறது ஆக்கி,
இப்படிக்கு அரக்கர் சேனை யாவையும் துணித்து, மீண்டும்
செப்படிப்பவரின் நின்று, சிரித்தனன்,—சிங்கம் போல்வான். 106

காவலாளர் குபேரனிடம் ஓடி நிகழ்ந்தன தெரிவிக்க, அவன் வெகுண்டு,
வீமனைக் கட்டிக் கொணருமாறு சங்கோடணனை ஏவுதல்

அந்த வயப் படை அவ்வாறு ஆதல் கண்டு,
கந்த மலர்ப் பொழில் காக்கும் காவலாளர்,
புந்தி மயக்கு உற நொந்து, புகுந்த எல்லாம்
முந்தி, இயக்கர் பிரானுக்கு, ஓடி, மொழிந்தார்: 107

'எம் பெருமான்! இது கேட்டி!' என்று இறைஞ்சி,
'வம்பு அவிழ் சோலையிடத்து ஓர் மனிதன் வந்து,
பம்பிய சேனையிடத்து, ஏழ் மதமும் பாயும்
உம்பலின், வாவி புகுந்து, உழக்குகின்றான்.' 108

என்று, அவர் வாய் கை புதைத்து, இசைத்தல் கேட்டு,
குன்றுடன் ஒன்று புயம் குலுங்க நக்கு,
கன்றிய சிந்தையன், அங்கி கால் செங் கண்ணன்,
ஒன்றிய மங்குலின் நீடு உருத்து, உரைத்தான்: 109

தன் துணை நின்ற சங்கோடணனை நோக்கி,
வன் திறல் கூர் அடல் வேக மனிதன்தன்னை,
சென்று, அவன் ஆவி செகுத்தல் செய்யாது, இன்னே
துன்று புயங்கள் துவக்கி, எய்தச் சொன்னான். 110

சங்கோடணன் சேனைகளுடன் சென்று வீமனை வளைத்தல்

அந்த இயக்கர் பிரானும் அக் கணத்தில்
வந்து, நிதிக் கிழவன்தன் பாதம் மன்னி,
துந்துபி கொட்ட, அளப்பு இல் சேனை சூழ,
உந்தி, இமைப்பில் மலர்த் தண் சோலை உற்றான். 111

மன்னு குருக்கள் குலத்து மன்னர் மன்னன்-
தன்னை, இயக்கர் குலத்தில் எண்ணும் தலைவர்,—
துன்னு படைக் கடலோடும், பொங்கிச் சூழ்ந்தார்—
மின்னி முழக்கி இடிக்கும் மேகம் போல்வார். 112

மான அரக்கர் குலத்தை வானில் ஏற்றி,
ஊனொடு இரத்தம் உகுக்கும் சோலையூடே,
தானை வளைத்திட, நின்ற சாப வீரன்,
யானைஇனங்கள் வளைக்கும் யாளி போன்றான். 113

வீமன் சரங்களைப் போக்கி, சேனைகளை நிலைகெட்டோடச் செய்ய, சங்கோடணனும் புறங்கொடுத்தல்

விண்ணில் இயக்கர் படைக் கலங்கள் வீசி,
எண் இலர் சுற்றும் வளைத்து எதிர்ந்த போதில்,
வண்ண வரிச் சிலை கோலி, வாயு மைந்தன்,
துண்ணென உட்க, வடிச் சரங்கள் தொட்டான். 114

தொட்ட சரங்கள் துளைத்து, மார்பும் தோளும்
முட்ட, விசும்பினது எல்லை எங்கும் மூட,
பட்டது ஒழிந்து, படாத சேனை எல்லாம்
கெட்டன; பட்டது உரைக்க உண்டோ, கேட்கின்? 115

மன் அளகாபதி சேனை நாதன் மார்பில்
தன் அடையாளம் உற, தண்டாலே தாக்க,
மின் இடை நாகம் வெருக் கொண்டென்ன மீண்டான்,
தன் எதிர் வீரர் இலாத சங்கோடணன்தான். 116

'வீமனுடன் சமாதானம் செய்யவேண்டும்' எனச் சங்கோடணன் குபேரனுக்குக் கூறுதல்

கருத்தொடு சென்று, அளகேசன் பாத கமலம்
சிரத்தினில் வைத்து, இவை நின்று செப்பலுற்றான்—
'உருத்திரன் மானுட உருவம் கொண்டது; அன்றேல்,
வரத்து இவன் மானுடன் அல்லன்; மன்ன!' என்றே. 117

'பண்புடன், இக் கணம், வேண்டும் நிதிகள் பலவும்
நண்பொடு அவற்கு எதிர் சென்று நல்காய்என்னின்,
விண் புகும் இப் புரம்; வேந்த!' என்றான்—மெய்யில்
புண் புக, உட்கி, உழைக்கும் வேழம் போல்வான். 118

வீமன் விருப்பம் அறிய, குபேரன் தன் மகன் உருத்திரசேனனை அனுப்புதல்

கோதில் இயக்கன் யாவும் கூறக் கேட்டு,
தாதை, உருத்திரசேனன்தன்னை நோக்கி,
'மாதர் மலர்ப் பொழிலூடு வந்த மனித்தன்
ஏதில் அருத்தியன் என்னக் கேட்டி!' என்றான். 119

உருத்திரசேனன் வீமனைக் கண்டு வினவி, அவன் வந்த காரியம் அறிந்துகொள்ளுதல்

தந்தை உரைத்தருள் வாய்மை தலைமேல் கொள்ளா,
மைந்தனும், அப் பொழிலூடு சென்று மன்னி,
சிந்தி, அரக்கர் சிரங்கள் குன்றம் செய்து,
கந்தனின் நிற்கும் மறத்தினனைக் கண்டான். 120

கண்டு, மருத்து அருள் காளைதன்னை நோக்கி,
'வண்டும் இடைப் பயிலாத காவில் வந்து,
மிண்டும் அரக்கர் குலத்தை வீணே ஆவி
கொண்டு படுத்தனை; யார் நீ? கூறுக!' என்றான். 121

'நின் அளகாபதி மைந்தர் சாபம் நீக்க,
முன் மருதூடு தவழ்ந்த வாகை மொய்ம்பற்கு
இன் அருள் மைத்துனன்; மண்ணில் யாரும் போற்றும்
மன்னவன்; வீமன்; மருத்தின் மைந்தன்' என்றான். 122

'மாயவன், அற்புதன், நாதன், கண்ணன், வையம்
தாயவன், மைத்துனன் ஆகின், ஐய! தனி நீ
ஏய வனத்தினில் வந்தது என்கொல்?' என்றான்;
தூயவன், உற்றன யாவும் தோன்றச் சொன்னான். 123

உருத்திரசேனன் வீமன் விரும்பிய மலரை வழங்கி, தந்தையிடம் சென்று,
செய்தி தெரிவித்து இருத்தல்

மற்று அவன் அவ் உரை கூற, மகிழ்வொடு அம் தண்
பொன்-தரு நண்பின் வழங்கி, 'போக!' என்று அருளி,
வெற்றி உருத்திரசேனன் மீண்டு வந்து, ஆங்கு
உற்றது, தாதைதனக்கு உரைத்து, இருந்தான். 124

மலர் பெற்ற வீமன் பொய்கையில் நீராடி, இளைப்பாறுதல்

அண்ணல்-தருப் பெற்ற பின், அந்த வய மீளி,—அக் காவினில்,
தண் நித்திலப் பொய்கை படிவுற்று, இன் அமுது அன்ன தண்ணீர் குடித்து,
எண் அற்ற கழுது ஆடல்அது கண்டு, இருந்து, அங்கு இளைப்பாறினான்—
மண்ணுக்கும் விண்ணுக்கும் மறலிக்கும் உறவான வடி வாளினான்.

தருமன் வீமனைக் காணாது, திரௌபதியிடம் வினவி, நிகழ்ந்தன அறிதல்

இவ்வாறு இவன் செய்கை; இவன் வந்தது அறியாமல், எழில் கூர் வனத்து
அவ்வாறு பயில்கின்ற அருள்வாரிதான் உற்ற அது கூறுவாம்:
கை வார் கதைக் காளையைக் கண்ணுறச் சூழல் காணாது, முன்
செவ் வாய் மடப் பாவை நின்றாளை, 'நீ கூறு' எனச் செப்பினான்.

வான்நின்று மலர் ஒன்று தன் முன்பு மின் போல வந்துற்றதும்,
தான் நின்று, 'இம் மலர் போல மலர் தேடி நீ இன்று தருக!' என்றதும்,
தேன் நின்ற தொடையானும் அளகேசன் நகர்மீது தனி சென்றதும்,
கான் நின்ற குழலாளும், மன்னற்கு முன் கட்டுரைத்தாள்அரோ.

விசயன் பிரிவால் உளம் நொந்திருந்த தருமன், வீமன் பிரிவு கேட்டு மேலும் வருந்துதல்

கருமத்தின் வடிவான மட மங்கை இவ்வாறு கழறுத முன்,
உருமுத் துவசன் மைந்தன் முன் போக, அன்போடும் உளம் நொந்துளான்,
மருமத்து வேல் தைத்த புண்மீது கனல் உற்றது என, மாழ்கினான்—
தருமத்தின் உரு ஆகி, எழு பாரும் நிலையிட்ட தனி ஆண்மையான்.

கடோற்கசனைத் தருமன் நினைந்த அளவில், அவன் வந்து தருமனை வணங்க,
வீமனைத் தேடி அவனுடன் அளகை நோக்கிப் புறப்படுதல்

வாளிப் பரித் தேர் மன் இவ்வாறு துயர் எய்தி, மனனம் செய,
கூளிக் குழாம் வானின்மிசை உய்த்தது என்ன, கொடித் தேரின்மேல்
காளக் கருங் கொண்டல்போல் வந்து, வீமன் தரும் காளை, முன்,
ஆளிப் பெருங் கொற்ற வெற்றித் திருத்தாதை அடி மன்னினான்.

மின் தாரை பட வெண் நிலா வீசு மேகம்கொல் என வந்து, முன்
நின்றானை முகம் நோக்கி, நீதிக்கு ஓர் வடிவாம் மன் இவை கூறுவான்:
'உன் தாதை தமியேனொடு உயவாமல், ஒரு வாச மலர் கொண்டிடச்
சென்றான்' என, சிந்தை நொந்து, அன்புடன் பின்னும் இவை செப்புவான்:

'எம்பிக்கு ஓர் இடையூறு வந்து எய்தும் முன், யாம் இயக்கேசன் ஊர்
வம்புற்ற மலர் வாவி சென்று எய்தி, விரைவோடு வருவோம்' என,
வெம்புற்ற பைங் கானினிடை, மின்னும், இளையோரும், உடன் மேவவே,
கம்பிக்கும் நெஞ்சோடு அவன் தேரின்மீது அக் கணத்து ஏறினான்.

கரக் கும்ப கம்பக் கடா யானை மன்னன் கருத்தோடு சென்று,
அரக்கன் தடந் தேரில் அவனோடும் நீடு அந்தரத்து ஏகினான்—
பரக்கும் பெரும் புண்யமும் பாவமும், தாவில் பகிரண்டமும்
புரக்கும் பரஞ்சோதியும் பொங்கும் மா மாயையும், போலவே. 132

கடோற்கசன் தேரில் வான் வழியாக நாலு நாழிகைக்குள் வீமன் இருந்த
சோலையைத் தருமன் அடைதல்

கான் எல்லை செல்லாது, கதிரோன் நெடுந் தேர் என, கங்கை சேர்
வான் எல்லை உற ஓடி, ஒரு நாலு கடிகைக்குள், வயம் மன்னு தேர்
ஊன் எல்லை இல்லாது புக மண்ட, மிக மண்டும் உதிரத்துடன்,
தேன் எல்லை இல்லாது உகுக்கும் பெருஞ் சூழல் சென்று உற்றதே.

தருமனும் கடோற்கசனும் வீமனைக் கண்டு இன்புறுதல்

ஆனைக் குழாம் நூறும் அரி ஏறு எனப் பொங்கி, அளகேசன் வெஞ்
சேனைக் குழாம் நூறி, அதனூடு பயில் வாயு-சிறுவன்தனை,
தானைப் பெருங் கொற்ற மன் கண்டு, தான் உற்ற தளர்வு ஆறினான்;
ஏனைத் திருத் தாதையைக் கண்டு, தேர்நின்று இழிந்து, இன்புறா,

மலர் கொண்டு பாதம் வணங்கிய வீமனைத் தருமன் தன்
ஏவலின்றி வந்தமை குறித்துச் சினத்தல்

மைக் காள முகில் அன்ன மகனும் தன் அடி மன்ன, வய வீமனும்
கைக் கானின் நறை வாச மலர் கொண்டு, அறன் காளை கழல் நல்கியே,
முக் காலும் வலம் வந்து, முறையோடு தொழுவானை, முகம் நோக்கி நின்று,
எக்காலும் நா வந்தது இசையாத இசையோனும் இவை கூறுவான்:

'என் ஏவலால் அன்றி, இமையோரும் எய்தாத இக் காவில், நீ
மின் ஏவலால் வந்து, விரகாக வினை செய்த இது மேன்மையோ?
உன் ஏவல் புரிவாரும் உளர் உம்பிமார்' என்று உருத்தான்அரோ—
தன் ஏவலால் இந்த உலகு ஏழும் வலம் வந்த தனி ஆழியான். 136

சினம் ஆறி, தருமன் வீமனுடன் கடோற்கசன் தேரில் ஏறி,
தம்பியர் இருக்கும் வனத்தை அடைதல்

என்று இந்த உரை கூறி, முனிவு ஆறி, இறையோனும், இகலோனுடன்
சென்று, அம் தண் மலர் வாவி படிவுற்று, வாசத் திருத் தார் புனைந்து,
அன்று அந்த இடம் விட்டு, இமைப்போதில், அத் தேரின்மிசை ஏறியே,
மின் தந்த இடையாளும் இளையோரும் உறை கானினிடை மேவினான்.

உரோமச முனிவனை வணங்கி, திரௌபதி மகிழ மலர் அளித்து,
கடோற்கசனுக்கு விடை கொடுத்து அனுப்புதல்

மேவி, பெருந் தெய்வமுனி பாதமலர் சென்னிமிசை வைத்து, மென்
காவிக் கயல் கண் இணைச் சேயிதழ்ப் பாவை களி கூரவே,
வாவிச் செழுந் தாம மலர் நல்கி, ஒல்காது வலி கூரும் நல்
ஆவிக்கு இன் அமுதான நிருதற்கு விடை அன்று அளித்தான்அரோ.

திரௌபதியும் தருமன் முதலியோரும் வனத்தில் வாழ்ந்த வகை

மின் புரை மருங்குல் மின்னும், வேந்தரும், அந்தக் கானில்
அன்புடை முனிவன் கூற, அவன் மலர்ப்பாதம் போற்றி,
துன்பமும் துனியும் மாறி, நாள்தொறும் தோகைபாகன்
தன் பெருங் கதையும் கேட்டு, தங்கினர் என்ப மாதோ. 139

# 15. சடாசுரன் வதைச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

அழுதும், வாள் முறுவல் அரும்பியும், களித்தும்,
ஆடியும், பாடியும், மகிழ்ந்தும்,
தொழுதும், ஆதரித்தும், விழுந்தும், மேல் எழுந்தும்,
துதித்திட, தன் பதம் தருவான்—
முழுதும் ஆய், ஓங்கும் முச்சுடர் ஆகி,
மூலம் ஆய், ஞாலம் ஆய், விண் ஆய்,
எழுத ஒண்ணு மறைக்கும், எட்ட ஒண்ணு வடிவத்து
எம்பிரான், உம்பர் நாயகனே. 1

முனிவர் விலங்குகளினல் துன்புற்று, தருமனிடம் அபயம் புக, அவன்
அவர்களது குறை போக்க உடன்படுதல்

இந்த நீள் வனத்தில் மன்னவர் இவ்வாறு
இன்பம் உற்று இருந்த அந் நாளில்,
அந்த மா வனத்தின் சூழலில் பயிலும்
அருந்தவ முனிவரர் பலரும்,
தந்தி, பேர் உழுவை, ஆளி, எண்கு, இவற்றல்
தாம் இடர் உழந்து, மெய் தளர்ந்து,
வந்து, 'மா மகிபர்க்கு அபயம்!' என்று, அவர் வாழ்
வனத்திடைப் புகுந்து மன்னினரால். 2

அருந் தவ முனிவர் எனைப் பலர், இவ்வாறு,
'அபயம்!' என்று அழுங்கு சொல் கேட்டு,
பெருந் திறல் அரசன் அவர் பதம் வணங்கி,
'பேசுக நும் குறை!' என்ன,
பொருந்திய கொடிய விலங்கினல் தமக்குப்
புகுந்துள யாவையும் புகன்றே,
'வருந்திய துயரம் தவிர்த்தி, நீ!' என்றர்;
மன்னனும், அக் குறை நேர்ந்தான். 3

முனிவர் துயர் தீர்க்க வீமனை அனுப்பி, தருமன் இருந்த பொழுது,
சடாசுரன் அங்கு வந்து வஞ்சனை புரிதல்

மறத்துடன் தொழுது, வணங்கி முன் நின்ற
வாயுவின் மதலையை நோக்கி,
'திறத்தகு முனிவர் இடுக்கண் நீ, ஐய!
சென்று தீர்த்திடுக' என்று ஏவி,
அறத்தினது உருவாய் அகண்டமும் புரக்கும்
அரசன் ஆங்கு இருந்துழி, வந்து,
புறத்து ஒரு நிருதன் புகுந்த வஞ்சனையும்,
புரிந்ததும், புகலலாம் அளவோ? 4

சடாசுரனின் தோற்றம்

தோள் இரண்டினும் நாள்தொறும் இரண்டு அம் தண்
சுரும்பினை விரும்பினன் சுமந்து,
தாள் இரண்டு உடையது ஒரு கருங் குன்றம்
சரிப்பபோல், அகண்டமும் சரிப்பான்;
கோள் இரண்டு அஞ்சி, பிறை இரண்டு, அகல் வான்
குகையிடைப் புகுவதே போல,
வாள் இரண்டு அன்ன எயிறு இரண்டு ஒளி கூர்
வாள் நிலா வழங்கிய வாயான்; 5

முருக்கின் நாள்மலரும் கறுத்திடச் சிவக்கும்
மொய் அழல் பெய் செழுங் கண்ணன்;
அரக்கினுல் உருக்கிக் கம்பி செய்தென்ன
அவிர் பொலம் குஞ்சியன்; வஞ்சத்
திருக்கினுல், அறங்கள் யாவையும் செகுக்கும்
தீயவன்; தீமையே புரிந்து,
தருக்கினுல் அமரர் யாரையும் செகுக்கும்
சடாசுரன் எனும் பெயர்ச் சழக்கன்— 6

சடாசுரன் திரௌபதியை வஞ்சமாய் வானத்தில் கொண்டு செல்ல,
நகுல சகாதேவர் வில்லேந்தி அவனைத் தொடர்தல்

அந்தணர் வடிவம் கொண்டு, இலங்கையில் வாழ்
ஆதி வாள் அரக்கனைப் போல,
செந் தழல் அளித்த மட மயில் இருந்த
சிற்ப வண் சாலையின் எய்தி,
கொந்து அவிழ் அலங்கல் கொற்றவர் அறியா-
வகை ஒரு கோள் மறை பிதற்றி,
பைந்தொடிதனைக் கொண்டு, அந்தரம்தன்னில்
பறந்தனன், பழி உணராதான். 7

'அபயம்!' என்று அவள் அந்தரத்தின்மீது அரற்றும்
அவ் உரை கேட்டு, மாத்திரிதன்
உபய மைந்தரும் வார் சிலை கரத்து ஏந்தி,
உருத்து எழுந்து, உரும் என ஓடி,
இபம் நடுங்கிட, முன் வளைத்திடும் கொற்றத்து
யாளிபோல் இரு புறம் சூழ்ந்து,
நப முகில் என்ன மின்னெடும் பெயர்வான்-
தனக்கு எதிர் நின்று, இவை நவில்வார்: 8

நகுல சகாதேவர் நிருதனைப் பழித்துக் கூறி, சரமாரி ஏவ, அரக்கனும் கனன்று எதிர்கின்ற எல்லையில், மீண்டு வரும் வீமன் காணுதல்

'மறையவர் வடிவம் கொண்டு வந்து, அருள் இல்
வஞ்ச! நீ வஞ்சனையாக,
பிறர் பெருந் தாரம் வௌவி, அந்தரத்தில்
பெயர்வது, பெருமையோ? பித்தா!
நெறி அலா நெறி செய்து, உன் குலத்து ஒரு போர்
நிருதன் முன் பட்டது நினையாய்;
முறை அலாது இயன்று, உன் உயிரினை முடிக்கும்
முரணுடைத் தறுகண் மா மூர்க்கா!' 9

என்று இவ்வாறு உரைத்து, சரத்தின் மா மாரி
இருவரும் விரைவுடன் ஏவ,
கன்றி, வாள் அரக்கன் கனம் என அதிர்ந்து,
கண் சிவந்து உருத்து எழும் எல்லை
ஒன்றி வாழ் மறையோர் அருந் துயர் ஒழித்து, ஆங்கு
ஒரு நொடிப் பொழுதினில் மீளும்
வென்றி வாள் வீமன், உற்றதும், நிருதன்
வெகுள்வதும், விசும்பிடைக் கண்டான். 10

வீமன் சினம் மிக்கு, சடாசுரனை நெருங்கி அடர்த்தல்

கண்டனன், இரண்டு கண்களும் கருத்தும்
கனன்று, செந் தீச் சுடர் கால,
கொண்ட வெஞ் சினத் தீக் கதுவி, எண் திசையும்
குலைகுலைந்து உடன் வெரூஉக் கொள்ள,
அண்டமும் குலுங்க நகைத்து, எதிர்ந்து, உரப்பி,
ஆர்த்தனன்; அழன்று, தோள் கொட்டி,
மண்டி, மேல் நடந்தான்; உகாந்த காலத்து
மருத்தென, மருத்தின் மா மைந்தன். 11

'பகன், விறல் இடிம்பன், பண்பு இல் புண்டரீகன்,
இவர் உயிர் பறித்து, அளகேசன்
நகரிடை அரக்கர் யாரையும் சேர,
நல் உயிர் ஒல்லையில் செகுத்து,
வகைபட மறலியுடன் உறவு ஆக்கி,
வான் உலகு அளித்தனன்; நின்ற
சிகை உனது உயிரும் இக் கணத்து அளிப்பன்,
தென்புலக் கிழவனுக்கு!' என்ன, 12

அழன்ற அசுரன் திரௌபதியை விடுத்து, வீமனுடன் பொருது அழிதல்

நெடும் பணைப் பொரு இல் மராமரம் ஒன்று
நெறியிடை நேர்ந்தது; அங்கு அதனைப்
பிடுங்கினன்; விசும்பில் எறிந்து, அவன்தன்னைப்
பிளந்தனன்; பிளந்த அப் பொழுதில்,
அடும் படைத் தடக் கை அரக்கனும் திருகி,
அணங்கை விட்டு, அக் கணத்து அழன்று,
படும் பணைக் குன்றம் ஒன்று வேரோடும்
பறித்து, அவன்மேல் பட எறிந்தான். 13

விட்ட குன்றினைத் தன்மேல் படாவண்ணம்
விசும்பிடைப் பொடிபடக் கதையால்
தொட்டனன்; பின்னும், விசும்பில் நின்றவன்தன்
தோள் இணை ஒசிதரத் தாவி,
கட்டினன், குறங்கைக் குறங்கினால் வீசி,
கம்பம் உற்று, அகிலமும் கலங்கக்
கிட்டினன்; தலத்தின்மிசை அடல் அரக்கன்
கீழ்ப்பட, மேற்பட விழுந்தான். 14

முன்னம் வாள் எயிற்று ஓர் அரக்கனை, வெள்ளி
மால் வரை முனிந்தது என்று, அதற்குப்
பொன்னின் மால்வரை ஓர் அரக்கனைத் தானும்
புவிப்படுத்து, அரைப்பதே போல,
கன்னம் வாய் நெரியக் கரங்களால் மலக்கி,
கழுத்தையும் புறத்தினில் திருப்பி,
துன்னு தோள் இணையும் தாளும் வன் நெஞ்சும்
சுளிதரத் தாளினால் துகைத்தான். 15

விழுந்த வாள் அரக்கன் தருக்கு நெஞ்சு ஒடிந்து,
வெகுண்டு, இவன்தனைத் தளி, மீண்டும்,
எழுந்து, தோள் கொட்டி, ஆர்த்து, அழன்று, உரும்ஏறு
எனக் கொதித்திடுதலும், வீமன்,
அழுந்த வெவ் விரலால் பிடித்து, அவன் அகலத்து
அடிகொடு மிதித்து, வெண் பிறையின்
கொழுந்துபோல் எயிறு ஓர் இரண்டையும், கஞ்சன்
குஞ்சரம் எனப் பிடுங்கினனால். 16

புலவு கால் வயிர வாள் எயிறு இரண்டும்
முதலொடும் போன வாள் நிருதன்,
நிலவு இலா நிசியும், மின் இலா இடிகொள்
நீல மா முகிலேயும், நிகர்த்தான்;
குலவு தோள் வாயுகுமரன்மேல் மீளக்
கொதித்து எழுந்து, இரு கரம் கொண்டு,
மலேயின்மேல் உரும் உற்றென்ன, மற்று அவன்தன்
மார்பகம் சுழிதரப் புடைத்தான். 17

முட்டியால் வஞ்ச மூர்க்கனும் சமர
மொய்ம்பனும், முறை முறை ஆக,
மட்டியே முதலா உள்ள மல் தொழிலின்
வல்லன வல்லன புரிந்து,
கட்டியே குறங்கு குறங்குடன் பகைப்ப,
கரம் கரத்தொடு நனி பிணங்க,
ஒட்டியே முடுகி, ஒருவருக்கு ஒருவர்
உரத்துடன் மோதினர், உரவோர். 18

முருக்கி, வெஞ் சமரம் இவ்வகை வெம் போர்
மொய்ம்பன் நீடு உயர் முழந்தாளால்,
அரக்கனே அகலத்து அமுக்கியிட்டு, அவன்தன்
அவயவம் யாவையும் ஒன்ருச்
சுருக்கி, அந்தரத்தில் சுழற்றினன், எறிந்தான்—
தொடு கழல் இராகவன் தம்பி
குரக்கு நாயகன்முன் விரலினல் தெறித்த
குன்று எனச் சிந்தி வீழ்ந்திடவே. 19

எறிந்த வாள் அரக்கன் விசும்பினது எல்லே
எவ்வளவு, அவ்வளவும் போய்,
மறிந்த மால் வரைபோல் மீளவும் புவிமேல்
மாசுணம் நடுங்குற வீழ்ந்து,
செறிந்த பேர் உடலும் ஆவியும் சிந்த,
தென் புலத்து இமைப்பினில் சென்ருன்;—
அறம் துறந்து என்றும் அடாதன செய்தால்,
ஆர்கொலோ, படாதன படாதார்? 20

திரௌபதியையும் தம்பியரையும் கொண்டு, தமது இருப்பிடத்தை வீமன் அடைதல்

வாள் அரவம் உண்டு உமிழும் வாள் மதியும், வஞ்சக்
கோள் உழுவை கொள்ள இடர் கொண்டு குலைகுலையா
நாள் வலியின் உய்ந்த மட நவ்வியும், நிகர்த்தாள்—
காள விடம் உண்டு, அமுது அடக்கும் இரு கண்ணாள். 21

அடாது செய் சடாசுரனது ஆவியையும், அம் பொன்
படா முலைகள் தாமுடைய பைந்தொடியையும், போய்த்
தடா, அமர் விடாதுடைய தம்பியரையும், கொண்டு-
இடா;—விறல் கொள் மாருதி—இருக்கும் வனம் உற்றான். 22

வீமன் தருமனைத் தொழுது நிகழ்ந்தன கூற, தருமன் எல்லோருடனும்
பதரிகாச்சிரமத்தை அடைதல்

உற்றபடி தம்முன் இரு தாள் தொழுது உரைத்தான்;
மற்று அவனும் அங்கு உறையும் மா முனிவரோடும்
கொற்றம் மிகு தம்பியரொடும் குழுமி, அன்றே
நல் தபதி நாரணனது ஆச்சிரமம் நண்ணி, 23

அங்குச் சில நாள் தங்கிய பின், அஷ்டகோண முனிவன் வைகும் வனத்தை அடைதல்

அங்கு அவன் மலர்ப்பதம் வணங்கி, அருள் பெற்று,
கங்கை வள நாடர் கலை தேர் முனிவரோடும்
தங்கினர்கள், சிற்சில் பகல்; தங்கியபின், அப்பால்,
சிங்கம்என எண் இல் வரை சேர் நெறிகள் சென்றார். 24

ஏண் இல் வரை மார்பர் இமையோர் புகழும் எட்டுக்
கோண் உடைய மா முனி வனம் குறுகி, அன்னான்
மாணுடை மலர்ப்பதம் வணங்கினர், துதித்தார்;
தாணு அனையானும் அவர்தம்மை எதிர்கொண்டான். 25

அப்பொழுது விசயன் வானுலகினின்றும் அங்கு வருதலும், ஐவரும் தேவியும்
இன்பத்தோடு ஒன்பது ஆண்டுகளை அவ் வனத்தில் கழித்தலும்

அப்பொழுது, வானுலகம் அதனினிடைநின்றும்
மைப் பொலியும் மேனி விசயன் வனம் அடைந்தான்;
செப்ப அரிய ஐவர்களும், தேவியுடனே அவ்
ஒப்பு அரிய தெய்வ வனம் ஒன்றினர், உறைந்தார். 26

அன்பொடு ஒரு நாள் என, அனந்த நெடு நாள், அங்கு
இன்பமொடு இருந்தனர்கள், எக் கதையும் கேட்டு; ஆண்டு
ஒன்பது கழித்தனர்கள், இவ்வகை ஒருங்கே;
பின்பு, அவண் நிகழ்ந்தது ஒரு பெற்றி உரைசெய்வாம்: 27

# 16. நச்சுப் பொய்கைச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

சேய பங்கயச் சிறு விரல் அங்கையில் திரட்டிய நறு வெண்ணெய்
ஆயர் மங்கையர் இட இட, அமுது செய்து, ஆடிய திருக்கூத்தும்,
நேயமும், குறு முறுவலும், புரிந்து பார்த்தருளிய நெடுங் கண்ணும்,
மாயவன் திருவடிவமும், அழகும், என் மனத்தை விட்டு அகலாவே.

விண்டுசிந்த முனிவன் வாழும் காட்டை அடைந்து,
பாண்டவர் இனிது இருத்தல்

வண்டு சிந்திய மதுத் துளி முகில் பொழி மழைத் துளியொடும் சேர்ந்து,
கண்டு சிந்தையும் நயனமும் உருகு பைங் கானிடை, கழி கேள்வி
விண்டுசிந்தன் என்று ஒரு முனி அருந் தவ விபினம் மேவினராகி,
கொண்டு சிந்தனை அற இருந்தனர், குலக் குந்தி முன் பயந்தோரே.

பாண்டவரைக் கொல்லுதற்குத் துரியோதனன் முதலிய நால்வரும்
சூழ்ச்சி செய்தல்

ஆண்டு, மற்று அவர் உறைதருகாலையில், அரவ வெங் கொடியோனும்,
மூண்டு அழற் பொறி கன்றிய மனத்தினர் மூவரும், உடன் முன்னி,
'மீண்டும் இப் புவி வேண்டுவர், இருக்கின்; நாம் விரகுடன் முற்கோலிப்
பாண்டு புத்திரர்க் கோறும்' என்று, அருள் இலாப் பாவியர் துணிந்தாரே.

துரியோதனன் ஒரு முனிவனை அனுப்பி, காளமாமுனியை வரவழைத்து,
அவனை வணங்கி, 'என்னை ஈடேற்றவேண்டும்' எனல்

'காளமாமுனிதனைக் கொடு வருக!' என, கலந்த நீற்று ஒளி கூரும்
தூள மா முனி ஒருவனோடு, அறிவு இலாச் சுயோதனன் உரைசெய்ய,
வாள மா நிலம் முழுதுடை மன்னன் இல் வந்தனன், விரைவில் போய்,
மீள மா மறை வேள்வி கூர் முனியொடும், விடுத்த மா முனி அம்மா.

ஒரு முனிக் கணங்களுக்கும் முன் செய்கலா உயர்வுடை உபசாரம்
பெரு முனிக்கு அளித்து, இறைஞ்சி, 'நீ புரி தவப் பெருமையால் வளர்கின்றது,
இரு நிலப் பரப்பு எங்கும், என் ஆணையே; என்னை நீ ஈடேற்றத்
திருவுளத்து அருள்செய்குக!' என, அவன் சேவடிகளில் வீழ்ந்தான்.

'அழைத்தது ஏன்?' என்ற முனிவனுக்குத் துரியோதனனது குறிப்பால்,
சகுனி, 'இவன் பகை களைக!' எனல்

நன் கலா விதம் அனைத்தையும் தெரிக்கும் நல் நாவுடை முனி, 'என்னை
என்கொலாம் இவண் அழைத்தது இன்று?' என, அவன் இருந்த மாமனை நோக்க,
தன் கல் ஆம் மனம் தோன்ற, அச் சகுனி, அத் தவ முனிவனைப் போற்றி,
'மின் குலாவரு வேணியாய்! நீ இவன் வெம் பகை களைக!' என்றான்.

'பாண்டவரை அழிக்க வஞ்சக வேள்வி இயற்ற வேண்டும்' என, முனிவன் வருந்தி, அதன் விளைவு பற்றிக் கூறுதல்

கொடுத்து மா நிலத்து இன் இசை வளர்க்கும் அக் கொடிய பாவியும், 'ஐவர்
விடுத்த பார் இனம் வேண்டுவர், இருக்கின்; அவ் வேந்தரை விண் ஏற்றற்கு
அடுத்த ஓமம் வஞ்சகங்களால் இயற்றுதிஆயின், இவ் எழு பாரும்
கொடுத்தி நீ, நிலை பெற, அரவு எழுதிய கொடியவன்தனக்கு' என்றான்.

கன்னன் வாசகம் கேட்டபோது, இரண்டு தன் கன்னமும் நெருப்புற்றது
என்ன வேவ, ஐம் புலன்களும் நெஞ்சமும் இடியின்வாய் அரவு ஒத்தான்;
பின்னை யாது அவன் உரைப்பது? 'தவங்களும் பெருந் தகைமையும் பொன்றி,
முன்னர் ஏழ்-எழு பிறப்பில் நல் வினைகளும் முடிந்த, இன்று' என முன்னி,

'எண் வகைப் பெருந் திசையினும் நினது பேர் இசை இலாத் திசை இல்லை;
மண் அனைத்தும் நின் தனிக் குடை நிழலிலே மனு முறைமையின் வாழும்;
கண்ணல் உற்றது இக் கருமம், நீ எக் குறை கண்டு? வெங் கழற் காலாய்!
விண்ணகத்து நான் ஏற்றுதல் புரியினும் வீவரோ, வீவு இல்லார்? 9

'தொடங்கி யான் புரி தீவினை, என்னையே சுடுவது அல்லது, கொற்ற
மடங்கல் போல்பவர் தங்கள்மேல் செல்லுமோ? மாயவன் இருக்கின்றான்;
இடம் கொள் பாரகம் பெறுவதற்கு எண்ணும் நின் இச்சையின்படி ஏகி,
விடங்களால் உயிர் ஒழிப்பவர்க்கு ஒத்து, நான் வீவதே மெய்' என்றான்.

யாவரும் வணங்கி வேண்டவே, முனிவன் இசைந்து, வேள்வி இயற்ற மலைப் புறத்தைச் சார்தல்

அசைவு இலா மனத்து அருந் தவ முனிவனை அனைவரும் பணிந்து, ஏத்தி,
இசையுமாறு செய்து, ஓம வான் பொருள்களுக்கு யாவும் வேண்டுவ நல்க,
திசை எலாம் முகம் உடையவன் நிகர் தவச் செல்வனும் சென்றான்; வெவ்
வசையினால் மிகு கொடிய கோல் அரசனும் மகிழ்ந்து, தன் மனை புக்கான்.

போன மா முனி தன் தபோவனத்து ஒரு புடை, மிடை நெடுங் கள்ளிக்
கானமானது புகுந்து, பாரிடங்களும் கழுகு இனங்களும் துன்றி,
யானை ஓடிட நரி துரந்திடும் நிலத்து, எரி வெயில் கழை முத்தம்
வான் எலாம் நெடுந் தாரகைபோல் எழும், மால் வரைப் புறம் சார்ந்தான்.

முனிவன் ஓமம் புரிய, அதினின்றும் எழுந்த பூதத்தைக் கண்டு முனிவன் நடுங்குதல்

அண்டர் யாவரும், மானுட முனிவரும், அகலிடந்தனில் மற்றும்
கண்ட கண்டவர் யாவரும், வெருவர, கடும் பலி பல நல்கி,
உண்டியால் வளர்ந்து, ஆர் அழல் கோளகையூடு உறும்படி, ஓம
குண்டம் எவ்வளவு அவ்வளவு இந்தனம் கொடுந் தருக்களில் சேர்த்தான்.

மிக்க மந்திர யாமளம் முதலிய வேத மந்திரம்தம்மில்,
தக்க மந்திரம் தெரிந்துகொண்டு, ஆசு அறு சடங்கமும் தப்பாமல்,
தொக்க மந்திரம் ஒன்றினுக்கு ஓர் எழு சுருவையின் நறு நெய் வார்த்து,
ஒக்கமந்திரம் அனைத்தினும் கொடுமை கூர் ஓமமும் புரிந்தானே. 14

தன் தன் இச்சையின் அன்றி, ஏழ் கடலுடைத் தராதலம்தனை ஆளும்
மன்தன் இச்சையின் புரியும் அவ் வேள்வியில், வந்துறு பெரும் பூதம்
சென்று, எயிற்று இள நிலவு எழ, துணை விழி தீ எழ,வெயில் வாய் கார்க்
குன்று எனப் பொலிந்து எழுந்தது; முனிவனும் கூசி, மெய் குலைந்திட்டான். 15

பாண்டவரைத் தப்புவிக்க அறக்கடவுள் அந்தணச் சிறுவனுய் வந்து, மான் கொண்டு ஓடிய தன் மான் தோலை மீட்டுத் தர வேண்ட, அவர்கள் மானைத் தொடர்தல்

இப் பால் இவ்வாறு ஓமம் செய்து, இவன் இப் பூதம் இனிது எழுப்ப,
அப் பால் இருந்த வன சரிதர் ஐவர்க்கு அமைந்தவாறு உரைப்பாம்:
முப் பாலினுக்கும் முதற் பாலாய், மும்மைப் புவனங்களும் காக்கும்,
தப்பா வாய்மை அறக் கடவுள் அறிந்தான், எண்ணம் தப்புவிப்பான்.

தன் மைந்தனும் அத் தம்பியரும் சரியாநின்ற தபோவனத்து,
நன் மைந்தரில் ஓர் முனி மைந்தன் நன்னூலுடன் பூண் அசினத்தை
வில் மைந்தரையும் மதியாமல், விரைந்து, உள் புகுந்து, விசைத்து, அகல் வான்
தொல் மைந்தனைப்போல், ஓர் உழைகொண்டு ஓடிற்று; என்னல் சொல உண்டோ?

மறை வாய்ச் சிறுவன், 'கலைத்தோலை மான் கொண்டு ஓடி, வான் இடையில்
பொறைவாய்ப் புகுந்தது; அபயம்!' எனப் புகுந்து, ஆங்கு அழுது, புலம்புதலும்,
நறைவாய்த் தொடையல் அறன் மகனும், இளைய வீரர் நால்வரும், தம்
துறைவாய்ச் சிலையோடு அம்பு ஏந்தித் தொடர்ந்தார் அதனை, சூழ் புலிபோல்,

மானைத் தொடர்ந்த பாண்டவர், அதனைப் பற்ற இயலாது, மாயம் என்று ஆசை ஒழிதல்

அகப்பட்டதுபோல் முன் நிற்கும்; அருகு எய்தலும், கூர் ஆசுகம்போல்
மிகப்பட்டு ஓடும்; தோன்றாமல், வெளிக்கே ஒளிக்கும்; விழி இணைக்கு
முகப்பட்டிடும்; ஈண்டு ஐவரும் தம் முரண் தோள் வன்மை தளர்வு அளவும்
தகைப்பட்டு ஒழிந்தார்; அதில் ஆசை ஒழிந்தார், இந்த்ரசாலம் என.

தடங் கானகமும், வானகமும், சாரல் பொருப்பும், தாழ் வரையும்,
மடங்கா வரும், போம், சூழ் போதும்; அப்போது அந்த மான் கன்று;
தொடங்கா, இவரை இளைப்பித்த தொழிலைச் சொல்லின், ஒரு நாவுக்கு
அடங்காது! இன்னும், ஆயிரம் உண்டானால், அதற்கும் அடங்காதே!

அறக்கடவுள் கானில் நச்சுப் பொய்கையாய் விளங்குதல்

'கான் ஈது இவர்க்குத் தலை தெரியாக் கானம்; கருத்து மிகக் கலங்கிப்
பானீயத்துக்கு ஐவரும் மெய் பதையாநிற்பர்' என அறிந்து,
தூ நீர் நச்சுச் சுனையாய், அச் சுனை சூழ்வர ஓர் தொல் மரமாய்,
யான் நீ அவன் என்று எண்ணாமல், எல்லாம் ஆனோன், இருந்தானே.

தருமன் நீர் கொணருமாறு சகாதேவனைப் பணிக்க, அவன் செல்லுதல்

தருமனும் தம்பிமாரும், தாலுவும் புலர்ந்து, தாகத்து
உருகிய மனத்தர் ஆகி, உடல் தளர்ந்து அயரும் ஆங்கண்,
எரியுறு கானம் போல்வான் இளவலை நோக்கி, 'இன்னே
மரு வரும் புனல் கொண்டு, ஓடி வருதி நீ, விரைவின்!' என்றான்.

சகாதேவன் நச்சு நீரைப் பருகி இறந்து விழுந்தது தெரியாது, தருமன் ஏனையோரையும் ஒருவர் பின் ஒருவராக அனுப்புதல்

அக் கணத்தினில், சாதேவன் அடவிகள்தோறும் தேடி,
எக்கணும் காணுன் ஆகி, என்று தோய் குன்று ஒன்று ஏறி,
மிக்க வண் சீத வாச விரி சுனை ஒன்று காணு,
புக்கனன்; பருகலுற்றுன், பொலிவு அறப் புலர்ந்த நாவான். 23

செழும் புனல் உதரம்தன்னில் சேரும் முன், ஆவி பொன்றி,
விழுந்தமை அறிவுருது, மீளவும் நகுலன்தன்னை
அழுங்கினன் ஏவ, சென்று, ஆங்கு, அவனும் அப் பரிசின் மாய்ந்தான்;
எழும் படை விசயன்தன்னை ஏவினன்; அவனும் போனுன். 24

தம்பியர் கிடந்த தன்மை கண்டும், அத் தலைவன், மேன்மேல்
வெம்புறு கொடிய தாக மிகுதியால் விரைந்து, வாரி,
பைம் புனல் அருந்தி, அவ்வாறு இறந்தனன்; பரிதாபத்தோடு,
'எம்பியர் என் செய்தார்?' என்று இறைவனும் இனைந்து சோர்ந்தான்.

இறுதியில் சென்ற வீமன் நச்சு நீரால் நேர்ந்த விளைவு என்று எண்ணி வருந்தி, தருமன் அறியும்பொருட்டு, மணலில் எழுதி, தானும் நீரைப் பருகி, உயிர் துறத்தல்

வீமன் அங்கு அவனைத் தேற்றி, மெலிவுறு சோகத்தோடும்
ஈமம் ஒத்து எரியும் கானம் எங்கணும் திரிந்து, அங்கு எய்தி,
சாம் முறைத் தம்பிமாரைக் கண்டு, அருந் தடத்து நீரை
ஆம் எனக் கருதாது, 'ஆலம் ஆகும்' என்று அகத்தில் கொண்டான்.

பின்னவர் மூவர் சேரப் பிணங்களாய்க் கிடத்தல் கண்ட
மன்னவன்தனக்குத் தாகம் மாறுமோ? வளர்ந்து மேன்மேல்,
என் அவன் பட்டான் என்பது இயம்புதற்கு எட்டுமோ? முன்
சொன்னவன்தானும், இந்தச் சோகமோ தொகுக்க மாட்டான்! 27

குசையுடைப் புரவித் திண் தேர்க் குரக்கு வெம் பதாகையானை,
அசைவு இல் பொன் சயிலம் அன்ன ஆண்தகை மனத்தினுனை,
திசை அனைத்தினும் தன் நாமம் தீட்டிய சிலையின் வெம் போர்
விசையனை, தன் கண்ணீரால் மெய் குளிப்பாட்டினுனே. 28

நல் துணைச் சிறுவனேடு நகுலனை நோக்கி, 'அந்தோ!
என் துணை இழந்தேன்!' என்னும்; 'என் செய்வது இனி நான்!' என்னும்;
'முன் துணைவனும் அக் கானில் முடிந்திடும்; மொழிய வேறு ஓர்
பின் துணை காண்கலாதேன், யாரொடு பேசுவேனே! 29

'மணி முரசு உயர்த்தோன் ஈண்டு வருதலும் கூடும்; வந்தால்,
அணிதரு நச்சுத் தோயம் அருந்தவும் கூடும்!' என்னு,
பணி உடன் செய்வான் போலப் பரு மணல் ஏட்டில், கையால்,
துணிவுற எழுதி, அந்தத் தோயமே தானும் துய்த்தான், 30

பொருப்பினும் வலிய கொற்றப் புயமுடை வீமன் என்றால்,
அருப்புடை அறலின் நஞ்சம் அஞ்சுமோ? ஆலம் என்னும்
உருப்பினை அறிந்தும், வாரி உண்டு, தன் உயிரும் வீந்தான்;
நெருப்பினும், சொல்லின், நா வேம்; நினைப்பினும், நெஞ்சம் வேமால்.

தம்பியர் வரவு காணாது, சோகமும் தாகமும் விஞ்ச, தருமன் மயங்கி விழுதல்

'ஆர் உயிர் பொன்றும்காலை, அமுதமும் விடமாம்' என்று
பார் உளோர் உரைக்கும் மாற்றம் பழுது அறப் பலித்த காலை,
மாருதி முதலா உள்ள மன்னவர் நால்வர்தம்மோடு
ஓர் உயிர் ஆன மற்றை ஒருவனே ஒருவன் ஆனான். 32

கட்புலனாக வேறு ஓர் யோனியும் காண்கலாத
வெட்புலம்தன்னில் சோகம் மிஞ்சவே, தாகம் விஞ்சி,
உள் புலன் அழிந்து, பின்போம் உள்ளமோடு உயங்கி வீழ்ந்தான்—
நட்பு உலந்தவரால் முன்னம் கானகம் நண்ணினானே. 33

இங்கு இவ்வாறு இவர் இருக்க, ஐவரைக் கொல்லுமாறு, ஓமத்தில்
தோன்றிய பூதத்தை முனிவன் ஏவுதல்

ஈங்கு இவர் உயங்கி வீந்த எல்லையில், எரி செய் ஓமத்து
ஆங்கு அவண் எழுந்த பூதம், அம் முனிதன்னை நோக்கி,
'பாங்குடன் புரியும் ஏவல் பணித்தருள்!' என்ன, நெஞ்சில்
தீங்கு இலா முனியும் பூத அரசுடன் செப்புவானே: 34

'நின்றிடாது, இமைப்பில், குந்தி மைந்தராய் நெடிய கானில்
துன்றிடா வைகும் வேந்தும் துணைவரும் இருந்த சூழல்
சென்றிடா, ஒன்றாய் ஐந்து செயற்கையாம் உடலைச் சேரக்
கொன்றிடா, வருதி!' என்று கூறிய உறுதி கேளா, 35

'பாண்டவர் இன்று எனக்கு இலக்காகாவிடின், நின்னையே கொல்வேன்'
என்று சொல்லி, பூதம் ஏகுதல்

ஐம் பெரும் பூதம் ஒக்கும் அப் பெரும் பூதம் சாதிச்
செம் பொனின் ஒளிரும் மேனித் தெய்வ மா முனியை நோக்கி,
'வெம்பு கான் உறைவோர், இன்று, என் விழிக்கு இலக்கு அல்லர்ஆனால்,
எம்பிரான்! நினையே கொல்வன்' எனத் தொழுது ஏகிற்று அன்றே.

ஐவரின் நிலை கண்டு, பூதம் வருந்துதல்

காட்டுறு கோடை வெப்பம் களைகுவான், கரிய மேகம்
மோட்டு உருக்கொண்டு, மின்னல் முளைத்து எழும் எயிறு தாங்கி,
தோள் துணை புடை கொண்டு, எங்கும் சூறைபோல் மரங்கள் வீழ்த்தி,
காட்டுறை வாழ்க்கையானைக் கண்ணுறக் கண்டது அன்றே. 37

'அந்தணன் சொன்ன வேந்தர் ஐவரில், அறனால் வந்த
மைந்தன் மற்று இவனே, ஆவி மாய்ந்ததோர் வடிவன் ஆகி,
சந்தன தருவில் சார்ந்து, சாய் முடித் தலையன் ஆகி,
மந்திரம் மறந்த விஞ்சை மாக்களின் வடிவு சோர்ந்தான். 38

'சிறந்த மெய்ந் நிழல்போல் சூழும் துணைவரும் சேர விட்டுத்
துறந்தனர் போலும்; யாண்டும் துப்பு இலா வெப்பம்தன்னால்
இறந்தனன் இவனும்; மற்று இங்கு என் செய்வேன்?' என்று என்று எண்ணி,
நிறைந்த நீர்ச் சுனையில் மற்றை நிருபர் நால்வரையும் காணா, 39

'பச்செனும் புனலால் மிக்க பங்கயச் சுனையும், கொல்லும்
நச்சு வெஞ் சுனையே போலும்! நால்வரும் சேர மாண்டார்,
இச் சுனை அருந்திப் போலும்! என் நினைந்து ஏது செய்தார்!
நிச்சயம்; கொடிது; கெட்டேன்! இந்த நிட்டூரம் என்னோ! 40

பூதம் முனிவனிடம் மீண்டு வந்து, தான் முன் உரைத்தபடி அவனைச்
சூலத்தால் எறிந்து கொல்லுதல்

'காவலன் வார்த்தை கேட்டுக் காளமாமுனிவன் என்னும்
நாவலன், ஓமத் தீயில் நம்மை உற்பவித்து விட்டான்;
மேவலர் கொல்லும் முன்னே வீந்தனர்; இந்தப் பாவம்
கேவலம் அல்ல' என்று கிளர் சினம் மூண்டு, மீண்டே, 41

'காலங்கள் மூன்றும் எண்ணும் கடவுள்! நீ கலக்கம் எய்தி,
ஞாலம் கொள் நசையின், இல்லா நயனிதன் மகன் சொல் கேட்டு,
சீலம் கொள் வாய்மையாய்! செந் தீ எழு கானில் சில் நீர்
ஆலம்கொல் பான்மையாரை யார் கொல்வான் அருளிச் செய்தாய்?

'பூண்ட வெள் அரவத்தோடு புனை மதி வேணியார்க்குத்
தாண்டவ நடனம் செய்யத் தக்கது ஓர் தழல் வெங் கானில்
பாண்டவர்தம்மைக் கொல்லப் பணித்தனை; ஒருகால் ஆவி
மாண்டவர், பின்னும் பின்னும் மாள்வரோ? மதி இலாதாய்! 43

'நீ இதற்கு இலக்கம் ஆகி நின்றனை!' என்று, கோபத்
தீ எழப் பொடிக்கும் கண்ணும், சிரிப்பு எழும் எயிறும் ஆகி,
மூஇலைச் சூலம்தன்னால் முனிதலை துணிந்து வீழ,
ஏவலில் பழுது இல் பூதம் இவனையே எறிந்தது அன்றே! 44

எறிந்து, அது மீண்டும் ஓம எரி இடை ஒளிக்க, கானில்
செறிந்த மா முனிவர் யாரும் தேவரோடு இரங்கி ஆர்ப்ப,
அறிந்தவர் அவனி ஆளும் அரசனை வெறுக்க, தம்மில்
பிறிந்தவர் மீண்டும் ஆவி பெற்றவா பேசக் கேண்மோ: 45

தருமன் உணர்வு பெற்று, தம்பியர் சென்ற சுவடு நோக்கிச் சென்று,
பொய்கைக்கரையில் துணைவரைக் காணுதல்

மூச்சு அறப் புலர்ந்து உயங்கிய முரச வெங் கொடியோன்
மாச் சினைத் தடஞ் சந்தன மகீருக நிழலில்,
வீச்சுறப் பயில் தென்றலால், மெய் உயிர் எய்தி,
நாச் சுவைப் படு ஞான நல் மந்திரம் நவிலா, 46

தனைப் பயந்த நல் தரும தேவதை திருவருளால்
வினைப் பயன்களால் உறு துயர் யாவையும் வீட்டி,
சுனைப் பெரும் புனல் தாகமும் அடிக்கடி தோன்ற,
நினைப்பும் எய்தி, அத் தம்பியர்தம்மையும் நினைந்தான். 47

ஆன தன் மன வலியுடன், ஆண்டு நின்று எழுந்து,
கானகத்திடை நீங்கிய அறன் தரு காளை
போன தம்பியர் சேவடிச் சுவட்டினில் போய், அத்
தூ நிறப் புனல் உண்டு வீழ் துணைவரைக் கண்டான். 48

*தம்பியர் இறந்தது எதனால் என்று எண்ணிய தருமன், மணலில் வீமன் எழுதிய குறிப்புக் கண்டு, தானும் அந் நீரைப் பருகச் செல்லுதல்*

ஊறு இலாமை கண்டு, 'உடற்றினர் இல்' என உணர்ந்து,
'மாறு இலாதவர் எங்ஙனம் ஆர் உயிர் மாய்ந்தார்?
சேறு இலாத வெஞ் சுரத்திடைச் செழும் புனல் நுகரும்
பேறு இலாமையின், இறந்தனர் போலும், இப் பெரியோர்!' 49

அண்டகோளகை அனையது ஓர் ஆதபத்திரத்தால்
மண்டலங்கள் ஈர்-ஒன்பதும் புரந்திட வல்லான்,
சண்ட மாருதி எழுதிய தாழ் மணல் எழுத்தைக்
கண்டு, 'நஞ்சம், இக் கயத்து அறல்' என்பது கண்டான். 50

' ''வெஞ் சமம் செய வருவர்கொல், மீண்டும்?'' என்று அருள் இல்
வஞ்சகன் செய்த வஞ்சனை இது' என மதித்து,
நஞ்ச நீர்கொடு தானும் தன் நாவினை நனைக்கும்
நெஞ்சன் ஆகி, அந் நிறை புனல் கயத்திடை நேர்ந்தான். 51

*அப்பொழுது, அசரீரி அவனைத் தடுத்து மொழிதல்*

திருந்து நல் வரைச் செங் கையால் அள்ளிய நீரை
அருந்தும் அவ் வயின், அகல் விசும்பிடை, அசரீரி,
'கருந் தடம் புனல் நஞ்சு; இது நுகர்வது கருதேல்!
விருந்தர் நால்வரும் என் மொழி கேட்டிலர்; வெய்யோர்! 52

'உன்னை யான் வினவு உரைதனக்கு உத்தரம் உரைத்து,
பின்னை நீ நுகர், பெருது பெற்றனைய இப் புனலை;
அன்னைபோல் உயிர் அனைத்தையும் புரந்திடும் அரசே!
என்னையோ, பெருந் தாகம் விஞ்சிடினும், இன்று?' எனவே, 53

பெரு நலம் பெறு மகனை அப் பேர் அறக் கடவுள்
இரு விசும்பினில் அருவமாய் இயம்பிய மாற்றம்,
திரு உளம்தனில் கொண்டு, தன் செங் கை நீர் வீழ்த்தி,
பொருவு இலா மகன், 'புகலுவ புகறி, நீ!' என்றான். 54

### தருமனும் தரும தேவதையும் உரையாடல்

'சொல்லும் நூல்களில் பெரியது ஏது?'—'அரிய மெய்ச் சுருதி.'
'இல்லறத்தினுக்கு உரியது ஏது?'—'எண்ணுடை இல்லாள்.'
'மல்லல் மாலையில் மணம் உளது ஏது?'—'வண் சாதி.'
'நல்ல மா தவம் ஏது?'—'தம் குலம் புரி நடையே.' 55

'முனி குலம் தொழு கடவுள் யார்?'—'மொய் துழாய் முகுந்தன்.'
'நனை மணம் கமழ் குழலினர்க்கு இயற்கை யாது?'—'உயர் நாண்.'
'தனம் மிகுந்தவர்க்கு ஏது, அரண்?'—'தகை பெறு தானம்.'
'இனியது ஏது, இரு செவிக்கு?'—'இளங் குதலையர் இன்சொல்.' 56

'நிற்பது ஏதுகொல்?'—'நீடு இசை ஒன்றுமே, நிற்கும்.'
'கற்பது ஏதுகொல்?'—'கசடு அறக் கற்பதே கல்வி.'
'அற்பம் ஆவது ஏது, அனைத்தினும்?'—'அயல் கரத்து ஏற்றல்.'
'சிற்பம் ஆம் இவை செப்பு' என, செப்பினன் சிறுவன். 57

### தருமன் விடைகளால் உவப்புற்ற தருமதேவதை அவன் முன் தோன்றி, மேற்கொள்ளவேண்டும் உபாயங்களைத் தெரிவித்தல்

இவ் வகைப் பல வினவலும், இயம்பிய மகனை
அவ் வயின் பெரிது உவந்து, கண்ணினுக்கு இலக்கு ஆகி,
செவ்வயின் பொலஞ் சிலம்பு எனச் சேர்ந்து, மெய் தழுவி,
வெவ் வயின், புரி விரகு எலாம் விளம்பினன் மாதோ. 58

### தேவதை, 'மிக்க அன்புடைய ஒருவனை இம் மறையால் எழுப்புக!' என, தருமன் சகாதேவனை எழுப்புதல்

அறப் பெருங் கடவுள் என்று அறிந்து, தாதையைச்
சிறப்புடன் சேவடி சென்னி சேர்த்திய
மறப் பெரும் புதல்வனை, மகிழ்ந்து, 'நும்பியர்
இறப்பினை ஒழிப்பதற்கு ஏது உண்டு' எனா, 59

'நச்சு நீர் குடித்து உயிர் நீத்த நால்வரில்
உச்சம் ஆம் அன்புடை ஒருவன்தன்னை, நீ
இச்சையால், இம் மறை இயம்பி, எண்ணி ஓர்
அச்சம் அற்று அழை!' என அருள் செய்தான்அரோ. 60

தாதை கூறிய மறைதனைக் கொண்டே, சுதன்
ஏதம் உற்றிடாவகை, இளைய தம்பியை
ஊதை வந்து உள் புக உணர்ச்சி நல்கினான்—
வேதமும் நிகர் இலா விரத வாய்மையான். 61

சகாதேவனை எழுப்பியதற்குக் காரணத்தைத் தருமன் கூறக் கேட்டு மகிழ்ந்து, யாவரையும் எழுப்பி, பல படை முதலியன அளித்தல்

கண்டு நின்று, அறப் பெருங் கடவுள், 'வாயுவின்
திண் திறல் மா மகன், தேவர் கோ மகன்,
மண்டு அழல் விடத்தினால் மடிய, மா மருத்து
அண்டர் நல்கு இளவலை அழைத்தது என்?' என்றான். 62

'குத்திரம் இலா மொழிக் குந்திக்கு யான் ஒரு
புத்திரன் உளன் எனப் புரிந்து நல்கினாய்;
மத்திரிக்கு ஒரு மகவு இல்லை;—வல்லவர்
சித்திரம் வகுத்தெனத் திகழும் மேனியாய்!' 63

என்று தன் தந்தையோடு இயம்ப, தந்தையும்,
மன்றல் அம் தொடை முடி மைந்தனுக்கு, அமர்
வென்றிடு மறைகளும், வில்லொடு, ஏவு, வேல்,
என்ற பல் படைகளும், யாவும், நல்கினான். 64

தேவதை நிகழ்ந்தவற்றைக் கூறி, 'கானில் வாழ் நாள் கழிந்தது; ஒருவரும் அறிவுறாது இனிது வாழ்திர்' என்று அறிவுறுத்திச் செல்லுதல்

கருதலன் அழைத்ததும், காளமாமுனி
புரி தழல் வளர்த்ததும், பூதம் வந்ததும்,
அருகு இவர் நச்சு நீர் அருந்தி மாய்ந்ததும்,
விரி சினத்துடன் அது மீண்டு போனதும், 65

முனிவனைக் கொன்றதும், முனிவன் வாய்மையில்
துனி வனத்து உழையினைத் தொடர்ந்து போயதும்,
தனி வனத்திடை விடத் தடாகம் செய்ததும்,
இனிமையின், புத்திரற்கு, யாவும் கூறினான். 66

'நன் பெரு வனம் செறி நாள் அகன்றன;
பின் பிறர் அறிவுறாப் பெற்றி பெற்று, நீர்
துன்புறாது இரும்' எனச் சொல்லி, ஏகினான்;—
அன்பினால் அருள் புரிந்து, அரிய தாதையே. 67

பாண்டவர் தம் இருப்பிடம் சேர்ந்து, திரௌபதிக்கு யாவற்றையும் கூறியிருத்தல்

தம்பியர் அனைவரும் தத்தம் ஆவி பெற்று,
உம்பரில் தலைவனும் உரிய தந்தையை
வம்பு அவிழ் மலர் அடி வணங்கி, நெஞ்சுடன்
அம்பகம் மலர்ந்து, தம் அடவி எய்தினார். 68

தீது அறக் கானிடைச் செறிந்த ஐவரும்
பேதுறத் தொடர்ந்து, ஒரு பிணைபின் போனதும்,
ஏதம் உற்று இறந்ததும், எழுந்து மீண்டதும்,
ஆழ் துயர்த் திரௌபதிக்கு அறியக் கூறினார். 69

# 17. துருவாச முனிச் சருக்கம்

துருவாச முனிவன் பாண்டவர் இருப்பிடம் வருதலும், அவர்கள் முனிவனை வணங்கி, உபசரித்தலும்

சாபத்தாலும், சாபமொழிதன்னால் வளரும் தவத்தாலும்,
கோபத்தாலும், பேர் படைத்த கொடிய முனிவன் துருவாசன்,
தீபத்தால் மெய் வகுத்தனையான், திகழ் பல் முனிவர் புடை சூழ,
ஆபத்தால் வந்து அடைந்தவர்போல், அடைந்தான், அந்த அடவியின்வாய். 1

'அரு மா தவப் பேறு ஆனது எமக்கு அம்மா!' என்னச் செம்மாந்து,
குரு மா மரபோர் ஐவரும் தம் குஞ்சித் தலைமேல் அடி வைத்து, 'எம்
பெருமான்! இங்கே எழுந்தருளப் பெற்றேம்' என்னப் பெரிது உவந்து, அங்கு,
அரு மா முனியைப் பூசித்தார்; அவனும் புகன்றான், ஆசிஅரோ. 2

'உண்ணும் காலம் இது' என முனிவன் கூற, நீராடி வருமாறு அனுப்பி, தம்பியரையும் திரௌபதியையும் உசாவுதல்

இட்ட தவிசின்மிசை இருத்தி, எரி கான் வந்த இளைப்பு ஆற்றி,
தொட்ட கழற் கால் உதிட்டிரன் கைதொழுது துதிப்ப, துருவாசன்,
'வட்ட மணித் தேரவன் உச்ச வானத்து அடைந்தான்; யாம் அருந்தப்
பட்ட உணவு இங்கு அமுது செயப் பருவம் இது' என்று உரைசெய்தான். 3

மூத்தோன், 'குளித்து வருக!' என, முனிவருடன் அம் முனி தடத்துப்
போய்த் தோய்வதற்கு ஆங்கு எழுந்தருள, புரசைக் களிற்று முரசு உயர்த்தோன்,
'வாய்த்தோன் வரவுக்கு என் புரிவோம்? மதிப்பீர்!' எனத் தன் தம்பியர்க்கும்,
வேய்த்தோள் வேள்வி மடந்தைக்கும், உரைத்து, ஆங்கு அவரை வினவினனால். 4

'முனிவன் சாபம் மொழியும் முன் பகை முடித்து இறப்போம்' என வீமன் உரைத்தல்

'மேவார் உரைக்க இவன் வந்தது அல்லால், பிறிது வேறு இல்லை;
ஆ, ஆ! இதற்கு இன்று என் செய்வேம்? ஆமாறு ஆக! நாம் எழுந்து,
கோ ஆனவனும் பல படையும் குன்றச் சென்று, பொருது, இமைப்பில்
சாவா நிற்பது உறுதி, இனி' என்றான்—வன் தாள் சமீரணியே. 5

நகுல சகாதேவர்கள், 'கண்ணனைச் சிந்தித்து அழைத்தால், கவலை நீங்கும்' என, தருமனும் இசைதல்

'சுருதிக் கடவுள் அனையானைச் சுனை நீர் படிந்து வரச் சொல்லி,
கருதிப் பிற நாம் புரியும் அது கடனோ?' என்றான், கழல் விசயன்;
'மருதிற்கு இடை போமவன் விரைந்து வருமாறு அழைமின்' என மொழிந்தான்—
ஒரு திக்கினும் வெம் பரி ஏற்றுக்கு ஒத்தோர் இல்லா உரவோனே. 6

'யாதே ஆக, இந்த விபத்து ஏகும் பொழுதைக்கு இசை அளிகள்
தேதே என்னும் பசுந் துளபத் திருமால்தன்னைச் சிந்தியும்; இப்
போதே வரும், இங்கு அவன்; வந்தால், போம் இக் கவலை' எனப் புகன்றான்,
சாதேவனும்; அங்கு அவன் இசைத்த சொல்லுக்கு இசைந்தான் தருமனுமே. 7

'துருவாசன் வரின் என் செய்வது?' எனத் திரௌபதி பயந்து நடுங்குதல்

'என்னே, என்னே! ஆதவன் வான் இடையும் கடந்தான்; முனிவன் வரும்
முன்னே நுகர்ந்தாம் சர்க பல மூலம், பல பேர் முனிவரொடும்;
கொன்னே முனியும் முனிக்கு இனி என்கொல்லோ புரிவது?' என நின்ற
மின் நேர் இடையாள் நடுநடுங்கி, 'விளைவது என்னோ?' எனப் பயந்தாள். 8

தருமன் கண்ணனை நினைத்தலும், அவன் வந்து, அவர்களைத் தேற்றி, திரௌபதியை, 'அட்சயபாத்திரத்தில் அன்னம் உளதோ?' என்ன, அவள் ஒரு பருக்கையைக் கண்டு எடுத்து வந்து கொடுத்தல்

தப்பு ஓதாமல், தம்பியர்க்கும் தருமக் கொடிக்கும் இதமாக,
அப்போது உணரும்படி உணர்ந்தான், அசோதை மகனை அறத்தின் மகன்;
'எப்போது, யாவர், எவ் இடத்தில், எம்மை நினைப்பார்' என நின்ற
ஒப்பு ஓத அரியான், உதிட்டிரன்தன் உளப்போதிடை வந்து உதித்தானே. 9

திருக் கண் கருணை பொழிய வரும் திருமால் அவரைத் தேற்றி, 'முதல்
அருக்கன் உதவும் பாண்டத்தின் அன்னம் உளதோ?' என வினவ,
முருக்கின் இதழைக் கருக்குவிக்கும் முறுவல் செவ் வாய்த் திரௌபதியும்
இருக்கும் முறை ஓர் அன்னம் கண்டெடுத்தாள்; கொடுத்தாள், இறைவன் கை. 10

கண்ணன் அந்தப் பருக்கையை உண்ண, நீராடிய முனிவரர் உண்டவர்போல் களி கூர, துருவாசன் தருமனிடம் மீண்டு வருதல்

அந்த அன்னம் சதுர் மறையும் அன்னம் ஆகி அருள் செய்தோன்,
முந்த உலகம் முழுது உண்ட முளரி இதழினிடை வைத்தான்;
வந்து சுனையில் வந்தனை செய் மறையோர் எவரும், வாரிதி முன்
தந்த அமுது உண்டவர் போலத் தாபம் தணிந்து, தண்ணென்றார். 11

உதரம் குளிர்ந்து, வடிவு குளிர்ந்து, உள்ளம் குளிர்ந்து, மறை நாறும்
அதரம் குளிர்ந்து, கண் குளிர்ந்து, ஆங்கு அரு மா முனிவன் அதிசயித்து,
'மதர் அஞ்சனக் கண் திரு வாழும் மார்போன் மாயா வல்லபத்தால்,
இதரம் கடந்தான் உதிட்டிரன்' என்று இவன்பால், மீண்டும், எய்தினனால். 12

முனிவன் தருமனைப் பாராட்டி, தான் வந்த காரணத்தை உரைத்தல்

'உண்டோம், உண்டோம், உம்பருக்கும் உதவா ஓதக் கடல் அமுதம்;
கண்டோம் உன்னால், எவ் உலகும் காணா முகுந்தன் கழல் இணைகள்!
வண்டு ஒலிடும் தார்ப் பேர் அறத்தின் மகனே! உன்னை அரசு என்று
கொண்டோர் அல்லால் எதிர்ந்தோரில் யாரே வாழ்வார், குவலயத்தில்? 13

'நென்னல் புயங்க கேதனன்தன் நிலயம்தன்னில் தீம் பாலும்
கன்னல் கட்டி முதல் பல தீம் கனி நெய்யுடனே இனிது அருந்தி,
இன்னல் பசி தீர் பொழுதத்தில், "என்பால் வரம் கொள்க!" என உரைப்ப
முன்னர்ப் பலவும் உரையாமல் ஒன்றே மொழிந்தான், முடி வேந்தன்: 14

' "எம் இல் துய்த்த ஓதனம்போல் எம்மோடு இகலி வனம் புகுந்தோர்
தம் இல் சென்று நாளை நுகர்; இதுவே எனக்குத் தரும் வரம்" என்று,
உம்மின் செல்வம் உடையவன்போல் உரைத்தான்; அதனால் உயர்ந்தோர்கள்-
தம்மில் சிறந்தோய்! வந்தனம் யாம்' என்றான், அந்தத் தவ முனியே. 15

முனிவன் விருப்பப்படி, தருமன் வரம் வேண்டுதல்

'பரம் கொண்டு உலகம் முழுதும் இசை பரப்பிப் புரப்பான் பாண்டு எனும்
உரம் கொண்டு உயர்ந்தோன் அளித்தருளும் உரவோய்! நீ இங்கு உனக்கு ஆன
வரம் கொண்டிடுக' என, முனியை வணங்கி, 'பகைத்தோர் மாற்றங்கள்
திரம் கொண்டு ஒன்றும் கொள்ளாதி!' என்றான், வளையாச் செங்கோலான். 16

முனிவன் தான் உறையும் காடு செல்ல, தருமன் கவலை நீங்கி, மகிழ்ந்திருத்தல்

அன்னோன் மொழி கேட்டு, அம் முனியும் அடைந்தான், தன் பேர் அருந் தவக் கான்;
முன்னோன் ஆன முகுந்தனும் தன் முந்நீர்த் துவரை நகர் புக்கான்;
பின்னோர் வணங்க, பேர் அழலில் பிறந்தாள் மகிழ, பேர் அருட்குத்
தன்னோடு ஒருவர் நிகர் இல்லான் இருந்தான் அந்தத் தனிவனத்தே.

## 18. பழம் பொருந்து சருக்கம்

அமித்திர முனிவனுக்காக அமைந்த நெல்லிக்கனியை விரும்பி,
திரௌபதி விசயனை வேண்டுதல்

அந் நெடு வனத்தில் சில் நாள் அகன்றபின், அமித்திரன் பேர்
என்னு மா முனிவற்கு என்றே, யாவரும் அருகு செல்லா,
நல் நலம் மிகுத்த நெல்லி நறுங் கனி ஒன்று கண்டாள்—
கன்னலும் புளிக்கும் இன் சொல் கயிரவம் கருகும் வாயாள். 1

'இக் கனி எனக்கு நீ நல்கு!' என்று, வில் எடுத்துக்கொண்ட,
மைக் கனிக் களவு மானும் வடிவுடை, விசயனோடு
மெய்க் கனிவு உடைமை தோன்ற, விளம்பினாள்—வீசு தென்றல்
முக் கனி கமழும் சோலை முகில் தவழ் நாடன் பாவை. 2

விசயன் கனியை வீழ்த்த, அது கண்டோர், 'முனிவன் காணில், இவன் என்படும்!' என்றல்

சோமகர்க்கு அரசன் பாவை சொல்லுமுன், வில்லு வாங்கி,
மா முனிக்கு உணவாய் நின்ற மதுர ஆமலகம்தன்னை
ஏ முறை தொடுத்து வீழ்த்தி ஈதலும், ஆங்கண், கண்டோர்,
'ஏமுறக் காணில், இப்போது என்படும், இறுத்தோன்!' என்றார். 3

தருமன் முன் சென்று விசயன் தன் செயலைக் கூற, அவன் நொந்து கூறுதல்

கண்ட அம் முனிவர் சொல்ல, கடவுளர் கோமான் மைந்தன்,
கொண்ட அக் கனியை மூத்த கொற்றவன் திருமுன் வைத்து,
'மண்டு அழற் பாவை சொல்லால் மதியிலேன் எய்தேன்! என்றான்—
திண் திறல் தேவர்க்காகத் திதி மைந்தர் ஆவி கொண்டான். 4

'காடு உறை வாழ்க்கை எய்தி, காய், கனி, மூலம், தின்று,
நீடுறு காலம் போக்கி, நீங்கலாது இருக்கும் நம்மை,
நாள்தொறும் இடையூறு அன்றி நண்ணுவது இல்லைஆயின்,
ஏடுறு தாராய்! செய்வது என்கொல்?' என்று இயம்பினானே. 5

முனிவன் சினவாமைக்கு வீமன் உபாயம் உரைக்க, விசயன், 'என்னை யன்றி யாரையும் முனிவன் சபியான்ஆதலின், நீவிர் அஞ்ச வேண்டா' எனல்

அவ் உரை வீமன் கேட்டு, 'ஆங்கு அமித்திரன் வந்த போதே,
இவ் உரை கேட்கின், நம்மை எரி எழச் சபித்தல் திண்ணம்;
வெவ் உரை உரையாமுன்னம் மெய்ம் முனிதன்னைப் போற்றி,
செவ் உரை கூறின், நம்மைச் சீறுமோ? சீறல் செய்யான்; 6

'பொறுத்திடும், மேல் இடா ஐம் புலத்தினன்ஆதலாலே;
மறுத்திடான், ஐய! நின்தன் மாசு இலா வாய்மை!' என்ன;
நிறுத்திடும் துலையோடு ஒப்பான், நினைவினுக்கு இசைய; தெவ்வைச்
செறுத்திடு விசயன், மீளச் செப்பினன், செப்பம் ஆக: 7

'செய் தவன் இனிது மாந்தத் தேவர் நாள் ஒன்றுக்கு ஒன்றுஆம்
கைதவம் இல்லா நெல்லிக் கனியினைக் கருதுறாமல்,
எய்த என்தன்னை அன்றி, யாரையும் இடான், வெஞ் சாபம்;
மெய் தவறாத சொல்லாய்! வெருவுதல் என்கொல்?' என்றான். 8

'உனக்கு இடர் வர, யாம் உன்னை நீங்கிப் போய்ப் பிழைப்போமோ?' எனத் தருமன் உரைத்தல்

வேந்தன் அம் மாற்றம் கேட்டு, வில்வலான்தன்னை நோக்கி,
'ஏந்திழை சொல்ல, ஓராது, இனிய இக் கனி, இன்று ஈர்ந்தாய்;
மாந்தரில் மடங்கல் ஒப்பாய்! வருத்தம் நீ உழக்க, யாமோ,
பேர்ந்து போய்ப் பிழைப்போம்?' என்றான், பிதாவினும் கருணை மிக்கான்.

நகுல சகாதேவர் தத்தம் கருத்தை உரைத்தல்

'அம் முனி வந்த ஆபத்துஅதனினும் கொடிது, இக் கானத்து
இம் முனி உணவு கொண்டது!' என வெரீஇ, நகுலன்தானும்,
'வெம் முனிவு அகற்றி, நாமும் மேம்பட வேண்டின், இன்னம்
தெவ் முனி திகிரியானைச் சிந்தனை செய்தி' என்றான். 10

'விளை தவ முனிவன் கண்டு, வெகுளும்முன், அவன் தாள் போற்றி,
கிளைபடு நெல்லி வாசக் கேழ் உறு கனி முன் வைத்தால்,
உளைவுற முனியான், நம்மை; உறுதி மற்று இதுவே' என்று,
இளையவன்தானும் தம்முன் நினைவினுக்கு ஏற்பச் சொன்னான். 11

திரௌபதி துன்பத்திற்குத் தான் காரணமானது குறித்து வருந்துதல்

' ''பெண்மொழி கேளார் என்றும் பெரியவர்'' எனக் கொண்டு, இந்த
மண்மொழி வார்த்தை பொய்யோ? வருத்தம் நீர் உற்ற எல்லாம்
எண் மிக எண்ணின், முன்னம் என்பொருட்டு அன்றோ?' என்று,
கண்மலர் அருவி சோர, கனற்பிறந்தாளும் சொன்னாள். 12

நகுலன் சொன்னபடி தருமன் கண்ணனைச் சிந்திக்க, அவன் வந்து உபாயம் உரைத்தல்

தம்பியர்தாமும், வேள்வித் தையலும், உரைத்த மாற்றம்
கிம்புரி நெடுங்கோட்டு அம் பொன் கிரி வல்லோன் கேட்ட பின்னர்,
'வெம் பரி நகுலன் சொல்லே விதி' எனக் கருதி, அப்போது
எம் பெருமானை உன்ன, இவன் எதிர் அவனும் வந்தான். 13

கண்டு இரு கண்ணும், இதயமும், களிப்ப,
கட்செவிப் பேர் அணை மறந்து,
வண் துவரையில் வாழ் தண் துழாய் மாலை
மாதவன் வருதலும், எதிர்கொண்டு,
அண்டரும் இறைஞ்சற்கு அரிய தாள் இறைஞ்சி,
ஆங்கு உறும் இடரினை அவற்குத்
திண் திறல் அறத்தின் திருமகன் உரைப்ப,
திருச் செவி சாத்தினான், செப்பும்: 14

'திண்மையால் உயர்ந்த நீவிர் ஐவிரும், இத்
தீயிடைப் பிறந்த சேயிழையும்,
உண்மையா நெஞ்சில் நிகழ்ந்த பட்டாங்கு ஈண்டு
உரைத்திட, கோட்டில் மீண்டு ஒன்றும்;
வண்மையால் உயர்ந்தீர்!' என்று செம் பவள
வாய் மலர்ந்தருளினான், மாயோன்.
தண்மை ஆர் கருணைத் தராபதி முதலோர்
சாற்றுவார், தம் மனத்து இயல்பே: 15

கண்ணன் உரைத்தபடி, தருமன் முதலியோர் தத்தமது உள்ளக் கருத்தை உரைத்தல்

'வெல்லுக, அறமும், மெய்ம்மையும், பொறையும்,
மேக மேனியனும்; வெல்லாமல்
செல்லுக, பாவம், பொய்ம்மொழி, கோபம்,
தெயித்தியர் குலம்' எனத் தெளிவுற்று,
அல்லும், வெம் பகலும், என் மனம் நிகழும்;
அலகையாம் அன்னையை முன்னம்
கொல்லுதல் புரிந்தோய்!' என்றனன்,—முரசம்
கோட்டிய கொற்ற வெங் கொடியோன். 16

'பிறர் மனையவரைப் பெற்ற தாய் எனவும்,
பிறர் பொருள் எட்டியே எனவும்,
பிறர் வசை உரைத்தல் பெருமை அன்று எனவும்,
பிறர் துயர் என் துயர் எனவும்,
இறுதியே வரினும், என் மனக் கிடக்கை,
எம்பிரான்! இவை' என உரைத்தான்—
மறலியும் மடியுமாறு மல் இயற்கை
வலிமை கூர் வாயுவின் மைந்தன். 17

'ஊனமே ஆன ஊனிடை இருக்கும்
உயிரினைத் துறந்தும், ஒண் பூண் ஆம்
மானமே புரப்பது, அவனிமேல் எவர்க்கும்
வரிசையும், தோற்றமும், மரபும்,—
ஞானமே ஆன திருவடிவு உடையாய்!—
ஞாலம் உள்ளளவும் நிற்றலினால்,
ஈனமே உயிருக்கு இயற்கை ஆதலினால்,'
என்றனன்—வீமனுக்கு இளையோன். 18

'குலம் மிக உடையர், எழில் மிக உடையர்,
குறைவு இல் செல்வமும் மிக உடையர்,
நலம் மிக உடையர், என்னினும், கல்வி
ஞானம் அற்பமும் இலாதவரை,
வலம் மிகு திகிரிச் செங் கையாய்! முருக்கின்
மணம் இலா மலர் என மதிப்பேன்,
சலம் மிகு புவியில்' என்றனன்—வாகைத்
தார் புனை தாரை மா வல்லான், 19

'ஒரு மொழி அன்னை, வரம்பு இலா ஞானம்
உற்பவ காரணன், என்றும்
தருமமே துணைவன், கருணையே தோழன்,
சாந்தமே நலன் உறு தாரம்,
அரிய திண் பொறையே மைந்தன், மற்று இந்த
அறுவரும் அல்லது, ஆர் உறவு?' என்று
இருவரில் இளையோன், மொழிந்தனன், தன் பேர்
இதய மா மலர்க் கிடை எடுத்தே. 20

'ஐம் புலன்களும்போல் ஐவரும் பதிகள்
ஆகவும், இன்னம் வேறு ஒருவன்
எம் பெருங் கொழுநன் ஆவதற்கு உருகும்,
இறைவனே! எனது பேர் இதயம்;
அம் புவிதனில் பெண் பிறந்தவர் எவர்க்கும்
ஆடவர் இலாமையின் அல்லால்,
நம்புதற்கு உளரோ?' என்றனள்—வசிட்டன்
நல் அற மனைவியே அனையாள். 21

அறுவரும் உண்மை உரைக்கவே, நெல்லிக்கனி பண்டு போலப் பொருந்திற்று

அறுவரும் இவ்வாறு உண்மையே உரைத்தார்;
ஆதலால், நிரை நிரைப்படியே,—
மறு அணி துளப மார்பனும் கேட்டான்;—
மா முனிக்கு ஓதனம் ஆன
நிறை சுவை அமுத நெல்லியின் கனியும்
நின்ற கொம்பு அணைந்ததால்;—என்றும்
பெறு முறை பெறுமே, உள்ளவாறு உரைத்தால்,
பெரியவர் பேசும் வாசகமே! 22

கண்ணன் துவாரகை செல்ல, பாண்டவர் அவ்வனத்தில் வாழ்ந்திருத்தல்

முளைத்து எழு கமலத்து அரும்பு என அரும்பும்
முகிழ் முலைப் பொதுவியர் மலர்க்கை
வளைத் தழும்பு அகலா மரகத மலைபோல்
வடிவு அழகு உடைய எம் மாயோன்,
உளைத்து எழு தரங்கப் பாற்கடல் மறந்தே,
உறையும் வண் துவரையை நோக்கி,
இளைத்தவர் இன்னல் ஒழித்து, மீண்டு, அகன்றான்;
இவரும், மீண்டு இறைஞ்சி, ஆங்கு இருந்தார். 23

# 19. நாடு கரந்துறை சருக்கம்

'நாடு கரந்து உறைதற்கு உரிய இடம் எது?' எனத் துணைவரைத் தருமன் வினவ, விசயன், 'விராடன் நகரமே அதற்கு ஏற்றது' எனல்

அரவ வெங் கொடியோன் ஏவலின்படியே,
ஐவரும் ஆறு-இரண்டு ஆண்டு,
துருபதன் அளித்த பாவையும் தாமும்,
சுருதி மா முனிகணம் பலவும்,
பரிவுடன், மலரும், பலங்களும், கிழங்கும்,
பாசடைகளும், இனிது அருந்தி,
ஒரு பகல் போலக் கழித்தனர், அறிவும்
ஒடுங்கிய புலன்களும் உடையோர். 1

தொல் அறக் கடவுள் அருளுடன் அளித்த
தோன்றல் தன் துணைவரை நோக்கி,
'கல் அமர் கிரியும், கானமும், இடமாக்
கழித்தனம்; ஒழிந்தன, காலம்;
எல்லை ஓர் ஆண்டும் யாவரும் உணராது
இருப்பதற்கு ஆம் இடம் யாதோ?
சொல்லுமின்' என்றான்; என்றலும், தொழுது,
சுரபதி மகன் இவை சொல்வான்: 2

'நீதியும் விளைவும் தருமமும் நிறைந்து,
நிதிகள் மற்று யாவையும் நெருங்கி,
ஆதியின் மனுநூல் வழியினின் புரப்பான்
அவனியை, மனு குலத்து அரசன்;
மாதிரம் முழுதும் அவன் பெரும் புகழே
வழங்குவது; அமரரும், வேள்வி
வேதியர் பலரும், உறைவதும் அவணே;—
விராடர் கோன் மச்ச நாடு, ஐயா! 3

தருமன் பாங்கில் உறைந்த அரசர்களை அவரவர் பதிகளுக்கு அனுப்பி, முனிவரை வணங்கி, துணைவர்களுடன் விராடன் நாட்டை அடைதல்

'ஆங்கு அவன் நகரி எய்தி, மற்று இன்றே
ஐவரும் அணி உருக் கரந்து,
தீங்கு அற உறைவது அல்லது, வேறு ஓர்
சேர்வு இடம் இலது' எனச் செப்ப,
தேங்கிய அருளுக்கு இருப்பிடம் ஆன
சிந்தையான், சிந்தையால் துணிந்து,
பாங்கு உறை அரசர் யாரையும், 'தம்தம்
பதிகளே செல்க!' எனப் பகர்ந்தான், 4

முனிவராய் உள்ள தபோதனத்தவரை
முடி உறத் தனித்தனி வணங்கி,
கனிவுறும் அன்பால், 'என்று நான் உம்மைக்
காண்பது!' என்று, அவர் மனம் களிப்ப,
இனியன உரைகள் பயிற்றி, யாவரையும்
ஏகுவித்து, 'இற்றை நாள் இரவில்
தினகரன் எழுமுன் செல்வம், அச் செல்வம்
திகழ்தரு நகர்க்கு' எனச் செப்பா, 5

கல்கெழு குறும்பும், சாரல் அம் கிரியும்,
கடி கமழ் முல்லை அம் புறவும்,
மல்கு நீர்ப் பண்ணை மருதமும், கடந்து,
வன்னியில் பிறந்த மா மயிலும்,
வில் கெழு தடக் கை இளைஞரும் தானும்
விராடர் கோன் தனிக் குடை நிழலில்,
பல் குல மாக்கள் வாழ்வு கூர் வளநாடு
அடைந்தனன், பாண்டவர் தலைவன். 6

தராதலம் முழுதும் உடைய கோமகனும்,
தம்பியர் நால்வரும், திருவும்,
இராவிடை, விரைவின், ஆறு இடைக் கடந்து, ஓர்
எண்ணமும் இருக்கையும் வாய்ப்ப,
கராம் உலாவரு பைந் தடமும் வண் காவும்
கனக வான் புரிசையும் சூழ்ந்த
விராடன் மா நகரி எல்லை புக்கு, ஒரு பால்,
மயான பூமியினிடை விரவா, 7

மயான பூமியில் காளி கோயிலின் முன்னே உள்ள வன்னி மரத்தில்,
பாண்டவர் தம் படைக்கலங்களை மறைத்து வைத்தல்

யாமள மறையால் யாவரும் பணிவாள்,
எழு வகைத் தாயரில் ஒருத்தி,
சாமள வடிவோடு அந் நகர் வாழ்வாள்,
சங்கு தண்டு அங்கையில் தரிப்பாள்,
கோமள வல்லிக் கொடி நிகர் காளி
கோயிலின் முன்னர், ஓர் வன்னி,
நாம் அளவிடுதற்கு அரிய பல் கிளையால்
நலம் பெறு, பாதவம் நண்ணு, 8

தத்தம படையும், கவசமும், அனைத்தும்,
தனித்தனி ஐவரும் தரித்த
மெய்த் திறலுடைய யாவும், அத் தருவின்
கோடரத்து ஒளித்து, ஒரு விரகால்,
வைத்தனர்ஆகி, யாவரும் உணரா-
வகை அரு மறைகளும் பயிற்றி,
முத் தலை வடி வேல் காளியை வணங்கி,
முன்னினார், புரி தொழில் முற்றும். 9

தருமன் கங்கன் என்னும் பெயருடைத் துறவியாய் விராடனை அடுக்க, மன்னன் அவனை மனமுவந்து ஏற்றுக்கொள்ளுதல்

தம்பியர் வணங்கித் தனது தாள் இணையில்
தங்க, ஓர் தாபத வடிவும்,
உம்பரும் வியப்பக் கங்கன் என்று உரைக்கும்
ஒரு திரு நாமமும், தரித்து,
வெம் பரிதியினும் செம்மை கூர் வடிவம்
வெண் புரி நூலொடு விளங்க,
ஐம் புலன் மகிழச் சென்று கண்டு, இறை வந்து
அடி தொழ, ஆசியும் உரைத்தான். 10

'யார் ஐயா நீவிர்? எங்கு நின்று இவண் மற்று
எழுந்தருளியது?' என வினவ,
'பாரை ஆளுடைய உதிட்டிரன் பாங்காய்ப்
பயின்றனன்; அவன் பெரு வனத்தில்
சேரு நாள் உடன் போய்த் திரிந்தனன்; நின்பால்
சில பகல் வைகுமாறு எண்ணி,
வீர வார் கழலாய்! வந்தனன்' என்றான்—
வேள்வியால், கேள்வியால், மிக்கோன். 11

மன் முனி மொழிந்த வாய்மை கேட்டு, அந்த
மனுகுல மன்னனும் மகிழ்ந்து,
தன் மனம் நெகிழ்ந்த நெகிழ்ச்சியும், உணர்வும்,
தகைமையும், உவகையில் தோன்ற,
'என் மனைவயின் இன்று எய்திய பயன் யான்
ஏழ்-எழு பிறப்பினும் புரிந்த
நன்மையின் விளைவே; வேண்டுநாள் ஈண்டு
நண்ணுதிர்!' என நனி நவின்றான். 12

வீமன் பலாயனன் என்னும் பெயருடன் விராடனது
தலைமை மடையனாய் வந்து பொருந்துதல்

தண்டினுக்கு ஒருவன், புய வலிக்கு ஒருவன்,
தனுவினுக்கு ஒருவன், என்று உரைக்கும்
திண் திறல் பவன குமரனும் சில் நாள்
சென்றபின், தெள் அமுது அனைய
உண்டியைக் குறித்துக் கற்ற தன் கல்வி
உரிமையைக் குறித்து, 'அடு தொழிற்கு
மண்டலத்து அரசே! ஒருவன் யான், வீமன்
மடையன்' என்று, அரசவை வந்தான். 13

வந்து, தன் தம்முன் மலரடி முன்னி,
மலர்க்கையால் முடியின்மேல் வணங்கி,
'ஐந்து பல் வகையில் கறிகளும், வெவ்வேறு
அறு சுவை மாறுமாறு அமைப்பேன்;
வெந் திறல் மல்லும் புரி தொழில் உடையேன்;
விருதுடைப் பலாயனன், என் பேர்;
இந்திரன் உலகுதன்னிலும் எண்ணில்,
என் தொழிற்கு எதிர் இலை' என்றான். 14

என்றபோது அவனை விராடனும் மகிழ்வுற்று,
இரு கையும் சென்னிமேல் இருத்தி,
பொன் திகழ் மணிப் பூண், மென் துகில், பலவும்,
புரவி போதகங்களும், வழங்கி,
'இன்றுதொட்டு எமக்கு மெய்ப் பெருஞ் சுற்றத்து
ஒருவன் நீ' என்று, அடு தொழிற்கு
நின்றவர் எவர்க்கும் தலைவனும் உரிமை
நிலைபெற வழங்கினன் மாதோ. 15

விசயன் பிருகந்நளை என்ற பேடியாய் விராடன் மகள் உத்தரைக்குப் பாங்கி ஆதல்

நீடிய சிலைக் கைத் தேவர்கோன் மதலை—
நிருத்த நல் அரங்கினில், முன் நாள்,
வாடிய மருங்குல், பணைத்த பூண் கொங்கை,
வாள் தடங் கண்கள் வார் குழைமேல்
ஓடிய வதனத்து, உருப்பசி பணியால்
உறுவதற்கு ஓர் யாண்டு அமைந்த
பேடியின் வடிவம் தரித்தனன்,—ஆண்மைக்கு
இமையவர் எவரினும் பெரியோன்! 16

வாயுவின் மதலை சென்று கண்டதற்பின்,
மற்றை நாள் ஒற்றை வெண் கவிகைச்
சேயொளி மகுடச் சென்னியான் இருந்த
பேர் அவை சிறப்புறச் சென்று,
தூய வெண் புரி நூல் முனி திருக் கழலில்
ஒரு புடை தோய்தரத் தலை சாய்த்து,
'ஏய வெஞ் சிலைக் கை அருச்சுனன் கோயில்
இருப்பது ஓர் பேடி நான்' என்றான். 17

'நாதமும், இயலும், மேதகு நட நூல்
நவில்தரும் அரங்கினுக்கு உரியேன்;
பேதையர்தமக்கு நடம் பயிற்றுவிப்பேன்;
பெயர் ''பிருகந்நளை'' என்ப;
ஆதிப! நினது செல்வ மா நகரில்
இருப்பதற்கு எண்ணி வந்து அடைந்தேன்;
வேதமும் உலகும் உள்ள நாள் அளவும்
விளங்குக, நின் மரபு!' என்றான். 18

வித்தகன் என எக் கலைகளும் பயின்ற
விராடனும், பேடிதன் மொழி கேட்டு,
'இத் திறம் உடையார் வேலை சூழ் உலகின்
இல்லை' என்று, இனிது உரைத்தருளி,
அத் தகவு உடையாள் மகிழ்வுறக் கலனும்,
ஆடையும், வேண்டுவ வழங்கி,
'உத்தரைதனக்குப் பாங்கி, நீ!' என்று ஆங்கு,
உரிய தன் மகளுழை விடுத்தான். 19

சில நாளின் பின் நகுலன் தாமக்கிரந்தி என்னும் பெயருடன் விராடனை அடுத்து, அவனது குதிரைகளுக்கு அதிபதி ஆதல்

பின்னரும் சில்நாள் அகன்றபின், நகுலன்,
பேர் அழகினுக்கு வேள் அனையான்,
மின்னுடை வடி வேல் வேந்தர் கோன் விராடன்
வெம் பரி ஏறு முன்றிலின்வாய்,
மன்னிய தொழில் கூர் கம்பியும் கயிறும்
மத்திகையுடன் கரத்து ஏந்தி,
உன்னயம் முதலாம் புரவி நூல் அறிவோன்
உளம் நிகழ் தருக்கொடு சென்றான், 20

சென்றவன்தன்மேல் புரவிமேல் இருந்தோன்,
செழுந் தடங் கண் மலர் பரப்பி,
'வன் தொழில் புரவி வான் தொழிற்கு உரியோய்!
எவ் வயின் நின்று வந்தனை நீ?'
என்றலும், அவனும் இயம்பினன்: 'விசயற்கு
இளையவன், நகுலன், என்று எல்லாக்
குன்றினும் தன் பேர் எழுதினேன்; அவன்தன்
கொற்றம் யார் கூறுதற்கு உரியார்? 21

'மற்று அவன்தனது வாசி மந்துரைக்குத்
தலைவராய் வாழும் மாக்களில் யான்
உற்றவன் ஒருவன்; வாம் பரி வடிவும்,
உரை தகு சுழிகளும், ஒளியும்,
பற்றிய நிறனும், கந்தமும், குரலும்,
பல் வகைக் கதிகளும், பிறந்த
சொல் தகு நிலனும், ஆயுவும், உணர்வேன்;
துயர் உறு பிணிகளும் தவிர்ப்பேன்; 22

'மண்டலம், வீதி, கோணமே, முதலாம்
வாசிகள் ஊர் தொழில் வல்லேன்;
திண் திறல் தடந் தேர் பூண்பதற்கு உரிய
செயலுடைப் பரிகளும் தெரிவேன்;
வண்டு இமிர் அலங்கல் மாலையாய்! பாண்டு
மைந்தர் போய் வனம் புகுந்ததற்பின்,
உண்டியும் இழந்தேன்; உறுதியும் இழந்தேன்;
உன் புகழ் கேட்டு வந்து உற்றேன்.' 23

என்ன, அப் புரவி ஏற்று நாயகன் வந்து,
இயம்பிய இன் மொழி கேட்டு,
மன்னவர்க்கு எல்லாம் ஒதுங்கு நீள் நிழலாய்
வயங்கு மா மதிக்குடை மன்னன்
முன்னவர்க்கு உள்ள வரிசைகள் யாவும்,
மும் மடங்கு ஆகவே வழங்கி,
அந் நகர்த் துரங்கம் அவை அனைத்தினுக்கும்
அதிபதி எனும் பதம் கொடுத்தான். 24

சகாதேவன் தந்திரிபாலன் என்னும் பெயரோடு இடையனாய் வந்து, விராடன் ஆநிரை காப்போர்க்கு அதிபதி ஆதல்

கிளை படு புரவி புரந்திடும் தாமக்-
கிரந்தி ஆம் பெயர் புனை நகுலற்கு
இளையவன், நந்தகோபன் மைந்தனைப்போல்,
இடையர்தம் கோலமது எய்தி,
துளை படு குழையில் ஒரு குழை அணிந்து,
தோளில் ஓர் தொடித் தடி தழுவி,
விளை புகழ் விராடன் வேத்தவைஅதனை
வேறு ஒரு நாளையின் அடைந்தான். 25

'ஆர்கொல், நீ?' என்ன, அறன் மகனுடன் ஓர்
ஆசனத்து இருந்த பூபதியைச்
சீருற வேறோர் விரகினால் வணங்கி,
செப்பினன், அன்ன சாதேவன்:
'பார் கொள நினைந்து, சுயோதனன் விடுப்ப,
படர் வனம் புகுந்த பாண்டவரில்,
தார் கொள் வேல் இளையோன்தனது கோபாலன்,
தந்திரிபாலன் யான்' என்றான். 26

ஆங்கு அவன் இவ்வாறு உரைத்தலும்,
அவனை, 'அருகுற வருக!' என அழைத்து,
பாங்குறத் தக்க வழக்கமும் வழங்கி,
'பல்வகை நிரைகளும், நீயே
ஈங்கும் அப்படியே புரத்தி!' என்று உரைத்தான்;
இவனும் அவ் அரசன் ஏவலினால்,
தீங்கு அறக் கைக்கொண்டு, அவ்வவர்க்கு எல்லாம்
தகை பெறும் செம்மல் ஆயினனே. 27

திரௌபதி விரதசாரிணி என்னும் பெயருடன் விராடன் தேவியை அடுத்து, அவளுக்கு வண்ண மகள் ஆதல்

ஓம மக ஆர் அழலினூடு உருவு உயிர்க்கும்
மா மயில் திரௌபதியும், வண்ண மகள் ஆகி,
தே மருவு தார் முடி விராடன் இரு தோள் சேர்
கோமகளை நாடி, அவள் கோயிலிடை புக்காள். 28

'மது மலரின் வாழ் திருவும் வந்து தொழ உரியாள்,
நொதுமலினள் ஆகி, ஒரு நுண்ணிடை நடந்தாள்;
பதும விழியாய்!' எனலும், வாயிலவர், பால்போல்
மதுர மொழியாள், 'அழைமின், வாணுதலை!' என்றாள். 29

வந்தவள் இருந்தவள் மருங்கு அணையும் வேலை,
அந் தண் உபசாரமுடன் அருகுற இருத்தி,
சந்தொடு அகில் பூ இலைகள் தகவுடன் வழங்கி,
'எந்த நகரீர்? உரைமின், யாம் உணர!' என்றாள். 30

'தான் விரத மாயை புரி சகுனி பொரு சூதால்,
கான் விரதமாக உறை காவலர்கள் கோயில்,
மான் விரத நோக்கியர் மருங்குற இருந்தேன்;
யான் விரதசாரிணி எனும் பெயரினாளே. 31

'பூசுவன, சுற்றுவன, பூண்பன, முடிப்ப,
தேசொடு வனப்பு நனி திகழும்வகை அணிவேன்;
வாசவனொடு ஒத்த மனுகுல அரசன் மனைவி!
ஏசு அற உனக்கு எலுவை ஆகுவது என் எண்ணம். 32

'எந்தை மனையில் பயில் இளம் பருவ நாளில்,
கந்தருவர் காவல் புரி கற்புடையள் ஆனேன்;
இந்துநுதலாய்! மனிதர் யார் முகமும் நோக்கேன்;
வந்தனன், நின் மாளிகையின் வைகும் வகை' என்றாள். 33

வண்ண மகள் கூறியவை மகிழ்வினொடு கேட்டு,
துண்ணென வெரீஇயினள், சுதேட்டிணை விரும்பி,
'விண்ணவர்கள் பாவையரின் மேவுதி; எனக்குக்
கண் இணையும் நீ! உனது காவல் எனது உயிரும்.' 34

அன்னை எனுமாறு நெறியான முறை கூறி,
'என் அருகு இருத்தி' என, எரியின் வரு மின்னும்,
மின் அனைய நுண் இடை விராட பதி தேவிக்கு
எந் நலமும் நாள்தொறும் இயற்றினள், இருந்தாள். 35

பாண்டவர் மறைந்து உறைந்த நாளில், விராடனது நாடு
எல்லா வகையாலும் சிறந்து ஓங்குதல்

மை வரு தடங் கண் மட மானும், மதி மரபோர்
ஐவரும் மறைந்தனர்கள்ஆய் உறையும் நாளில்,
மெய்வரு வழாமொழி விராடபதி திரு நாடு
உய்வு அரு பெருந் திருவொடு ஓங்கியதை அன்றே. 36

குருக்கள் அவன் ஊரினிடை குருநிலனொடு ஒப்புற்று
இருக்கும் வழி, மா மழையும் எவ் விளைவும் விஞ்சி,
தருக்கினுடன் யானை முதல் தானைகளும் விஞ்சி,
செருக்கும் உடன் விஞ்சியது; செப்ப அரிது, அம்மா! 37

# 20. மற்போர்ச் சருக்கம்

வாசவன் என்ற மற்போர் வீரன் பல மல்லர் சூழ விராடன் அவை சார்ந்து, தன் பெருமை கூறுதல்

அல்லினுக்கு இந்து என்ன ஆங்கு அவர் உறையும் நாளில்,
'வில்லினுக்கு இராமன் என்ன, வேலினுக்கு இளையோன் என்ன,
சொல்லினுக்கு உததி தோய் கைத் தொல் முனி என்ன, வன் போர்
மல்லினுக்கு ஒருவன் யானே; வாசவன்' என்று வந்தான்;— 1

அண்ட மா முகடோடு ஒத்த சென்னியன்; அவனி முற்றும்
கொண்ட மா மேரு ஒத்த குங்குமக் கடகத் தோளான்;
சண்டமாருதத்தோடு ஒத்த வலியினன்; தந்தி எட்டின்
கண்டம் ஆர் முகத்தின் நீண்ட கை எனத் திரண்ட காலான்;— 2

ஆயிரம் மல்லர் தன்னை அணி நிழல் என்னச் சூழ,
'பாய் இரும் புரவித் திண் தேர்மிசை வரும் பரிதி போல,
மா இரு ஞாலம்தன்னில் மற்று இவற்கு எதிர் இன்று!' என்ன,
சேய் இருந் தடக் கை வேந்தன் திருந்து அவைஅதனைச் சேர்ந்தான்.

விராடன் வாசவனுக்கு உரிய சிறப்புச் செய்து, தனது மல்லர்களை நோக்க, அவர்கள் தனித்தனி அவனுடன் மற்போர் செய்தல்

மன்னனை வணங்கி நின்று, 'வலியுடை மல்லின் போருக்கு
என் அலது இல்லை, இந்த எழு கடல் வட்டத்து!' என்றான்;
கொல் நவில் வேலினானும், கொடுப்பன கொடுத்து, முன்னம்
தன்னுழை வைகும் மல்லர்தங்களை நோக்கினானே. 4

அந்த மல் தொழிலின் மிக்கோர் அநேகர், நீடு அசனி ஒப்பார்,
வந்த மல் தலைவன்தன்னை, 'வருதி நீ, எம்மொடு!' என்று,
முந்த மற் கலை நூல் சொன்ன முறைமையின், அரசன் காண,
சந்த மற் சமரம் செய்தார், தனித்தனி ஒருவராக. 5

எல்லோரையும் வென்ற வாசவனுக்கு விராடன் எல்லாச் சிறப்புக்களும் செய்தல்

தத்தியும், தோளும் தோளும் தாக்கியும், சென்னி கொண்டு
மொத்தியும், பற்பல் சாரி முடுகியும், வயிரக் கையால்
குத்தியும், காலும் காலும் கோத்தும், மற் கூறு தோன்ற
ஒத்தியும், பாறை என்ன உரனுடன் உரங்கள் சேர்த்தும், 6

ஓர் ஒரு மல்லர் ஆக ஒரு தனி மல்லன்தன்னோடு
ஆர் அமர் உடற்றி, மல்லர் அனைவரும் அழிந்த பின்னர்,
வீரரில் வீரன் ஆன வென்றி வேல் விராடன் மெச்சி,
தேரின்மேல் வந்த மல்லன்தனக்கு எலாச் சிறப்பும் செய்தான். 7

மறுநாள் தருமன் விராடனிடம், 'வாசவனை வெல்லுதற்குத் தக்கான் நின் மடையர் தலைவன் பலாயனன்' என்ன, அரசன் அவனை அழைத்து வரச் செய்தல்

அன்று போய் மற்றை நாளின் அரசனோடு அறத்தின் மைந்தன்,
'வென்ற மா மல்லன்தன்னை வெல்லுதற்கு உரிய மல்லன்,
இன்று நின் மடையர்தம்மில் பலாயனன் என்போன்தன்னை
அன்றி, வேறு இல்லை' என்றான்; அரசனும், 'அழைமின்' என்றான். 8

வீமன் வாசவனுடன் மற்போர் பொருது, வெற்றி பெறுதல்

பைம் பொன் மா மேரு வெற்பின் பராரையைச் சோதி நேமி
விம்பமாய் வளைந்தது என்ன, விளங்கு பொன் கச்சை வீக்கி,
தம்பம் ஆம் என்னத் தக்க தண்டொடு, தரணி வீழா
உம்பர் ஆர் அமுதம் உண்ட உரவினன், விரைவின் வந்தான். 9

கதையுடைக் காளை வந்து, கடுந் திறல் மல்லன்தன்னோடு,
உதயமோடு அத்தம் என்னும் ஓங்கல் ஓர் இரண்டு சேர்ந்து
துதைவுறப் பொருவதேபோல், தோள் புடைத்து, உருமின் ஆர்த்து,
பதயுகத்தாலும், தம்தம் பாணிகளாலும், சேர்ந்தார். 10

உதைத்தனர், வீசி வன்போடு; உரம்கொடு கரங்கள் எற்றிப்
புதைத்தனர், விரல்கள் மெய்யில்; புருவமும், மூக்கும், வாயும்,
சிதைத்தனர்; புயங்கள் என்னும் சிலம்புகள் தாக்கத் தாக்கப்
பதைத்தனர்; ஓடி ஓடிப் பற்றினர், மீள மீள. 11

கற்றன காயம் எல்லாம் கண்டு, கண் களிக்கக் காட்டி,
உற்றனர் நின்ற போதில், ஊதையின் புதல்வன்—ஊரு
மற்றவன் மருங்கு பற்ற, வன் கரம் மிடறு பற்ற,
செற்றனன்,—இடிம்பன்தன்னைச் செற்ற வெங் கொற்றத் தோளான்.

வென்ற பலாயனன் என்னும் வீமனுக்கு விராடன் பல வரிசைகள் அளித்துப் பாராட்டுதல்

தேர்மிசை வந்த மல்லன் சிதைந்த பேர் உறுப்பினோடும்
பார்மிசைக் கிடக்க, நின்று, பணைப் புயம் கொட்டி ஆர்த்தான்;
சீர் மிகு மல்லன்தன்னைச் சிறப்புறத் தழுவி, 'எல்லாப்
போர்முகங்களுக்கும் நின்னைப் போல்பவர் இல்லை!' என்றான். 13

மன்னவர் களிக்கத்தக்க வரிசைகள் அனைத்தும் நல்கி,
முன்னவன் ஆகி வைகும் முனி மனம் களிக்குமாறு,
தன் அருகு அணுக வைத்து, 'தலத்து எதிர் இல்லை, இந்த
இன் அமுது அடுவோற்கு!' என்றான், இயல் திறல் விராடன்தானே.

# 21. சீசகன் வதைச் சருக்கம்

*சீசகன் விராடன் தேவியான தன் தமக்கை சுதேட்டிணையைக் காண வருதல்*

*அன்ன நாளினில் மன்னவன் தேவியாம்*
*அன்ன மென் நடை, ஆர் அமுது அன்ன சொல்,*
*சொன்ன சாயல், சுதேட்டிணை தன் திருத்*
*துணைவர் நூற்று ஒருநால்வரில், தோற்றமும்,*
*மன்னும் ஆண்மையும், தேசும், சிறந்துளான்;*
*வருதினிக்குத் தலைவன்; முன் தோன்றிய*
*கன்னல் வேள் அனையான்;—தன் துணைவியைக்*
*காண வந்தனன்,—காண்தகு மேனியான்.* 1

*சுதேட்டிணையை வணங்கி மீள்கையில், சீசகன் விரதசாரிணியைக்*
*கண்டு, காமுகனாகி அவளிடம் பலபல கூறுதல்*

*தம்பி, அப் பெருந் தையலை நூபுரத்*
*தாளின் வீழ்ந்து, தகவுடன் மீடலும்,*
*அம்பரத்தவர் கற்பகக் கா நிகர்,*
*அந்த அந்தப்புரத்து, அகன் காவினில்,*
*வெம் புகர்க் களிற்று ஐவர்தம் தேவியாம்*
*விரதசாரிணி, மென் மலர் கொய்து, இளங்*
*கொம்பொடு ஒத்து, இடை சோரப் பணைத்த பொற்*
*கொங்கையாள், இவன் முன்னர்க் குறுகினாள்.* 2

*இயற்கை ஆன கவினுடைப் பாவையை*
*இறைவன் தேவிக்கு இளையவன் கண்டனன்;*
*செயற்கை ஆம் நலம் கண்டிலன்; 'யார்கொல் இத்*
*தெரிவை?' என்று தன் சிந்தையின் நோக்கினான்;*
*மயற்கையால் அழிந்தான், ஐம்புலன்களும்;*
*வழக்கு ஒழிந்து மதி மருண்டான்; இணைக்*
*கயல் கையான், அக் கயல்தடங் கண்ணியைக்*
*கண்ட காட்சியில், காமுகன் ஆகியே,* 3

*அருகு நின்ற மகளிரை, 'மற்று இவள்*
*ஆர்கொல்?' என்ன அறியான் வினவினான்;*
*வரி நெடுங் கண் மகளிரும், 'மாதரார்,*
*வண்ண மா மகள்' என்றனர்; மையலால்,*
*உருகுகின்ற அக் காளையும், நாணம் உற்று*
*ஒடுங்கி நின்ற உயர் தவப் பாவைதன்*
*இரு பதங்களில் வீழ்ந்து, 'எனது ஆவி நீ!'*
*என்று மீளவும் எத்தனை கூறினான்!* 4

அவள் கீசகனைப் புழித்தும் பயமுறுத்தியும் அறிவுரை கூறுதல்

கூறுகின்ற மொழிகளுக்கு உத்தரம்
கொடாது, நின்றது ஓர் கொம்பரின்வாய் மறைந்து,
'ஏறுகின்ற பழிகளும், பாவமும்,
இம்மைதானும், மறுமையும், பார்த்திலை;
மாறுகின்றிலை, சொல்லத் தகாத புன்
மாற்றம், இன்னமும்; மன்னுயிர் யாவும் வந்து,
ஆறுகின்ற குடை நிழல் வேந்தனுக்கு
அழிவு செய்தி; அறிவிலி போலும், நீ! 5

'மார சாயகத்தால் உயிர் மாளினும்,
வசை இலாத மரபின் வந்தோர், பிறர்
தாரம்ஆனவர்தம் முகம் பார்ப்பரோ?
தக்கவர்க்குத் தகவு இவையே கொலாம்?
சோரன் ஆதலின் சொற்ருய்; இனித் தவிர்;
சுரேசர் ஐவர்தம் காவல் என் தோள் இணை;
வீர! போ; என் அருகு உறில், ஆவி போம்,
விழித்து இமைக்கும் முன்!' என்று விளம்பினுள். 6

கீசகன் அவள் காலில் விழுந்து வேண்ட, அவள் சுதேட்டிணையிடம் சேர்ந்து நிகழ்ந்தன கூறுதல்

பேதை இப்படிக் கூறவும், காதல் நோய்
பெருகு சிந்தையன் பின்னையும், முன்பு உரு,
'ஆதரத்து எனது ஆர் உயிர் போகினும்
அமையும்' என்று, அவள் அம் புயச் சீறடி-
மீது நெற்றி படத் தொழுதான்; வடி
வேற்கணுளும் வெகுண்டு, விரைவினில்,
தூதுளங்கனி வாய், முத்த வாள் நகை,
சுதேட்டிணைப் பெயராளுழைத் துன்னினுள். 7

நடுங்கும் மெய்யினள், பேதுறும் நெஞ்சினள்,
நாணும் நீர்மையள், நாவினுள் நீர் இலாது,
ஒடுங்கும் மென்மையள், தன்மையினுல் புனல்
உகுத்த கண்ணினள், ஓவியம் போன்று உளாள்,—
'கடுங் கண் யானைப் பிடர் இருந்து இந் நிலம்
காக்கும் வெண்குடைக் காவலன் தேவி! கேள்:
தொடுங் கழல் கழலான் நின் துணைவன் எற்
சுட்டி ஆயிரம் சொல்லல சொல்லினுன்; 8

'விரதசாரிணி என்பதும், தேவர் என்
மெய் புரக்கும் விரதமும், இங்கு உனக்கு
இரதம் ஆக வர மனைக்கு எய்தும்முன்,
இயம்பினேன்; எனை யாவரும் இச்சியார்;
சுரதம் ஆடும் மகளிரைத் தேடி, நின்
துணைவன் வேட்கையும், சோகமும், மாற்றிடு;
சரதம் ஆக நினையாது ஒழி; நெறி
தப்பில், ஆர் உயிர் தப்பும்!' என்று ஓதினள். 9

சுதேட்டிணை திரௌபதியைத் தேற்றி, தன் தம்பியைத் தன்
மனைக்கு வாராவகை கடிந்து கூறுதல்

கேகயங்கள் எனும் எழில் சாயலாள்
கிளந்த வாசகம் கேட்டு, இடிஏறு உறும்
நாகம் என்ன நடுங்கி, அப் பூங்கொடி
நயன நீர் துடைத்து, 'உற்றது நன்று!' எனு,
வேகமுற்ற மனத்தொடு தம்பியை
மிக முனிந்து, தன் வீடு அணுகாவகை,
'ஏகுக!' என்றனள்; என்றலும், சோகமோடு
ஏகினன், அறம் பாவம் என்று எண்ணலான். 10

கீசகனது விரகதாபமும், அது குறித்துச் சுதேட்டிணைக்குச் சேடியர் கூறுதலும்

சென்று தன் மனை புக்கபின், மன்மதன்
செருவில் நொந்து அழி சிந்தையன் ஆய் மலர்
மன்றல் மெல் அணை வீழும்; 'வெம் பாலையால்
வகுத்ததோ, இம் மலர் அணைதான்!' எனும்;
தென்றல்தன்னையும் 'தீ' எனும்; திங்களைத்
'தினகரன்கொல்?' என்று ஏங்கும்; செயல் அழிந்து,
அன்று அவன் கருங் கங்குலில் பட்ட பாடு
அவனை அல்லதை யார் படுவார்களே! 11

பாவிதன் மனைச் சேடியர்ஆனவர்
பலரும் வந்து, படியுடை மன்னவன்
தேவிதன்னை வணங்கி, அக் காமுகன்
சிந்தை நோயும் செயலும் புகன்று, 'எழில்
காவி அம் கண்ணவளைத் தனது கண்
காணினும் தணியும், கடுங் காதலும்;
ஆவியும் பெறும்; மெய் அணுகான்; நினது
ஆணை' என்றனர், ஆதரம் ஆற்றுவார். 12

சீசகன் நிலைக்கு வருந்தி, மலர்மாலையை அவனுக்கு அளித்து மீளுமாறு விரதசாரிணியைச் சுதேட்டினை வேண்ட, அவள் அங்ஙனமே கொண்டு செல்லுதல்

'பாசகாரிகள் ஆம் ஐம் புலன்களும்
பரிவு கூரப் பரிந்து, உயர்ந்தோர் புகல்
வாசகாதிகள் கற்றும் தெளிந்திலை;
மதன வேதத்தின் மார்க்கமும் பார்த்திலை;
நாச காலம் வரும்பொழுது, ஆண்மையும்,
ஞானமும், கெடுமோ? நறுந் தார் முடிக்
சீசகா!' என்று அழுதனள்—அம் மொழி
கேட்ட போது, அக் கிளி நிகர் மென் சொலாள். 13

ஆகுலத்தொடு நெஞ்சம் தளர்ந்து தன்
அருகில் நின்ற அருந்ததியே நிகர்
மீ குலக்கொடிதன் இரு தாள்மிசை
வீழ்ந்து, 'நின்தன் விழி அருள் உண்டு எனில்,
கோ குலத்தில் உயர்ந்த என் காதலன்
கோலும் நீதியும் குன்று; எனது உரை
நீ குலைக்கில், அனைத்தும் இன்றே கெடும்;
நேரிழாய்! இது நெஞ்சுறக் கேட்டியால்: 14

'இளையன் ஆதலின், என் இளையோன் மனத்து
எண்ணம் இன்றி இகல் மதன் அம்பினுல்
அளையும் மேனியன் ஆகி, நின் மெய்ந் நலம்
ஆதரித்து, இன்று அடாது செய் நீர்மையால்,
விளையுமே கொடு வெம் பழி; இப் பழி
விளைவுறுமல், விரகின் அக் காதல் நோய்
களையும் ஆறு எண்ணின், ஆங்கு அவன் ஆவியும்
காத்து, நின் பெருங் கற்பையும் காக்குமால். 15

'எண்ணுகின்றனன் யான் ஒன்று; நீ மறுது,
எனது வாய்மை எதிர்கொண்டு, இளையவன்
நண்ணும் இல்லிடைச் சென்று, இந்த நாள்மலர்
நறை கொள் மாலையை நல்கினை மீளுவாய்;
கண்ணின் நின் உருக் காணினும், மற்று அவன்
கன்னம் இன்புறக் கட்டுரை கேட்பினும்,
வண்ண மா மகளே! உயிர் நிற்கும்; நீ
வாழி! ஏகி வருக!' என வாழ்த்தினுள். 16

மொழி அலாத மொழியைச் சுதேட்டிணை
மொழிந்த போது, முதுக்குறைவு உள்ள அப்
பழி இலா மொழிப் பாவை, 'வெம் பாதகம்
பகர்தி; என்னை வெறுது ஒழி, பாவை! நீ;
அழிவு இலாத பெருங் கிளைக்கு அல்லல் கூர்
அழிவு வந்தது அறிந்திலை' என்று, தன்
விழிகள் ஆரம் சொரிய, கொடுத்த பூ
வேரி மாலைகொண்டு, ஏகினள், மின் அனாள். 17

ஆண்டு வந்த துருபதன் மா மகள்,
'அடைந்த நாள் தொட்டு, அமரர் ஓர் ஐவரே
தீண்டல் அன்றி, ஒருவரும் என்னை மெய்
தீண்டுவார் இலை' என்று என்று செப்பவும்,
நீண்ட செங் கைத் தரணிபன் காதலி
நினைவு இலாமல், 'நெறி அற்ற தம்பிபால்,
மீண்டும் அவ் வழி ஏகு!' என்று உரைப்பதே!—
விதியை யாவர் விலக்க வல்லார்களே? 18

உதய காலத்தில் விரதசாரிணி கீசகன் மனைபுகுதலும், அவன் தகாத மொழி சொல்ல, அவள் சூரியனை வணங்கித் தன் துன்பம் போக்க வேண்டுதலும்

மாது அவள் கீசகன் மனையில் ஏக, அல்
போது அகலவும், அவன் புலம்பல் போகவும்,
பாதம் இல் வன் திறல் பாகன் ஊர்ந்த தேர்
ஆதபன் உதய வெற்பு அணுகினான்அரோ! 19

தருக்கிய காமுகன் தகாது சொல்லவே,
உருக் கிளர் சாயலோடு உளம் அழிந்து போய்,
முருக்கு இதழ் வல்லி, தன் முளரிச் செங் கையால்
அருக்கனை இறைஞ்சினாள், அழிவு இல் கற்பினாள். 20

'துரங்கம் ஓர் ஏழுடன் சோதி கூர் மணிக்
கரங்கள் ஓர் ஆயிரம் கவினத் தோன்றினாய்!
வரம் கொள்வேன், நின்னை யான்; ''மரபு பொன்றும்'' என்று
இரங்குறும் என் அகத்து இடரை நீக்குவாய்!' 21

என்றுகொண்டு, என்றினைப் பணிந்து, மன்றலால்
கன்றிய கீசகக் கலகன் முன்பு போய்,
மன்றல் அம் தொடையலும் வழங்கி, மெய் வெரீஇ,
நின்றனளால், நிலை நின்ற கற்பினாள். 22

கீசகன் காம நோய் வெதுப்ப, அமளியில் துன்புற்றிருந்த நிலை

காமரு குளிரி, பைங் கதலி மெல் அடை,
தாமரை வளையம், வண் தாது அறு மலர்,
ஆம் முறை அனைத்தும் மெல் அமளிமேல் விரித்து,
ஈம வல் எரியின்மேல் என்ன, வைகினான். 23

சாந்தொடு தண் பனிநீரும் தாமமும்
ஏந்திய கரத்தினர், ஏழைமார் பலர்,
காந்திய கனல்மிசை காட்டும் நெய் என,
வேந்தனது உடலகம் வெதும்ப, வீசினார். 24

விரதசாரிணியைக் கண்டு கீசகன், 'வருக!' என அழைத்து,
அவளைப் பற்றுதற்குத் தொடர, அவள் ஓடி வந்து அரசவையில் வீழ்தல்

தாக்கிய காம நோய் தழைக்க, அன்புற
நோக்கிய திசை எலாம் காணும் நோக்கினான்,
'பாக்கியம் நெஞ்சுறப் பலித்தது!' என்னவே,
நீக்கிய மடந்தை முன் நிற்றல் கண்டுளான். 25

'வந்தனள், என்னுடை மா தவப் பயன்!
வந்தனள், என்னுடை வழிபடும் தெய்வம்!
வந்தனள், என்னுடை ஆவி! வாழ்வுற,
வந்தனள், என்னுடை வண்ண மங்கையே! 26

'வருக நீ, அருகுற! மதுர வாசகம்
தருக, நீ இரு செவி தழைக்க! உள்ளம் நின்று
உருக, நீ தழுவுக உடலம்! தேம் உறப்
பருக நீ வழங்குக, பவள வாய்!' என, 27

கிடந்தவன் எழுந்து, ஒரு கேடு வந்துறு
மடந்தையைத் தழுவுவான் வந்து சார்தலும்,
விடம் திகழ் விழியினாள் ஓட, வேட்கையால்
தொடர்ந்தனன், அறிவு இலாச் சோரன்தானுமே. 28

ஓடிய மடக்கொடி உலகு காவலன்
சூடிய மணி முடி துலங்கு கோயிலின்,
வாடிய கொடி என, வந்து வீழ்ந்தனள்—
நீடிய வேத்தவை நிருபர் காணவே. 29

அங்கும் அவன் வந்து அவள் கையைத் தீண்ட நினைக்கவே, சூரியன் ஏவலால்
ஒரு கிங்கரன் அவனைப் புறத்தே எடுத்து வீசுதல்

தொழும் தகை மனுகுலத் தோன்றல் கண் எதிர்
விழுந்து அழும் தெரிவையை, வேட்கை நோயினால்
அழுந்திய காமுகன், அச்சம் இன்றியே,
செழுந் துணைக் கைத்தலம் தீண்ட உன்னினான், 30

உன்னும் அவ் அளவையின், உருளை ஒன்றுடைப்
பொன் நெடுந் தேரவன் புகல, மற்றொரு
வல் நெடுங் கிங்கரன், சூறை மாருதம்
என்ன, வந்து அடுத்து, அயல் எடுத்து வீசினான். 31

விராடன் கீசகன் செயலைக் கண்டியாது வாளா இருத்தல்

கண்டனன் இருந்த மண் காவல் வேந்தனும்,
எண் தகு நெறி முறை இடறு கீசகன்
திண் திறல் வலிமையும், செயலும், சிந்தையில்
கொண்டு, ஒரு வாய்மையும் கூற அஞ்சினான். 32

பலாயனன் ஒரு மராமரத்தைப் பிடுங்குதற்கு வெகுண்டு நோக்க,
கங்கன் குறிப்பினால் அதனைத் தடுத்தல்

அடு தொழில் பலாயனன் அழுத மின்னையும்
கடுமையில் பின்தொடர் காளை தன்னையும்,
படர் உறக் கண்டு, தன் பாங்கர் நின்றது ஓர்
விடவியைப் பிடுங்குவான், வெகுண்டு, நோக்கினான். 33

கனிட்டனது எண்ணம் அக் கங்கன் ஆகிய
முனித்தகை உணர்ந்து, அவன் முகத்தை நோக்கி, 'இத்
தனிப் பெரு மராமரம் தழல் கொளுந்திடாது;
உனக்கு அடும் இந்தனம் அன்று' என்று ஓதினான். 34

விரதசாரிணி விராடனிடம் முறையிடுதல்

' "தீண்டுதல் தகாது" என, செம்மை ஒன்று இலான்
வேண்டிய செய்வது வேத்து நீதியோ?
ஆண்தகை! இதற்கு நீ, "அல்ல, ஆம்" எனா,
ஈண்டு ஒரு மொழி கொடாது இருப்பது என்கொலோ? 35

'அன்புடைத் தேவிதன் அருகு, தோழியாய்,
நின் பெருங் கோயிலில் நீடு வைகினேன்;
என் பெரு வினையினால், இன்று, உன் மைத்துனன்
தன் புய வலியினால் தழுவ உன்னினான். 36

'பெருந் தகை அன்று இது; பேசல் அன்றி, நீ
இருந்தனை; உனக்கு அரசு எங்ஙன் செல்வது?
வருந்தினர் வருத்தம் நீ மாற்றலாய்எனில்,
அருந் திறல் அரச! நின் ஆணை பொன்றுமே!' 37

புழுதி படிந்த கோலத்துடன் கண்ணீர் பாய, சுதேட்டிணையை அடுத்து,
விரதசாரிணி வருந்துதல்

என, இவள் புலம்பி, மெய் ஏய்ந்த பூழியும்,
கனதனம் நனைத்திடும் கண்ணின் நீருமாய்,
மனம் மிக மறுகிட, மன்னன் தேவிபால்
இனைவுடன் எய்தி வீழ்ந்து, ஏங்கி, விம்மினாள். 38

கங்கன் விராடனை இடித்துரைத்து, அறிவுரை பகர்தல்

'பூதலம் ஆண்மையால் புரக்கும் மன்னவர்
தீ தொழில் புரிஞரைத் தெண்டியார்எனின்,
நீதியும் செல்வமும் நிலை பெறும்கொலோ?
''ஏதிலர், தமர்'' என இரண்டு பார்ப்பரோ? 39

'யாரும் இல் ஒருத்தி நின் இல்லில் வைகினுல்,
ஆர்வம் உற்று அவள்வயின் அன்பு கூர்வது,
வீரமோ? தருமமோ? விருப்பமோ? இவை
பூரியர் அலாதவர் புரிதல் போதுமோ? 40

'கீசகன்ஆயினும் கேடு செய்தனன்;
ஆசை நோய் மன்பதை அனைத்தினுக்கும் உண்டு;
ஏசு இது நினக்கும்' என்று, இருந்த வேந்தொடும்
வாசகம் பல சொனுன், மறை வலானுமே. 41

விராடன் கருத்து அழிந்து தன் மனை புக, பலாயனன் மடைப்பள்ளியை அடைதல்

முன்னுற முனிவரன் மொழிந்த வாய்மையும்,
இன்னலோடு அழுது அவள் இசைத்த வாய்மையும்,
கன்னம் ஊடுறச் சுட, கருத்து அழிந்து, போய்,
மன்னனும், தன் திரு மனையில் எய்தினுன். 42

கண் நெருப்பு எழ, இரு கைந் நெருப்பு எழ,
உள் நெருப்பு எழ, தனது உடல் நெருப்பு எழ,
மண் நெருப்பு எழ, வரு மடை இல் எய்தினுன்—
திண் நெருப்பினும் மிகு சினம் கொள் வீமனே. 43

சூரியன் மறைதலும், பாண்டவர் முதலியோரின் மனக்கலக்கமும்

பன்னிருவரினும் நாள்தொறும் கனக
பருப்பதம் வலம் வரும் தேரோன்
மின் நிகர் மருங்குல் விரதசாரிணிபால்
விளைவுறு துயரமது உணர்ந்து,
தன்ஒரு மரபில் தோன்றலை வெறுத்து,
தனிப் பெருந் தேர் குட பொருப்பின்
சென்னியின் உருள, உருட்டி, அத் திசையும்
சிவப்புற, தானும் மெய் சிவந்தான், 44

குந்திதன் புதல்வர் ஐவரும் சோகம்
முதிர்ந்திட, இதயமும் கொதித்தார்;
வெந் திறல் வடி வேல் விராடனும், தனது
வேத்தியல் பொன்றலின், வெறுத்தான்;
செந் திரு அனைய சுதேட்டிணை என்னும்
தெரிவையும் தெருமரல் உழந்தாள்;
அந்த மா நகரில் அனைவரும் நைந்தார்;
ஆர்கொலோ, ஆகுலம் உறாதார்? 45

விரதசாரிணி பலாயனனை அடுத்துப் பகை முடிக்க வேண்ட, அவன், 'இன்று இரவே அவனை முடிப்பேன்!' எனல்

அனைவரும் துயின்று, கங்குலும் பானாள்
ஆனபின், அழுத கண்ணீரோடு
இனைவரு தையல், கண்கள் நீர் மல்க,
இறைமகன் மடைப்பளி எய்தி,
'நினை வரு செற்றம் முடித்திட வல்லார்
நீ அலது இல்லை; இக் கங்குல்,
கனைவரு கழலாய்! புரிவது யாது?' என்றாள்;
காளையும் கனன்று, இவை சொல்வான்: 46

'பொறை எனப்படுவது ஆடவர்தமக்குப்
பூண் எனப் புகலினும், பொருந்தார்
முறை அறப் புரிந்தால், அக் கணத்து அவர்தம்
முடித்தலை துணிப்பதே முழுப் பூண்;
நறை மலர்க் குழலார்தமக்கு மெய் அகலா
நாணமே நலம் செய் பூண் எனினும்,
நிறையுடைப் பெரும் பூண், அமளிவாய் நாணம்
நிகழ்வுறா நிகழ்ச்சியே அன்றோ? 47

'அரசவைப் புறத்தில் சௌபலன் சூதில்
அழிந்த நாளினும், எமை அடக்கி,
முரச வெங் கொடியோன் தேசு அழித்தனனால்;
இன்றும் அம் முறைமையே மொழிந்தான்;
புரசை வெங் களிற்றின் மத்தகம் பிளக்கும்
போர் உகிர் மடங்கல்போல், இன்னே,
துரிசு அறப் பொருது, கீசகன் உடலம்
துணிப்பன், யான், துணைவரோடு' என்றான். 48

விரதசாரிணி தருமன் தடுத்ததற்குக் காரணம் கூறி, இரண்டொரு நாள் கழிந்தபின் கீசகனை இரவில் கொல்லலாம் எனல்

மருத்தின் மா மதலை வார்த்தை கேட்டு, அந்த
மருச்சகன் மடக்கொடி உரைப்பாள்:
'உரைத்த நாள் எல்லாம் சில் பகல் ஒழிய
ஒழிந்தன, ஒழிவு இலா உரவோய்!
''அருத்தியோடு ஒருவர் அறிவுறுவண்ணம்
இருந்த சீர் அழிவுறும்'' என்னும்
கருத்து நின் தம்முற்கு உண்மையின் தடுத்தான்,
காலமும் தேயமும் உணர்வான். 49

'பாயும் வெஞ் சிறகர்க் கலுழன்முன் பட்ட
பாந்தள்போல், கீசகன் பதைப்ப,
காயுமது இந்தக் கங்குலில் கடன் அன்று;
ஒரு பகல் இரு பகல் கழிந்தால்,
''நேயமோடு இன்று வந்து கந்தருவர்
நேர்பட மலைந்தனர்'' என்னும்
தூய சொல் விளையப் பொருவதே உறுதி'
என்ன, அத் திரௌபதி சொன்னாள். 50

'ஐ' என இவனும், தன்னை முன் பயந்த
ஆர் அழல் அனைய கற்புடைய
தையல்தன் மொழியைத் தானும் உட்கொண்டு,
தகு செயல் விரகுடன் சாற்றி,
வெய்ய தன் சினமும், தன் புய வலிபோல்
மேலுற மேலுற வளர,
நெய் உறு கனலின் பொங்கி, அக் கங்குல்
நீந்தினான், வேந்தனுக்கு இளையோன். 51

மற்றைநாள் விரதசாரிணியைக் கீசகன் கண்டு, அவளது கருத்தை உசாவுதல்

அற்றை நாள் இரவில் தன் பரிதாபம்
ஆறிய அறிவுடைக் கொடியும்,
மற்றை நாள், அந்தச் சுதேட்டிணை கோயில்
மன்னவன் மைத்துனன் வரலும்,
கற்றை வார் குழலில் பூழியும், கண்ணீர்
கலந்த வான் கொங்கையும், சுமந்து, ஆங்கு,
ஒற்றை மென் கொடிபோல் நின்றனள்; அவனும்,
உளம் கவர் அவள் நிலை கண்டான், 52

கலைமதி கண்ட காந்தக்கல் என உருகிச் சிந்தை,
தலைமகன் அல்லான், வஞ்சம் தனக்கு ஒரு வடிவம் ஆனேன்,
நிலை பெறு கற்பினாளை நேர்உற நோக்கி, பின்னும்,
உலைவு உறு காதல் மிஞ்ச, உரன் அழிந்து, உரைக்கலுற்றான்: 53

'மன்னவன் வாழ்வும், இந்த வள நகர் வாழ்வும், எல்லாம்
என்னது வலி கொண்டு என்பது, இன்று, உனக்கு ஏற்பக் கண்டாய்;
உன்னை மெய் காக்கும் தேவர் உறுதியும், உரனும், கண்டாய்;
என்னைகொல், இனி உன் எண்?' என்று, இரு கரம் கூப்பினானே. 54

விரதசாரிணி தான் ஒருப்பட்டமை கூறி, சந்தித்தற்கு உரிய குறியிடமும் தெரிவித்தல்

'கருத்து இனி முடியும்' என்று, கடுங் கனல் முகத்தில் தோன்றும்
திருத் தகு பாவை, அந்தத் தீயவன்தன்னை நோக்கி,
'வருத்தம் நீ உறவும் முன்னர் மறுத்தனன்; மரபினாலும்,
சரித்திரத்தாலும், கொண்ட தவ விரதத்தினாலும். 55

'கந்தருவரும் மற்று என்னைக் காப்பது மறந்தார்போலும்!
இந்திரன் எனினும் மாதர் எளிமையின் ஒருப்பட்டு எய்தார்;
புந்தியில் ஒன்றும் கொள்ளேல்; ஆர் இருள் பொழுதில், இன்று,
சந்து அணி குவவுத் தோளாய்! தனித்து நீ வருதி!' என்றாள். 56

அக் கொடி உரைத்த மாற்றம் அவன் செவிக்கு அமுதம் ஆகிப்
புக்கு, உயிர் நிறுத்தி, மெய்யும் புளகு எழ, இளகி நெஞ்சம்,
மிக்கது ஓர் வேட்கை கூர, விடுத்தலின், வேந்தன் கோயில்
கொக்கின்மேல் குயில்கள் கூவும் குளிர் பொழில் குறியும் சொன்னாள்.

குருட்டு இயல் மதியினானை, கோது இலா அறிவில் மிக்காள்,
மருட்டினள் ஆகி, 'அந்த வளர் தடம் பொழிலின் ஓர் சார்,
இருட்டிடை நிலவு காட்டும் இன்ப மண்டபத்தில் வம்மின்;
உருள் தடந் தேரோய்!' என்றாள்; அவனும் அஃது ஒருப்பட்டானே.

பின் வீமனை அவள் அடுத்து, கீசகனுக்குத் தான் கூறியவற்றைத் தெரிவித்தல்

குறி அவன்தனக்கு நேர்ந்த கொடிய வெங் கொலை வேற் கண்ணாள்,
தறி பொரு களிற்றின் அன்ன, சமீரணன் மகனை எய்தி,
செறிவொடு, அக் காளையோடு செப்பிய யாவும் செப்பி,
பிறிது ஒரு கருத்தும் இன்றி, பெரும் பகல் போக்கினாளே. 59

கீசகன் குறியிடம் செல்ல, வீமனும் பெண்கோலம்கொண்டு திரௌபதியுடன்
அங்கு அவன் வருகையை நோக்கி இருத்தல்

எல்லை எண் திசையும் போன இருள் எலாம் மீண்டு துன்ற,
எல்லையின் தலைவன் ஆன இரவியும் குட வெற்பு எய்த,
எல்லை இல் காதலோனும் இடை இருளிடையே, அந்த
எல்லையை நோக்கிச் சென்றான், யமன்திசை என்ன மன்னோ. 60

வடு அறத் தெவ்வர் போரும், மன்னவன் உணவும், கையால்
அடு தொழிற்கு உரிய செம் பொன் வரை இரண்டு அனைய தோளான்,
உடு முகத்து இன்மை வானம் ஒளி அற இருண்ட கங்குல்
நடுவுறு அப் பொழுதில், செவ்வி நவ்வியர் கோலம் கொண்டான்.

அங்கியில் தோன்றும் நாளாயனியுடன், அள்ளிக்கொள்ளப்
பொங்கிய இருளில், முன்னம் புகன்ற அப் பொங்கரூடு
தங்கிய தவள மாடம்தன்னிடைப் புகுந்து, சான்ற
இங்கிதத்துடனே நோக்கி, இருந்தனன், இமைப்பு இலாதான். 62

திரௌபதியை அப்பால் மறைத்து வைத்து, வீமன் மண்டபத்தில் இருக்க, கீசகனும் அடுத்து, காதல் மொழி பல புகல்தல்

அணங்கு அன சாயலாளை அப்புறம் கரந்து வைத்து,
மணம் கமழ் அலங்கல் மார்பன் மண்டபத்து இருந்த காலை,
பிணம் கலன் அணிந்தது அன்ன, பேர் எழில் பெற்றியான், நெஞ்சு
உணங்க, நாப் புலர, வந்து, அவ் உயர் பொழிலூடு சேர்ந்தான், 63

சாந்தினுல் மெழுகிய தவள மாளிகை
ஏய்ந்த பொன்-தூணிடை இலங்கும் மின் எனச்
சேர்ந்து உறை பெண் உருக் கண்டு, சிந்தையில்
கூர்ந்த பேர் ஆர்வமோடு இறைஞ்சிக் கூறுவான்: 64

'என் பெருந் தவப் பயன் என்று அறிந்திலேன்;
மின் புரை மருங்குலாய்! வேட்கை விஞ்சலால்,
புன் பிழை செய்தனன்; பொறுத்தி, நீ!' என,
அன்புடன் சிலம்பு அணி அடியில் வீழ்ந்து, மேல், 65

'பைங் குலைக் குரும்பையைப் பழித்த கொங்கையாய்!
மங்குலைப் புழுகு அளை வைத்த கூந்தலாய்!
கங்குலில் கால் வழி காட்ட வந்தது, இன்று,
இங்கு உலப்புறும் எனது ஆவி ஈயவோ? 66

'கிஞ்சுகம் மலர்ந்து, நின் கிள்ளை வாய்மையால்,
''அஞ்சல்!'' என்று ஓர் உரை அளித்தல் காண்கிலேன்;
நஞ்சு அன விழிக்கடை நயந்த பார்வை கொண்டு,
எஞ்சும் என் உயிரினை எடுப்பது என்று நீ! 67

'வழிபடு தெய்வமும், மற்றும், முற்றும், நீ!
இழிபடு பிறர் முகம் என்றும் நோக்கலேன்;
கழிபடர் உற்றது, என் காம நோய்!' என்று,
மொழி பல கூறினன், முகம் புகுந்துளான், 68

வீமன் நகைத்து, கீசகனை இரு கையால் பற்றி வீழ்த்தி, அவனுடன் பொருதல்

கீசகன் இம் முறை கிளந்த பற்பல
வாசகம் கேட்டலும், மலம் கொள் நெஞ்சுடைப்
பூசகர் பூசை கொள்ளாத புன் பவ
நாசகக் கடவுள்போல், நகைத்து, நோக்கியே, 69

பெண்ணுடை உருக்கொளும் பெற்ற மா மகன்
கண்ணுடைப் பொறி எழும் கனலின் வந்திட,
மண்ணுடைக் காவலன் மைத்துனன்தனை
எண்ணுடைக் கைகளால் இரு கை பற்றினன். 70

பற்றினன்; பற்றிய பாணியால் எழச்
சுற்றினன், கறங்கு என; தூணம் ஒன்றினோடு
எற்றினன், சென்னியை; எடுத்த தன் வினை
முற்றினன், நெடும் பெரு மூச்சன் ஆகியே. 71

வீமனை, பிடித்த கை விலக்கி, மற்று அவன்
மா முகத்து இரு கையும் மாறி மோதினன்;
தீ முகத்தவனை, அச் செம்மல், மீளவும்
சாமுகத்தவன் எனத் தள்ளி, வீழ்த்தினன். 72

ஓர் ஒரு குத்து ஒரு உருமு வீழ்ந்தென
மேருவொடு ஒத்த தோள் வீமன் குத்தலும்,
ஈரிடத்தினும் விலா எலும்பு நெக்கன,
கூர் உகிர்த் தலைகளால் குருதி கக்கவே, 73

கேளொடு கெடுதரு கீசகன் கழல்
தாளொடு தாள் உறத் தாக்கி, மல் கெழு
தோளொடு தோள் உறத் தோய்ந்து, கன்னல் வில்
வேளொடு வரு நலம் விஞ்ச, மேவினன். 74

தாழ் வரைத் தடக் கையால், தையலாள் எதிர்,
காழ் வரப் பொரு திறல் காளைதன்னையும்,
சூழ்வரச் சூறையில் சுற்றி, பார்மிசை
வீழ்வரப் புடைத்தனன், மிடலில் விஞ்சினன். 75

விழுந்தவன் மீளவும் வெய்துயிர்த்தனன்;
எழுந்து, தன் பகைவனது இருண்ட குஞ்சியை
அழுந்த வல் விரல்களால் சுற்றி, ஆய் மரக்
கழுந்து எனப் புடைத்தனன், கைகள் சேப்பவே. 76

புடைத்தனன் இவன், அவன் புடைத்த கைகளை
விடைத்தனன் அகற்றி, மெய்ம் மேவு பூதியும்
துடைத்தனன் ஆகி, அத் தோன்றல் வாயினை
உடைத்தனன், ஒரு கையால் ஒரு கை பற்றியே. 77

வீரமும், வலிமையும், விரகும், ஒத்தவர்
தீரமும், தெளிவும், நாம் செப்பற்பாலவோ?
'நேரமும் சென்றது நிசை' என, மிகு
சூரமும் செற்றமும் உடைய தோன்றலே, 78

கீசகன் உடலைச் சுருக்கி, அவன் ஆவியை வீமன் போக்குதல்

மன்னவன் மைத்துனன் மார்பு ஒடிந்திட,
சென்னியும் தாள்களும் சேர ஒன்றிட,
தன் இரு செங் கையால் தாக்கி, வான் தசை
துன்னிய மலை எனச் சுருக்கினன்அரோ! 79

மாற்றினன், அவன் பெரு மையல் ஆவியைக்
கூற்றினர் கைக்கொளக் கொடுத்து, தன் சினம்
ஆற்றினன்; அத் திறல் ஆர்கொல் வல்லவர்,
காற்றினல் வரு திறல் காளை அல்லதே? 80

பண்ணிய வினைகளின் பயன் அலாது, தாம்
எண்ணிய கருமம் மற்று யாவர் எய்தினர்?
திண்ணிய கீசகன் செய்த தீங்கு இவன்
புண்ணியம் ஆனதால், புகல்வது என்கொலாம்? 81

வீமன் திரௌபதியை அழைத்து, கீசகன் உடலை அவள் பாதத்தில் வைத்து,
அவள் நன்கு காண, மராமரத்தால் நெருப்பு எழச் செய்தல்

செங் கை கால் உடலொடு சென்னி துன்றிட,
அங்கையால் அடக்கி நின்று, அநேகம் ஆயிரம்
வெங் கை யானையின் மிடல் வீமன், வெற்பு அன
கொங்கையாள்தன்னையும் கூவினன்அரோ! 82

பூங்கொடி அனையவள் புறவடிப் புறத்து,
ஓங்கிய கீசகன் உடல்-பிழம்பினை,
'நீங்கிய வாய்மைகள் நிகழ்ந்தது!' என்னவே,
பாங்கினில் வைத்து, அடல் பவனன் மைந்தனே, 83

விடும் குழை மராமரம் ஒன்று வேருடன்
பிடுங்கினன், கைகளால் பிசைந்து, தீ எழ,
'சுடும்கொல்!' என்று அஞ்சிலன், சுவாலை செய்தனன்,
நெடுங் கணாள் கண்டு, தன் துயரம் நீங்கவே. 84

கீசகன் தம்பிமார் துயிலுணர்ந்து, தீபங்களுடன் சோலையை நேடுதல்

தோட்டு மென் மலர்ச் சோலையின் ஓதையும்,
மோட்டு வன் கர முட்டியின் ஓதையும்,
மாட்டு, வண் சுதை மண்டபத்து ஓதையும்,
கேட்டு, உணர்ந்தனர், கீசகன் தம்பிமார். 85

'தொய்யில் ஆதி சுதேட்டிணைக்கு ஒப்பனை
கையில் ஆர் அழகு ஏறக் கவின் செயும்
தையலாள் பொருட்டாகத் தனக்கு உறும்
மையலால், மிக வாடி, வருந்தினன்; 86

'வண்டு அறாத மலர்க் குழல் வல்லியைக்
கண்ட காவில், இக் கங்குல் பொழுதிடைச்
சண்ட வேகக் களிறு அன்ன தன்மையான்
கொண்ட மாலின் குறுகினன் போலுமால். 87

'தூவி வாசம், துளி மதுச் சோலையில்,
ஏவலால் இயற்றும் எழில் பாவை மெய்
காவல் ஆகிய கந்தருவப் பெயர்த்
தேவரால், வெஞ் செரு உளது ஆனதோ!' 88

அழிந்த கீசகன் அன்றி, மற்று உண்டு என
மொழிந்த தம்பியர் நூற்றொரு மூவரும்,
கழிந்த தீ உமிழ் கண்ணினர் ஆய், 'உயிர்
ஒழிந்து போதும்!' என்று உன்னினர், ஓடினார். 89

நகரி எங்கும் வெருவர, நள் இருள்
நுகருமாறு பல் நூறு ஒளித் தீபமோடு,
அகரு நாறு தண் காவில், அரும் பகல்
நிகரும் என்ன, நெருங்கினர், நேடினார். 90

கீசகன் உடலைக் கண்ட தம்பிமார், அவன் மரணத்திற்குக் காரணமான
வண்ண மகளையும் அவனோடு வைத்து எரிக்க எண்ணுதல்

சுதை நிலா ஒளி சூழ் மண்டபத்திடை,
சிதையும் மெய்யொடும், செம் பொற் சிலம்பு என,
கதைவலான் வெங் கடுங் கொடுங் கைகளால்
வதை செய் தம்முன் வடிவு கண்டார்களே! 91

'எண் இலா மனத்து எம்முனை, எண்ணுடை
விண்ணுளார் சிலர் வீத்ததற்கு ஏதுவாம்
வண்ண மா மகள்தன்னையும், வன்னியால்
அண்ணலோடும் அடுதும்!' என்றார்களே. 92

உபகீசகர் திரௌபதியைப் பற்ற, அவள் அரற்றுதல்

சொல்லும் ஆடவர் சொல்லினர்ஆயினும்,
கொல்லுமோ கனல், தான் பெற்ற கோதையை?
மல்லல் மாலையினார் வந்து பற்றலும்,
அல்லல் கூர, அரற்றினளால், அவள். 93

'வெருவரும் கருங் கங்குலில், வெங் கொலை
நிருபர், என்னை நெருப்பிடை வீழ்த்துவான்
கருதினார்கள்; மெய் காக்கும் கடவுள்காள்!
வருதிர்!' என்று கண் வார் புனல் சோரவே, 94

வீமன் விரைந்து வந்து, மரங்களைப் பிடுங்கிப் புடைத்து, உபகீசகர்கள் ஓட ஓடக் கொன்று அழித்தல்

மடைப் பெரும் பள்ளி எய்திய மாருதி,
'கிடைப்பது அன்று இக் கிளர் பெரும் போர்' எனா,
தொடைப் பெரும் பவனத்து, அனல் சோர்தரப்
புடைப்ப, ஓடினன், போர் மத மா அனான். 95

அகப் பொழில் கண்ட அம் மரம் யாவையும்,
மிகப் பிடுங்கினன், வேரொடும் கோட்டொடும்;
உக, புடைத்தனன்; ஓடத் தொடங்கினார்,
தகச் செயா மதிக் கீசகன் தம்பிமார். 96

போன போன திசைதொறும் போய்த் தொடர்ந்து,
ஆன வானவன், ஒக்க, அக் கோட்டினால்,
மானமும், அவர் ஆவியும், வாங்கினான்;
ஏனையோர்களும் தம்முனொடு எய்தினார். 97

உபகீசகர்களின் மரணத்தால் அரசன் மாளிகையோர் வருந்த, வீமனும் திரௌபதியும் தத்தம் இடத்தைச் சேர்தல்

துவன்று கற்புடைத் தோகையை விட்டு, முன்
நுவன்ற கீசகர் நூற்றொரு மூவரும்,
அவன்தன் வாகுவினால் அழிவுண்டபின்,
கவன்றதால், அக் கடி நகர் எங்குமே. 98

'கற்கும் யாழுடைக் கந்தருவர்க்கு எதிர்
நிற்பரோ, உடன் நேர் பொர மானவர்?
கிற்கும் மைந்துடைக் கீசகர் யாவரும்
தற்கினால் மடிந்தார்; தகவு ஒன்று இலார்.' 99

என்று மா நகர் யாவும் நடுங்கிட,
துன்று கங்குலில் சோரர்தம் ஆர் உயிர்
பொன்றுவித்த பொருநனும் பூவையும்,
சென்று, தத்தம சேர்விடம் நண்ணினார். 100

சூரியன் உதிக்கவே, கீசகர் மரணம் எங்கும் பரவுதல்

சூரிய கங்குல், கனை இருள் போர்வையோடு
இரிய, வந்த இருள்வலி தன்னினும்,
புரியின், அன்று புரிந்த அப் போரும், வன்
கிரியின் மன்னும் கிளர் விளக்கு ஆனதே. 101

தன் மைத்துனன்மார் மரணத்தால் விராடன் மெலிவுறுதல்

புலியினும், பெரும் போரில், தனித்தனி
வலியர் ஆகிய மைத்துனர் யாரையும்
பலியிடும் கந்தருவரைப் பார்க்கவே,
மெலிவு உழந்தனன், விற் கை விராடனே. 102

'கரந்து உறையும் காலம் கழிந்ததுஆதலின், விரைவில் வெளிப்படுவோம்!'
என்ற எண்ணத்தோடு பாண்டவர் இருத்தல்

காண்தகும் தம வேடம் கரந்து உறை
ஆண்டு சென்றது, இனிச் சில நாள் என;
'மீண்டு தோன்றுதும்!' என்று விரதராம்
பாண்டு மைந்தரும், பான்மையின் நண்ணினர். 103

## 22. நிரை மீட்சிச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

தொழுவார்தம் வினை தீர, முன் கோலம் ஆய், வேலை சூழ் பார் எயிற்று
உழுவானை, நல் நாமம் ஒன்றாயினும் கற்று, ஓர் உரு ஓதினார்
வழுவாத சுரர் ஆக, நரர் ஆக, புள் ஆக, மா ஆக, புன்
புழு ஆக, ஒன்றில் பிறந்தாலும், நரகில் புகார் காணுமே. 1

துரியோதனன் பாண்டவரை நாட ஒற்றர்களை ஏவ, அவர்கள் எங்கும்
தேடிக் காணாமையைத் தெரிவித்தல்

மூது ஆர் அழற் பாலை வனமும், தடஞ் சாரல் முது குன்றமும்,
சூது ஆடி, அழிவுற்று, அடைந்தோர்கள் சரிதங்கள் சொன்னோம்; இனி,
பாதாரவிந்தத்து மருவார் விழக் கொண்டு பார் ஆளும் வெங்
கோது ஆர் மனத்தோன், விராடன்தன் நிரை கொண்ட கோள் கூறுவாம்:

'ஈர்-ஆறும் ஒன்றும் சுரர்க்கு உள்ள நாள் சென்ற; இனி, நம்முடன்
பார் ஆள வரும் முன்னர், அடல் ஐவர் உறை நாடு பார்மின்கள்!' என்று,
ஓர் ஆயிரம் கோடி ஒற்றர் விடுத்தான்; அவ் ஒற்றர்களும்,
வார் ஆழி சூழ் எல்லை உற ஓடி, விரைவின்கண் வந்தார்களே. 3

'காடு என்று, மலை என்று, நதி என்று, கடல் என்று, கடல் ஆடை சூழ்
நாடு என்று, நகர் என்று, நாடாத திசை இல்லை, நாள்தோறும், யாம்;—
தோடு என்று தாது என்று தெரியாது மது மாரி சொரி மாலையாய்!—
நீடு என்று வலம் மேவும் அவனிக்குள் அவர் இல்லை; நின் பாதமே!' 4

வீடுமன் பாண்டவர் வசிக்கும் நாட்டின் நிலை எடுத்துரைத்தல்

முன், ஒற்றை, இரு சங்கம், உடன் ஊத, எதிர் சென்று, முனை வெல்லும் மா
மன் ஒற்றர் இது கூற, மந்தாகினீமைந்தன் மகன் மைந்தனுக்கு,
'உன் ஒற்றர் உணர்தற்கு வருமோ, அறன் காளை உறை நாடு? கார்
மின் ஒற்று மழை உண்டு; விளைவு உண்டு' எனத் தேடும் விரகு ஓதினன்,

ஒற்றருள்களில் ஒருவன் விராடனது நாட்டின் வாழ்வும், கீசகன் ஒரு
வண்ண மகள் காரணத்தால் மாண்ட செய்தியும் கூறுதல்

ஒற்றருளில் ஒருவன் பணிந்து, 'என்றும், எவ் வாழ்வும் உண்டாகியே,
வில்-தானை வெம் போர் விராடன்தன் வள நாடு மேம்பட்டதால்;
''மல் தாழ் புயக் கீசகன்தானும் ஒரு வண்ண மகள் காரணத்து
இற்றான்'' எனும் சொல்லும் உண்டு' என்று, நிருபற்கு எடுத்து ஓதினன்.

கன்னன் உரைத்த உபாயப்படி, துரியோதனன் ஏவலால், திரிகர்த்தன்
விராடனது ஆநிரைகளைக் கவர்தல்

'வண் தார் விராடன்தன் வள நாடு தண்டால் மலைந்தே, தொறுக்
கொண்டால், அவன் சூழலில் சூழும் வினயம் குறிப்போர் இருப்பு
உண்டாகின், நிரை மீளும்; இன்று ஆகின், மீளாது; என் உட்கோள் இது' என்று,
எண் தாழும் இதயத்து நிருபற்கு உரைத்தான்—இரவி மைந்தனே.

தக்கோர் தகும் சொற்கள் கேளாத துரியோதனன் சொல்லினால்,
மிக்கோர் மிலைச்சும் செழுந் தாம விறல் வெட்சி மிலை தோளினன்
திக்கு ஓதை எழ விம்ம முரசங்கள், அரசு ஆன திரிகத்தர் கோன்
அக்ரோணி படையோடு போய், ஆன் அடித்தான், அவன் சார்பிலே,

நிரை காவலர் பகைவர் நிரை கொண்டமையை விராடனுக்கு உணர்த்த,
அவன் சேனைகளுடன் திரிகர்த்தனை நெருங்கித் தடுத்தல்

கரை காண அரிதான கடல் ஒத்த வெஞ் சேனை கை சூழவும்,
தரை காவல் பெறு தோளின் ஆண்மைப் பெருங் கேளிர் தற் சூழவும்,
விரை காலும் மலர் ஓடை எனுமாறு இருக்கும் விராடற்கு, நல்
நிரை காவல் நின்றோர் பணிந்து, ஓதினார், தெவ்வர் நிரை கொண்டதே.

'செரு மிக்க படையோடு சதியாக, மதியாது, திரிகத்தர் கோன்,
நிருமிக்க ஒட்டாத என் பூமிதனில் வந்து நிரை கொள்வதே!
பருமித்த மதயானை, தேர், வாசி, ஆள், இன்ன பண் செய்யும்' என்று
உரும் மிக்க முகில்போல் உரைத்தான்—ஓர் அக்ரோணி உள தானையான்.

ஒண் தூளி வானம் புதைக்க, பல் இயசாலம் ஒலிபட்டிட,
திண் தூசி அணியாக, நிரை கொண்ட வெஞ் சேனை சென்று எய்தினான்,
ஞெண்டு ஊரும் வயல்தோறும், வளை நித்திலம் சிந்தி, நிலவு ஊரவே
வண்டு ஊத மலரும் தடம் பொய்கை சூழ் மச்ச வள நாடனே. 11

விசயனை ஒழிந்தோர் நால்வரும் போர் நலம் காண உடன் செல்ல,
போரில் திரிகர்த்தன் சேனை பின்னிடுதல்

உள் பேடியாய் வைகும் விற் காளை அல்லாத ஒரு நால்வரும்,
நட்பு ஏறு பூபாலனுடன் ஏகினார், போர் நலம் காணவே;
கொட்பு ஏறி நிரை கொண்ட வெஞ் சேனையும், செல் கொடுஞ் சேனையும்,
பெட்பு ஏறி, அமர் செய்ய, முன்னிட்ட குரு சேனை பின்னிட்டதே.

திரிகர்த்தன் போரில் அம்பு எய்து, விராடன் சேனை பின்னிடுமாறு செய்து,
அவனைத் தன் தேரில் பிணித்தல்

மெய்க் கொண்ட புண்ணோடு தன் சேனை நில்லாமல் வென்னிட்டபின்
கைக் கொண்ட நிரையைக் கடத்தி, பொலம் பொன்-கழல் காலினான்,
செய்க்கொண்ட கழுநீர் அலங்கல் கரந்தைத் திருத்தாமன்மேல்
மைக் கொண்டல் என வில் வளைத்து, ஆறு-பத்து அம்பு மழை சிந்தினான்.

மா மச்ச உடல் புன் புலால் மாறி, வண் காவி மணம் நாறும் அக்
கோ மச்ச வள நாடனும், கொற்ற வரி வில் குனித்து, ஐந்து செந்
தாமச் சரம் கொண்டு, தேர், பாகு, கொடி, வாசி தனுவும், துணித்து,
ஆம் அச்சம் உற, மற்று அவன் கோல மார்பத்தும், அம்பு ஏவினான்.

தனைத் தேர் அழித்தோனை, நிரை கொண்டு போகின்ற தனு வீரனும்,
துனைத் தேரும் வேறு ஒன்று மேல் கொண்டு, நால்-ஐந்து தொடை ஏவியே,
வினைத் தேரும், வய மாவும், வெம் பாகும், விழ எய்து, வில் நாணினால்,
முனைத் தேர் முகத்தில் பிணித்தான், அவன் சேனை முகம் மாறவே.

கங்கனது தூண்டுதலால் பலாயனன் பொருது, விராடனை மீட்டு, திரிகர்த்தனையும்
அவ் விராடனது தேரில் கட்ட, பகைவர் சேனை அழிந்து ஓடுதல்

திண் திறல் சிலை விராடனைத் தேரொடும் பிணித்து,
கொண்டு போதலும், குருகுலக் கோமக முனிவன்
கண்டு, தன் திருத் தம்பியைக் கடைக்கணித்தருள,
மண்டு தீ என எழுந்தனன், மடைத்தொழில் வல்லான். 16

உகத்தின் ஈறுதோறு, ஓதையோடு ஊதையாம் தாதை,
நகத்தினால் உயர் நகங்களை நருக்குமா போல,
திகத்த பூபதி தேரினை வேறு ஒரு தேரால்
தகர்த்து, வில்லொடும் அகப்படுத்தினன், அவன்தனையும். 17

வீரியம்தனக்கு ஒருவனாம் விராடனை, ஒரு பொன்-
தேரில், 'ஏறுக!' என்று ஏற்றி, அத் தேரினில், திகத்தன்
சோரி பாய் தடந் தோள்களை வடத்தினால் துவக்கி,
மூரி ஏறு என மீண்டனன்; முறிந்தது, அச் சேனை. 18

விராடன் பலாயனனுக்கு நன்றி கூறுதல்

பொரு முகத்தினில் பகைவனைப் புயம் உறப் பிணித்து
வெரு முகத்தினில் வீடு கொள் வீமனை, விராடன்,
'செருமுகத்தினில் எனக்கு நீ செய்த பேர் உதவிக்கு
ஒருமுகத்தினும் இல்லை, கைம்மாறு!' என உரைத்தான். 19

தாமக்கிரந்தி பகைவர் குதிரைகளைக் கவர, தந்திரிபாலன் ஆநிரைகளை மீட்டல்

சேவலான் என, தயித்தியன் அனைய அத் திகத்தர்
காவலானை, அக் கால்மகன் பிணித்தமை கண்டு,
மா வலான் வய மாப் பதினாயிரம் வெளவ,
கோ வலான், அவன் கொண்ட கோ, மீளவும் கொண்டான். 20

சூரியன் மறைந்த காட்சி

துன்னலன்தனைத் தோள் உறத் துவக்கி முன் தந்த,
பன்னு நூல் மடைப் பலாயனற் கண்டு பாவித்தாங்கு,
அன்னகாலையில் அருக்கனைத் தேரொடும் அணைத்து,
மன்னு தன் திசை வன் சிறைப் படுத்தினன், வருணன். 21

கங்கன் சொற்படி, திரிகர்த்தனைத் தளை நீக்கி, அவனைத் தேரில் செல்ல விடுத்து,
வேறு பகைப் படைகளின் வரவு கருதி, விராடன் அங்கு இருத்தல்

கங்கன் என்று தன் அருகு இருந்தருளிய கடவுள்-
துங்க மா முனி சொற்படி, தோள் வடம் நெகிழ்த்து,
சிங்கம் அன்ன அத் திகத்தனை, 'செல்க!' என விடுத்தான்,
அங்க மா மதில் அயோத்திமன், தேரும் ஒன்று அளித்தே. 22

போர் அணிப் படையொடும் அவன் போனபின், தனது
தேர் அணிப் பெருஞ் சேனையை ரவி குல திலகன்
பேர் அணிப்பட வகுத்து, மற்று யாரினும் பெரியோன்
ஈர்-அணிப்படை வரும் எனக் கங்குல் அங்கு இருந்தான். 23

திரிகர்த்தன் படைகள் சிதறி ஓடியமையைத் துரியோதனன் கேட்டு,
வட திசையில் பெருஞ் சேனையுடன் வந்து ஆநிரை கவர்தல்

கெட்ட வெம் படை கெட்டமை சுயோதனன் கேளா,
முட்ட எண் திசா முகங்களும் பேரிகை முழங்க,
தொட்ட பைங் கடல் சூரியன் தோன்றும்முன் தோன்றி,
வட்ட மா மதில் விராடன் ஊர் வட திசை வளைந்தான். 24

வளைய, நாடு எலாம் மன்னவன் வரூதினி பரப்பி,
விளையும் நன் பெரு விளைவு எலாம் வெங் கனல் கொளுத்தி,
அளையும் மா மணி ஆ நிரை கவர்தலும், ஆயர்
உளைய ஓடி வந்து, ஊர் புகுந்து, உத்தரற்கு உரைப்பார்: 25

ஆயர் விராடன் மகன் உத்தரனிடம் ஓடி வந்து, செய்தி தெரிவித்தல்

'குடம் நிறைப்பன குவி முலைக் கோ நிரை மீட்பான்
திடனுடைப் புய மன்னவன் தென் திசைச் சென்றான்;
வட திசைப் புலம் முழுவதும் மாசுணக் கொடியோன்
அடல் வயப் படை ஆழியின் பரந்ததை அன்றே. 26

'நாட்டில் உள்ளன பலன்களும் கவர்ந்தனர்; நறுந் தண்
காட்டில் உள்ளன சுரபியின் கணங்களும் கவர்ந்தார்;
கூட்டில் உள் உறை கலுழனின் குஞ்சுபோல், இனி நீ
வீட்டில் உள் உறைகின்றது என்?—வேந்தன் மா மதலாய்!' 27

'நகர் காமின்!' என்று மகளிரைச் சுதேட்டிணை சொல்ல, உத்தரன் தாயை வணங்கி, 'சாரதி இருப்பின் யான் சென்று பகைவரை வெல்வேன்' எனல்

என்ற போதில், அப் புதல்வனைப் பரிவுடன் ஈன்றாள்,
நின்ற மங்கையர் தங்களை நிரை நிரை நோக்கி,
'சென்ற காவலன் வரும் துணை, செங் கையில் படைகொண்டு,
ஒன்ற ஏகி, நம் எயில் புறம் காமின்!' என்று உரைத்தாள். 28

உரைத்த அன்னையைக் கதுமென உத்தரன் வணங்கி,
'நரைத்த ஓதி! நின் திருமொழி நன்று!' என நகையா,
'அரைத்த ஆரமும், ஆரமும், மாலையும், அணிந்து, என்
வரைத் தடம் புயம் வளர்த்தது, மகளிர் போர் பொரவோ? 29

'கனை கடற்படையுடன் நிரைக் கணம் கவர்ந்தவரை
முனைபடப் பொருது, இமைக்கும் முன் முதுகு கண்டிடுவேன்;
வினைமுகத்தினை அறிந்து, தேர் விசையுடன் விட, என்
நினைவொடு ஒப்பது ஓர் சாரதி நேர்ந்திலன்' என்றான். 30

வண்ண மகள், 'பேடி தேர் விடுவாள்' என்ன, சுதேட்டிணை ஏவலால் பேடி தேர் விட, உத்தரன் போருக்குச் செல்லுதல்

உத்தரன் புகல் உறுதி கேட்டு, ஒப்பனைக்கு உரியாள்
கொத்து அரம் பொரு கூர் அயில் குமரனைக் குறுகி,
'வித்தரம் பெறு தேர் விடும், விசயனுக்கு இவள்' என்று,
அத் தரம் பெறு பேடியைக் காட்டினள், அன்றே. 31

நாடி, வாசியின் நல்லன நான்குஅவை பூட்டி,
தேடி, ஆயுதம் சிலைமுதல் தெரிந்தவை கொண்டு,
கோடி கோடி பைங்கோதையர் குழீஇயினர் வாழ்த்த,
பேடி தேர் விட, சென்றனன், சுதேட்டிணை பிள்ளை. 32

விலங்கல் மா மதில்களும் புற வீதியும் கடந்து, ஆங்கு
இலங்கு நேமி ஒன்று உடைய தேர் என்னலாம் தேர்மேல்,
துலங்கு பேர் ஒளி அருக்கனில் உருத்து எழு தோற்றத்து
அலங்கல் உத்தரன், உத்தர திசையை வந்து, அடைந்தான். 33

விண் கொளா மதி மேன்மை கொள் மீன்இனம் என்ன,
மண் கொளா விறல் மன்னுடை வரம்பு இல் வான் படையை,
எண் கொளா மனத்து இராகவன் திருக்குலத்து இளைஞன்,
கண் கொளாவகை புகுந்து, தன் கண்ணுறக் கண்டான். 34

சேனையைக் கண்டு உத்தரன் நடுங்கிச் சோர, பேடியாம் பிருகந்நளை
அவனுக்குத் தேறுதல் கூறுதல்

கைந் நடுங்கவும், கால் நடுங்கவும், கருத்து அழிந்து
மெய்ந் நடுங்கவும், நாப் புலர்ந்து, உயிர்ப்பு மேல் விஞ்சிச்
சொல் நடுங்கவும், சுடர் முடி நடுங்கவும், சோர்ந்தான்—
மைந் நெடுங் களிற்று உரனுடை விராடர் கோன் மைந்தன். 35

'அஞ்சல், அஞ்சல்! நீ பகைவரை ஆர் உயிர் அடுதல்,
துஞ்சல், என்று இவை இரண்டு அலால், துணிவு வேறு உண்டோ?
வெஞ் சமம்தனில் வந்து, புண் படாது இனி மீண்டால்,
வஞ்ச நெஞ்சுடை வஞ்சியர் என் சொலார்?—மறவோய்! 36

'நிலையும் முட்டியும் நிலை பெற நின்று, நேர்படத் திண்
சிலை வளைத்து, வெஞ் சிலீமுகம் சிற்சில தொடுத்து,
மலை இலக்கு என யாரையும் மலைந்திடு; மலைந்தால்,
அலை கடல் புவி அரசரில் ஆர் எதிர் நிற்பார்? 37

உத்தரன் தேருது, 'மீள வேண்டும்!' என்ன, அவள், 'யான் பொருது
பகை வெல்வேன்' எனல்

'தூண்டு மா இவை, சொரி மதக் களிறு இவை, துரங்கம்
பூண்ட தேர் இவை, பதாதி மற்று இவை!' எனப் புகல,
'ஈண்டு நின்றவை யாவையும் யா எனத் தெரியா,
மீண்டு போவதே உறுதி!' என்றனன் இகல் வீரன். 38

வெயர்த்த மேனியை நறும் பனி நீரினால் விளக்கி,
'அயர்த்து, நீ முதுகிடாது ஒழி, இமைப்பொழுது; ஐயா!
உயர்த்த பல் கொடிப் பகைஞரைத் தனித்தனி ஓட்டி,
பெயர்த்து நல்குவேன் நிரையும்' என்று உரைத்தனள், பேடி. 39

உத்தரன் தேரில்நின்று குதித்து ஓட, அவனைப் பிடித்து வந்து தேரில் கட்டி,
முன் ஒளித்த வில் அம்புகளையும் கொண்டு, விசயன் விரைவில் களம் புகுதல்

கொடித் தடந் தனித் தேரின்நின்று உகைத்து முன் குதியா,
அடித் தலம் பிடர் அடித்திட ஓடலும், அவனைத்
தொடித் தடம் புயம் இரண்டையும் தொடர்ந்து போய்த் துவக்கிப்
பிடித்து வந்து, ஒரு நொடியினில் தேருடன் பிணித்தான். 40

பிணித்த தேரினைப் பெற்றமும் பிற்படக் கடாவி,
திணித்து அரும் பெரும் பொதும்பரில் சேர்த்திய சிலையும்
துணித்து மேவலர் முடி உகு சோரி தோய் தொடையும்
கணித்த எல்லையில், கொண்டு, மீண்டு, அமர்க் களம் கலந்தான். 41

மரத்திலிருந்து கொண்டு வந்த படைகள் விசயனுடையவை என்பது தெரிந்து, உத்தரன் அவனைப் பற்றி உசாவுதல்

'எரிப் புறத் தருத் தரு படை யா?' என வினவ,
'கிரிப் புறப் பெருங் கான் உறை கிரீடிய' என்ன,
'தெரிப்புறப் புகல்; எவ் வயின் சேர்ந்தனன், அவன்?' என்று,
அரிப் புறத் தடங்கண்ணியைக் கேட்டனன், அவனும். 42

'விசயன் விரைவில் இங்குத் தோன்றுவான்' என்று கூறி, உத்தரனது கட்டை அவிழ்த்து, அவனைத் தேர் செலுத்தத் தூண்டுதல்

' ''கிரிடி எங்கு உளன்?'' என்று எனைக் கேட்ட நீ, கேண்மோ:
இருடி ஆகி நின் தாதை ஓர் ஆசனத்து இருக்கும்
புருடன் இப் பதி புகுந்த நாள், வந்து உடன் புகுந்து, ஓர்
அரிடம் ஆன தன் விதியினுல் பேடியும் ஆனுன். 43

'யாண்டு சென்றிலது; இன்னமும் ஈர்-இரு கடிகை
வேண்டுமால்; இனி, ஈண்டை அவ் விசயனும் தோன்றும்;
மீண்டு போகலை; விடு, விடு; விரை பரித் தடந் தேர்
தூண்டு நீ!' என, தோளில் அத் துவக்கையும் விடுத்தான். 44

உத்தரன் தேரில் வரும் பேடியைத் துரோணன் முதலியோர் ஐயுறுதல்

அறிந்து, தாள் விழுந்து எழுந்து, பின் ஆங்கு அவன் அருளால்,
செறிந்த மால் பெருஞ் சிறப்பை அச் சிறுவனும் பெற்று,
பிறிந்த பற்பல பேர் அணி நால் வகைப் படையும்
முறிந்து போக, அத் தேர் விடு தொழிலினில் மூண்டான். 45

'ஓடினுனும் இத் தேர் விரைந்து ஊர்பவன்!' என்றும்,
'பேடி நாம் முதல் ஐயுறும் பெருந்தகை!' என்றும்,
நாடினுர்—பலர், நந்தியாவர்த்த நாள்மாலை
சூடினுன் நெடுஞ் சேனையில், துரோணனே முதலோர். 46

'நீ அஞ்சாது தேர் விடு; நான் அம்பு பல எய்வேன்' என்று உத்தரனுக்குக் கூறி, விசயன் அம்பு எய்து பலரையும் அழித்தல்

பேடி, அன்று, தன் பெண்மையை ஆண்மையாய்ப் பிறர் கொண்-
டாட, அந்த வெஞ் சாபமும் தொடிக் கையில் ஆக்கி,
'கோடி அம்புகள் ஓர் ஒரு தொடையினில் கோத்து,
வீடுவிப்பன்; நீ அஞ்சிடா விடுக, தேர்!' என்றுன். 47

என்ற போது, அவன் தேரினை இமைப்பினில் செலுத்த,
சென்று, போர்முனைச் சிலை விடு சிலீமுகங்களினுல்,
கொன்ற போர் மன்னர் ஈறு இலர்; குருகுலத்தவர் ஆய்
நின்ற போர் முடி மன்னரும் சுளித்து, உளம் நெளித்தார். 48

விதுரன், 'நம் நிலத்தில் இவர் வரும்படி போர் செய வேண்டும்' என, வீடுமன் முதலியோரும் அதுவே தக்கது எனல்

'அன்று போல் அலன், அருச்சுனன்; அம்பிகாபதிபால்
துன்று போர் புரி தவத்தினால் சுடு கணை பல பெற்று,
அன்று போரினில் அவுணரை அமரருக்கு ஆக
வென்று, போனகம் நுகர்ந்து, பொன் தரு மலர் வேய்ந்தான். 49

' ''தன் நிலத்தினில் குறு முயல் தந்தியின் வலிது'' என்று,
இந் நிலத்தினில் பழமொழி அறிதி நீ; இறைவ!
எந் நிலத்தினும் உனக்கு எளிதாயினும், இவர் நம்
நல் நிலத்தினில் வர, அமர் தொடங்குதல் நன்றால்.' 50

என்று கூறினன் விதுரனும்; ஏனை அங்கு அருகு
நின்ற வீடுமன் துரோணனும், 'நினைவு இது' என்றார்;
அன்று நாக வெங் கொடியவன் கொடிய நெஞ்சு அழன்றான்;
குன்றம் ஆயினும் நீறு எழும், அருகுறக் குறுகின். 51

துரியோதனன் நெஞ்சம் கொதித்து நிற்க, கன்னன் ஏனையோரை இகழ்ந்து கூறுதல்

'தேரும் அங்கு ஒரு தேர்; தனித் தேரின்மேல் நின்று,
வீர வெஞ் சிலை வளைத்த கை வீரனும் பேடி;
யாரும் நெஞ்சு அழிந்து அஞ்சுவது என்கொல்?' என்று இசைத்தான்—
சூரன் மா மகன் ஆகிய சூரரில் சூரன். 52

கோவலரை நிரை கொண்டு போகச் சொல்லி, தம்பியரோடு தானும் பேடியை எதிர்க்கத் துரியோதனன் மீளுதல்

'கொண்ட கோ நிரை கோவலர் கொண்டு முன் போக!
தண்டு நிற்க!' எனத் தம்பியர் அனைவரும் தானும்,
திண் திறல் பெரும் பேடியைத் தேர்மிசைக் கண்டு,
'மிண்டுவீர்!' எனக் கூறியே, சுயோதனன் மீண்டான். 53

விசயன் அரசர்களைத் தடுத்து, ஆநிரைகளை மீட்டல்

மான மா முடி மன்னரை விலக்கி, வல் விரைந்து,
கோ நிரைக் குலம் கொண்டுபோம் கோ நிரை துரந்து,
போன பேடி, வெம் பூசலும் பொழுதுறப் பொருது,
தூ நிறத்து இளங் கன்றுடைத் தொறுக்களும் மீட்டான். 54

துரியோதனன் பக்கத்து இடையர் அடங்க, விராடன் பக்கத்து இடையர் மகிழ்ச்சியினால் ஆர்த்தல்

முந்த ஆன்தொறு மீட்டலும், முன் கவர் பொதுவர்
வெந்த நெய் என ஆரவம் அடங்கினர், மிகவும்;
அந்த நெய்யினில் பால்-துளி உகுத்தென ஆர்த்தார்,
வந்த மச்சர் கோமகனொடும் வந்த கோபாலர். 55

பால் எடுத்த பொற்குடம் நிகர் மடியின, பருவச்
சூல் எடுத்த நல் வயிற்றின, மழ விடை தொடர்வ,
கோல் எடுத்து இளங் கோவலர் கூவினர் துரப்ப,
வால் எடுத்தன, துள்ளி மீண்டு ஓடின, வனமே. 56

நாலு நாழிகையில் சாபம் நீங்க, விசயன் தன் முன்னை உருப் பெற்று,
தனது தேரினையும் கொடியினையும் பெறுதல்

கடிகை நால் அவண் சென்றபின், கடை சிவந்து அகன்ற
நெடிய கண்ணி, அன்று இட்ட வெஞ் சாபமும் நீங்க,
கொடியின்மீது எழும் அனுமனைக் குறிக்க, அக் கொடியும்,
முடி கொள் தன் தனி இரதமும், முன் வரக் கண்டான். 57

உரிய தேரினை மீதுகொண்டு, உத்தரன் செலுத்த,
கரிய மேனியன், செய்ய தாமரைத் தடங் கண்ணன்,
புரிய வாங்கிய சிலையினன், நின்றனன்—பொலம் பொற்
கிரியின்மீது எழும் மரகத கிரி எனக் கிளர்ந்தே! 58

வேற்று உரு ஒழித்து நின்று, விசயன் நாண் ஒலி செய்யப் பகைவர் நடுங்குதல்

படும் குறும் பனி புதைத்தலின் பரிதி தன் உருவம்
ஒடுங்குமாறென, ஒளித்த தன் பேட்டு உரு ஒழித்து,
நெடுங் கொடுங் கணை நிருபன் வெஞ் சேனையின் வேந்தர்
நடுங்குமாறு முன் தோன்றினன், நரன் எனும் நாமன். 59

செருச் செய்வான் வரு சேனை வெண்திரையையும் கடப்பான்
பருச் சிலம்பில் நின்று உகைதரு பாவனை போல,
உருச் செழுஞ் சுடர் எறிப்ப, நின்று உலாவினன்—உண்மைக்கு
அருச்சுனன் தடந் தேர்க் கொடி ஆடையில் அனுமன். 60

மரு மிகும் தொடைத் தடம் புய மகபதி மதலை
பெருமிதம் பட வளைத்த வில் பிறங்கு நாண் ஒலியால்,
செருமி, எங்கணும் கரி, பரி, தேர்மிசை நின்றோர்,
உருமின் வெங் குரல் கேட்ட கோள் உரகரோடு ஒத்தார். 61

பல வகை ஒலிகளைக் கேட்ட உத்தரன் தேர் விடு தொழில் மறந்து மயங்கி வீழ,
விசயன் அவனைத் தேற்றித் தேர் விடச் செய்தல்

குறித்த சங்கு ஒலி, சிங்க நாதத்து ஒலி, குனி வில்
செறித்த நாண் ஒலி, செவிப்பட, சிந்தனை கலங்கி,
பொறித்த பாவையின் உத்தரன் பொறி மயக்குற்று,
மறித்தும் வீழ்ந்தனன், மா விடு தொழிலையும் மறந்தே. 62

தாழ்ந்த ஆடையின் உயர் கொடித் தண்டுடைத் தேர்மேல்
வீழ்ந்த பாகனை, மீளவும் விரகுறத் தேற்றி,
சூழ்ந்த தன் பெருந் துணைவனைச் சூதினால் துரந்து
வாழ்ந்த மன்னன்மேல் ஏவினான், வரி சிலை வல்லான். 63

மச்ச நாடன் மா மதலை, அம் மன்னவன் மொழியால்,
அச்சம் அற்று இருந்து, உளவுகோல் அருணனின் கொள்ள,
உச்ச வானிடைப் பகலவன் ஊர்ந்த தேர் பூண்ட
பச்சை வாசியின் ஓடின, சுவேத வெம் பரி மா. 64

துரியோதனனை நெருங்கி, விசயன் பொருதல்

'உரவினுல் வட மேருவைக் கொடு முடி ஒடித்து,
விரவி என் பெருந் தாதை நின் தாதையை வென்றுன்;
பரிவின் நின்னை யான் வெல்வன்' என்று, அவனிபன் பதாகை
அரவை மற்று இவன் பதாகையில் அனுமன் வந்து அடுத்தான். 65

வட்டமாக வில் வளைத்து, எதிர் மண்டல நிலையாய்த்
தொட்ட வாளியான், அடி முதல் முடியுறத் துணிப்புண்டு,
இட்ட மா மணிக் கவசமும் பிளந்து, எதிர்ந்துள்ளார்
பட்டொழிந்தனர்; ஒழிந்தவர் யாவர், புண்படாதார்? 66

வேகம் வற்றிய நதி அன விதம் நடைப் புரவி,
பாகு அவற்றினைத் தலை அற மலைந்து, பாழ்படுத்தி,
மா கவற்றினில் பொய்த்த சூது ஆடிய வஞ்ச
நா கவற்றிய புன்மொழி நிருபனை நகைத்தான். 67

தப்பியோடத் தேர் ஒன்றில் பாய்ந்த துரியோதனனை, விசயன் இகழ்ந்து மொழிதல்

பாகும் வாசியும் அமைந்தது ஓர் தேர்மிசைப் பாய்ந்து,
மாகு சூழவும் தப்பிய வரி நிற மாபோல்,
ஏகுகின்ற பேர் இராசராசனை எதிர் தகைந்து,
கோகு தட்டிடு தனஞ்சயன் இவை இவை கூறும்: 68

'கார்முகம் கைத்தலத்து இருப்ப, கைம்மிகு
போர்முகம்தன்னில் நீ புறந்தந்து ஏகிஞல்,
ஊர்முகக் களிற்றின்மேல் உலாவும் வீதியின்
வார் முகக் கன தன மாதர் என் சொலார்? 69

'இருபுறம் சாமரம் இரட்ட, திங்கள்போல்
ஒரு குடை நிழற்ற, இவ் உலகம் நின்னதா,
மருவலர் கைதொழ, வாழுகின்ற நீ,
பொரு முனை காண்டலும், போதல் போதுமோ? 70

'உன் பெருந் துணைவரோடு உன்னை, ஓர் கணத்து,
என் பெருங் கணைகளுக்கு இரைகள் ஆக்குவேன்;
வன் பெருங் கொடிமிசை மடங்கல் ஏற்றிஞன்-
தன் பெரும் வஞ்சினம் தப்புமேகொலாம்! 71

'எங்களைக் கானில் விட்டு, இரவி ஏக வெண்
திங்களைப் போல், நெடுந் திகிரி ஓச்சினீர்!
சங்கு அலை பயில் வள நாடன், தண்டினால்,
உங்களைக் களப்பலி ஊட்டும், நாளையே. 72

'இரவலர், இளையவர், ஏத்தும் நாவலர்,
விரவிய தூதுவர், விருத்தர், வேதியர்,
அரிவையர், வெஞ் சமர் அஞ்சுவோர், பெருங்
குரவர், என்று இவர்களைக் கோறல் பாவமே!' 73

அப்போது, துரோணன் முதலியோரும் அருச்சுனனை வந்து வளைத்தல்

பற்பல உரை இவன் பகரும் எல்லையில்,
சொற் பயில் நான் மறைத் துவசன், வீடுமன்,
கற்பகம் நிகர் கொடைக் கன்னன், ஆதியோர்
மல் புய நிருபனை வந்து கூடினர். 74

கன்னன் போருக்கு அழைக்க, அவனுடன் விசயன் பொருதல்

மின்னுடன் மின்மினி வெகுளுமாறுபோல்,—
தன்னுடன் நிகர் இலாத் தடக் கை வண்மையான்,—
'மன்னுடன் இகல்வது வார்த்தை அன்று; இனி
என்னுடன் மலைதி, நீ!' என்று கூறினான். 75

கரக் கவுள் மதம் பொழி காய் களிற்றை விட்டு,
உரக் கொடுவரியின்மேல் ஓடும் யாளிபோல்,
நிரக்கும் அந் நிருபனும் நிற்க, வந்து, போர்
இரக்கும் அக் கன்னன்மேல் இரதம் ஏவினான். 76

இரதமும் இரதமும் எதிர்ந்த போது, இரு
குர துரகதங்களும் குமுறி ஆர்த்தன;
உரைதரு பாகரும் உடன்று கூவினர்;
விரை தனு வளைத்தனர்; வீரர்தாமுமே. 77

இருவரும் எதிர் எதிர் ஏவும் வாளியால்,
வெருவரும் இருள் உற, விசும்பு தூர்த்தனர்;
பொரு அரும் அமர் நெடும் போது தாக்கியும்,
ஒருவரும் இளைத்திலர், ஒத்த ஆண்மையார். 78

கன்னன் மூன்று முறை விசயனுக்குத் தோற்றேடுதலும், அசுவத்தாமன்
அவனை இகழ்ந்து பேசுதலும்

மற்று ஒரு தொடையினில் சுவேதவாகனன்,
முற்று ஒரு கணத்திடை, மூன்று கோல் விட;
இற்று, ஒரு கணத்திடை, இவுளி, பாகு, தேர்,
அற்று, ஒருவினன், அடல் ஆண்மை அங்கர் கோன். 79

ஒருவியிட்டு ஓடி, மற்று ஓர் ஓர் தேர்மிசை
மருவியிட்டு, எதிருற வந்து மோதியும்,
உருவியிட்டன கணை ஒன்றுபோல் பல;
வெருவியிட்டனன், அவன், மீள மீளவே. 80

இம் முறை வந்து வந்து, எதிர்ந்து, வெஞ் சமர்
மும் முறை முறிதலும், முனிவன் மா மகன்,
அம் முறை முதுகிடும் அருக்கன் மைந்தனை,
தெவ் முறைமையின் சில வார்த்தை செப்புவான்: 81

' ''தேரும் ஒன்று; ஒருவனே, தேரில் ஆளும்; இங்கு
யாரும் அஞ்சுதிர்!'' என இகழ்ந்து உரைத்த நீ,
போர் உடைந்து ஓடுதல் போதுமோ?— நறுந்
தாருடன் பொலிதரு தாம மார்பனே! 82

'சொல்லலாம், இருந்துழி; சொன்ன சொற்படி
வெல்லலாம் என்பது விதிக்கும் கூடுமோ?
மல்லல் ஆளியைப் பல வளைந்து கொள்ளினும்,
கொல்லலாய் இருக்குமோ, குஞ்சரங்களால்?' 83

துரோண வீடுமர்களின்மேல் அருச்சுனன் அம்பு செலுத்துதல்

கொழுதும் அம்பினும் மிகக் கொடிய கூற்று இவை
பழுது அறு நாவினன் பகரும் வேலையில்,
முழுது உணர் முனியையும், முந்தைதன்னையும்,
தொழுது, பற்குனன், சில தொடைகள் ஏவினன். 84

துரோணன் தன்னை நோக்கித் தேரைச் செலுத்த, விசயன் அவனைத் தொழுது, சில கூறுதல்

தாள் இணை இறைஞ்சிய தனஞ்சயன் தொடும்
வாளி கண்டு, உளம் மிக மகிழ்ச்சி கூரவும்,
மீளிமை உடைய அவ் வீரன்மீது எழும்
தூளி செய் தேரினைத் துரோணன் உந்தினன். 85

உந்து தேர் முனியை அந்த உதிட்டிரன் இளவல் நோக்கி,
சிந்தையில் அன்பு கூர, சேவடி பணிந்து போற்றி,
'அந்தணர் அரசே! உன்தன் அருளினால், அடவி நீங்கி
வந்தனம்!' என்று சிற்சில் வாசகம் இயம்புவானே: 86

'உன்னோடு போர் புரிதல் தகாது' என்ற விசயனை நோக்கி, துரோணன், 'நான் செஞ்சோற்றுக் கடன் கழிக்கப் பொருதல் வேண்டும்' எனல்

'யாதும் ஒன்று அறியா என்னை, ''இவன் அலாது இலை'' என்று, இந்த
மேதினி மதிக்குமாறு வில்முதல் படைகள் யாவும்
தீது அறத் தந்த உண்மைத் தெய்வம் நீ; என்றால், பஞ்ச
பாதகம்தன்னில் ஒன்று, உன் பதயுகம் பிழைப்பது ஐயா! 87

'மன்னொடு சூழ நின்ற மாசுணம் உயர்த்த கோவை
மின்னொடும் உரும்ஏறு என்ன வெகுண்டு அமர் புரிவது அல்லால்,
நின்னொடும், கிருபனோடும், நின் மகனோடும், முந்தை-
தன்னொடும், புரியேன், வெம் போர்; தக்கதோ? சரதம் பாவம்!' 88

அம் முனிதன்னோடு இவ்வாறு அருச்சுனன் புகல, வல் வில்
கைம் முனிவனும், 'செஞ்சோற்றுக் கடன் கழித்திடுதல் வேண்டும்;
தெவ் முனை மதியா வீரா! தேவர்தம் பகையை வென்ற
வெம் முனை காணுமாறு, உன் வில் வளைத்திடுக!' என்றான். 89

துரோணன் விசயனுடன் பொருது, தோற்றோடுதல்

குருவும், அக் குருவைத் தப்பாக் குருகுலக் கோவும், தங்கள்
அரு வரைத் தோளில் நாணி அறைதர, பிறைவில் வாங்கி,
கரு உயிர்த்து எழுந்த கால மழை முகில் கால் கொண்டென்ன,
ஒருவருக்கு ஒருவர் வாளி ஓர் ஒரு கோடி எய்தார். 90

அதிரதர்தம்மை எண்ணில், அணி விரல் முடக்க ஒட்டா
முதிர் சிலை முனியும், வீர முனிவு இலா முகனும், விட்ட
கதிர் முனைப் பவன வேகக் கடுங் கொடும் பகழி யாவும்
எதிர் எதிர் கோத்த அல்லால், பட்டில, இருவர் மேலும். 91

வண்டுதான் முரலும் கஞ்ச மாலையான், பயிற்றுவித்து,
பண்டு, தான் கண்ட கூற்றின் பதின் மடங்கு உயர்ந்த பண்பால்,
மிண்டு தானவரை வென்ற விறலுடை விசயன் வின்மை
கண்டு, தான் அவன்தனோடு கற்பதற்கு உன்னினானே! 92

ஏறு தேர் முரிய, வேதம் எழுதிய துவசம் வீழ,
தாறு பாய் புரவி நான்கும் சாரதி தலையும் சிந்த,
கூறு போர் நாணியோடு குனி சிலை துணிய, பின்னர்,
ஆறு கோல் தொடுப்ப, வெள்கி, ஆரியன் முதுகிட்டானே. 93

அடுத்து, அசுவத்தாமன் பொருது தோற்றல்

தந்தை போர் அழிந்து போன சாபலம் கண்டு, வெம்பி,
இந்திரன் மதலையோடும் எதிர்த்தனன், இவுளித்தாமா;
முந்துற இருவர் வில்லும் முரண் படக் குனித்த போரின்,
அந்தணன் கணையால், மன்னன் வில்லின் நாண் அற்றது அன்றே. 94

மந்தரம் அனைய தோளான் மற்று ஒரு வரி வில் வாங்கி,
'இந்த வெம் பகழிக்கு எல்லாம் ஈடு அலன் இவன்' என்று எண்ணி,
சந்திரமவுலி தந்த சாயகம் தொடுத்தலோடும்,
நொந்து, 'இனி என் செய்வோம்!' என்று ஊர் புக நோக்கினானே. 95

கிருபன் முதலியோர் தோற்றோட, சூரியனும் உச்சிப் பொழுதை அடைதல்

கிருபனும், அவனைக் கண்டு கெட்டனன்; கேடு இலாத
நிருபர்கள் பலரும் மோதி, நேர் பொருது, ஆவி மாய்ந்தார்;
பொரு படைச் சேனை யாவும் புக்குழி யாவர் கண்டார்?
ஒரு பரி ஒற்றை ஆழித் தேரவன் உச்சம் ஆனான். 96

வீடுமன் விதுரன் முதலிய பலரும் நான்கு திசையிலும் வளைய, விசயன்
நாற்புறமும் அம்பு செலுத்தித் தாக்குதல்

வென்னிடும் அளவில், நின்ற வீடுமன், விதுரன், வண்டு
தென்னிடும் அலங்கல் மாலைச் சுயோதனன், சிந்து ராயன்,
துன்னிடு நிருபர் சூழ, சூழ் திசை நான்கும் வந்து,
முன்னிடு தேரோன்தன்னை முனை உற வளைந்துகொண்டார். 97

இவர், பெருந் தேரின் மேலோன் ஒருவனே இலக்கது ஆக,
தவர் உடன் குனித்து, அநேக சாயகம் தொடுத்த காலை,
கவுரி பங்காளன்தன்னைக் கண்ணுறக் கண்ட காளை,
பவுரி வந்து, ஒன்றும் தன்மேல் படாமல், வெம் பகழி கோத்தான். 98

குட திசை மகவான் வாளி, குண திசை வருணன் வாளி,
வட திசை மறலி வாளி, தென் திசை மதியின் வாளி,
அடல் உற இமைப்பின் ஏவி, அவர் அவர் மார்பும் தோளும்
படர் உற, படைகள் நீறு படப்பட, பரப்பினானே! 99

விசயன் மோகனக் கணையால் துரியோதனன் படையோரை மயங்கி விழச் செய்து,
அவர்தம் ஆடைகளைப் பறித்தல்

கோ கன நாக வேகக் கொடியவன் சேனை யாவும்,
மோகனக் கணை ஒன்று ஏவி, முடி அடி படிக்கண் வீழ்த்தான்;
மா கனற்கடவுள் தந்த மணிப் பொலந் தடந் தேர் வெள்ளை
வாகனக் குரிசில் வின்மை வல்லபம் இருந்தவாறே! 100

இத் தரை, இடம் கொளாமல் இறந்தனர் போல வீழ்ந்த
மத்தரை, மயிர் கொய்தென்ன, மணிக் கொடித் தூசும், தூசும்,
உத்தரை வண்டற் பாவைக்கு உடுத்துதற்கு என்று கொய்தான்—
அத்தரை மவுலித் திங்கள் அமுது உகப் புடைத்த வில்லான். 101

மயங்கியோர் உணர்வு தோன்றியதும், தத்தம் ஊர்தியில் ஏறி, ஊருக்கு மீளுதல்

விழுந்தவர் நெடும் போதாக, மெய் உணர்வு எய்தி, மெல்ல
அழுந்திய பகழியோடும், அரிபடு கவசத்தோடும்,
எழுந்து, தம் இரதம், யானை, இவுளியின், ஏறி, ஏறி,
தொழும் தகு தெய்வம் அன்ன சூரனைத் துதித்து, மீண்டார். 102

விசயன் துரியோதனனை மகுட பங்கம் செய்தல்

கொடி மதில் பாகை வேந்தன், கொங்கர் கோன், புரவிக் காலால்
வட திசை அரசர்தங்கள் மா மணி மகுடம் போல,
அடலுடை விசயன், ஒற்றை அம்பினால், மீண்டும் சென்று,
பட அரவு உயர்த்த கோவைப் பண்ணினான், மகுட பங்கம்! 103

'உரிய காலத்திற்கு முன் வெளிப்பட்ட இவரை மீண்டும் காடு புகச் சொல்' என்று துரியோதனன் வீடுமனுக்குக் கூற, அவன், 'நேற்றே குறித்த காலம் முடிந்தது' எனல்

'வல்லினில் அழிந்து நின் முன் மன் அவைதன்னில் அன்று
சொல்லிய காலம் செல்லாமுன், இவர் தோற்றம் செய்தார்;
புல்லிய கானின் இன்னம் போக, நீ புகறி!' என்று
வெல் படை வேந்தன் சொல்ல, வீடுமன் மீண்டும் சொல்வான்: 104

'செந்நெலே கன்னல் காட்ட, சேர்ந்து அயல் செறுவில் நின்ற
கன்னலே கமுகு காட்டும் கங்கை நீர் நாட! கேண்மோ:
இன்னலே உழந்தோர் காலம், இந்துவின் இயக்கம்தன்னால்,
நென்னலே சென்றது' என்றான்—நெஞ்சினில் அழுக்கு இலாதான். 105

துரியோதனனும் தன் நகர்க்கு மீளுதல்

அரவினை உயர்த்த கோமான் அவ் உரை கேட்ட போழ்தே,
பரவையின் இரவி கண்ட பனிமதி போல மாழ்கி,
'வர வர, அறிதும்!' என்று, மா பெருஞ் சேனையோடும்,
இரவிடை யாரும் துஞ்ச, எயில் வளை நகரி புக்கான். 106

விசயன் மீண்டு வந்து வன்னிமரப் பொந்தில் முன்போல் ஆயுதங்களை வைத்து, பேடி வடிவம் கொண்டு, உத்தரனுடன் நகர்க்கு மீளுதல்

வேந்தனை முதுகு கண்ட வெந் திறல் வீரன், மீண்டு
போந்து, முன் எடுத்த வன்னிப் பொதும்பரின் புறத்து வந்து,
வாய்ந்த ஆயுதங்கள் யாவும் வைத்து, எழில் வடிவம் மாற்றி,
ஆம் தகவு எண்ணி, பேடி ஆயினான் என்ப மாதோ! 107

இவ் வெயில் எறிக்கும் பைம் பொன் இலங்கு தேர் மீண்டும் ஏக,
கை வெயில் எறிக்கும் பைம் பூண் காளைதன் தேரில் ஏறி,
வெவ் வெயில் ஆறும் வண்ணம் விரைந்துபோய், விராடன் மூதூர்
அவ் எயில் சூழ்ந்த காவில் அமர்ந்தனன், அரசர் ஏறே. 108

விசயன் தனது வரலாறு கூறி, உத்தரன் வெற்றியோடு மீண்டு வருதலைத் தெரிவிக்க விராடனுக்குத் தூதரை அனுப்புதல்

ஆறிய பசுந் தண் காவின் அசைவு ஓரீஇ, இருந்த வீரன்,
'ஏறிய கானில் பல் யாண்டு இருந்தபின், ஏனை ஆண்டு
மாறிய வடிவத்தோடு இவ் வள நகர் வைகினேம்' என்று,
ஊறிய அமுதச் சொல்லால் உத்தரற்கு உரைசெய்தானே. 109

' ''பேடி தேர் செலுத்தச் சென்ற பிள்ளையும், பெரும் போர் வென்று,
கோடி தேர் முதுகு கண்டு, கோ நிரை மீட்டான்'' என்று என்று,
ஓடி நீர் சொன்மின்!' என்று தூதரை ஓடவிட்டான்—
நீடு நீர் பரக்கும் கங்கை நாடுடை நிருபர் கோமான். 110

தன் நகர்க்கு மீண்ட விராடன், உத்தரன் போர்க்குச் சென்ற செய்தி கேட்டு, மயங்கி வீழ்தல்

இங்கு இவன் இவ்வாறு உய்ப்ப, முற்பகல் ஏகி, ஆங்கண்
கங்குலில் சேனையோடும் கண்படை இன்றி வைகி,
செங்கதிர் எழுந்த பின்னர், தென் திசைப் பூசல் வென்ற
வெங் கழல் விராடன்தானும் மீண்டு, தன் நகரி புக்கான். 111

தடம் பதி அடைந்த காலைத் தன் மனை இருந்த பேடி
திடம் படு தடந் தேர் ஊர, திருமகன் சென்ற செய்கை
விடம் படு வெகுளி வேற்கண் சுதேட்டிணை விளம்பக் கேட்டு, ஆங்கு
உடம்பு உயிர் இன்றி வீழ்ந்தது என்னுமாறு, உருகி வீழ்ந்தான். 112

கங்கன் தேற்ற, மன்னன் தேறி இருந்த காலையில், உத்தரன் வெற்றிச் செய்தியைத் தூதுவர் வந்து அறிவித்தல்

சந்தன அளறும், வாசத் தண் பனிநீரும், வீசி,
வெந் திறல் வேந்தன்தன்னை மெய்ம் மெலிவு, இருந்து, தேற்றி,
'மைந்தன் இப்பொழுதே வென்று வருகுவன், பொன்-தேர் ஊர்ந்தாள்
அந்த மெய்ப் பேடி ஆகில்' என்றனன், அந்தணாளன். 113

அறன் மகன் வாய்மை தேறி, அரசன் ஆங்கு இருந்த எல்லை,
மறனுடை உரககேது வன் சமர் அழிந்தவாறும்,
உற மலைந்து ஒரு தன் தேர்கொண்டு உத்தரன் வென்றவாறும்,
தொறு நிரை மீட்டவாறும், தூதர் போய், தொழுது, சொன்னார். 114

விராடன் மகிழ்ந்து, உத்தரனை எதிர்கொள்ளுமாறு சேனாதிபரை ஏவுதல்

சீதள அமுத வாரி செவிகளில் செறிந்தது என்னத்
தூதர் வந்து உரைத்த சொல்லால், சோகமும் துனியும் மாறி,
தாதை அன்று ஏது செய்தான்? தனை ஒழிந்து உள்ள சேனை
ஆதிபர் எவரும் எய்தி, அண்ணலை, எதிர்கொள்க! என்றான். 115

சோரர்தம் கருவைத் தங்கள் கரு எனத் தோளில் ஏந்தி,
ஆர்வம் உற்று உருகு நெஞ்சின் அறிவிலார்தம்மைப் போல,
வீரன் வெஞ் சமரம் வெல்ல, விராடன், 'உத்தரன் வென்றான், அப்
போரினை!' என்னா, மேனி புளகு எழப் பூரித்தானே. 116

பூழிகள் அடக்கி, செம்பொன் பூரண கும்பம் வைத்து,
வாழையும் கமுகும் நாட்டி, மணி ஒளித் தீபம் ஏற்றி,
சூழ வன் பதாகை கட்டி, தோரணம் பலவும் நாட்டி,
ஏழ் உயர் மாட மூதூர் எங்கணும் கோடித்தாரே. 117

'மகன் வரும் அளவும் சூதாடுவோம்' என்று கங்கனுடன் விராடன் ஆடும்போது, அவன் தன் மகன் வெற்றி பேச, கங்கன், 'அது பேடியின் வெற்றியே' எனல்

'மகன் வரும் அளவும், வெஞ் சூது ஆடுதும்; வருக!' என்று, ஆங்கு
அகம் மிக மகிழ்ந்து, வேந்தன் அந்தணன்தன்னோடு ஆட,
மிக முனி அடுத்து வெல்ல, 'வென்றி உத்தரன்முன் மேவார்
இகல் அழிந்தென்ன, இப் போர் அழிதி நீ, எந்தை!' என்றான். 118

என்று அவன் மொழிந்த போதில், 'எண் இல் வெஞ் சேனையோடு
வன் திறல் உரககேது வலி அழிந்து, உடைந்து போக,
வென்றவன் பேடியே! தன் மெய்ந் நடுங்காமல் போரில்
நின்று, நின் சிறுவன் வெல்ல வல்லனோ?—நிருபர் ஏறே! 119

'பிருகந்நளை என்று ஓதும் பேடியைப் பேடி என்று
கருதல் நீ! அவனே முன்னம் காண்டவம் எரித்த காளை;
ஒரு தனித் தடம் பொன்-தேர் ஊர்ந்து, உம்பருக்காக உம்பர்
அரிகளை அரிதின் வென்றான்' என்றனன், அந்தணாளன். 120

' ''கோடியின் கோடி ஆன குருக்கள் வெஞ் சேனைதன்னை
ஓடி, என் புதல்வன்தானே ஒரு தனி பொருது வென்று,
நீடிய நிரையும் மீட்டு மீண்டனன்'' என்ன, நீ அப்
பேடியை விறல் கொண்டாடிப் பேசுதி, பிரம மூர்த்தீ! 121

'புன் நவை ஆன மாற்றம் புகன்றனர்எனினும், கேட்டு, ஆங்கு,
''இன்னவை நன்று நன்று'' என்று, இதம்பட மொழிவது அல்லால்,
மன் அவை இருந்து நாளும் வழிபடும் மாந்தர், மன்னர்
சொன்னவை மறுத்து, மாறு சொல்வரோ? சுருதி வல்லாய்!' 122

என்னவும், இடம் கொடாமல், எதிருற, இருடி, மீண்டும்,
'கன்னன், வில் துரோணன், மைந்தன், காங்கேயன், முதலினோரை,
மன்னவ! வெல்ல, நின் சேய் வல்லனோ? வந்து சொன்னால்
பின்னை நீ தெளிதி' என்றான், 'பீடுடைப் பேடிதன்னை.' 123

விராடன் சினம் மூண்டு, கங்கனது நெற்றியில் இரத்தம் பொசியுமாறு கவற்றால் எறிதல்

'கொடு வில் ஆண்மையினால் இன்று என் குமரன் வென்றிடவும், சற்றும்
நடுவு இலாதவரின் பல் கால் என்கொல் நீ நவில்வது?' என்னா,
கடு இல் ஆடு அரவின் பொங்கி, கவற்றினால் எறிந்து, நக்கான்,
வடு இலா முனியை மன்னன் வடுப்படுமாறு மன்னோ. 124

நெற்றியில் பொசியும் இரத்தத்தை விரதசாரிணி கண்டு, தன் ஆடையால் மாற்றுதல்

எற்றிய கவறு நெற்றி, எதிர் உற இருந்த கங்கன்
நெற்றியில் சென்று, வாசம் நிறைத்த குங்குமத்தின் சேற்றால்
பற்றிய திலகம் போலப் படுதலும், பாங்கர் நின்ற
வற்றிய ஓடை அன்ன வனப்பினாள் மருண்டு கண்டாள். 125

'பல்கிய கிளேயும், தேசும், பார்த்திவன் வாழ்வும், தாங்கள்
அல்கிய நகரும் இன்றே அழியும்' என்று அஞ்சியேகொல்?
நல்கிய நேயமேகொல்? நயனம் நீர் மல்க, மல்க,
மல்கிய குருதிதன்னை மாற்றிஞள், வண்ண மாதே. 126

விராடன் தன் செயலுக்கு இரங்கி வருந்தல்

கண்ணில் நீர் மல்க, வண்ணக் காரிகை, கலேயால், அந்த
வண்ண மா முனிவன் சோரி மாற்றிய காலே, ஐயுற்று,
எண்ணமும் செயலும் வேருய், 'என் செய்தோம்! என் செய்தோம்!' என்று
அண்ணலும், தன்னை நொந்து, ஆங்கு, 'அருஞ் சினம் பாவம்!' என்ருன்.

அந்திப் பொழுதில், மன்னர் சூழ உத்தரன் நகரை அடைந்து, உலாவருதல்

ஆயிடை அத்தக் குன்றுக்கு ஆதபன் அணியன் ஆக,
சேயிடை எதிர் கொள் கொற்றச் சேனை மன்னவர்கள் சூழ,
வீயிடை வரி வண்டு ஆர்க்கும் வியன் பெருங் காவு நீங்கி,
போய் இடை நெருங்கி, வேந்தன் புதல்வன், அப் புரத்தைச் சேர்ந்தான்.

பரந்து வெம் படைகள் மின்ன, பல் இயம், பணிலம், ஆர்ப்ப,
சுரந்து மும் மதமும் பாயும் துதிக்கை வாரணங்கள் சூழ,
புரந்தரன் நகரில் காளப் புயல் வருமாறு போல,
உரம் தரு பேடி தன் தேர் ஊரவே, வீதி உற்ருன். 129

விராடன் மகனை எதிர் கொண்டு தழுவுதல்

வென்று மீள் குமரன்தன்னை வீதிகள்தோறும், மாதர்
அன்று எதிர்கொண்டு, நல் நீராசனம் எடுத்து, வாழ்த்த,
குன்று எறிந்தவனைக் கண்ட குன்ற வில்லியைப்போல், முந்தச்
சென்று, அவன் பிதாவும் தேர்மேல் சிக்கெனத் தழீஇக்கொண்டானே.

மனை புகுந்த உத்தரன் கங்கனை வணங்கி, நெற்றி வடுவைக் கண்டு, தந்தையால் நிகழ்ந்தமை அறிந்து, பொறுக்குமாறு இருவரும் வணங்குதல்

தழுவிய அரசன் தாளில் தலே உற வீழ்ந்து, வேந்தர்
குழுவிடைக் கொண்டு போக, கோயிலில் புகுந்த பின்னர்,
பழுது அறு வாய்மை வேத பண்டிதன் பாதம் போற்றி,
செழு மலர் வதனம் நோக்கி, திரு நுதல் வடுவும் கண்டான். 131

'திகழ்ந்த நின் நுதலின் ஊறு செய்தவர் யார்கொல்?' என்ன,
நிகழ்ந்தமை தந்தை கூற, நெஞ்சிஞல் தந்தைதன்னை
இகழ்ந்தமை நுவலும்போதைக்கு எல்லே இன்று; 'இவனைப் போல
அகழ்ந்த நீர் ஆடை ஞாலத்து ஆர்கொலோ, அமைவின் மிக்கோர்?'

'செறுப்பது பெருமை அன்று; சிறியவர் செய்த தீமை
பொறுப்பதே பெருமை' என்று பூசுரன் பாதம் போற்றி,
வெறுப்பது விளேத்த தாதை வீழ்ந்தபின், தானும் வீழ்ந்து,
மறுப்பது புரியா ஞானி, மனத் துனி அகற்றிஞனே. 133

விராடனும் உத்தரனும் சுதேட்டிணை கோயில் புக, அவள் மகனைக் கண்டு பெரு மகிழ்வு எய்துதல்

ஆன்று அமைந்து அடங்கு கேள்வி அண்ணலும், அவனைப் பெற்ற
தோன்றலும், பின்னர்ச் சென்று, சுதேட்டிணை கோயில் எய்த,
ஈன்ற அப்பொழுதின் ஓகை எண் மடங்கு ஆக விஞ்ச,
சான்ற தன் மகனைக் கண்டு, மகிழ்ந்தனள், தவத்தின் மிக்காள். 134

பேடி தான் கவர்ந்த தூசுகளை உத்தரையின் பாவைக்கு அளித்து, சுதேட்டிணையின் பின் நிற்றல்

ஓடி உத்தரன் தேர் ஊர, ஒரு முனையாகத் தன்னை
நாடி, உத்தரிக்க மாட்டா நராபதிபர் பதாகைத் தூசும்,
கோடி உத்தரியப்பட்டும், குழமகன்தனக்கு நல்கி,
பேடி உத்தரைதன்னோடும் பெற்ற தாய் பின்பு நின்றாள். 135

தந்தையுடன் உத்தரன் தனித்து இருந்து, போர் நிகழ்ச்சிகளைக் கூறுதல்

தந்தையும், தானும், ஆங்குத் தனித்து இருந்து, அடையலாரை
முந்திய அமரில் சென்று, முனைந்து, போர் விளைத்தவாறும்,
வந்தவர் சாய்ந்தவாறும், மணி நிரை மீட்டவாறும்,
சுந்தர கிரிகள் போலும் தோளினான், தோன்றச் சொல்வான்: 136

மாற்று வடிவு கொண்ட கங்கன் முதலியோர், பாண்டவரும் திரௌபதியும் எனல்

'உருப்பசி வெஞ் சாபத்தால் பேடியான
உருவம் ஒழித்து, அருச்சுனன் தன் உருவம் கொண்டு,
பொருப்பு அனைய கவித் துவசத் தேர்மேல், வண்ணப்
பொரு சிலை தன் கரத்து ஏந்தி, புகுந்த போது,
செருப் புரவி இரவி எதிர் திமிரம் போல,
திறல் அரி ஏற்று எதிர் கரியின் திறங்கள் போல,
நெருப்பு எதிர்ந்த பதங்கம்போல், அழிந்தார்—ஐய!—
நிரை போக்கி, அணி ஆகி, நின்ற வேந்தர். 137

'அருகு விடாது, உனக்கு உயிர் நண்பு ஆகி, நீதி
அறம் உரைப்போன் அறத்தின் மகன் ஆக வேண்டும்;
மரு மலரும், மான்மதமும் துறந்த கூந்தல்
வண்ண மகள் பாஞ்சாலன் மகளே போலும்!
வெருவரும் மற் போர் கடந்த மடையன்தன்னை
வீமன் என அயிர்க்கின்றேன்; வேந்தே! மற்றை
இருவரினும் மா வலான் நகுலன்தானே;
இன் நிரையின் காவலான் இளைய கோவே. 138

'ஆளேயே அடும் களிற்ருர் தம்மை யாரும்
அறியாமல், இந் நகர்க்கண் அடங்கி நின்ருர்;
நாளேயே வெளிப்படுவர்; நெருநலே தம்
நாள் உள்ள கழிந்தனவால்; நயந்து கேண்மோ:
வேளேயே அனைய எழில், தோகை வாகை
வேளேயே அனைய விறல், விசயன் என்னும்
காளேயே, அடியேனுக்கு இளைய காதல்
கன்னிகைக்கு வரன் என்று கருதுவாயே.' 139

பாண்டவர் தம் முன்னை உருக்கொள்ள, பகலவனும் உதயம் செய்தல்

மகன் இவை மற்று உரைத்த அளவில், தாதை கேட்டு,
மனம் நடுங்கி, நெகிழ்ச்சியுடன் மகிழ்ச்சி கூர்ந்தான்;
பகல் அமரில் ஏறிய மெய்ப் பராகம் மாற,
பகலோனும் புனல் படிவான் பரவை சேர்ந்தான்;
தகவுடைய பாண்டவரும் வண்ண மாதும்
தனித்து எண்ணிப் பரகாய சரிதர் போலப்
புகல் அரிய பழைய தம வடிவம் கொண்டார்;
போன பகலவன் உதயப் பொருப்பின் மீண்டான். 140

## 23. வெளிப்பாட்டுச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

எக் கடலும், எக் கிரியும், எவ் உலகும், உலகில்
தக்க பல யோனிகள் சராசரம் அனைத்தும்,
மிக்க விதியால் விதிசெய் விதியினை விதிக்கும்
செக் கமல நாபி முகில் சேவடி துதிப்பாம். 1

தருமன் திரௌபதியோடும், துணைவர்களோடும் வீற்றிருத்தல்

அருக்கன் அடி கைதொழுது, அனந்தரம், அருக்கன்
உருக் கருகவே அருண உரு அழகு எறிப்ப,
திருக் கிளர் நலம் பெறு செழுந் தெரிவையோடும்,
குருக் குலம் விளங்க வரு கோமகன் இருந்தான். 2

காற்றின் மகனும், கடவுள் ஆதி திரு மகனும்,
மாற்றம் முதிர் ஆயுள் மறை வானவர் மகாரும்,
ஏற்ற முறையால் அடி இறைஞ்சி, இசையோடும்
தோற்றம் உறுமாறு, அருகு சூழ்தர, இருந்தார். 3

தருமனது நெற்றி வடுவின் காரணத்தைத் திரௌபதி கூற உணர்ந்து,
விசயன் விராடனை அழிக்க வில் எடுக்க, வீமன் விழி சிவத்தல்

தன்னை நிகர்கிற்பவர் இலாத தனு வல்லோன்,
'என்னை, திருநெற்றியில் இருந்த வடு?' என்றான்;
மின்னையும் வெறுத்து ஒளிரும் மேதகு நிறத்தாள்,
பின்னை, அவனுக்கு நிகழ் பெற்றி உரைசெய்தாள். 4

உரைத்த பொழுது, 'இப்பொழுது இவ் ஊர் எரி கொளுத்தி,
தரைத் தலைவனைத் தலை தடிந்திடுவல்!' என்னா,
விரைத் தட வரைப் புயன் வெகுண்டு வில் எடுத்தான்;
இரைத்து வரு கால்மகனும் எரி விழி சிவந்தான். 5

தம்பியரின் சினத்தைத் தருமன் அடக்குதல்

'ஒன்று உதவி செய்யினும், அவ் உதவி மறவாமல்,
பின்றை அவர் செய் பிழை பொறுத்திடுவர், பெரியோர்;
நன்றி பல ஆக ஒரு நவை புரிவரேனும்,
கன்றிடுவது அன்றி, முது கயவர் நினையாரே. 6

'அனலும் முது கானகம் அகன்று, நெடு நாள் நம்
நினைவு வழுவாமல் இவன் நீழலில் இருந்தோம்;
சினம் மிகுதலின், ''தவறு செய்தனன்'' எனப் போய்,
முனிதல் பழுதாகும்' என, முன்னவன் மொழிந்தான். 7

விராடன் மைந்தனோடு சென்று, திறைப் பொருள்களை வைத்து,
பாண்டவரை வணங்க, தருமன் அவனைத் தழுவிப் பாராட்டுதல்

குந்திவயின் வந்து, தம குருகுலம் விளக்கும்
ஐந்து அரசும் அன்று தன் அகன் கடை இருக்க,
சிந்தனையொடும், திறைகொள் செல்வ நிதியோடும்,
மைந்தனொடும், எய்தி, அவர் மலர்அடியின் வீழ்ந்தான். 8

விராடனை நறுங் குவளை மாலை வியல் மார்பில்,
தராபதி எழுந்து எதிர், தழீஇயினன் இருத்தி,
'பராவரு பெரும் புகழ் படைத்தவர், உனைப்போல்,
அராவின் முடிமேல் உலகில் ஆர்கொல் உளர்?' என்றான். 9

'நான் செய்த குறையைப் பொறுக்கவேண்டும்!'
என விராடன் தருமனை வேண்டுதல்

அறை முரசு உயர்த்தவனை, அவனும், 'நனி, ஐயா!
பொறை உடையவர்க்கு அலது புகழ் புனைதல் உண்டோ?
இறை அமுத நற்குணம் இலாதவரிடத்தில்
குறை திருஉளத்தினிடை கொண்டருளல்!' என்றான். 10

தருமன் முகமன் கூறி, 'போரில் எனக்குப் படைத்துணையாக வேண்டும்' எனல்

'இந் நகரில் எய்திய பின் எத் துயரும் எய்தாது,
எம் நகரி என்ன நெடு நாள் இனிது இருந்தேம்;
செந்நெல் வயலூடு முது சேல் உகளும் நாடா!
நின்னினும் உயர்ந்த தமர் நீ அறிய உண்டோ? 11

'நின் புதல்வரும், திறல் வரூதினியும், நீயும்
என் புயம் எனச் சமரில் என் அருகு நின்ருல்,
வன்பினெடு வஞ்சனை செய் மன்னர் படை யாவும்,
தென்புலம் அடைந்திட மலைப்பல்! இது திண்ணம்.' 12

தருமன் உரையால் விராடன் மனத்துன்பம் நீங்க, உத்தரன், 'எங்கள் படையும் நினதே; உத்தரையும் விசயனுக்கு உரியளே' எனல்

என முரசு உயர்த்தவன் இயம்புதலும் மகிழா,
மனன் இடர் அகற்றினன், அம் மச்ச வள நாடன்;
தனயனும், 'நமக்கு உறுதி தக்கது' என எண்ணு,
இனிமையொடு அறத்தின் மகனுக்கு இவை இசைப்பான்: 13

'எத் தரையும் நீழல் செய் தனிக் கவிகை எந்தாய்!
இத் தரையும் நின்னது; நின் ஏவலினர் யாமும்;
பத்து-அரையொடு ஈர்-அரை கொள் பல் படையும் நினவே;
உத்தரையும் வில் விசயனுக்கு உரியள்' என்ருன். 14

விசயன், 'எனது மகன் அபிமனுக்கே உத்தரை உரியளாதல் வேண்டும்' எனல்

வில் விசயன், உத்தரன் விளம்புதலும், 'வீரம்,
கல்வி, செய் கலைத் திறன், வனப்பு, உடைய காளாய்!
இல் விசய மெய்க்குணனில் மிக்க இளையாள், என்
தொல் விசயம் உற்ற சுதனுக்கு உரியள்' என்ருன். 15

பாண்டவர் தாம் வெளிப்பட்டமையைத் தமராய மன்னர்க்குத் தூதர் மூலம் சொல்லி அனுப்புதல்

விசயன் தொகுத்து, நயமாக விராடன் நெஞ்சுக்கு
இசையும்படி சொற்று, அவரோடும் இருந்த பின்னர்,
வசை இன்றி வாழும் தமர் ஆகிய மன்னர்க்கு, எல்லாத்
திசையும், தமது செயல் தூதரின் செப்பி விட்டார். 16

செய்தி தெரிந்து, அபிமன் முதலியவரோடு கண்ணன் பாண்டவரை அடைந்து, அளவளாவி இருத்தல்

வெளிநின்ற மாற்றம் வெளியானபின், வெண் தயிர்த் தண்
துளி நின்ற மேனித் துளவோன், தன் துணைவரோடும்
அளிநின்ற மாலை புனை தங்கை, அபிமனோடும்,
தெளிநின்ற வேற் கைச் சிவேதன்னெடும், வந்து சேர்ந்தான். 17

கண்டான், மகிழ்ந்தான்; அறன் மைந்தனைக் கை தழீஇயும்
கொண்டான்; அவன்தன் இளையோர் கை குவித்து வீழ்ந்தார்;
எண்தான் அவரோடு இயைந்து எண்ணி, புவனம் ஏழும்
உண்டான் உரைத்தான், உரைத்தக்க உரைகள் எல்லாம். 18

கண்ணன் தன்னுடன் வந்த சிவேதனைக் குறித்து விராடனுக்குக் கூறி, அவன் கவலையைத் தீர்த்தல்

சிவன்தன்னை நோக்கிச் சிவேதன் தவம் செய்தவாறும்,
அவன்தன் அருளால் பல ஆயுதம் பெற்றவாறும்,
இவன்தன் பகை செற்றதும், யாவும் இயம்பி, உள்ளம்
கவன்று, அன்பு உறு மன் விராடன்தன் கவற்சி தீர்த்தான். 19

தெவ் மைந்தர் என்னும் களபங்களைச் சிங்க சாப
வெம் மைந்தின் வேறற்கு அமைந்தான் ஒரு வீரன் ஆன
தன் மைந்தனைக் கண்டு, உருகும் திறல் தந்தை தாளில்
அம் மைந்தனும் வீழ்ந்து, உடன் வைகினன், ஆர்வம் மிக்கே. 20

பாஞ்சாலர் முதலிய பல மன்னர்கள் தம் தானைகளோடு வந்து பாண்டவரைக் கண்டு, அவர் உற்ற துன்பத்திற்கு இரங்கிக் கூறுதல்

பாஞ்சாலர், போச குல மன்னவர், பாண்டி வேந்தர்,
வாஞ்சா மனத்தின் வய மத்திரர், மாகதேயர்,
பூஞ் சாப வெற்றிக் கொடிக் கேரளர், பொன்னி நாடர்,
தாம் சால்புடன் அப் பதி வந்தனர், தானையோடும். 21

வந்து, ஓகையோடும், இரு பாதம் வணங்கி, வைகும்
கந்தோடு அடர் கைக் கடுங் கோபக் களிற்று வேந்தர்,
'அந்தோ நெடு நாள் அகன் கானில் அடைந்திர்!' என்று
நொந்தோரை ஆற்றி, நுவல்வான், அந் நுதி கொள் வேலான். 22

'விராடன் நகரிற்கு வந்த அன்றே என் துன்பம் நீங்கியது' எனத் தருமன் மொழிந்து, துரியோதனனால் நேர்ந்த அழிவைப் பற்றியும் உரைத்தல்

'தேனில் குளித்த சிறை அம்புயச் சேக்கை அன்னம்
வானில் பறந்து புலர்த்தும் புனல் மச்ச நாடன்,
வேனில் சிலை வேள், விராடன், புரம் மேய அன்றே,
கானில் திரிந்த பரிதாபம் கழிந்தது' என்றான். 23

'பண்ணுக்கு உருகிப் பறையால் அகப்பட்ட மான்போல்,
மண்ணுக்கு இறைவன் மொழி தேறி, மகன் செய் வஞ்ச
எண்ணுக்கு அழிந்தேன்; இனிச் செய்வது என்? யாரும் நீவிர்,
கண்ணுக்கு இமைபோல் இருந்தீர், களைகண்கள் ஆக.' 24

சல்லியன் துரியோதனன் வஞ்சமாகத் தன்னைத் துணைவனாக்கியது உரைத்து, மீளுதல்

அரசர்க்கு அடைவே அவையின்கண் அவை அனைத்தும்
முரசக் கொடியோன் நயமாக மொழிந்த போது,
விரை துற்று தார்ச் சல்லியன், முன்பு விளைந்த எல்லாம்
பரசுற்று அகன்றான், பிழை கொன்ற பகடு போல்வான், 25

கரடக் கட வெங் களி யானை, கவன மான் தேர்,
துரகப் பதாதிப் படைதம்மொடும் சூழ்ச்சியாக
விரகின் புகுந்து, நெறியின்கண் விருந்து செய்த
உரகக் கொடியோற்கு அரும் போரில் உதவி செய்வான். 26

'நஞ்சோடு சாலும் அமரின்கண் நமர்கள் என்றும்,
நெஞ்சோடு இயைந்த துணை என்றும், நினைத்தல் செய்யார்;
செஞ்சோறு சால வலிது' என்று, மண் செப்பும் வார்த்தை
வெஞ் சோரி வேலான் நிலை இட்டனன், மீண்டும், ஈண்டும். 27

விராடன் உத்தரையை அபிமனுக்குத் திருமணம் செய்வித்தல்

ஓமம் செய் தீயில் பொரி சிந்தலின், உற்ற வாசத்
தூமம் புடை சூழ் புவிவேந்தர் தொடையல் சூழக்
காமன் திருமைத்துனற்கு அன்பொடு அக் கன்னிதன்னை
மா மன்றல் அங்கே புரிவித்தனன், மச்சர் கோமான். 28

பாண்டவர்கள் காளிக்குப் பலி கொடுத்து, வன்னி மரத்து வைத்த படைகளை மீட்டும் கொள்ளுதல்

முன்னி, சமருக்கு ஒருப்பட்ட முடி மகீபர்,
கன்னிக்கு வேண்டும் கடன் ஆன பலிகள் நல்கி,
வன்னிப் பொதும்பர்வயின் வைத்த வயங்கு சோதி
மின்னின் திகழ் வெம் படை யாவையும் மீண்டு கொண்டார். 29

திருமணம் முடிந்தபின் பாண்டவரும், கண்ணன் முதலிய பிற அரசர்களும் உபப்பிலாவிய நகர் சென்று, போர் பற்றி ஆராய்தல்

சேயோன் விழவு விழைவோடு சிறந்த பின்னர்,
மாயோனும், மற்று அக் குருமைந்தரும், மன்னர் யாரும்,
போய், ஓதை வீதி உபலாவி புகுந்து, தங்கள்
ஆயோதனத்துக்கு உறு நீர்மைகள் ஆயல் உற்றார். 30

# 24. உலூகன் தூதுச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

மீனம் ஆகியும், கமடம்அது ஆகியும், மேருவை எடுக்கும் தாள்
ஏனம் ஆகியும், நரஅரி ஆகியும், எண் அருங் குறள் ஆயும்,
கூனல் வாய் மழுத் தரித்த கோ ஆகியும், அரக்கரைக் கொலை செய்த
வான நாயகன் ஆகியும், நின்ற மால் மலர்அடி மறவேனே. 1

கண்ணன், 'தூது அனுப்பித் துரியோதனன் கருத்தைத் தெரிய வேண்டும்' எனல்

'வல்லினால் அவன் கொண்ட மண் மீளவும் வல்லினால் கொளல் அன்றி,
''வில்லினால் அமர் மலைந்து கொள்ளுதும்!'' எனல் வேத்து நீதியது அன்றால்;
சொல்லினால் ஒரு தூதினில் அறியலாம், சுயோதனன் நினைவு' என்று,
கல்லினால் வரு கல் முகில் விலக்கிய கரிய மா முகில் சொன்னான். 2

பலராமன், 'துரியோதனன் ஆளும் நாட்டை மீட்டல் கொடிது' என்ன, சாத்தகி அவனைப் பழிக்க, கண்ணன் இருவரையும் சமாதானம் செய்தல்

'உரிய அம் புவி உதிட்டிரன்தனை, அவண் உற்றவர் பலர் காண,
பரியவன் பெருஞ் சூதினால் வென்று, பல் ஆண்டு அடிப்பட ஆண்டான்;
திரிய வன்புடன் வாங்குதற்கு எண்ணும் இத் தீ மதி கொடிது!' என்று,
கரியவன் புகல் கட்டுரை கேட்டபின், காமபாலனும் சொன்னான்: 3

இளைய சாத்தகி தமையனை, 'மிகக் கரிது இதயம் ஆயினும், நாவில்
விளையும் மாற்றம் நின் திரு வடிவினும் மிக வெள்ளை ஆகியது' என்ன,
உளைய வார்த்தைகள் உரைத்தனன்; உரைத்தலும், உற்றவர் இடுக்கண்கள்
களையும் மாப் புயல், 'இருவரும் ஒழிமின், நும் கட்டுரை இனி' என்றான். 4

உலூகனைத் திருதராட்டிரனிடம் பாண்டவர் கருத்து உரைக்கத் தூது செல்லப் பணித்து, கண்ணன் துவாரகைக்கு மீளுதல்

பேர் உலூகமும் பிணையும் நல்கிய பெரும் பிறப்புடைப் பரித் திண் தேர்,
கார் உலூகலம் நிகர் அடிக் களிறுடைக் கண் இலா அரசன்பால்,
சீர் உலூகனை, 'தூது சென்று, இவர் மனம் செப்பி, மீள்க!' எனப் போக்கி,
ஓர் உலூகலமுடன் தவழ்ந்தவன் தனது ஊர் புகுந்தனன், அன்றே. 5

ஏனை அரசர்களும் தம்தம் நகர் அடைய, தருமன் உலூகனைத் தூதனுப்புதல்

'இந்த அந்தணன் நீ இசைத்தன எலாம் இயல்புடன் இனிது ஆக
அந்த அந்தனோடு உரைத்தபின், அவன் நினது அவனி தந்திலன்ஆகின்,
முந்த அம் தண் மா முரச கேதன! திருமுகம் வர விடுக!' என்று,
வந்த அந்த மன்னவர்களும் தம்தம் மா நகர் அடைந்தனர் மன்னோ.

அரசர் போனபின், மால் பணி தவறுறாது, அம் முனிதனை நோக்கி,
முரச கேதனன், 'நீ எழுந்தருள்க!' என முனிவனைத் தொழுது ஏத்தி,
'விரை செய் தார் புனை வீடுமன், எந்தை, மெய் விதுரன், வேதியர் கோவைப்
பரசினோம் அடி என்று, பின் உரிய சொல் பணித்தருள்!' என, போந்தான். 7

உலூகன் திருதராட்டிரனது அவையில் புக, துரியோதனன் ஆசனம் அளித்து வரவேற்றல்

போன நான்மறைப் புரோகிதன் அத்தினாபுரி புகுந்து, எரி பைம் பொன்
மான வார் கழல் திருதராட்டிரன் எனும் மன் அவைதனில் எய்த,
ஞான மா முனி வரவு கண்டு எதிர்கொளா, நயந்து, இரு பதம் போற்றி,
ஆன மா மணி ஆசனத்து இருத்தினான், அரவ வெங் கொடியோனே.

உலூகன் தான் தூது வந்த வரலாற்றை எடுத்துரைத்தல்

விந்தம் அன்ன தோள் வீடுமன் முதலியோர் விழைவுடன் தொழுது ஏத்தி,
'வந்தவாறு உரைத்தருள்க!' என, அறன் மகன் வந்தனை முதல் கூறி,
அந்தன் ஆகிய கந்து அடர் கட களிற்று அரசனும், அவன் தந்த
மைந்தர் யாவரும், கன்னனும், சகுனியும், மனம் கனன்றிடச் சொல்வான்: 9

'ஆண்டு பன்னிரண்டு அடவி உற்று, ஒருவரும் அறிவுறுவகை மற்று ஓர்
ஆண்டு மன்னிய பாண்டுவின் மதலையர் ஐவரும் வெளிப்பட்டார்;
ஆண்டு மன்னர் முன் சூது போர் பொருது அழிந்திடுதலின், அது நீர் கொண்டு,
ஆண்டு வந்த பார் நும் மொழிப்படி அவர்க்கு அளித்திரோ? அளியீரோ? 10

'முன்னமும் பொரு சூதுபோர், மோது போர் முனிவுடன் கருதாமல்,
இன்னமும் பொர வேண்டுமேல் பொருதிடும்; இலஞ்சியில் பொலஞ் செங் கால்
அன்னமும் கிரி மயில்களும் உடன் விளையாடு நல் வள நாட்டீர்!
பின்னமும் பிறவாது; இனிப் பண்டுபோல் பீடுறும், பெரு வாழ்வும்.

'அன்றியே, ''அவருடன் மலைகுவம்!'' என, அழிவினைக் கருதாமல்,
வென்றியே நினைந்து, எதிர்த்திரேல், உங்களால் வெல்லுதல் அரிது அம்மா!
கன்றியே அடல் வீமனும் விசயனும் களம் புகில், அனைவீரும்
பொன்றியே விடுகின்றினிர்; முனிவர் சொல் பொய்க்குமோ? பொய்யாதே!'

'பூசலில் ஆண்மை காணலாம்' என்று துரியோதனன் மறுமொழி சொல்ல,
விதுரன், துரோணன், முதலியோர் அவனுக்கு அறிவுரை கூறுதல்

என்று பூசுரன் இயம்பலும், குங்குமம் எழில் உறும் இணை மேருக்
குன்று பூசியது அனைய பொன்-தடம் புயக் குருகுல வய வேந்தன்,
'இன்று பூசைபோல் இருந்துழி உரைக்கும் ஈது இகலது அன்று; இருவர்க்கும்
துன்று பூசலில் காணலாம், ஆண்மையும் தோள் வலிமையும்' என்றான்.

கல்வி, தூய நெஞ்சு இலாத அச் சுயோதனன் கழறிய மொழி கேட்டு,
வில் விதுரன், 'இவ் வேதியன் மொழிப்படி மேதினி வழங்காமல்,
புல் விதூடகரினும் உணர்வு இலாதவர் புகலும் வாசகம் கேட்கின்,
செல்வி தூரியள் ஆய்விடும்; சுற்றமும், சேனையும், கெடும்' என்றான்.

'திரத்து வாய்மை நீ தவறி, மற்று அவருடன் சேனையும் திறலும் கொண்டு,
உரத்து வாள் அமர் உடற்றலோ, பெரும் பிழை; உடன்றனையாம்ஆகின்,
சரத்து வாய்தொறும் சோரி கக்கிட விடும்,தனஞ்சயன் தனு' என்று,
பரத்துவாசனும் பகர்ந்தனன்; கிருபனும், பகர்ந்ததே பகர்ந்திட்டான்.

வீடுமன் திருதராட்டிரனுக்கு உறுதி கூறுதல்

'காடு மன்னு நின் புதல்வருக்கு அறுதி செய் காலமோ கழிந்தன்று;
நாடு, மன்னவ! கொடாமல், வெஞ் சமர் பொர நாடினைஎனின், நாளை,
கோடு மன்னு வில் அருச்சுனற்கு எதிர் எவர் குனிக்க வல்லவர்?' என்று,
வீடுமன் திருத்தனயனோடு உறுதிகள் வெகுண்டு உரைத்தனன் அன்றே.

கன்னன் வீடுமனை வெகுண்டு கூறுதல்

'முன்னமே உயிர் இழந்த வெம் புலி என, முரண் அழி முனி மைந்தன்-
தன்னை மற்று அவனிடத்து நீ கற்ற வெஞ் சரத்தின் வென்றமை அல்லால்,
என்ன சேவகம் கொண்டு நீ யாரையும் இகழ்ந்து உரைப்பது?' என்று,
கன்னனும், திறல் காங்கெயன்தன்னொடு, கண் சிவந்து, உரைசெய்தான்,

வீடுமன் வெகுண்டு, குறிப்பு மொழிகளால் கன்னனை இகழ்ந்து கூறுதல்

'தூம வெங் கனல் தோன்றிய தோகை அம் தொடையல் சூட்டிய நாளில்,
நாம வெஞ் சிலை நாண் எடுத்தனை, அடர் நரனொடும் போர் செய்தாய்!
தாம வெண் குடை நிருபனை அந்தர சரிதர் கொண்டு ஏகாமல்
வீமன் வெஞ் சிறை மீட்ட நாளினும், திறல் வினை புரி முனை வென்றாய்!

'ஒரு நல் மா நெடுந் தேரினை அறிவுறு உத்தரன் விரைந்து ஊர,
நெருநல் ஆன் நிரை கவர்தரு முகத்தினும் நின்றனை, நெடும் போது!
மரு நறு உமிழ் துழாயவன் தேர் விட, மலையும் நாள், வய வாளி
வெருநர்மேல் விடா விசயனை நீ அலால், வெல்ல வல்லவர் உண்டோ?'

துரியோதனன் கன்னனுக்காகப் பரிந்து, உலூகனையும் அவமதித்து, 'பார் எமதே!'
என, முனிவன் மீண்டு வந்து, அதனைப் பாண்டவர்க்குச் சொல்லுதல்

கங்கை மா மகன் இவை இவை புகலவும், கன்னனைக் கசிந்து உள் கொண்டு
அங்கை கொட்டி நக்கு, இருந்த அந்தணனையும் அவமதித்து, 'எமதே பார்!
தங்கள் கானகம் தமது!' எனப் புகன்றனன், சர்ப்பகேதனன்; அந்தப்
பங்கயாசன முனிவனும் மீண்டு போய்ப் பாண்டவர்க்கு அவை சொன்னான்.

உலூகன் கண்ணனிடமும் சென்று செய்தி தெரிவிக்க, அவன் விசயனைத்
தன்னிடம் வரும்படி செய்தி சொல்லி அனுப்புதல்

ஆங்கு அவர்க்கு இவன் அவண் நிகழ்ந்தன எலாம் அருந் தகை உறச் சொல்லி,
ஈங்கு வந்து, எழில் யாதவற்கு இயம்பலும், யாதவன் மகிழ்வுற்று,
'வாங்கு வெஞ் சிலை விசயனை விரைவினில் வர விடுக!' என, மீள
ஓங்கு மா தவ உலூகனைப் போக்கினான்; அவனும் வந்து உரைசெய்தான்.

# 25. வாசுதேவனைப் படைத்துணை அழைத்த சருக்கம்

கன்னனும் வீடுமனும் கொண்ட வெகுளி மாற்றி, மந்திரிமாருடன்
தனித்து இருந்து, துரியோதனன் எண்ணுதல்

புரோகிதன் தூது வந்து போனபின், புயங்க கேது,
விரோசனன் சுதனைக் கங்காசுதனொடும் வெகுளி மாற்றி,
துரோணனை முதலா மிக்க தொல் மதி அமைச்சரோடும்,
சரோருக சதனம் என்ன, தனித்து இருந்து எண்ணினானே. 1

மன்னர் பலர்க்கும் தூது போக்கி, கண்ணனைத் துணை சேர்க்கக் கருதி,
துரியோதனன் துவாரகைக்குச் செல்லுதல்

தேயம் எங்கு எங்கும் செங்கோல் செலுத்தும் அத் திகிரி வேந்தர்-
ஆயவர் தம்மைக் கூட்ட, அடைவினின் தூது போக்கி,
காயமும் உயிரும் ஆகிப் பொருள்தொறும் கலந்து நின்ற
மாயவன் தன்னைக் கூட்ட, வளர் மதில் துவரை சேர்ந்தான். 2

துவாரகையில் உள்ள மதில் முதலியவற்றின் சிறப்பு

மாட நீள் வீதி மூதூர் வயங்கும் மா மதிலின் தோற்றம்,
ஏடு அவிழ் துளப மால் அங்கு இருந்தனன் என்று கேட்டு,
சேடன் வந்து, அனந்த கோடி செங் கதிர் மணியின் பத்திச்
சூடிகா மகுடத்தோடும் சூழ்ந்தது ஓர் தோற்றம் போலும்! 3

கார்க்கடல் வண்ணன், தன்பால் கண்துயில் ஒழிந்து, போந்து,
மேற்கடல் துவரை மூதூர் மேவரும் விரகு நோக்கி,
போர்க்கு அடல் பொறிகள் யாவும் பொறுத்த அப் புரிசைதன்னைப்
பாற்கடல் வளைத்தது ஒக்கும், பல் மலர் அகழி அம்மா! 4

'ஈண்டு நீ வரினும், எங்கள் எழிலுடை எழிலி வண்ணன்
பாண்டவர்தங்கட்கு அல்லால், படைத் துணை ஆகமாட்டான்;
மீண்டு போக!' என்று என்று, அந்த வியன் மதில் குடுமிதோறும்
காண்தகு பதாகை ஆடை கைகளால் தடுப்ப போன்ற. 5

'அருள் குடியிருக்கும் கண்ணன் அவதரித்தனன்' என்று எண்ணி,
தரணியின்மீது வந்து, தன்னுடைச் சோதி வைகும்
பரம மா ஞான போகப் பதி குடி இருந்தது அன்ன,
திரு நகர் வீதி புக்கான்—சித்து அசித்து உணர்வு இலாதான். 6

துரியோதனன் நகரில் புகுந்தமை அறிந்த கண்ணன், 'துரியோதனன் வரின், எனக்குத் தெரிவியாமலே வரவிடுங்கள்' என்று காவலர்க்குக் கூறி, யோகத் துயில் கொள்ளுதல்

வந்தமை அறிந்து, கொற்ற வாயிலோர்தம்மை நோக்கி,
'அந்தன் மா மதலை வந்தால், அறிவியாது அழைமின்!' என்று,
சந்திரன் ஒடுங்கி நிற்ப, தபனனே சரிக்குமாறு,
பந்தனை இலாதான், யோகத் துயில் வரப் பள்ளி கொண்டான். 7

துரியோதனன் கண்ணனது திருமுடிப் பக்கத்துள்ள தவிசில்
அவன் துயிலுணருமளவும் வீற்றிருத்தல்

பொற்புடைப் புனிதன் கோயில் புறத்தினில் அனிகம் நிற்ப,
சற்ப வெம் பதாகை வேந்தன் தடை அற, தனி சென்று எய்தி,
உற்பல வண்ணன் பள்ளி உணர்தருகாறும், இட்ட
சிற்ப வண் தவிசின் ஏறி, திருமுடிப் பக்கம் சேர்ந்தான். 8

விசயன் அங்கு வந்து, கண்ணன் திருவடிப் பக்கம் நிற்க, கண்ணனும் துயிலுணர்ந்து,
அவனை நோக்கி அருள்செய்தல்

'வந்திலன் விசயன்' என்று, வான் துயில் புரிந்த அண்ணல்
சிந்தனை செய்யும் வேலை, சிந்தையின் கடிய தேரோன்
பந்தனை அறுக்கும் பாத பங்கயம் பணிந்து நிற்ப,
முந்துற விழித்து நோக்கி, முகம் மலர்ந்து அருள்செய்தானே. 9

நின்ற விசயன் துரியோதனன் இருத்தலைக் கூற, கண்ணன் எழுந்து, அவனைத் தழுவி முகமன் கூறுதல்

நின்றவன் இருந்த வேந்தன் வரவினை நிகழ்த்த, நேமிப்
பொன் திகழ் படையோன் அந்தப் பொய்த் துயில் பாயல் நீங்கி,
'மன்றல் அம் தொடையல் மார்பா! வரவு எமக்கு உரைசெயாது என்?'
என்று, உரம் நெருங்கப் புல்லி, இன் சொலால் உவகை செய்தான்.

இருவரும் வந்த காரியத்தைக் கண்ணன் வினவ, இருவரும், 'எமக்குப் போர்த் துணையாக வேண்டும்' என வேண்டுதல்

'இருவிரும் வந்தவாறு என்? இயம்புதிர்!' என்று, வாச
மரு விரி துளப மாலை மரகதவண்ணன் கேட்ப,
'செருவில் நீ எமக்கு வெம் போர் செய் துணை ஆக வேண்டும்
பொருவிலோய்!' என்று கொண்டு அவ் இருவரும் புகன்றகாலை, 11

கண்ணன் பாண்டவர்க்குத் தான் துணையாதலை அறிவித்தல்

'உற்று அமர் உதவி செய்வான், உதிட்டிரன்தனக்கு முன்னே
சொற்றனம், ஆங்கண்; இங்கும், துயில் உணர் பொழுதத்து, இன்று,
வில்-திறல் விசயன் முந்த விழிக்கு இலக்கு ஆனான்' என்று,
பற்று அறத் துணிந்து சொன்னான்—பாண்டவர் சகாயன் ஆனான்.12

'போரில் ஆயுதம் எடாது ஒழி' என்னும் துரியோதனன் வேண்டுதலுக்குக் கண்ணன் ஒருப்பட்டு, விசயனிடம், 'ஆயுதம் இன்றிச் செய்யும் உதவியைக் கூறு' எனல்

முடை கமழ் முல்லை மாலை முடியவன்தன்னை, 'போரில்
படை எடாது ஒழிதி!' என்று பன்னக துவசன் வேண்ட,
நெடிய மா முகிலும் நேர்ந்து, 'நினக்கு இனி விசய! போரில்
அடு படை இன்றிச் செய்யும் ஆண்மை என்? அறைதி!' என்றான்.13

விசயன், 'நீ என் தேர் விடின், எத்தகைய பகைவரையும் வெல்வேன்!' எனல்

'செரு மலி ஆழி அம் கைச் செழுஞ் சுடர் நின்று, என் தேரில்
பொரு பரி தூண்டின், இந்தப் பூதலத்து அரசர் ஒன்றோ?
வெருவரும் இயக்கர், விண்ணோர், விஞ்சையர் எனினும், என் கை
வரி சிலை குழைய வாங்கி, மணித் தலை துமிப்பன்!' என்றான். 14

கண்ணன் துரியோதனனுக்கு, 'ஆயுதம் எடேன்' என்று கூறி, தன்னைச் சேர்ந்தாரை யெல்லாம் படைத்துணையாகக் கொண்டு செல்க எனல்

அடர் சிலை விசயன் இவ்வாறு இசைத்தலும், அமலன், வஞ்சப்
பட அரவு உயர்த்த வென்றிப் பார்த்திவன்தன்னை நோக்கி,
'நடையுடைப் புரவித் திண் தேர் நான் இவற்கு ஊர்வது அன்றி,
மிடை படை ஏவி, நும்மோடு அமர் செயேன், வேந்த!' என்றான்.

'எம்மையே ஒழிய உள்ள யாதவ குலத்துளோர்கள்-
தம்மையும், எம்முன் ஆன தாலகேதுவையும், சேர,
செம்மையோடு உதவியாகக் கொண்டு நீ செல்க!' என்று,
மும்மையும் உணர்ந்த நாதன் முன்னுற, பின்னும் சொன்னான்: 16

'கிருதவன்மா அக்ரோணி கிளர் படையோடு நின்பால்
வருவன்' என்று உரைத்து, வேண்டும் மதுர வாய்மைகளும் கூறி,
மருது போழ்ந்திட்ட செங் கண் மாயவன் விடுப்ப, ஏகி,
கருதலான் வினயம் ஒன்றும், கண்ணன் முன்னேனைக் கண்டான். 17

துரியோதனன் பலராமனிடம் சென்று, செய்தி தெரிவித்து, அத்தினபுரி புக,
கண்ணனும் விசயனும் உபப்பிலாவியத்தை அடைதல்

கண்ணன் அங்கு அருளிச் செய்த கட்டுரைப்படியே, சங்க
வண்ணனுக்கு, இளவல் சொன்ன மாற்றமும் அரசன் சாற்றி,
'எண்ண அருந் தொகைகொள் சேனை யாதவ குமரரோடே
அண்ணலே! வருக!' என்று ஓதி, அத்தினபுரி புக்கானே. 18

கூறிய வேக நாகக் கொடியவன் அகன்ற பின்னர்,
தேறிய விசையினோடும், செழும் புனல் துவரை நீங்கி,
ஆறு-இரு நாமத்தோனும், ஐ-இரு நாமத்தோனும்,
ஊறிய கருணை நெஞ்சின் உதிட்டிரன் இருக்கை புக்கார். 19

## 26. சஞ்சயன் தூதுச் சருக்கம்

துரியோதனன் கண்ணனிடம் சென்று வந்த செய்தி கேட்டபின், திருதராட்டிரன்
சஞ்சயனை அழைப்பித்து, பாண்டவரிடம் தூது அனுப்புதல்

நஞ்ச நாகம் உயர்த்த மீளி தன் நகர் புகுந்துழி, நண்பு அறக்
கஞ்ச மாமனை வென்றவன் செயல் கண்ணிலானொடு உரைத்தபின்,
வஞ்ச மைந்தரொடு உயவி, மீளவும், மண் கொடாத குறிப்பினன்,
'சஞ்சயன்தனை வருக!' என்று இரு தாள் பணிந்து, இவை சாற்றுவான்: 1

'குருகுலத்து அரசர்க்கு உறும் தொழில் கூறும் நற் குரு ஆதலால்,
இரு குலத்தினும் உற்பவித்தவர் என்றும் நின் சொல் மறுத்திடார்,
பெருகு உலைக்கனல் அன்ன பிள்ளைகள் பேசுகின்ற பிணக்கு அறுத்து,
ஒரு குலத்தவர் உததி சூழ் புவி ஆளுமாறு இனி உட்கொளாய்! 2

'அறத்தின் மைந்தனும், இளைஞரும், புவி ஆசை அற்று, அகல் அடவியின்
புறத்து இருந்து, தவம் செயும்படி பரிவு உரைத்தருள், போய்' என,
செறுத்திடும் திருதராட்டிரன் தன சிந்தை ஒப்பன செப்பினான்;
மறுத்திலன், பெரு முனியும்; மற்று அவர் பாடிவீடு உற மன்னினான்.

சஞ்சயனை எதிர்கொண்டு பாண்டவர் உபசரிக்க, முனிவன் தவிசில் இருந்து, அவர்களுக்கு அறம் எடுத்துரைத்தல்

சென்ற அம்முனி செலவு அறிந்து, எதிர்சென்று, தத்தம சென்னி, தாள்
ஒன்ற வைத்து, வணங்கி, ஆசி உரைக்கும் மெய்ப் பயன் உற்ற பின்,
மன்றல் அம் துளவோனும், நல் அறன் மைந்தனும், திறல் அனுசரும்,
துன்று பொன்-தவிசினில் இருத்த, இருந்து, சில் உரை சொல்லுவான்: 4

'புடவி ஆளுதல் விட்டு, நல் நெறி புரியும் மா தவர் தம்மின், நீர்
அடவி ஆளவும் வல்லிர் ஆயினிர்; ஆதலால், நலம் ஆனதே;
மடவியார் நிலை அற்ற செல்வம் மகிழ்ந்து, வாழ் தினம் மாறினால்,
விடவி ஆர் அழல் உற்றென, பெரு நரகில் ஆழ்வுற வீழ்வரால். 5

'உற்ற யோனிகள்தம்மில் உற்பவியாமல், மானுட உற்பவம்
பெற்று, வாழுதல் அரிது; மற்று அது பெறினும், மாயை செய் பெரு மயக்கு
அற்ற ஞானியர் ஆய், விளங்குதல் அரிது; வீடு உறும் அறிவு பின்
பற்றுமாறு அரிது; இங்கு உனக்கு இவை பண்பினோடு பலித்தவே! 6

'திகந்த எல்லை உறப் பெரும் புவி செல்ல நேமி செலுத்தும் நும்
அகந்தையோடு அமர் ஆட எண்ணல்! அரவ கேதனன் உங்களோடு
உகந்து வாழ ஒருப்படான்; இனி உற்ற தாயமும், உரிமையும்,
இகந்து, மா தவம் முயறலே கடன், ஈறு இலா உலகு எய்தவே. 7

'பராசரன் குலம் ஆகினும், பெறு பயன் இறுக்கிலர், பாரிலே;
துராசர், அன்பு இலர், என் சொல் இன்று சுயோதனாதியர் கைக் கொளார்;
சராசரங்கள் அனைத்தும் ஆகிய சுகனையே நிகர் தன்மையாய்!
நிராசர் நின் அளவில் குறித்தவை உறுதி என்று இனி நீ கொளாய்!

'பாரில் ஆசையும், நின் இராச பதத்தில் ஆசையும், மன்னு வெம்
போரில் ஆசையும், நேய மங்கையர் போகம் அன்பொடு புதிது உணும்
சீரில் ஆசையும், விட்டு, நல் நெறி சேர உன்னுதி, நீ!' எனத்
தூரில் ஆசை அறத் துறந்தருள் சுருதி மா முனி சொல்லவே, 9

தருமன் முனிவனது கருத்தை மறுத்து உரைத்தல்

செம்மை, அல்லது, விரகு இலாது தெரிந்த மேதகு சிந்தையான்,
மும்மையும் தெரி முனி உரைத்த சொல் முன்னி, ஒண் குறு முறுவல் செய்து,
'இம்மையே வசை நிற்க, வீடு உற எண்ணி, நீ புகல்வு, என்னினும்,
வெம்மை ஏழ் நரகும் தனித்தனி வீழ்வதே நலம், மிகவுமே; 10

'நின் அறத்தினின் நீர்மைதன்னை விளங்குமாறு நிகழ்த்தினும்,
மன் அறத்தினை விட்டு, நல் அறம் மன்னர் ஆனவர் முயல்வரோ?
என் அறத்தினின்நின்று, தெவ்வரை இரு விசும்பினில் ஏற்றினால்,
பின் அறத்தினில் நினைவு கூரும்' எனக் கனன்று, இவை பேசினான்,

*வீமன், 'போரே எமக்கு உரிய தவம்!' எனச் சினந்து மொழிதல்*

முனியும், அப் பெரு முரசு உயர்த்தவனும், புகன்றன முன்னி, 'நாம்
இனி உரைப்பது கடன்' என, துணை விழி சிவப்பு எழ, எழிலியின்
தனி தம் உற்று எழு உருமின் வெஞ் சினம் மூள, மற்று இவை சாற்றுவான்—
கனி எனத் தினகரனை வௌவிய கடவுள் மாருதி துணைவனே: 12

'எமக்கு நீ பிரமப் பெருங் குரு; எங்களோடு எதிர் ஆகுவார்-
தமக்கும் ஒக்கும்; ஓர் உழையிலே அருள் சார ஓதுதல் தக்கதோ?
அமர்க்கு, நென்னல், உலூக நாமனொடு அறுதியிட்டனன்; அரவுஇனம்
சுமக்கும் மேதினி ஆளுவோர் வினை வேறுபட்டது சொல்வரோ? 13

' ''இடக் கண் ஆக, வலக் கண் ஆக, இரண்டும் ஒக்கும்'' எனுமலே,
பிடர்க்கணே மதியான கண்-இலி பெற்றி அல்லன பேசினான்;
கடற்பெரும் படை கூடி, நாளை அணிந்த வெய்ய களத்தில், நான்
அடல் கடுங் கதையால் அடித்திடும் அதிசயந்தனை, ஐய! கேள்: 14

'உவந்து நீ மொழி தவம் அருந் தவம் அல்ல; ஒன்னலர் உடல் உகும்
சிவந்த சோரியில் மூழ்கி மாழ்கு சிரங்கள் போய், நடமாடும் அக்
கவந்த கானகம் மேவி, ஊடு உறு தீய வெவ் வினை களைவதே,
தவந்தனில் தலையான வீடு உறு தவம் எமக்கு! இது சாலுமே! 15

'போரது ஆகிய பூமிசாலையில், வேலை சூழ்தரு பூமியின்
பாரமான சுயோதனாதியர் என்னும் நூறு பசுப் படுத்து,
ஈரம் ஆன தயாமனத்தொடு இராயசூய மகம் செயும்
வீர மா முனிதன்னை வெங் கள வேள்வியும் புரிவிப்பனே!' 16

*கண்ணன், 'நமது உரைகளால் பயன் ஒன்றும் இல்லை' எனல்*

நேமியான் இவை சொன்ன வீரனை, 'நிற்க!' என்று நிறுத்தி, உள்
காமியாத முனிக்கு நல் உரை கட்டுரைத்தனன்; 'இவர்கள் இப்
பூமி ஆளுதல், அவர்களுக்கு அமர் உலகம் ஏறுதல், புரி தவம்;
யாம் யாதும் உரைத்தும் என் பயன்? நீ எழுந்தருள்!' என்னவே, 17

*சஞ்சயன் மீண்டு வந்து, திருதராட்டிரனுக்கு நிகழ்ந்தவற்றைத் தெரிவித்தல்*

இருந்த பேர் அவை விட்டு, மற்று அவர் இதயம் இப்படி என நினைந்து,
அருந் தவக் கடல் மீள, அத்தினபுரி அடைந்து, அவனிபனுடன்
பரிந்து, அறன் தரு காளை சொற்றதும், வீமன் நின்று பகர்ந்ததும்,
குருந்து ஒசித்தருள் முகில் உரைத்ததும், உண்மை ஆம் வகை கூறினன். 18